# சமாதான நோக்கு

மலர் 16 இதழ் 01 /ஜுலை 2020
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடு



## 2020 பொதுத் தேர்தலும் அதன் பின்னரும்...

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து / சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா / சட்டத்தரணி கிஷாலி பின்டோ ஜயவர்தன/ கலாநிதி அசங்க வெலிகல
சட்டத்தரணி துமிந்து மதுஷான் / கலாநிதி பிரதீப் பீரிஸ் /பேராசிரியர் மில்டன் ராஜரத்ன/ பவானி ஃபொன்சேகா / பேராசிரியர் நவரத்ன பண்டார
ரொஹான் எதிரிசிங்ஹ / மஞ்சுள கஜநாயக்க / பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ / ரணில் விக்ரமசிங்ஹ/ சஜித் பிரேமதாச / அநுரகுமார திஸாநாயக்க/ விமல் வீரவன்ச
கலாநிதி வண. பத்தேகம சமித்த ஹிமி / தினேஷ் குணவர்தன / சட்டத்தரணி உதய கம்மன்பில / வாசுதேவ நாணயக்கார / சட்டத்தரணி ஷிரால் லக்திலக
சீ.வீ. விக்னேஷ்வரன் பாட்டலி சம்பிக ரணவக / சட்டத்தரணி தயாசிரி ஜயசேகர / டக்ளஸ் தேவாநந்தா
கஜேந்திரகுமார் பொன்னம்பலம் / சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் / மயில்வாகனம் திலகராஜா / ரஹூஃப் ஹக்கீம்

பதிப்பாசிரியர் : லயனல் குருகே

# பிரஜைகளின் இணையதளம்

**பிரஜைகளின் வாழ்க்கைக்கு ஏற்புடைய,**

- அரசியலமைப்பு உட்பட சகல சட்டங்களும், விதிகளும், ஒழுங்கு விதிகளும்
- பிரஜைக்கு ஏற்புடைய உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கள் மற்றும் ஏனைய முக்கிய வழக்குத் தீர்ப்புக்கள்
- அரச மற்றும் பொது நிறுவனங்களின் படிவங்கள்
- பிரஜைகள் செயற்பாட்டின் நவீனத் தகவல்கள்
- அடிப்படை உரிமைகளும் கடமைகளும் பொறுப்புக்களும்
- பிரஜைகள் செயற்பாட்டின்மூலம் பெற்றுக்கொண்ட வெற்றிகள் பற்றிய விபரங்கள்
- பிரஜைகள் சபைகள் பற்றிய தகவல்கள்

---

பிரஜைகளின் சார்பில்
அரசகரும மொழிக்கொள்கைகளுக்கு அமைய மும்மொழிகளிலும்
**மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின்**
மூலம்
www.citizenslanka.org

---






பதிப்பாசிரியர் **லயனல் குருகே**

ISSN 955-1800-0061

மலர் 16 இதழ் 01 / ஜூலை 2020

தொலைபேசி : 94-1-2370801/4
ஃபெக்ஸ் : 94-1-2370802
மின்னஞ்சல் : cpa@cpalanka.org
இணையதளம் : www.cpalanka.org

மொழிபெயர்ப்பு : **எஸ்.சிவகுருநாதன்**
பக்க வடிவமைப்பு: **வாக்யா ஶ 011-2708377**
அச்சாக்கம் :

“சமாதான நோக்கு” என்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சமாதானமும் மோதல் ஆய்வும் பற்றிய பிரிவினதும் சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவினதும் பிரசுரமாகும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் என்பன மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல் மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

இலங்கையின் மோதலைத் தீர்ப்பதற்கு ஏதுவான பிரச்சினைகளையிட்டு, எமக்கும் பொதுமக்களுக்கும் இடையே இடையீட்டை ஏற்படுத்துவதற்கான ஒரு மார்க்கமாக “சமாதான நோக்கு” பயன்படுகிறது. இச்சஞ்சிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினதோ அல்லது அதன் பணிப்பாளர் சபையினதோ கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை.

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்க.

**“சமாதான நோக்கு”**
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்,
6/5, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011 2081384/6, தொலைநகல் : 011 4714460
மின் அஞ்சல் : cpa@cpalanka.org
இணைய தளம் : www.cpalanka.org

# ஜனாதிபதி அவர்களே, பின்னோக்கி அல்ல முன்னோக்கிச் செல்லுங்கள்!

சுதந்திரத்தின் பின்னர் 72 ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் கடந்துள்ளது என அரசியல் அரங்கின் உரையாடல்களில் அடிக்கடி ஞாபகப்படுத்தப்படுவதைக் கேட்க முடிகிறது. இவ்வுரையாடல்களில் பெரும்பாலானவை அபிமானமிக்கவை அல்ல. சுதந்திரத்தின் பின்னர் வென்றெடுக்கப்பட வேண்டிய சவால்களை இதுவரை வெல்ல முடியாது போயுள்ளமை பற்றிச் செய்யப்படும் விமர்சன ரீதியான ஞாபகப்படுத்தல்களே அவை. நாம், நாடு என்ற ரீதியில் பின்னோக்கிப் பயணிக்கையில் உலகின் ஏனைய தேசங்கள் அடைந்த வெற்றிகளோடுடனான ஒப்புநோக்குகளாகவே அவை காணப்படுகின்றன.

ஏழு தசாப்தங்களுக்கும் அதிகமான காலம் ஒரு தேசம் என்ற வகையில் இந்த நாட்டைத் தாய்நாடாகக் கொண்ட அனைத்து இனங்களுக்கும் மதங்களுக்குமுரிய, பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற மற்றும் சிறப்பான தனித்துவத்தன்மைகளுடன் கூடிய மக்களை ஒன்றிணைக்கும் ‘இலங்கையர்’ என்ற தேசத்தைக் கட்டியெழுப்ப முடியாமற் போனமை முதலாவது சவால், அதற்கு அடிப்படையாக விளங்க வேண்டிய, அனைவரது உரிமைகள் பாதுகாக்கப்படும், சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஆட்சிமுறையொன்றைக் கட்டியெழுப்புவதை இதுவரையிலும் யதார்த்தமாக மாற்றிக் கொள்ள முடியாமற் போயுள்ளது. அதற்குப் பதிலாக, பல்வேறு இனங்களையும் மதங்களையும் சேர்ந்த மக்களிடையேயான பிரிவுக் கோடுகள் மென்மேலும் விரிவாக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் மீது இன்னுமொருவருக்கு இருக்கக்கூடிய அச்சம், சந்தேகம், மற்றும் தமது எதிர்கால விதியை எண்ணிய தீவிர மன அழுத்தத்துடன் வாழும் ஆரோக்கியமற்ற சமூகமொன்று உருவாகியுள்ளது. சனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட நியாயமான சமூகமொன்றை நோக்கிய மட்டுப்படுத்தப்பட்ட முன்னெடுப்புகள் கூட மீளத் திருப்பிவிடப்படுகின்ற ஒரு சூழல் தோன்றியிருப்பது மேலும் துன்பகரமான விடயமாகும்.

ஏகாதிபத்திய அம்சங்களுடன் கூடிய நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவியின் அதிகாரங்கள் ஓரளவுக்கு வரையறுக்கப்படல், உள்ளிட்ட ஜனநாயக ரீதியான ஆட்சி முறையை வலுப்படுத்தும் சாத்தியமான நடவடிக்கைகளுக்குக் காரணமான அனைத்துக் கட்சிகளினதும் பொதுவான இணக்கப்பாட்டில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட 19வது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்வதற்குத் தேவையான ⅔ அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வது ஜனாதிபதியின் நோக்கமாகவுள்ளது. எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் ஆளுங்கட்சியின் பிரதான கோஷமாக அதுவே அமைந்துள்ளது.

சுதந்திரத்தின் பின்னர் நிறைவேற்றதிகார பிரதமருடன் பாராளுமன்ற ஜனநாயக முறைமையில் டீ.எஸ்.சேனாநாயக்க, சேர் ஜோன் கொத்தலாவல, எஸ்.டபிள்யு. ஆர்.டீ பண்டாரநாயக்க, விஜயாநந்த தஹநாயக்க, டட்லி சேனாநாயக்க, சிறிமாவோ ஆர்.டீ.பண்டாரநாயக்க போன்ற தலைவர்கள் நாட்டை ஆட்சி செய்தார்கள். 1978 அரசியலமைப்பின் கீழ் நிறுவப்பட்ட நிறைவேற்றதிகாரப் பதவியை முதன்மையாகக் கொண்ட ஆட்சிமுறை இன்றுவரை நீடிக்கின்றது. 1978 அரசியலமைப்பின் கீழ் ஜே.ஆர். ஜயவர்தன, ரணசிங்க பிரேமதாச, டீ.பீ. விஜேதுங்க, சந்திரிக்கா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகிய நிறைவேற்றதிகார ஜனாதிபதிகள் நாட்டை ஆட்சி புரிந்துள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் உரித்தாக வேண்டிய இடம் வரலாற்றில் பொறிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உரித்தாக வேண்டிய இடம் எதிர்காலத்தில் பொறிக்கப்படும். எனவே, நிகழ்காலத்தில் தாம் செய்யும் செயல்கள் இலங்கைச் சமூகத்தை முன்னோக்கிக் கொண்டு செல்லுமா? இல்லையா? என்பது தொடர்பில் கண்டிப்பாக சமயோசிதமாகச் செயலாற்றுதல் இத்தருணத்தில் ஜனாதிபதியின் பணியாகும்.

சர்வ வல்லமையுள்ள ஆட்சியாளர் பற்றி அண்மைக்கால வரலாற்றில் பாரதூரமான முயற்சிகளைச் செய்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன கூடிய விமர்சனத்துக்கு ஆளானார். இந்த நாட்டுக்குத் தீங்கு விளைவித்த விதி தொடர்பில் மிக அதிகமான குற்றச்சாட்டுக்கு ஆளாகும் தலைவரும் அவரே. நவீன மக்கள் சமூகம் முகங்கொடுக்கும் எந்தப் பிரச்சனைகளுக்கும் சர்வ வல்லமை படைத்தவரிடம் தீர்வுகள் இல்லை எனவும், அனைவருடைய பொதுவான இணக்கத்துடன் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்வது உலகில் இதுவரை கையாளப்பட்டுள்ள வெற்றிகரமான வழிமுறை எனவும் மீண்டும் நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை.

நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியின் கழுத்தைச் சுற்றிவளைத்த நிலப்பிரபுத்துவ ஆடையணிகளை மறுத்தும், ஆட்சித் தலைவரின் முகத்துக்குப் பதிலாக, உத்தியோகபூர்வ அரச சின்னத்தை மாற்றியமைத்தும், தற்போதைய ஜனாதிபதி திரு. கோட்டாபய ராஜபக்ஷ காட்டியுள்ள முன்னுதாரணம் மிகச் சிறப்பானது. அவர் அதிலிருந்து பின்னோக்கி அல்ல முன்னோக்கியே அடியெடுத்து வைக்க வேண்டும். அதாவது வெறுக்கத்தக்க ஏகாதிபத்தியத்திற்குப்பதிலாக, “நாம் இலங்கையர்” என்ற இலங்கைத்தேசமாக அனைத்து மக்களையும் ஒன்றிணைக்கக்கூடிய சனநாயக ரீதியான சீர்திருத்தத்தை நோக்கியதாகவே இம்முயற்சி அமைய வேண்டும். அத்தகைய அடி எடுத்து வைப்பதற்கு ஜனாதிபதிக்கு சக்தியும் துணிவும் ஆற்றலும் கிட்ட வேண்டும் எனப் பிரார்த்திப்போம்.

Contents

# Contents




நாகரீக அரசின் அரசியலமைப்புக்கான வருகை **18**
கலாநிதி அசங்க வெலிகல





2020 பொதுத் தேர்தல் **4**
கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து





நுகர்வோர் உரிமை விடயத்தில் வலுவூட்டப்பட்ட அரச கரும மொழிக் கொள்கை **29**
சட்டத்தரணி துமிந்து மதுஷான்





கொரோனா கூறும் செய்தி: நியாயமாக நடந்துகொள்ளுங்கள் **8**
எஸ்.ஜீ புஞ்சிஹேவா





நடமாட முடியாத இலங்கை ஜனநாயகத்திற்கு அதிகாரத்துவம் ஒரு மருந்தல்ல **34**
கலாநிதி பிரதீப் பீரிஸ், சக்கினா மொஹினுதீன், எம்.கிருஷ்ணமூர்த்தி
*Dr. Pradeep Peiris, Sakina Moinudeen and M. Krishnamoorthy*





இலங்கையில் தகவல் அறிவதற்கான உரிமையைத் தேடிச் செல்லல் **12**
சட்டத்தரணி கிஷாலி பின்டோ






நல்லாட்சி அரசு நாட்டை வறுமை நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது 38
பேராசிரியர் மில்டன் ராஜரத்ன





இலங்கையில் நீதி மற்றும் நல்லிணக்கத்துக்கான தாக்கங்கள் 42
பவானி ஃபொன்சேகா

அதிகாரப்பகிர்வு ஒரே தீர்வல்ல 49
பேராசிரியர் நவரத்ன பண்டார

ஜனநாயக நிறுவனங்கள் மீது மக்கள் இழந்த நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புதல் 54
ரொஹான் எதிரிசிங்ஹ

ஒழுங்குறுத்தப்படாத தேர்தல் செலவினம் 60
மஞ்சுள கஜநாயக்க

வேலைத்தளமாக காணப்பட்ட நாட்டை நல்லாட்சி அரசாங்கம் தரிசு நிலமாக மாற்றியது 65
பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

ஐக்கிய தேசிய கட்சிக்கு மாத்திரமே நெருக்கடியை எதிர்நோக்க முடியும் 67
ரணில் விக்ரமசிங்

சகல முன்மொழிவுகளையும் உரிய காலத்தில் நிறைவேற்றுவேன் 69
சஜித் பிரேமதாச

எத்தருணத்திலும் நாட்டை ஏற்றுக்கொள்ளத் தயார் 71
அனுரகுமார திசாநாயக்க

தேசிய அரசைப் பாதுகாப்பது எமது கொள்கையாகும் 72
விமல் வீரவன்ச

மதத்தை அல்லது இனத்தை முதன்மைப்படுத்தி அரசியல் செய்யக் கூடாது 74
கலாநிதி வண. பத்தேகம சமித்த தேரர்

ஒற்றையாட்சியைக் காப்பதற்காகவே அன்று நுகேகொடை அலை ஆரம்பிக்கப்பட்டது 77
தினேஷ் குணவர்தன

எம்.சீ.சீ. அன்றும் இன்றும் ஒரு பூச்சாண்டி 79
உதய கம்மன்பில

2/3 பெரும்பான்மையைப் பெற புரட்சி செய்ய நேரிடும் 81
வாசுதேவ நாணயக்கார

நல்லாட்சி அரசாங்கம் 100 நாட்கள் மாத்திரமே ஆட்சியில் இருந்தது 83
சட்டத்தரணி ஷிரால் லக்திலக

கட்டாயமாக 19வது திருத்தம் நீக்கப்பட வேண்டும் 86
சட்டத்தரணி தயாசிரி ஜயசேக்கர

சர்வதேச தலைவீடு இல்லாமல் வேறு மாற்றுத் திட்டம் கிடையாது 88
சீ.வீ. விக்னேஸ்வரன்

தமிழ் மக்களுக்கு இந்த அரசாங்கம் மீது நம்பிக்கை உண்டு 90
டக்ளஸ் தேவாநந்தா

இரண்டு இனங்கள் ஒரு நாடு 92
கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

தமிழ் மக்களின் உரிமையைப் பாதுகாக்கும் சிங்கள மக்களின் இணக்கப்பாட்டுடனான தீர்வே எமது அபிலாஷையாகும் 94
எம்.ஏ. சுமந்திரன்

வடகிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை அடைதல் 97
மயில்வாகனம் திகலராஜனா

முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைக் குறைக்க கூலிப்படைகளுக்கு கொந்தராத்து கொடுத்துள்ளார்கள் 99
ரஹுஃப் ஹக்கீம்

"

**மார்ச் 02 ஆந் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டதிலிருந்து இந்த முறைமை செயற்படவில்லை. அது செயற்பட அனுமதிக்கப்படவும் இல்லை. இது விடயத்தில் உயர் நீதிமன்றம் நிறைவேற்றுத்துறையின் பக்கம் சார்ந்து நிற்பதோடு, ஜூன் இரண்டாம் திகதியிலிருந்து அடுத்த பாராளுமன்றம் கூடும்வரையில் பகிரங்கநிதியைத் திரட்டுவதற்கோ, செலவிடுவதற்கோ உண்மையில் எந்தவித அதிகாரமும் கிடையாது.**





http://www.adaderana.lk/

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

# 2020 பொதுத் தேர்தல்



**கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து**
நிறைவேற்றுப் பணிப்பாளர்
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

தற்போது பணய நிலையிலுள்ள விவகாரங்களை நோக்குகையில், ஆகஸ்ட் 05 ஆம் திகதிய பொதுத் தேர்தல் 2019 நவம்பரில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலையொத்த சவால்களையும், அதைவிட மோசமான சவால்களையும் எதிர்நோக்குவது தெளிவாகும். இது கொரோனா வைரஸ் இடைப் பிரதிகூல நிலையில் ஏற்பட்ட விடயமும் அல்ல.

நவம்பர் 2019 காலத்தில் மிகப்பரந்த பொதுமக்கள் புலக்காட்சியில் முன்னர் இருந்த சிறிசேன - விக்கிரமசிங்க ஆட்சிக்கு முற்றிலும் வேறுபட்ட வகையில், ஒரு வேலையைச் செய்து முடிக்கக்கூடிய ஒருவரை, மற்றும் ஒரு தேசிய சிந்தனையின் அடிப்படையிலான ஒரு புதிய அரசியலமைப்பு மற்றும் ஆட்சி வடிவம் குறித்த தத்துவார்த்தத்தின் முன்னணி நபர் ஒருவரைத் தெரிவுசெய்யவேண்டியிருந்தது. ஆகவே அது ஒரு தெளிவான, தீர்மானகரமான, தலைமைத்துவத்துக்கும், சட்டம், ஒழுங்கு மற்றும் ஸ்திரநிலைக்குமான வாக்களிப்பாக இருந்தது. இது ஒரு தேர்தலில் 15 இலட்சம் மேலதிக வாக்குகளால் வெல்லப்பட்டது. எதிர்க்கட்சி தன் சொந்தச் செயல் திறமையீனம் காரணமாக பயனுறுதியுள்ள வகையில் அதிகாரத்தை ராஜபக்ஷ விடம் கையளித்தது. இதை அவர் தன் தலைமைத்துவக் கவர்ச்சியூடாகவே வென்றெடுத்தார். ஆகவே, திரு. ராஜபக்ஷ பாராளுமன்றத்தினால் எதுவித தடைகளுமற்ற நிலையில் கொவிட் காலப்பகுதியில் மனம் போனபோக்கில் ஆட்சிசெய்யும் பணிப்பாணையைக் கொண்டுள்ளார். அவர் தன் இராணுவத்






https://www.army.lk/https://srilankamirror.com/

விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

திடீர் உந்தல்களுக்குப் பயனுறுதியுள்ள வகையில் இடமளித்து, நல்லொழுக்க சீலமுள்ள மற்றும் சட்டத்தை மதிக்கும் சமூகத்தை ஆக்குவதற்கும் கிழக்கில் அகழ்வாராய்ச்சி மரபுரிமைகளுக்குமான செயலணிகளைத் தாபித்துள்ளார். அத்துடன் கொவிட் வைரஸை க் கையாளுவது இராணுவத்தில் தற்போதுள்ளவர்களின் கைகளிலும், முன்னர் இருந்தவர்களின் கைகளிலும் உள்ள ஒரு விடயமாகவுள்ளது. இராணுவ மனப்போக்கைக் கொண்டவர்களே இதைக் கையாளுகின்றனர். விந்தையாக, கடற்படையே இந்த வைரஸினால் பாரிய அளவில் பாதிப்புற்ற ஒரு குழுவாக உள்ளது. இது எவ்வாறு இடம்பெற்றுள்ளதென்பதை எவருமே கேட்பதில்லை. ஆட்சிக்குழு இதுகுறித்து எதுவும் கூறுவதில்லை.

ஆகவே, இது எமக்குப் பாராளுமன்றத்தினதும் பொதுத் தேர்தலினதும் முக்கியத்துவத்தை நினைவூட்டுகின்றது. செயற்படும் எந்தவொரு ஜனநாயகத்திலும் அல்லது தாம் ஜனநாயகவாதிகளென்று கூறிக்கொள்ளும் எந்தச் சமூகத்திலும் அரசாங்கத்தின் மூன்று அடிப்படையான தூண்களும் செயற்படுதல் வேண்டும். அதாவது நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை மற்றும் நீதித்துறை. இத்துறைகளில் ஒன்றிடம் வாட்டெல் வரைவிலக்கணத்தின் ஒரு மாறுபாடான வகையில் மற்றவர்களுக்கான சட்டங்களை ஆக்கித் திணிக்கும் அதிகாரம் இருத்தல் ஆகாது. அத்துடன், மூன்று துறைகளிலும் அடிப்படைக் கருமங்களாக நிறைவேற்றுத்துறை, சட்டத்துறையினால் விவாதிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாக இருப்பதாகும். இச்சட்டங்கள் ஆரம்பத்திலேயே நிறைவேற்றுத்துறையினால் முன்மொழியப்பட்டவையாகவும் இருக்கலாம். பாராளுமன்றம் என்பது உண்மையில் ஒரு தீர்க்காலோசனை மன்றமாகவும், விடயங்களை விவாதிக்கும் அரங்காகவும் உள்ளது. இது நடைமுறையாக்கம் சம்பந்தப்பட்ட ஒன்றல்ல. மாறாக, இது தான் அங்கீகரித்த கொள்கையின் நடைமுறையாக்கத்துக்கான மூலவளங்களை ஒதுக்கியளிப்பதற்கும், அவற்றுக்கு வகைப்பொறுப்புக் கூறுவதற்குமான ஓர் இடமாகும். நீதித்துறை சட்டத்தின் ஆட்சியை உறுதிசெய்து அரசியலமைப்புச் சட்டகத்தினுள் நிறைவேற்றுத்துறையின் நடவடிக்கைகளை வியாக்கியானம் செய்வதாகும்.

மார்ச் 02 ஆந் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டதிலிருந்து இந்த முறைமை செயற்படவில்லை. அது செயற்பட அனுமதிக்கப்படவும் இல்லை. இது விடயத்தில் உயர் நீதிமன்றம் நிறைவேற்றுத்துறையின் பக்கம் சார்ந்து நிற்பதோடு, ஜூன் இரண்டாம் திகதியிலிருந்து அடுத்த பாராளுமன்றம் கூடும்வரையில் பகிரங்கநிதியைத் திரட்டுவதற்கோ, செலவிடுவதற்கோ உண்மையில் எந்தவித அதிகாரமும் கிடையாது. பகிரங்க நிதிமீதான பாராளுமன்றத்தின் புகழார்ந்த, எனினும் உபயோகத்தால் தேய்ந்துபோன முதுமொழியாகிய பிரதிநிதித்துவமின்றி வரிவிதிப்புக்கு இடமில்லை என்பது கைவிடப்பட்டுள்ளது. கொவிட் வைரஸ் பரம்பலின் முகாமைத்துவம் ஒப்பீட்டுரீதியில் வெற்றிகரமானதாக நோக்கப்படும் அதேவேளையில், பொருளாதாரமென்னும் குறிப்பிடப்பட்ட நேரத்தில் வெடிக்கும் குண்டு இயங்கியவாறு உள்ளது. அதிகரித்துவரும் ஆட்சிக்குழுவின் எதேச்சாதிகார பெரும்பான்மையின வாதமும் சட்டத்தரணிகளைக் கைதுசெய்து அவர்களை நீதிமன்றங்களில் ஆஜர்செய்யாதவரும், அதேவேளையில் மிகப் பயங்கரமான குற்றங்களுக்காக நாட்டின் மீயுயர்

நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்புப்பெற்ற முன்னாள் இராணுவ அதிகாரிகளுக்கு மன்னிப்பு வழங்குபவருமான ஒரு நிறைவேற்றுத்துறையின் தலைவரும் நாட்டிலுள்ள நிலைமை காணப்படுகின்றது.

பொருளாதாரரீதியில் நாம் தரவரிசைப்படுத்தும் முகவர் நிலையங்களால் ட தரத்துக்குக் கீழிறக்கப்பட்டு, மீண்டும் கீழ் நடுத்தர வருமான அந்தஸ்துக்கு வந்துள்ளோம். அடுத்த ஐந்து வருடகாலத்தில் நாம் வருடத்துக்கு அண்ணளவாக 4 பில்லியன் அமெரிக்க டொலரை (US$) ஐ கடன் மீள்கொடுப்பனவாகச் செலுத்தவேண்டியுள்ளதென்று முன்மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளது. வேறு முன்மதிப்பீடுகள் இதைவிட உயர்வானவையாகும். சர்வதேச கடன்தருநர்கள் அனேகமாக நிவாரணங்கள் குறித்த பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஒரு புதிய பாராளுமன்றத்தின் வருகைக்காகக் காத்திருக்கின்றனர்.

சிறிய மற்றும் நடுத்தர வியாபாரத்தொழில் நிவாரணத்துக்குச் சிறு பணஉதவி வழங்கப்படுகின்றது. சீனாவிடமிருந்து ஒரு கணிசமான தொகை குறித்து வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. ஜப்பான் கடன் நிவாரணம் குறித்த கலந்துரையால்களை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது. 480 மில்லியன் அமெரிக்க டொலர் (US$) மிலெனியம் சலென்ஜ் கணக்கு நன்கொடை குறித்த கேலிக்கிடமான, தவறாக வழிநடத்தும் கருத்துமோதல்கள் மேலதிக சேதத்தை விளைவிக்கின்றன. ஆடைத்துறையில் அதிகரிக்கும் வேலையின்மை. சுற்றுலாத்துறை, புலம்பெயர் தொழிலாளர் மற்றும் சிறிய-நடுத்தர வியாபாரத்தொழில்கள் குறித்த துறைகளில் வேலையின்மை மேலும் கடூரமான தாக்கத்தை ஏற்படுத்தும்போது நிலைமை எவ்வாறிருக்கும்?

இந்த ஆட்சிக்குழுவைப்பொறுத்தவரையில் பொதுத் தேர்தலென்பது எப்பொழுதுமே குடும்ப ஆட்சியைத் திரட்டி வலுப்படுத்தும் வகையில் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறும் முயற்சியாகவே இருந்துள்ளது. குறித்துரைப்பாக, ஜனாதிபதியைப்பொறுத்தவரையில், இது தனக்குப் பிடித்தமான ஓர் அரசாங்கத்தையும், ஆட்சி முறையையும் உருவாக்கும் வகையில், அரசியலமைப்புரீதியில் தேர்தலில் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக மக்களின் பணிப்பாணையைப் பெற்றுக்கொள்வது சம்பந்தமான ஒரு விடயமாகும். அவர் தெளிவாகவே 1978 இன் அரசியலமைப்பு வழங்கும் செயற்பாட்டுக்கான தடையற்ற வசதியை விரும்புவதால், அவருக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைத்தாலும், கிடைக்காமல் போனாலும் வேகமாகக் காய் நகர்த்தி, அரசியலமைப்புக்கான 19 வது திருத்தத்தின் மட்டுப்பாடுகளின்றி மற்றும் 13 வது திருத்தத்தின் மட்டுப்பாடுகளின்றி 1978 இன் அரசியலமைப்புக்கே திரும்பினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இது பொருளாதாரத்துறையில் வளர்ந்துவரும் அதிருப்திக்கு



https://www.deccanherald.com/

**பொருளாதாரரீதியில் நாம் தரவரிசைப்படுத்தும் முகவர் நிலையங்களால் ட தரத்துக்குக் கீழிறக்கப்பட்டு, மீண்டும் கீழ் நடுத்தர வருமான அந்தஸ்துக்கு வந்துள்ளோம். அடுத்த ஐந்து வருடகாலத்தில் நாம் வருடத்துக்கு அண்ணளவாக 4 பில்லியன் அமெரிக்க டொலரை கடன் மீள்கொடுப்பனவாகச் செலுத்த வேண்டியுள்ளதென்று முன்மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளது. வேறு முன்மதிப்பீடுகள் இதைவிட உயர்வானவையாகும். சர்வதேச கடன்தருநர்கள் அனேகமாக நிவாரணங்கள் குறித்த பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஒரு புதிய பாராளுமன்றத்தின் வருகைக்காகக் காத்திருக்கின்றனர்.**



www.colombotelegraph.com/

**இலங்கையின் அரசியல், பொருளாதார மற்றும் அரசியலமைப்பு அபிவிருத்திகளின் வடிவமைப்பும், பயணத்திசையும் இலங்கையராகிய எங்களின் முதனிலைப் பொறுப்பாகும். பணயப் பங்காளர்கள் நாமேயாவோம். போராட்டக் களம் இந்த நாடேயாகும்.**

எதிராகவும், தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்துவது, ஸ்திரநிலை மற்றும் சட்டம் ஒழுங்கைப் பலப்படுத்துவது என்ற போர்வையில் அரசியலமைப்பைச் சொந்த நோக்கங்களுக்காகக் கருவியாகப் பயன்படுத்துவது மற்றும் தேசாபிமானிஃதேசத்துரோகி பிரிவினையில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் துரோகிகளாகத் தென்படுவோருக்கான நிலைப்பாடு என்பவற்றுக்குச் சாதகமாகவும் இடம்பெறலாம். ஆயினும், வைரஸ் காரணமாக ஏற்படும் பொருளாதார விளைவுகள் குறுகிய மக்கள்வாத மற்றும் எதேச்சாதிகார அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்கள் குறித்த இனிமையான கனவுகளைவிட அதிக காலம் நீடிக்கலாம். இது ஜனத்தொகையில் ராஜபக்ஷ ஆதரவாளர்களை எவ்வளவு கடினமாகத் தாக்கும் என்பதைப் பொறுத்துள்ளது. இத்தாக்கம், மோசமானதாகவிருந்து, ஆட்சிக்குழுவின் எதிர்வினை அடக்குமுறையாகவிருப்பின், நாம் மீண்டும் அடிப்படை மனித உரிமைகளுக்காகவும் மற்றும் அரசியல் உரிமைகளுக்காகவும் போராடும் நிலை ஏற்படும்.


இத்தேர்தலில், நிலையான பக்கச்சார்பு இல்லாத வாக்காளர்கள் என்ன செய்யவேண்டும் என்பதுகுறித்த விவகாரமொன்று உள்ளது. இருக்கக்கூடிய கட்சிகள் மற்றும் வேட்பாளர்களிடையே குறித்த அதிருப்தியும், இதன் காரணமாக எவருக்கும் வாக்களிக்காமல் இருந்துவிடும் போக்கும் இருப்பதாகத் தென்படுகின்றது. அவ்வாறிருப்பின், வாக்களிக்கச் செல்வதாயின் வாக்குச்சீட்டைச் செல்லாமல் ஆக்குவது. இது தனிநபர்களின் மனச்சாட்சியைத் திருப்திப்படுத்தும் அதேவேளையில், இது பணிப்பாணை மொத்தத் தேசிய வாக்குகளின் ஒரு சிறிய விகிதாசாரத்தினால் அமையும் நிலையை ஏற்படுத்தக் கூடும். ஒரு கருமப்படும் தாராளவாத ஜனநாயகத்தின் அடிப்படை உரிமைகள், கடமைகள், நிறுவனங்கள் மற்றும் செயல்முறைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு, எந்தத் தரப்புமே ஏனையோர்மீது சட்டங்களைத் திணிக்கும் நிலையில் இருக்கக்கூடாதென்பது முக்கியமானதாகும். செவ்வைபார்த்தல்களும், சமநிலைப்படுத்தல்களுமே இன்று அவசியமானவையாகவுள்ளன. இவை நிறுவனரீதியான மற்றும் நடவடிக்கைமுறை சார்ந்த செவ்வைபார்த்தல்களும் சமநிலைப்படுத்தல்களுமாகும். நாம் எமது தாராளவாத, ஜனநாயக நிறுவனங்களைப் பாதுகாத்து, முன்னேற்றுவதாயின், நாம் வாக்களிக்க வேண்டும்.

எவ்வாறு பார்த்தாலும், பாராளுமன்றத்தினுள்ளும், வெளியிலும் ஒரு பலமான எதிர்க்கட்சியின்றி எந்தத் தாராளவாத ஜனநாயகமும் மதிப்பற்றதாகும். எம்முள் இருக்கும் விடயங்கள் நம்பிக்கையற்றவையாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பிரிவு ஜனாதிபதியுடனும், மறு பிரிவு பிரதமருடனும் இருப்பதாகத் தெருவில் பேசிக் கொள்ளுகின்றார்கள். ஆகவே, ஓர் உண்மையான தெரிவு என்பது காணப்படவில்லை. நாட்டை எந்த விதத்திலும் பாதுகாத்து, முன்னேற்றுவதற்கு அர்ப்பணிப்புணர்வுகொண்ட, பல்வகைமையில் ஐக்கியம் என்னும் கருத்தின் அடிப்படையிலான ஓர் இலங்கையின் வீரப் புதல்வர் எவரையும் காணவில்லை. இது மக்களினதும், தேசத்தினதும் அன்றாடவாழ்வுக்கு அரசியலமைப்பினதும், ஜனநாயகத்தினதும் முக்கியத்துவத்தை விளக்கும் போராட்டத்தை 2018 அக்டோபரில் முன்னெடுத்த சிவில் சமூகத்தின் பிரிவினர் குறித்துச் சிந்திக்க வைக்கின்றது.

நவம்பரில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியினர் வெற்றிபெறும் பட்சத்தில், சர்வதேச ரீதியில் மனிதஉரிமைகள் அதிகரித்த, ஜனநாயகச் சார்புள்ள சூழல் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது.

எவ்வாறாயினும், இலங்கையின் அரசியல், பொருளாதார மற்றும் அரசியலமைப்பு அபிவிருத்திகளின் வடிவமைப்பும், பயணத்திசையும் இலங்கையராகிய எங்களின் முதனிலைப் பொறுப்பாகும். பணயப் பங்காளர்கள் நாமேயாவோம். போராட்டக் களம் இந்த நாடேயாகும்.





## கொரோனா கூறும் செய்தி:

# “நியாயமாக நடந்து கொள்ளுங்கள் !”



சிரேஷ்ட சட்டத்தரணி
**எஸ்.ஜீ.புஞ்சிஹேவா**

மனிதன் மனிதனுக்கு ஆபத்தாக மாறியதை, இந்த 21 ஆம் நூற்றாண்டில் நாம் எமது கண்முன்னாலேயே கண்டோம். அதாவது, வைரஸ் நோய்கள், புயல் காற்றுக்கள், சுனாமி என்பன இயற்கையின் அனர்த்தங்களாக அமையலாம். ஆனால் அவற்றிற்கு ஈடுகொடுக்கும் ஆற்றலைக் கட்டியெழுப்புவதாயின் அது மனிதனிடமே ஒப்படைக்கப்பட வேண்டிய விவகாரமாகும். வருடந்தோறும் சீனாவில் இடம்பெற்ற “கோவென்ஹோ“ வெள்ளப்பெருக்கு மற்றும் மணற்புயல்கள் என்பன தற்போது கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

மனிதன் மனிதனால் சுரண்டப்படுவதே மிகக்கொடூரமான விபத்து அல்லது இன்றைய இருப்பிற்கான நவதாராளவாதமாகும். அனைத்து சமூகங்களிலும் வளங்கள் உருவாக்கப்பட வேண்டும். இவ்வளங்கள் அனைவர் மத்தியிலும் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும். வளங்கள் என்பன பொதுச்சொத்துக்கள் என சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. வளங்களை சமூகத்தின் ஒருசிறு பகுதியினர் கையகப்படுத்திக் கொள்ளுதல் உலகத்தில் மாபெரும் குற்றமாக சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அடுப்பங்கரையில், பழங்காலத்தில் அடுப்பங் கற்களின் அடியில், பாத்திரங்களில் வைத்து தங்க நாணயங்களைப் புதைத்து வைப்பதன்மூலம் வளங்கள் மறைத்து வைக்கப்பட்டன. இன்று “சிங்கப்பூர்”, “சுவிற்சலாந்து”, “சீசெல்ஸ்” ஆகிய நாடுகளின் வங்கிகளில் தங்கத்தை ஒளித்து மறைத்து வைக்க முடியும். இவ்வாறாக வளங்களைக் கையகப்படுத்திக் கொள்வதும், ஒளித்து மறைத்து வைப்பதும் மனித இனத்திற்கு எதிரான குற்றங்களாக ஏன் கருதப்படக்கூடாது?



> மனிதன் மனிதனால் சுரண்டப்படுவதே மிகக்கொடூரமான விபத்து அல்லது இன்றைய இருப்பிற்கான நவதாராளவாதமாகும். அனைத்து சமூகங்களிலும் வளங்கள் உருவாக்கப்பட வேண்டும். இவ்வளங்கள் அனைவர் மத்தியிலும் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும். வளங்கள் என்பன பொதுச்சொத்துக்கள் என சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. வளங்களை சமூகத்தின் ஒருசிறு பகுதியினர் கையகப்படுத்திக் கொள்ளுதல் உலகத்தில் மாபெரும் குற்றமாக சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

கொரோனா வைரஸ் காலத்திற்கு ஏற்ப ஈடுகொடுப்பதற்காக மேற்கொண்ட நடவடிக்கை என்பதனால் “வளங்களை உரித்தாக்கிக் கொள்வது பற்றிய கருத்துக்கள் மாற்றம் அடையவேண்டும் என்பது எமக்குக் கிடைத்துள்ள முதன்மைச் செய்தியாகும்.”
வளங்களை உருவாக்குவதற்கு மனிதன் மனித உழைப்பை ஈடுபடுத்த வேண்டும். எனவே, இவ்வளங்களை சமூகத்தின் ஒரு பகுதியினர் மாத்திரம் கையகப்படுத்திக்கொள்வது ஒரு மார்க்கமாக அமையக்கூடாது. மனிதனின் உடல் உழைப்பால் உற்பத்தி செய்யப்படும் உபரிச் செல்வம் அனைத்தும் பொதுமனிதனின் நன்மைக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். காற்று, நீர், சூரியஒளி, காணி, மரஞ்செடி கொடிகள், ஒளி என்பவையும் உழைப்பின் விளைவுகளும் பொதுச் சொத்தாக அமைய வேண்டும். மனிதனும் அவனுடைய முளையும், அனைத்து உடல் உறுப்புக்களும் மனிதனுடைய கூட்டு உழைப்பினால் பரிணாமம் அடைந்தது. உழைப்பின் விளைவுகள் இதன் காரணமாகவே பொதுவான வளங்களாக அமைய வேண்டும். இவ்வாறு சிந்திப்பது இயற்கைக்கு மிகவும் அண்மித்ததொரு விடயமாகும்.

கொரோனா பரவுவதைத் தடுப்பதற்குச் சட்டங்களை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது. முதலாவது விடயம் அரிசி, காய்கறி, மீன் என்பன மனிதனுடைய இடையீடின்றி நுகர்வோருக்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற எண்ணக்கரு நடைமுறைப்படுத்தப்பட்டது. உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்கள் உற்பத்தியாளரிடம் இருந்து பெற்று பாவனையாளருக்கு வழங்குவதற்கு இடைத் தரகர் ஒருவர் இடையீடு செய்கிறார். இந்நடவடிக்கை அமுலில் உள்ள சட்டத்திற்கு மாறானதல்ல. இறுதியில் இந்த உற்பத்தியின்மூலம் கூடிய பயனைப் பெறுவது இடையில் உள்ள மனிதர் அல்லது வியாபாரி ஆவார். எனவே, ஊரடங்குக் காலத்தின்போது உரிய விலைக்கு அரிசியை வழங்குவதற்கும், காய்கறி, மீன் போன்ற பொருட்களை நுகர்வோரிடம் கொண்டு சேர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த எண்ணக்கரு முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால் எமது சமூக முறைமையில் அதனை முழுமையாக செயற்படுத்துவது கடினமாகும். சோசலிச நாடுகளில், இடையில் செயற்பட்டு சுரண்டுபவர்களில் இருந்து விடுவிக்கப்பட்ட பண்டங்கள் மனிதர்களுக்கு வழங்குவதையே சோசலிச நாடுகளின் அடிப்படை நடைமுறையாக அமைந்துள்ளது. அதற்கான பின்நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்வதாயின் கூட்டுறவுச் சங்கங்களைப் போன்ற ஒரு முறைமைமூலம் வளங்களை வழங்க முடியும். இதன்போது சுரண்டுபவர்களிடம் இருந்து விடுவிக்கப்பட்டு நுகர்வோருக்கு நியாயமான முறையில் வளங்கள் கிடைக்கப்படும். ஆனால், மனிதனின் பேராசை இல்லாது ஒழிக்கப்படும்வரை ஊழல், இலஞ்சம், மோசடிகள் என்பன இல்லாதொழிக்கப்பட மாட்டா. இத்தகைய நிலைமைக்கு நாடு மாறும் வகையில் ஒரு முறைமை இருத்தல் வேண்டும். அனர்த்தங்களை எதிர்நோக்குவதாயின் மனிதன் சுரண்டப்படுவதிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். இதன் பொருள் தனிச்சொத்து முறைமையில் இருந்து சுதந்திரமடைய வேண்டும் என்பதாகும். கொரோனா தொற்றை எதிர்நோக்கும்போது இடையீடின்றி உணவு வழங்கப்பட வேண்டுமென்பது அங்கீகரிக்கப்பட்டது. பல குறைபாடுகள் இருந்தபோதிலும் அது தற்காலிகமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதன் உள்ளார்ந்த அர்த்தம் என்ன? விபத்தின்போது மற்றுமோர் ஆபத்தான சுரண்டலில் இருந்து தடுப்பதாகும். இதன்மூலம் மனிதர்களுக்கு உணவு, உடை, வீட்டு வசதிகள், சுகாதாரம், கல்வி, என்பனவும் சுரண்டலின்றி நியாயம் கிடைக்க வேண்டுமென்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒரு கிளர்ச்சியின்போது, எதிர்ப்பு இயக் கத்தின்போது, தற்போது நடைமுறையில் உள்ள முறைமையினால் உருவாக்கப்பட்ட சட்டத்தால் அது ஒடுக்கப்படும். படைகளை ஆயுதபாணியாக்கி ஈடுபடுத்துவதன்மூலம் அதனை ஒடுக்குவது சட்டமாக அமைந்தது. ஆனால், கொடூரமான நோயின்போது இந்த முறைகளின் அளவு போதாது. ஏனெனில் மேற்படி நோய்களுக்கான தொற்றுகள், வைரஸ் என்பன படையினருக்கும் தொற்றக்கூடும். இதன்போது அத்தொற்றுநோய் முதலாளிகளையும், ஆட்சியாளர்களையும் இலகுவில் தாக்கும். எனவே மேற்படி நோய்க் கிருமிகளை அழித்தொழிக்கும் அடிப்படைப் போராட்டத்திற்குச் செல்ல வேண்டும். இதன்பொருட்டு மனிதன் என்ற ஊடகத்தைப் பேணிப் பாதுகாக்கும் சமூக சூழமைவைத் தயாரித்தல் வேண்டும். இதன்போது மனிதனுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நடத்தைகளைத் தடுக்க வேண்டும். நிவாரண வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். எமது நாட்டில் இதுதான் நடந்தது.

அத்தியாவசிய உணவுகளை இலகுவில் வழங்குவதற்கு பொருட்களை எடுத்துச் சென்று மக்களுக்கு வழங்குதல் ஷ அத்தியாவசிய சேவைகளாகக்; கருதி, உணவுப் பொருட்களை வீட்டிற்குக் கொண்டு சென்று விநியோகிக்க வேண்டியிருந்தது. தொடர்ந்தும் இவை வியாபாரிகளாலேயே மேற்கொள்ளப்பட்டன. அதற்கு சமாந்திரமாக வங்கிச் சேவைகளை தளர்த்த வேண்டியிருந்தது. மருந்தகங்கள் முன்னே நீண்ட "கியூ" வரிசைகள் காணப்பட்டன. இதன்மூலம் மக்களில் எத்தனைபேர் நோயாளர்களாக உள்ளனர் என புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. மக்களை நோயாளர்களாக்கும் சமூக வெளிப்படுத்தல்கள் மிகவும் பிரபலமானவையென இவை சுட்டிக்காட்டின. **இத்தகைய தொற்று நோய்களுக்கு ஈடுகொடுப்பதாயின் பொதுமக்களிடம் நோய் எதிர்ப்புச் சக்தி இருக்க வேண்டுமென சுற்றிவளைத்துக் கூறப்பட்டது. இதன் காரணமாக மஞ்சள் கொத்தமல்லி, மரமஞ்சள் மிகவும் பிரயோசனமான ஔடதங்கள் என ஏற்றுக்கொள்ளப்பட்டன. உள்நாட்டு ஔடதங்கள்மீது கூடிய கவனம் செலுத்தப்பட்டது. உள்நாட்டு உள்ளூர் உணவு வகைகளின் முக்கியத்துவத்தை நிரூபிப்பதற்கு இத்தகைய அனர்த்தம் ஏற்பட வேண்டுமா?** நாம் எமது உடலுக்குப் பொருந்தாத உணவு வகைகளுக்க பழக்கப்பட்டுள்ளோம் என்பது இதிலிருந்து உணர்த்தப்படவில்லையா? உள்ளூர் உணவு மற்றும் ஔடதங்கள் விபத்துக்களின்போது எமக்கு உதவும் என்பதைப் புரிந்துகொள்வதாயின் தேசிய சுகாதார அனர்த்தம் ஏற்பட வேண்டும். ஆனால் புதிய லிபரல் பொருளாதாரத்தின் உடனடி "நூடில்ஸ்" வகைகளுக்கு அடிமையாதல், நவீன அபிவிருத்தியின் சிறந்த பெறுபேறாகவே நாம் கருதுகிறோம். எமது நாட்டின் பலாக்காய், பலாப்பிஞ்சு, கீரைவகைகள், கிழங்குவகைகள், பழவகைகள் என்பவற்றைவிட மூன்று நான்கு தட்டுகள் கொண்ட "ஹன்பேகன்" உண்பதற்கு பழக்கப்பட்டதன் விளைவாக கொரோனா அனர்த்தத்தின்போது அதன் தீமைகள் புரிந்ததா? என்பது சந்தேகமே. எதிர்கால சந்ததியினரையாவது இந்த அழிவுக்குரிய நடத்தையில் இருந்து விடுவித்துக்கொள்வதற்குக் கொரோனா வழங்கிய செய்தி முற்றிலும் போதுமானது.


**நவ தாராளவாத பொருளாதார கைத்தொழில்களின்கீழ் எமக்கு நச்சு கலந்த உணவுகளையே உண்ணுவதற்கு பழக்குகின்றனர். பல தசாப்தங்களாக இந்த வாழ்க்கை முறைக்கு அடிமையாகிய ஒரு தேசம் என்ற வகையில் மனதாலும் உடலாலும் சீரழிதல் ஆளுகையின் மறைமுகமான விளைவாகும். வெளிநாட்டு உணவுகளுக்கு முதலிடம் வழங்குதல் எமக்குப் பழக்கப்படுத்தப்பட்டுள்ளது. "கவுப்பி", பாசிப்பயறு, குரக்கன் போன்ற ஷசொற்கள்; எமது பயிர்களாகக் கருதப்படாமல் வெளிநாட்டில் இருந்து தருவிக்கும் பயிர்களாகக் கருதப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எமது நாட்டின் பயிரிடும் பொருளாதாரத்தை சிறுமைப்படுத்தி வெளிநாடுகளில் இருந்து தருவிக்கும் தாராளவாத பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு நாம் பாராளுமன்றங்களை தெரிவு செய்கிறோம்.** ஆனால் இந்தக் கொரோனாவின்போது வேறு விடயங்கள்மீது வலியுறுத்தவே அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது. அதாவது விவசாய நடவடிக்கைகளுக்கு ஊரடங்குச் சட்டம் செல்லுபடியாகவில்லை. வீட்டுத் தோட்டங்கள் மேம்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இவை கடந்த காலத்திலிருந்து இடம்பெற்றிருக்க வேண்டும். இதிலிருந்து நாம் புரிந்துகொண்டது என்ன? உள்நாட்டு பயிர்ச்செய்கை, வீட்டுத்தோட்டங்கள் ஆகிய இரண்டும் அனர்த்தங்களின்போது எமக்கு கைகொடுத்து உதவின. இதுவரைகாலம் அதாவது இலங்கைக்கு அரசியல் சுதந்திரம் கிடைத்த 1948 இல் இருந்தாவது இந்த உள்நாட்டுச் சக்தியை கட்டியெழுப்ப நாம் மறந்துவிட்டோம் என்பதை இத்தருணத்திலேனும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.. இதன்மூலம் விவசாயம் தொடர்பாக புதிய கண்ணோட்டங்களை உருவாக்குவதற்கு முயற்சித்தல் சிறந்தது. கமத்தொழில் ஒரு சுதந்திரமான தொழில் துறையாகும். இதன்பொருட்டு மக்களுக்கு காணி, நீர் என்பவற்றை வழங்குவது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. தற்போது இவ்விரண்டு விடயங்களும் தாராள பொருளாதாரவாதத்தினால் கபளீகரணம் செய்யப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தல் மற்றும் கொரோனாவைத் தடுத்தல் ஆகிய விடயங்கள் அரசாங்கத்தினதும், சமூகத்தினதும் செயற்பாடுகள் ஆகும். எனவே விபத்துக்களைச் சந்திக்கும்போது மனிதர்களுக்கு உதவவேண்டுமென்ற கருத்துக்களை உருவாக்குவது சுலபமாகியுள்ளது. இதன்மூலம் கற்ற இளைஞர்கள் மற்றும் வளர்ந்தோர் பல்வேறு புத்தாக்கங்களை உருவாக்கினர்.



சமூக இடைவெளியைப் பின்பற்றும் நுகர்வோர் – கொழும்பு

https://leads.lk/

**மனிதனின் உடல் உழைப்பால் உற்பத்தி செய்யப்படும் உபரிச் செல்வம் அனைத்தும் பொதுமனிதனின் நன்மைக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். காற்று, நீர், சூரியஒளி, காணி, மரஞ்செடி கொடிகள், ஒளி என்பவையும் உழைப்பின் விளைவுகளும் பொதுச் சொத்தாக அமைய வேண்டும்.**



கொரோனாவைத் தடுப்பதற்கு அவசியமான விஞ்ஞான தொழில்நுட்பக் கருவிகளை உற்பத்தி செய்வது சிறந்த குணவியல்பாகும். சுகாதாரம் மற்றும் விஞ்ஞானக் கருவிகளை உற்பத்தி செய்வதற்கு எவருடைய நிர்ப்பந்தமுமின்றி தாமே உற்சாகமடைந்து அவற்றை உற்பத்தி செய்து சமூகத்திற்கு அன்பளிப்பாக வழங்குவதில் ஈடுபாடு கொள்ளுதல் எமது சமூகத்தினதும் கல்வியினதும் வெற்றிகளாகும். அதேசமயம் அத்தருணத்தில் மேம்பாடடைந்த மானுட குணவியல்பு எல்லாவற்றையும்விட பாராட்டுக்குரியது. இதன் மூலம் நாம் எதனைப் புரிந்துகொள்ள வேண்டும். விபத்தின்போதாயினும் தேவையான சமூகச் சுதந்திரம் நிலவினால் மனிதனின் சிருக்ஷ்டிகரமான சக்தி சிறப்பாகப் பிரதிபலிக்கும் என்பதாகும். எனவே, அவசியமான சுதந்திரமும் சக்தியும் கொண்ட சிறந்த புரிந்துணர்வுடைய ஒரு சமூகத்தில் வாழும் மனிதன் பல சிருஷ்டித்திறன் கொண்டவனாகவும், பொதுநன்மைக்காகச் செயற்படுத்துவதற்கு ஆர்வம் காட்டுவானென்பதும் தெளிவுபடுத்தப்படுகிறது.

எமது நாட்டின் நிருவாகத்தின்போது ஆரம்பத்திலிருந்தே உருவாக்க வேண்டிய அம்சங்கள் தனிமைப்படுத்தலின் ஊடாக உருவானது. வாகனங்களின் போக்குவரத்து அதிகளவில் குறைந்தமையால் வழிமண்டலமும் சுற்றாடலும் தூய்மையடைந்தது. நாம் கொரோனோ தொற்றுக்கு முன்னர் நவ தாராளவாதத்தினால் மாசுபடுத்தப்பட்ட காற்றையே கூடுதலாக சுவாசித்தோம். **இச்சந்தர்ப்பத்தில் நச்சுப் புகை குறைந்தது. சுற்றாடல் சுகாதாரத் தன்மை கொண்டதாக மாற்றமடைந்தது. இது ஒவ்வொரு நாளும் இடம்பெறவேண்டிய விடயமாக எமக்கு ஞாபகமூட்டப்பட்டது.**

மறுபுறம் எமக்கு தீயவிளைவுகளை ஏற்படுத்தக்கூடிய உணவுகளை உட்கொள்ளுதல், மது மற்றும் போதைவஸ்துக்கள் கட்டுப்படுத்தப்பட்டமை, சமூக மேம்பாட்டிற்குச் சாதகமாகவே அமைந்தது. சமூகத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படுத்தப்படவில்லை. போதைவஸ்துக்கள், மது மற்றும் கடைச்சோறு தொழில் சீர்கேட்டை விளைவிக்கும் பொருட்களை பயன்படுத்தவில்லையென கடந்த இரண்டு மாதகாலத்திற்குள் மேம்படுத்தப்படுவது சமூகத்தில் பாதிப்பையே விளைவிக்கும் என்பதை கொரோனா எமக்கு சுட்டிக்காட்டுகிறது.

தனிமைப்படுத்தும் சட்டதிட்டங்கள் காரணமாக ஒருசில கஷ்டங்களை மக்கள் அனுபவிக்க நேர்ந்தாலும், அக்கால எல்லையுள் கொலை, பகற்கொள்ளை, களவு, பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகம் என்பன குறைந்திருந்தன. நாடு "இயல்புநிலைக்கு" மாறுதல் என்பது மேற்படி குற்றச்செயல்கள் மீண்டும் முன்னைய நிலைக்கு வருவதாக இருப்பின் அது விரும்பத்தக்கதன்று. இந்த நன்நிலையை சமூகத்தில் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்பதையே கொரோனா எமக்குப் போதிக்கிறது. சமத்துவமின்மை, நியாயமற்ற தன்மை என்பன நிலவும் ஒரு சமூகத்தில் குற்றச்செயல்கள் அதிகரிக்குமென்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். எனவே, மக்களினதும் அரசாங்கத்தினதும் கடமை இந்த சமத்துவமின்மையையும் அநீதியையும் சமூகத்தில் இருந்து இல்லாதொழிப்பதாகும்.

தனிமைப்படுத்தல் மற்றும் ஊரடங்குச்சட்டம் காரணமாக சமூக வாழ்வில் ஒரு புதிய நிலைமை உருவாகியது. அதில் கூடுதலான நேரத்தை வீடுகளிலேயே செலவிடுதல் முக்கியமானதாகும். மனிதர்களுக்கு கூடுதலான ஓய்வு அவசியம் என்பதையும் அது மனிதனின் நன்மைக்கு காரணமாக அமையுமென்பதையும் இது எமக்குப் புகட்டியது.

**பாடசாலைக்குச் செல்லாமல் பிள்ளைகள் வீட்டில் இருந்தே கற்றமை மிக முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும். இக்காலகட்டத்தில் பாடசாலைக்குச் செல்லவில்லை என்ற காரணத்தினால் பிள்ளைகளின் ஆற்றல் குறையாது என்பதை நாம் அறிந்தோம். பிள்ளைகளைப் பாடசாலைகளுக்குள்ளும் அதன் பின்னர் "ரியூசன்" வகுப்புகளிலும் சிறைப்படுத்தி இதுவரைகாலம் நாம் அவர்களை இன்றைய சமூக முறைமையின் அடிமைகளாக்கவே அவர்களுக்கு கற்பித்துள்ளோம். சிறிது காலத்திற்கேனும் இந்த வாழ்க்கை முறைமையில் இருந்து விடுவிக்கப்படுவது அவர்களுக்கு ஒரு சிறந்த சுதந்திரமாக அமைய மாட்டாதா?**

இக்காலகட்டத்தில் நூல்கள் வாசிப்பது அதிகரிக்கப்பட்டுள்ளது. இலத்திரனியல் ஊடகங்களில் பிரயோசனமான வேலைத்திட்டத்தை பார்வையிடுவது அதிகரித்தது. இது சாதாரண வாழ்க்கையில் நிலவவேண்டிய ஒரு நிலைமையாகும். சாதாரண வாழ்க்கை என்பது அனர்த்தங்களை எதிர்நோக்கக்கூடிய இருப்பு என்னும் செய்தியையே எமக்கு புகட்டுகிறது.

இக்காலகட்டத்திற்குள் எமது சமூக வாழ்க்கையின் நல்வாழ்விற்கான அத்தியாவசிய விடயமொன்று இடம்பெற்றது. அதாவது அனைத்து விடயங்களுக்கும் பெருவிழாக்களை நடத்துதல் உட்பட அல்லோலகல்லோலம் கொண்ட விடயங்களை நிறுத்துவது சகல வழிகளிலும் நல்லது. அல்லோலகல்லோலமான மத வழிபாடுகள் நிறுத்தப்பட்டமை காரணமாக இழப்பீடு எதுவும் ஏற்படவில்லை.

அதேசமயம் ஆங்கிலேய ஆட்சியின் தவறுகளையும் நாம் உணரும் அதேவேளை ஆங்கில ஆட்சியாளர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சுகாதாரப் பழக்க வழக்கங்களும், சட்டதிட்டங்களும் எமக்கு உதவின. கை, கால், வாய் என்பவற்றை கழுவும் பழக்கம் எமது கலாசாரத்தில் இருந்தே நாம் பழக்கப்படுத்திக் கொண்டவையாகும். நாம் இருக்க வேண்டிய இடத்தை நடைமுறையில் ஞாபகப்படுத்துவதையே இவை அனைத்தின் ஊடாகவும் எமக்கு எடுத்துக் காட்டியுள்ளன.. விபத்துக்கள் எப்போதும் ஏற்படலாம். நாம் தயார் நிலையில் இருக்க வேண்டும்.



# இலங்கையில் தகவல் அறிவதற்கான உரிமையை தேடிச் செல்லல் :

# சவால்கள் மற்றும் வெற்றிகள்



சட்டத்தரணி
**கிஷாலி பின்டோ ஜயவர்தன**

தகவல் அறிவதற்கான உரிமை தொடர்பான சட்டங்கள் தமக்கு எதிராக செயற்படப் போகின்றன என்ற அச்சம் காரணமாகவே உலகம் முழுவதிலும் ஆட்சியில் உள்ள அரசாங்கங்கள் அத்தகைய சட்டங்களை உள ரீதியான ஓர் பயத்துடன் வழிவிடுகின்றன.

ஒரு வகையில் அவ்வாறு அஞ்சுவதில் ஒரு நியாயம் இருக்கத் தான் செய்கிறது. இருப்பினும் அரசியல் அதிகாரத்தைக் கையாளும் நபர்களை இலக்காகக் கொண்ட கூருணர்வுடைய ஊடகத் தலைப்புக்கள் மற்றும் கவனத்தை ஈர்க்கும் மாநாடுகள் தவிர சிறந்த தகவல்களை அறிந்து கொள்வதற்கான சட்டம் எப்பொழுதும் அரசாங்கத்தின் நன்மை கருதியே சட்டமாக்கப்படுகிறது. இது பெரும்பாலும் குறைத்து மதிப்பீடு செய்யப்படும் ஒரு நிலைமையாகக் காணப்படுகிறது. அமைதியான மற்றும் சிலவேளை அவதானம் செலுத்தப்படாத ஒரு மாற்றம் படிப்படியாகவும் முறையானதொரு கட்டமாகவும் இடம்பெறுகிறது. எவ்வகையிலும் மறுசீரமைப்பிற்கு உண்மையாக உட்படுத்தப்படாது அரசியல் அதிகாரம் மாற்றமடைகின்ற போது தப்பித்துக் கொள்ளக் கூடிய ஆசியாவில் உள்ள மிகப் பெரிய உத்தியோகத்தர்கள் பற்றிய ஒரு தேடல் இன்றி பரீட்சித்துப் பார்க்க முயலுதல் சாதாரண ஒரு குடிமகனால் ஆரம்பிக்கப்படும்.

இப் பிரமாண்டமான உயிரினத்தை எதிர்கொள்ள நேரிடும் போது சட்டம் தனக்கு எதிராக செயற்பட்ட ஒரு வரலாற்றுப் பின்னணியில் உண்மையில் முதன் முதலில் தகவல் அறிவதற்கான சட்டங்கள் தனக்கு துணை புரிவதாக வேறு நிலைமைகளின் கீழ் துணையற்று நிற்கும் மக்களுக்கு அது கொஞ்சம் கொஞ்சமாக புரிய ஆரம்பிக்கும். உண்மையில் இலங்கையில் நாம் அறிந்த வகையில் அநீதிகள் மற்றும் ஊழல்களை வெளிக்கொணர்வதற்கு அரச அலுவலர்களாலேயே இச் சட்டங்கள்

பயன்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை தகவல் அறியும் ஆணைக்குழுவின் நோக்கெல்லையின் அடிப்படையில் பார்க்கின்ற போது எம் முன்னே தோன்றும் மக்களிடம் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஊடாக நாட்டுக்கு கிடைத்துள்ள நன்மைகள் தொடர்பாக ஓர் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதென்பதனை எம்மால் காணக் கிடைத்துள்ளது.


இலங்கையில் 2016 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படல் ஆரம்பிக்கப்பட்ட 2017 பெப்ரவரி 3 ஆம் திகதி நாட்டின் தொலை தூர  கிழக்குப் பிரதேசத்தில் வாழும் பதினைந்து தாய்மார்களை உள்ளடக்கிய குழுவொன்று மிகவும் கஷ்டத்திற்கு மத்தியில் பொலிஸ் நிலையங்களுக்குள் நுழைந்து தகவலுக்கான உரிமைச் சட்டத்தை தூக்கிப் பிடித்தவாறு அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற மோதலின் இறுதிக் கட்டத்தின் போது காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என வினவி நின்றது.

இது பொலிசார் எதிர் கொள்வதற்கு தயார் நிலையில் இருக்காத புது வகையான ஒரு  நிலைமை ஆகும். தமக்கு எதிரில் முன் வைக்கப்பட்ட வினாக்களை எதிர்கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுள் பெரும்பாலானோர் சிங்களவர்களாகக் காணப்பட்டதுடன் தம் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டத்தின் தமிழ் பிரதியினை வாசித்து விளங்கிக் கொள்ளும் ஆற்றல் அவர்களிடம் இருக்கவில்லை. தகவலுக்கான உரிமைச் சட்டம் ஒன்று அதற்கு முன்னைய ஆண்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட விடயத்தினை சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஓரளவு அறிந்து வைத்திருந்த போதும் உண்மையாகவே சட்டத்தில் என்ன விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது பற்றி ஒருவரும் அறிந்திருக்கவில்லை. இறுதியாக சட்டத்தின் ஒவ்வொரு பிரிவிலும் எந்தெந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்பது பற்றி வியப்பில் ஆழ்ந்திருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் தனக்குத் தெரிந்த சிங்கள மொழியில் விளக்கம் கொடுப்பதற்கு தாய்மார்களுக்கு நேர்ந்தது.

தற்போது பெரும்பாலான நாடுகளில் இதனை ஒரு அசாதாரண நிலைமை எனக் கொள்வதில்லை. ஆயினும் இலங்கையில் 1970 களில் இருந்து பயங்கரமான இனப் பிரச்சினைக்கு முகம் கொடுத்து மோதல் நிலவும் பிரதேசங்களில் பல தசாப்பதங்களாக வாழ்ந்து வரும் மக்கள் ஆட்சியாளர்களிடம் வினாக்களைத் தொடுக்காத மற்றும் அவர்களைுக்கு சவால் விடுக்காத ஒரு பின்னணியில் இவ்வாறான முன்னேற்றம் உண்மையில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஓர் விடயம் ஆகும். அரசாங்கத்தின் பிரதிநிதிகளிடம் பொறுப்புக் கூறலைக் கோரி நிற்பதற்கு சட்டத்தின் மூலம் தாம் பலம்வாய்ந்தவர்கள் ஆக்கப்பட்டுள்ளோம் என்பது தாய்மார்கள் உணர்ந்திருப்பது ஓர் அசாதாரண விடயம் ஆகும்.

இது பொதுமக்களிடம் உள்ள ஓர் ஆயுதமாக தகவலுக்கான உரிமைச் சட்டத்தில் காணப்படும் பலத்தை எடுத்துக் காட்டுவதற்கான ஓர் உதாரணம் ஆகும். எனக்கு வேண்டிய ஒரு நபர் பல மாதங்களுக்கு முன்னர் 'ஆயுதம்' எனும் சொல்லை பயன்படுத்தியமை தொடர்பாக அவரது எதிர்ப்பபை வெளிக் காட்டினார். அது ஒரு வகையான முரண்பாடுதானே என அவர் வினவினார். ஆயினும் எனது பதில் மிகவும் இலகுவானது ஆகும். ஓர் ஆயுதம் எவ்வேளையிலும் அழிவை ஏற்படுத்த வேண்டியதில்லை. அதற்குப் பதிலாக அது மாற்றத்திற்கான ஓர் ஆயுதமாக அல்லது ஒரு பிரதிநிதியாக அமையக் கூடும். மிகவும் கவர்ச்சிகரமான சம்பவங்களை மாத்திரம் அறிக்கையிடுகின்ற மற்றும் அவதானத்தை ஈர்க்கும் ஊடக தலைப்புக்கள் தவிர அதிகம் அதிகமாக பொதுமக்கள் தகவலுக்கான உரிமைச் சட்டத்தை அவ்வாறு பயன்படுத்தி உள்ளார்கள். அரச அலுவர்களினால் பல வருடங்களாக கவனிக்கப்படாதிருந்த நிலையில் பதில் கோரி நிற்பதற்கான நடைமுறைச் சாத்தியம் உள்ள ஒரு சட்டம் தற்போது அவர்கள் கைவசம் உள்ளது. இலங்கையில் தகவலுக்கான உரிமை இந்தியாவைப் போன்று 'புல் வேர்' அடிப்டையில் அமைந்த ஒரு இயக்கத்தின் விளைவாக அமையாத போதும் நாடு பூராகவும் பெரும்பாலான மக்கள் இச் சட்டத்தைப் பயன்படுத்துகின்றமையானது ஓர் அசாதாரண நிலைமை ஆகும். தம் வசம் உள்ள சட்டத்தின் சிங்களம் மற்றும் தமிழ் பிரதிகள் சகிதம் தகவல் அறியும் ஆணைக்குழுவிற்கு வருகை தரும் அவர்கள் அரச உத்தியோகத்தர்கள் முன்னிலையில் அமர்ந்து தமது பிரச்சினைகள் தொடர்பாக வாதிடுகின்றார்கள்.

மாற்



ශ්‍රී ලංකා
ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ
පාර්ලිමේන්තුව

2016 අංක 12 දරන තොරතුරු දැනගැනීමේ
අයිතිවාසිකම පිළිබඳ පනත

[සහතිකය සටහන් කළේ 2016 අගෝස්තු මස 04 වන දින]

ආණ්ඩුවේ නියමය පරිදි මුද්‍රණය කරන ලදී.

2016 අගෝස්තු මස 05 වන දින ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ
ගැසට් පත්‍රයේ II වන කොටසේ අතිරේකයක් වශයෙන් පළ කරන ලදී.

ශ්‍රී ලංකා රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුවේ මුද්‍රණය කරන ලදී.

කොළඹ 5, රජයේ ප්‍රකාශන කාර්යාංශයෙන් මිළදී ලබාගත හැකි ය.

මිළ : රු. 21.00 යි. තැපැල් ගාස්තුව : රු. 20.00 යි.

**சட்டம் தனக்கு எதிராக செயற்பட்ட ஒரு வரலாற்றுப் பின்னணியில் உண்மையில் முதன் முதலில் தகவல் அறிவதற்கான சட்டங்கள் தனக்கு துணை புரிவதாக வேறு நிலைமைகளின் கீழ் துணையற்று நிற்கும் மக்களுக்கு அது கொஞ்சம் கொஞ்சமாக புரிய ஆரம்பிக்கும். உண்மையில் இலங்கையில் நாம் அறிந்த வகையில் அநீதிகள் மற்றும் ஊழல்களை வெளிக்கொணர்வதற்கு அரச அலுவலர்களாலேயே இச் சட்டங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை தகவல் அறியும் ஆணைக்குழுவின் நோக்கெல்லையின் அடிப்படையில் பார்க்கின்ற போது எம் முன்னே தோன்றும் மக்களிடம் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஊடாக நாட்டுக்கு கிடைத்துள்ள நன்மைகள் தொடர்பாக ஓர் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதென்பதனை எம்மால் காணக் கிடைத்துள்ளது.**



https://www.trinitycollege.lk/

முதலாம் ஆண்டின் முதலாவது நாள்....

**தகவல் அறியும் சட்ட வரைவு மீது நடைமுறையில் தாக்கம் செலுத்திய கோட்பாடுகள்**

2016 ஆகஸ்ட் மாதம் சட்டமாக அங்கீகரிக்கப்பட்ட தகவலுக்கான உரிமைச் சட்டத்தினைத் தயாரித்த சட்ட வரைவுக் குழுவிற்கு பிரதான மூன்று கோட்பாடுகள் அறிவிக்கப்பட்டன.

**முதலாவது வெளிப்படைத் தன்மையினைப் பேணுவதில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இடையிலான சமத்துவக் கோட்பாடு**

ஆகவே சட்டத்திற்கு சனாதிபதி அலுவலகம் முதல் அதற்குக் கீழ் உள்ள அரச நிறுவனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் மாத்திரம் அன்றி அரச அனுசரணையுடன் இயங்கும் கூட்டுத்தாபனங்கள், அரசாங்கத்துடன் ஒப்பந்தங்களை முன்னெடுக்கும் தனியார் நிறுவனங்கள் மற்றும் அவற்றினால் மக்களுக்கு சேவை புரியும் அளவிற்கு ஏற்ப அரச மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களின் அல்லது சர்வதேச நிறுவனங்களின் பாரியளவு நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்ளும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டன.

பிராந்தியத்தின் ஏனைய தகவல் அறிவதற்கான சட்டங்களில் இருந்து மாறுபட்ட பாதுகாப்பு மற்றும் புலனாய்வு நிறுவனங்களும் சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. தகைமைக்கான உயர்ந்தபட்ச அங்கீகாரங்கள் மற்றும் அர்ப்பணிப்புக்களுக்கு பாரதூரமானதும் இணக்கப்பாடு அற்றதுமான வகையில் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. உதாரணமாக இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டத்தில் இருந்து தேசிய பாதுகாப்பு நிறுவனங்கள் மற்றும் பிரதான வழக்குத் தொடுக்கும் திணைக்களம் விடுவிக்கப்பட வேண்டும் என பாரியளவு ஆழுத்தங்கள் பிரயோகிக்கப்படும்போது சட்டத்திற்கு அப்பால் எந்தவொரு நிறுவனமும் காணப்படக் கூடாது என எம்மால் வலியுறுத்தப்பட்டது.

இது மிகச் சிறந்ததொரு முன்னேற்றமாக அமைந்தது. தகவல் வழங்குவதனை சட்டத்தின் மூலம் உத்தியோகபூர்வமாக நிராகரிக்கப்பட்டமையே இலங்கையின் சிவில் மற்றும் இனப் பிரச்சினைகளுக்கு காரணமாய் அமைந்தது. தகவல்களை வழங்காதிருப்பது ஒரு வழக்கமாக அமைந்ததுடன் தகவல் வழங்குதலானது ஒரு விதிவிலக்காக அமைந்தது. விதிவிலக்குகள் நடைமுறையில் உள்ளபோது அது ஏதேனும் ஒரு நிறுவனத்தின் சிறப்புரிமையாக அன்றி ஒரு விடயக் காரணியாக அமைதல் வேண்டும் என்பதே இச் சிந்தனையில் இருந்து விடுபட்ட அடிப்படைக் கோட்பாடாகக் காணப்பட்டது. இவை அனைத்தும் பொதுமக்கள் நலன் என்பவற்றிற்கு மூலம் அப்பால் செல்ல முடியும்.

**தகவல் அறிவதற்கான உரிமையானது அரச சேவையின் ஓர் எதிரியாக தென்படக் கூடாது என்பதனை ஏற்றுக்கொள்ளல் இரண்டாவது கோட்பாடாக காணப்பட்டது.**

சட்டத்தின் கீழ் தனது கடமையை நிறைவேற்றுகின்றபோது ஏற்படும் ஏதோ ஒரு வகையான பின்விளைவுகள் காரணமாக தகவல் அலுவலர்களைப் (போன்றே ஏனைய அலுவலர்களை) பாதுகாத்தல் சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் (பகுதி 30 மற்றும் பகுதி 40) ஏனைய ஓர் அலுவலரிடம் தகவல் அலுவலர் உதவி கோரி நிற்கும் ஒரு சந்தர்ப்பத்தில் அவ் உதவியை வழங்குவதற்கு நியாயமான ஒரு காரணம் இன்றி நிராகரிக்கப்படுமாயின் அது ஒரு குற்றமாகக் காட்டப்பட்டுள்ளது. **எவ்வாறாயினும் தனது பணிகளை நிறைவேற்றுவதன் விளைவாகத் தகவல் அலுவலர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படல் அதிகரித்துள்ளதாக தகவல் ஆணைக்குழுவிற்கு அறியக் கிடைத்துள்ளமையே தற்போது அச்சம் கொள்வதற்குரிய காரணம் ஆகும்.**

அவர்கள் தகவல் வழங்கியமை உண்மையில் இதற்குரிய காரணமாக காட்டப்படவில்லை, அதற்கு வேறு காரண விளக்கம் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு சட்டம் மீறப்படல் தொடர்பாக ஆணைக்குழு தனது பலத்த அவதானத்தைச் செலுத்துவதுடன் மக்கள் தகவலுக்கான உரிமைச் சட்டத்தை பயன்படுத்தல் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட பயமுறுத்தல்கள் தொடர்பாக கிடைக்கப் பெற்றுள்ள சில அறிக்கைகள் தொடர்பில் பொருத்தமான பிரதிபலிப்புகள் எதிர்காலத்தில் வழங்கப்படும்.

**எப்பொழுதும் போலவே அதிகார சமநிலையில் சமநிலை இன்மையினை எடுத்துக் காட்டும் அரசுக்கும் மக்களுக்கும் இடையில் தெட்டத் தெளிவான தன்மைக்கு உகந்த சுயாதீன ஆணைக்குழு ஒன்றை தாபித்தல் மூன்றாவது கோட்பாடாக காணப்பட்டது.**

பாரியளவு செலவினை மேற்கொள்வதற்கு நேரிடல், சட்ட ரீதியான நடவடிக்கைகள் கால தாமதமடைதல் மற்றும் சில போது நீதிபதிகளின் சுதந்திரம் அரசியல் ரீதியில் இணக்கப்பாட்டுக்கு உட்படுதல் போன்றவை காரணமாக



அபிவிருத்தியை நோக்கிய மக்களின் பார்வை ...

alamy.com

> **இவ்வாறு சட்டம் மீறப்படல் தொடர்பாக ஆணைக்குழு தனது பலத்த அவதானத்தைச் செலுத்துவதுடன் மக்கள் தகவலுக்கான உரிமைச் சட்டத்தை பயன்படுத்தல் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட பயமுறுத்தல்கள் தொடர்பாக கிடைக்கப் பெற்றுள்ள சில அறிக்கைகள் தொடர்பில் பொருத்தமான பிரதிபலிப்புகள் எதிர்காலத்தில் வழங்கப்படும்.**

பெரும்பாலான ஆசிய நாடுகளில் நீதிமன்றம் மீது முழுமையாக தங்கியிருத்தல் நடைமுறை சாத்தியம் அற்றதாக அமைந்துள்ளது. அதன் காரணமாக நடுநிலையான ஒரு நிறுவனத்தின் தேவை உணரப்பட்டது.

இலங்கையின் சட்டத்தரணிகள் சங்கம், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் போன்ற சுயாதீன நிறுவனங்களில் இருந்து பெயர்கள் பிரேரிக்கப்பட்ட உறுப்பினர்களை உள்ளடக்கியதே ஆணைக்குழுவாகும். நியமனம் செய்யும் முறையானது முற்றுமுழுதாக அரசியல்வாதிகளிடம் ஒப்படைக்கப்படவில்லை. சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் ஒரு குற்றம் தொடர்பில் குற்றவியல் வழக்குத் தொடரும் செயன்முறையினை மேற்கொள்ளுதல் பொலிசாரினால் அல்லது அரசாங்கத்தின் வழக்குத் தொடரும் அலுவலரினால் அன்றி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளுதல் மற்றுமொரு விசேட அம்சம் ஆகும்.

## இது வரையான ஆணைக்குழுவின் நடைமுறை அனுபவங்கள்

அர்ப்பணிப்புடன் கூடிய ஊடகவியலாளர்கள், அறிஞர்கள் மற்றும் சட்ட செயற்பாட்டாளர்களைக் கொண்ட பிரதான குழு ஒன்றின் மூலமாகவே இலங்கையில் தகவலுக்கான உரிமைச் சட்டம் உருவானது. அது பொது மக்களை அடிப்படையாகக் கொண்ட அடிமட்டத்தில் அமைந்த ஓர் இயக்கமாக காணப்படவில்லை. ஊடக சட்டச் சீர்திருத்தங்களின் அத்தியவசியமான ஓர் அங்கமாக தகவலுக்கான உரிமை ஊடகங்கள் மூலம் அடிக்கடி முன் வைக்கப்பட்டது. இது சனநாயக ரீதியில் அமைந்த அல்லது விரிவான சிவில் சுதந்திரத்திற்கான ஒரு கருவியாக புலப்பட்டமையே அதனது விளைவாக காணப்பட்டது. ஆயினும் அது முதலாம் பகுதியில் பாரியதொரு திருப்திக்கு காரணமாய் அமைந்ததுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு இன்று ஓராண்டு பூர்த்தியடையும் வேளையில் ஊடகம் அல்லது சிவில் சமூக செயற்பாட்டாளர்களினால் அது பயன்படுத்தப்பட்டதை விட அதிகளவில் பொதுமக்கள் அதனைப் பயன்படுத்தி உள்ளார்கள்.

பல தசாப்தங்களாக ஊழல்களால் சிக்கல் நிலைமைக்கு உள்ளாக்கப்பட்ட முறைமை மீது இச் சட்டத்தின் ஆதிக்கம் தொடர்பாக எனது கருத்து தொடர்பில் ஓர் உதாரணத்தைப் பயன்படுத்துகின்றேன்.

நாட்டின் ஆகாய விமானிகளின் தேசிய சங்கம் உள்ளடங்கிய இலங்கை விமானிகள் ஒன்றியம் கடந்து ஆண்டின் இறுதிப் பகுதியில் தகவல் அறியும் ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு ஒன்றை சமர்ப்பித்து தேசிய விமான சேவையான ஸ்ரீலங்கன் எயார் லைன் பிரதம நிறைவேற்று அதிகாரிகளுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் ஏனைய படிகள் தொடர்பான ஒரு விளக்கத்துடன் விமானக் கம்பனிக்கு பாரியளவு நட்டம் ஏற்பட்டமைக்கான காரணங்களாக முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிப்பாளர் சபைத் தீர்மானம் தொடர்பான குறிப்பிடத்தக்க அளவு தகவல்களை வழங்குமாறு கோரியது.

ஒரு காலம் இலாபம் ஈட்டிய விமான சேவை பல ஆண்டுகளாக இடம் பெற்றுள்ள ஊழல், மோசமான முகாமைத்துவம் மற்றும் செயற்திறன் இன்மை காரணமாக பாரியளவு நட்டம் ஏற்பட்டுள்ளமை காரணமாக ஸ்ரீலங்கன் விமான சேவை தற்போது திறைசேரியில் இருந்து கிடைக்கப் பெறும் நிதியினைக் கொண்டு மாத்திரம் நடாத்திச் செல்லப்படுகிறது.

விமானிகள் ஒன்றியத்தின் மேன்முறையீடு ஆணைக்குழு முன்னிலையில் பட்டியலிடவிருந்த 99 ஆவது மேன்முறையீடு ஆகும். புத்தகங்கள் மற்றும் ஆவணங்களில் காணப்பட்ட சகலவிதமான திறமைகளையும் கொண்ட மற்றும் தகவல்கள் வழங்கப்படுவதை எதிர்ப்பதற்கான முக்கியமான மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான அனைத்து சட்ட ரீதியிலான வாதங்களை முன் வைத்த சட்டத்தரணிகள் சகிதம் தேசிய விமான சேவை ஆணைக்குழுவில் முன்னிலையானதுடன் ஸ்ரீலங்கன் விமானக் கம்பனியின் எதிர்ப்பு மிகவும் பாரதூரமானதாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் ஆறு மாதகாலமாக மேற்கொள்ளப்பட்ட விரிவான விசாரணையினைத் தொடர்ந்து “எயார் பஸ் எஸ் ஏ எஸ்” உடன் இடம் பெற்றுக் கொண்டிருந்த பேச்சு வார்த்தைகள் பற்றிய வணிக இரகசியத் தன்மை தொடர்பான விடயங்களின் அடிப்படையில் ஒருசில ஆவணங்கள் தவிர்ந்த ஏனைய தகவல்கள் பொதுமக்கள் நலன் கருதி வழங்கப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டு ஆணைக்குழு 25 பக்கங்களைக் கொண்ட கட்டளை ஒன்றைப் பிறப்பித்தது. கோரப்பட்ட தகவல்களை ஆணைக்குழுவின் உத்தரவுக்கு அமைய ஒரு மாத காலத்திற்குள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை ஸ்ரீலங்கன் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது.



"

**சட்ட வரைவுகள் (இலங்கையில் சட்ட வரைவுகள் பொதுவாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே பொதுமக்களுக்கு பெற்றுக் கொள்ள முடியும். அதன் பின்னர் நீதிமன்றத்தில் பொதுமக்கள் அதனைச் சவாலுக்கு உட்படுத்துவதற்கு இரண்டு வாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஏதாவது ஒரு சட்டம் அரசியலமைப்பிற்கு எதிரானதாகக் காணப்பட்ட போதும் அது அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அதற்கு சவால் விடுக்க முடியாது.)**

இது தொடர்பாக இன்னும் பல உதாரணங்களைக் குறிப்பிட முடியும். ஆணைக்குழுவின் உத்தரவிற்கு அமைய வழங்கப்பட்ட தகவல்களுள் கீழே குறிப்பிடப்பட்டவைகளும் உள்ளடங்கும்.

- தொலைத் தொடர்புகளை ஒழுங்குறுத்தும் ஆணைக்குழுவினால் இணையதளங்களை வழிமறித்தல் போன்ற பேச்சுச் சுதந்திரத்திற்கு பாதகமான அழுத்தங்களை விளைவித்த ஒழுங்குறுத்தல் நிறுவனங்களின் தீர்மானங்கள்.
- பெறுகைச் செயன்முறைகள் மற்றும் டென்டர்களை (கேள்விப்பத்திரங்கள்) வழங்குதல்.
- அரசியல்வாதிகளின் வெளிநாட்டுப் பயணங்களின் விளைவாக ஏற்படும் செலவுகள் தொடர்பான தரவுகள்.
- வெளிநாடுகளில் பணி புரியும் ஊழியர்கள் தொடர்பாக இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்கள்.
- விசாரணை ஆணைக்குழுக்களில் இதுவரை காலமும் இரகசியமாக வைத்திருந்த அறிக்கைகள். அதில் ஒன்று அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் விமான விபத்து ஒன்றில் சந்தேகத்திற்குரிய விதமாக மரணமடைதல் பற்றியது ஆகும். தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் அவ்வாறான முதலாவது அறிக்கையானது ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஒரு மேன்முறையீட்டின் பயனாக அண்மையில் வெளியிடப்பட்டது. அவ் அறிக்கை யாதெனில், முன்னாள் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தின் போது தொழிற்சங்க செயற்பாட்டாளர்களால் முன்னெடுக்கப்பட்ட ஓர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை கட்டுப்படுத்த விளைந்த சந்தர்ப்பத்தில் நூற்றுக்கு மேற்பட்ட நபர்களுக்கு காயம் விளைவிக்கப்பட்டு இளைஞர் ஒருவர் மரணமடைந்த சம்பவம் தொடர்பாக பொலிசாரினதும் இராணுவத்தினரதும் நடவடிக்கைகளைக் கண்டித்து நீதிபதி ஒருவரால் வழங்கப்பட்ட ஓர் அறிக்கை ஆகும்.
- சட்ட வரைவுகள் (இலங்கையில் சட்ட வரைவுகள் பொதுவாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே பொதுமக்களுக்கு பெற்றுக் கொள்ள முடியும். அதன் பின்னர் நீதிமன்றத்தில் பொதுமக்கள் அதனைச் சவாலுக்கு உட்படுத்துவதற்கு இரண்டு வாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஏதாவது ஒரு சட்டம் அரசியலமைப்பிற்கு எதிரானதாகக் காணப்பட்ட போதும் அது அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அதற்கு சவால் விடுக்க முடியாது.)
- பாடசாலைக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பான தகவல்கள்.
- பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொண்ட போதும் விசாரணைகள் மேற்கொள்ளப்படாத முறைப்பாடுகள்.
- அரச நிறுவனங்களின் இடமாற்றங்கள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை முறைகள், அவ்வாறான ஏனைய விடயங்கள்
- அரச சட்டத்தரணிகள் ஈடுபடுத்தப்படாது அரசாங்க செலவில் தனிப்பட்ட சட்டத்தரணிகளுக்கு பணம் செலுத்துதல் தொடர்பான தகவல்கள்.

2019 ஆம் அண்டின் இறுதி வரையான காலப் பகுதியில் ஆணைக்குழுவினால் 1,500 இற்கும் அதிக எண்ணிக்கையிலான இறுதிக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சட்ட ரீதியாக விடயங்கள் முன் வைக்கப்பட்டுள்ள அவை அனைத்தும் ஆணைக்குழுவின் மும்மொழி மூலமான இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இந்த மேன்முறையீடுகளில் பெரும்பாலானவை சாதாரண பொதுமக்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கிராமப் பகுதிகள் மற்றும் அதன் சட்ட ஏற்பாடுகள் பற்றி நன்கறிந்த பிரசைகளால் அவை முன் வைக்கப்பட்டள்ளன. உண்மையில் பெரும்பாலானவர்கள் இச் சட்டத்தைப் பயன்படுத்தியது அல்லது அதற்கு செலவாகும் தொகை மற்றும் சட்டத்தில் ஏற்படும் கால தாமதங்கள் சகிதம் நீதிமன்றத்திற்குச் சென்று மேற்கொள்ளப்பட வேண்டி இருந்த பணிகளை நிறைவேற்றுவதற்காக ஆகும்.

இறுதி விளைவு வெறுமனே தகவல்களை வெளியிடப்படுவதற்கு அப்பால் செல்வதே இவ்வாறு தகவல்களைக் கோரியதன் துரித விளைவாகக் காணப்படுகிறது. உதாரணமாக விளைவிக்கப்பட்ட ஒரு சிறிய குற்றம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட பின்னர் அம் முறைப்பாடு பற்றி வினவப்படும் போது உண்மையாகவே அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளத் தூண்டப்படுகிறது. கிழக்கு மாகாண தாய்மார்கள் தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்ட உதாரணத்தின் போதும் இதே போன்று நடைபெற்றது.

தனித்துவமான ஒரு பாடசாலைக்கு அனுமதி பெறுவதற்கான தகைமைகள் காணப்பட்ட போதும் அனுமதி மறுக்கப்பட்ட செயன்முறையில் காணப்பட்ட ஊழல்களே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பான தகவல்களைக் கோருவதற்கு காரணமாய்



எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமை…

mffcoexist.wordpress.com

**வட மத்திய மாகாணத்தில் மாகாண நிர்வாகத்திற்கு வழங்கப்பட்ட அரச நிதியினைப் பயன்படுத்தி அம் மாகாணத்தில் சேதமடைந்த வீதிகள் மற்றும் குளங்களைப் புனரமைப்பத்தல் தொடர்பாக கிராமத்தில் வசிக்கும் மக்கள் கேள்வி எழுப்பியதன் விளைவாக அந்த நிதியில் இருந்து பாரியளவு பண மோசடி இடம் பெற்றுள்ளமை வெளிப்படுத்தப்பட்டது. அதனோடு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்து விளக்கப்பட்டதுடன் அவர்களிடம் பணம் மீளப் பெறப்பட்டது.**

அமைந்துள்ளது. ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பல மேன்முறையீடுகளின் போது அவ்வாறான முறைகேடுகள் வெளிக்கொணரப்பட்டதன் காரணமாக மாணவர்களை அனுமதித்தல் இடம்பெற்றன. வட மத்திய மாகாணத்தில் மாகாண நிர்வாகத்திற்கு வழங்கப்பட்ட அரச நிதியினைப் பயன்படுத்தி அம் மாகாணத்தில் சேதமடைந்த வீதிகள் மற்றும் குளங்களைப் புனரமைப்பத்தல் தொடர்பாக கிராமத்தில் வசிக்கும் மக்கள் கேள்வி எழுப்பியதன் விளைவாக அந்த நிதியில் இருந்து பாரியளவு பண மோசடி இடம் பெற்றுள்ளமை வெளிப்படுத்தப்பட்டது. அதனோடு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்து விளக்கப்பட்டதுடன் அவர்களிடம் பணம் மீளப் பெறப்பட்டது.

ஏற்புடைய நிறுவனங்களினால் தகவல்கள் வழங்குவது நிராகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலேயே இவ்வாறான மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்படுவதன் காரணமாக தகவல் கோரும் சந்தர்ப்பங்களுள் ஒரு சிறிதளவு வீதமே காட்டப்படுகிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் காணிப் பாவனைகள் மற்றும் கைது செய்தல் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களால் இச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. அரச நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல்கள் மற்றும் பிழையான முகாமைத்துவம் ஆகியன தொடர்பாகவே தெற்கில் அவதானம் செலுத்தப்பட்டது. ஒரு புறம் பிரசைகளால் தனிப்பட்ட ரீதியிலேயே சட்டம் பயன்படுத்தப்பட்டது. மறு புறத்தில் பொதுநலன் கருதியும் பொதுமக்கள் நலன்புரி நடவடிக்கைகளுக்காகவும் பலர் அதனைப் பயன்படுத்தினார்கள்.

## முடிவுகளும் எதிர்கால சவால்களும்

சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதில் உள்ள கால தாமதங்கள் மற்றும் செலவுகள் காரணமாக நீதிமன்றத்திற்கு செல்வதைத் தவிர்த்து தமது பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு இலங்கை மக்கள் தகவலுக்கான உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்துகின்றார்கள். இருந்த போதும் தகவல் கோரிக்கை முன் வைக்கப்படும் போது அரச அலுவலர்கள் பொதுமக்களை அச்சுறுத்திய சம்பவங்கள் பற்றிய அச்சமடையச் செய்யும் ஒரு நிலைமை கிராமப் பகுதிகளில் இருந்து அறியக் கிடைத்துள்ளது. ஒரு சந்தர்ப்பத்தில் எம்மிடம் வந்த ஊடகவியலாளர் ஒருவர், தான் பெரும் எண்ணிக்கையான தகவல் கோரிக்கைகளை முன் வைத்ததன் காரணமாக இராணுவத்தினர் தன்னைப் பற்றிய புலனாய்வு அறிக்கையினைப் பெற்றுக் கொள்ள ஆரம்பித்துள்ளதாகக் குறிப்பிட்டார். அச் சந்தர்ப்பத்தில் அத்தகைய பயமுறுத்தும் நிகழ்வுகள் தொடர்பாக ஆணைக்குழுவிற்கு அறியக் கிடைக்கும் பட்சத்தில் அதற்காக பாரதூரமான பின்விளைவுகளை இராணுவம் எதிர்கொள்ள நேரிடும் என இரணுவத்திற்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

எந்தவொரு தகவல் சட்டத்தினதும் பலமாக காணப்படும் செயல்வலுவான வெளிக்கொணரப்படும் ஏற்பாடுகள் காரணமாக தகவல்களை வெளிப்படுத்துவதற்கு வற்புறுத்தப்படுவதற்கு முன்னர் சுயமாக தகவல்களை வழங்குவதற்கு நிறுவனங்களை ஊக்கப்படுத்தலே மற்றைய விடயமாகக் காணப்படுகிறது. அமைச்சுக்கள் இவ் ஏற்பாடுகளை இன்னமும் பின்பற்றாதமை காரணமாகவே கடந்து ஆண்டின் போது இது தொடர்பாக அரச அதிகாரிகளின் பக்கத்தில் இருந்து வரும் அறிக்கைகள் நல்லவைகளாக அமையவில்லை.

**அரச மற்றும் தனியார் துறை முழுவதும் நிலவுகின்ற இரகசியத் தன்மையினைப் பேணும் கலாசாரம், கவனயீனம் மற்றும் ஊழல் செயற்பாடுகள் ஆகியவற்றை இல்லாது செய்தல் இலங்கையின் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் மூலம் இடம் பெறுகின்றனவா? ஆரம்பத்தில் கிடைக்கப் பெறும் சமிக்ஞை நல்லதே. ஆயினும் எதிர்காலத்தில் பதவிக்கு வரும் ஓர் அரசாங்கம் அதன் மீது அளவு கடந்த ரீதியில் தலையிடும் அளவிற்கு இலங்கையில் தகவலுக்கான உரிமைச் சட்டத்தினை சமூகக் கட்டமைப்பிற்குள் ஆழமாகப் பதியச் செய்வதற்கான செயற்பாடுகள் இடம்பெற வேண்டி உள்ளது. ஆகவே அது எதிர்கால அரசியல் மாற்றங்களின் விளைவாக அபாயத்திற்கு உட்படக் கூடும். அவ்வாறான ஒரு போக்கினைக் கொண்ட ஒரு அரசாங்கம் தகவலுக்கான உரிமைச் சட்டத்தை மழுங்கடிக்கச் செய்யும் ஒரு செயன்முறையில் ஈடுபடுமாயின் தவிர்க்க முடியாத அதிர்ச்சியினைத் தாங்கிக் கொள்வதற்கான செயன்முறை பலம் மிக்கதாகக் காணப்படுகிறதா?**

**தகவலுக்கான உரிமைக்காக முன் வரும் நபர்கள் மற்றும் பிரசைகள் இச் சந்தர்ப்பத்தில் நினைவிற் கொள்ள வேண்டிய வினா இது ஆகும். இந்த நாட்டின் சிவில் அரசியல் கலந்துரையாடலில் தகவல் அறிவதற்கான உரிமையினை ஆழமாக அறியச் செய்வதன் மூலமாக மாத்திரமே இதற்கு அடிப்படையாக உள்ள கோட்பாடுகளை மழுங்கடிக்கச் செய்வதற்கு முயற்சி செய்யும் சக்திகளுடன் கூடிய அரசியல் செயற்பாடுகளுக்கு எதிராக இச் சட்டத்தைப் பாதுகாக்கக் கூடியதாய் இருக்கும்.**



# நாகரீக அரசின்

## அரசியலமைப்புக்கான வருகை




கலாநிதி


**அசங்க வெலிகல**


அடுத்த பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதை இன்றைய ஆளுங் கட்சியினர் பாராளுமன்றத் தேர்தலில் மையப்பொருளாகக் கொண்டுள்ளனர். அரசாங்கக் கட்சியின் அபிலாஷைகள் நேரடியாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டாலும், சக்தி வாய்ந்த தேர்தல் வெற்றியின் பின்னர் கட்டாயமாக இடம்பெறப் போகும் கட்சித் தாவல் மூலம் தமது குறிக்கோளை அவர்கள் அடைவார்கள் என எண்ண முடியும். அரசியலமைப்பை மாற்றியமைக்கும் அவசியம் காரணமாகவே ஆட்சி அதிகாரத்திலுள்ள அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவைப்படுகின்றது. அரசியலமைப்பை மாற்றியமைப்பதற்கான அரசாங்கத்தின் அபிலாஷைகள் முறைசார் ஆவணத்தின் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் அவர்கள் கருதுவது போல மாற்றங்களுக்கான வடிவத்தைக் கொண்ட மையப்புள்ளி பற்றி நம்பகத் தன்மை வாய்ந்த அடையாளங்களைப் பகிரங்கமாகக் காணக்கூடியதாக உள்ளது. ஜனாதிபதியும் பிரதமரும் இடையிடையே முன் வைக்கும் பிரகடனங்களுக்கு மேலதிகமாக “செய்கடமை” (யுத்துகம) என்ற அமைப்பின் கலந்துரையாடற் சபையின் பிரதானி திரு. கெவிந்து குமாரதுங்க 2020 பெப்ரவரி மாதம் ஜனாதிபதியிடம் கையளித்த பிரேரணைகளின் தொகுதிகளை காட்சிக்கு உட்படுத்தலாம். இது பொதுத் தேர்தலின் பின்னர் முன்வைக்கப்படும் மாற்றங்களின் ஒரே அடிப்படை அல்லாததாக இருப்பினும் அது பற்றிய கருத்துக்களின் பிரதான

மூலாதாரமாக நம்பிக்கை வைக்க முடியும்.

"செய்கடமை" (யுத்துகம) பிரேரணைகளின் அடிப்படை கோட்பாடுகள் பிரதான நிறுவன மாற்றங்களும் ஆட்சித் தரப்பினரின் அரசியலும் அரசியலமைப்பு மாற்றத்திற்கான உலக அனுபவங்களை காட்சிப்படுத்துவதைப் போலவே அதற்கு அடிப்படையான பரந்துபட்ட சமூக மற்றும் கலாச்சார இயக்கங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன.

1978 அரசியலமைப்பிற்கு முன்மொழியப்பட்டுள்ள உண்மையான மாற்றங்கள் சாதாரணமாக குறைந்த எண்ணிக்கையைக் கொண்டவையாயினும் அது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பிற்கு மாற்றீடாக அமையக் கூடாது. நாம் சுதந்திரமடைந்தது முதல் கண்டுள்ள அரசியலமைப்பு முறைமையை முழுமையாக நீக்குவதே இந்த யோசனைகள் மூலம் வலியுறுத்தப்படுகின்றன. சிங்கள பௌத்த தேசியவாதம் 1956 இல் இருந்து இலங்கை அரசியலில் முதன்மை சக்தியான முறைமை எமக்குப் பழக்கப்பட்டதாகும். சிங்கள பௌத்த தேசியவாத அரசியல் கோட்பாடுகள் முறைசார் அரசியலமைப்புக்களின் மூல வாசகங்களை மெருகூட்டிய விதம் (ஒற்றையாட்சி, பௌத்த மதம் பற்றிய வாசகம் மற்றும் மொழி ஏற்பாடுகள்) போன்ற அரசியலமைப்பு திருத்தங்களுக்கு மட்டுப்பாடுகளை விதித்த முறைமையை (சமஷ்டியுடன்



**மஹிந்த ராஜபக்ஷவின் முன்னைய ஆட்சி பின்தங்கிய கலப்பு முறையைக் கொண்டதாகும். தேசிய சிந்தனையின் கோட்பாட்டாளர்கள் சிங்கள பௌத்த தேசியவாதிகளாவர் இவர்கள் உரித்தாக்கிக் கொண்ட புலமைசார் கீர்த்தி எவ்வளவாக இருப்பினும் இதுவரை ஒருநாளும் இன்றுபோல் அரச அதிகாரக் கட்டமைப்பிற்கு இவ்வளவு தூரம் அண்மிக்கவில்லை. சிங்கள பௌத்த தேசிய கலாசாரத்தின் வீழ்ச்சி பற்றி கூறிக்கொள்ளும் எதிர்கால எதிர்வுகூறல்கள் தற்போது சிம்மாசனத்திற்குப் பின்னால் புலமை சக்தியாக தோற்றம் பெற்றுள்ளதோடு அவர்கள் சிங்கள பௌத்த அரசின் மறுமலர்ச்சியை உருவாக்கக் கூடிய நிலையில் உள்ளனர்.**

கூடிய ஜனாதிபதி முறைமையை நீக்குவது போன்ற) விடயங்களை நாம் காண்கின்றோம். இந்தப் பிரேரணைகள் சிங்கள பௌத்த தேசியவாதத்தின் வழக்கமான அரசியலமைப்பு ஒட்டு வேலைகளுடன் இணைவதைக் சுட்டிக் காட்டுகிறது.

ஆனால், தீர்மானகரமான மூன்று அம்சங்கள், எதிர்வரும் அரசியலமைப்பின் கட்டங்கள் திருத்த நடைமுறை மற்றும் உள்ளடக்கம் என்பது இரு வகையில் இதுவரை நாம் அல்லது ஏற்கனவே கண்டுள்ள திருத்தங்கள் மாற்றம் கொண்டதாக அமையும்.

**முதலாவது மாற்றம் அரசியலமைப்புத் திருத்தங்களை மேற்கொள்வது ஆட்சியாளர்களின் இயல்பாகும். இந்த ஆட்சியை நெறிப்படுத்தும் அதற்கு தாக்கங்களை ஏற்படுத்தும் அரசியல், மத இயக்கங்கள் தொழில் முயற்சி மற்றும் அறிவு ஜீவிகளின் உன்னதப் பகுதியினர் கட்டாயமாக, ஒட்டுமொத்த ரீதியில் நிபந்தனையின்றி சிங்கள பௌத்த தேசிய வாதிகளாவர்.**

இந்த உயர்தர பகுதியினரை ஒன்றிணைத்த கருத்தியல், கலாசார மற்றும் ஏனைய சமூகக் கடப்பாடுகளின் தீவிரமான கட்டுக்கோப்பு, நீண்ட அரசியலமைப்பு ரீதியான வரலாற்று முன்னுரிமையற்ற வகையில் அரசியலமைப்பை மீளத் தயாரிக்கும் ஓர் சக்தியாக சிங்கள பௌத்த தேசியவாதத்தின் குணவியல்பு ஒரு பாய்ச்சலை சுட்டிக் காட்டுகிறது. இத்தோடு ஒப்பிடுகையில் மஹிந்த ராஜபக்ஷவின் முன்னைய ஆட்சி பின்தங்கிய கலப்பு முறையைக் கொண்டதாகும். தேசிய சிந்தனையின் கோட்பாட்டாளர்கள் சிங்கள பௌத்த தேசியவாதிகளாவர் இவர்கள் உரித்தாக்கிக் கொண்ட புலமைசார் கீர்த்தி எவ்வளவாக இருப்பினும் இதுவரை ஒருநாளும் இன்றுபோல் அரச அதிகாரக் கட்டமைப்பிற்கு இவ்வளவு தூரம் அண்மிக்கவில்லை. சிங்கள பௌத்த தேசிய கலாசாரத்தின் வீழ்ச்சி பற்றி கூறிக்கொள்ளும் எதிர்கால எதிர்வுகூறல்கள் தற்போது சிம்மாசனத்திற்குப் பின்னால் புலமை சக்தியாக தோற்றம் பெற்றுள்ளதோடு அவர்கள் சிங்கள பௌத்த அரசின் மறுமலர்ச்சியை உருவாக்கக் கூடிய நிலையில் உள்ளனர்.

சிங்கள பௌத்த தேசியவாதத்திற்கு ஓர் பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கு முயற்சித்த எஸ்.டப்.ஆர்.டீ. பண்டாரநாயக்க மற்றும் ஜே.ஆர். ஜெயவர்தன (சித்தாந்த ரீதியான ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களான பழைய இடதுசாரிகள்) போன்ற முன்னைய தலைவர்களோடு தற்போதைய உன்னதப் பகுதியினரின் சமூக மற்றும் கலாசார பின்னணியை ஒப்புநோக்குகையில் இந்த விடயத்தை நாம் தெளிவாக்கிக்கொள்ள முடியும். இத்தலைவர்கள் தாம் தலைமை தாங்குவதற்கு முயற்சிக்கும் வர்க்கத்தினதும் கலாசாரத்தினதும் உண்மையான பிரதிநிதிகள் அல்ல. அவர்கள் தேர்தல் அரசியல் காரணங்களின் நிமித்தம் அரசியலமைப்பு சட்டகத்திற்குள் சிங்கள பௌத்த தேசிய வாதத்திற்கு வாய்ப்பளிப்பதற்கு முயற்சித்தனர். எமது நவீனத்துவம் மேற்கத்தைய நவீனத்துவத்துடன் சமப்படுத்துவதன் மூலம் பாரதூரமான தவறு ஏற்பட்டுள்ளதெனவும் அதன் மூலம் எமது கலாசாரம்

www.dw.com _ www.voanews.com _ historica.fandom.com



மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ



Xi Jinping



ஜே.ஆர்.ஜயவர்தன

வீழ்ச்சியடைந்துள்ளது எனவும் இந்த உயரிய பகுதியினர் கூறி வருகின்றனர்.

பண்டாரநாயக்க மற்றும் ஜயவர்தன போன்று புதிய உன்னதப் பகுதியினரின் குறிக்கோள் பழைய கலாசாரத்தின் நாகரீகத்தை நவீன அரசுடன் இணைத்தமையாகும். கலாசார யதார்த்தத்திற்கும் நவீனத்துவம் அல்ல, நவீனத்துவம் கலாசார யதார்த்தத்திற்கு ஏற்புடைய வகையில் தயாரிக்கும் முயற்சி ஆகும். எத்தகைய குறைபாடுகள் இருப்பினும், இலங்கையின் அரசியலமைப்பின் முன்னேற்றம் இதுவரை (நாகரீக செயற்பாட்டிற்கு அரசியலமைப்பு மாதிரி) கீழ்மைப்படுத்தியதாகும். பின் காலனித்துவ தேசியத்தை கட்டியெழுப்பும் முன்னுதாரணமாகும். சிங்கள பௌத்த கலாசாரம் மேலை நாட்டு அனுபவத்துடன் உள்வாங்கிக்கொண்ட அரசியலமைப்பு மாதிரியை விட கலாசார நிலைப்பாடு மேலோங்கியமையாகும் என்பது 'ரெடிகல்' அங்கீகாரம் ஆகும். முன்னைய பரம்பரையினருக்கு மாற்றீடாக தற்போதைய உன்னதப் பகுதியினர் 1956 கலாசார, சமூக பொருளாதார மற்றும் அரசியல் வினைத்தடை போலி அல்லாத வரலாற்று விளைதிறன்களாகும். அது ஆனந்த வித்தியாலயம், கஜபா படையணி, பன்சலைகள், பல்கலைக்கழகங்கள் மாத்திரம் அல்லாது, நிபுணத்துவ தொழில்கள் மற்றும் தொழில் முயற்சிகள் போன்ற கலாசார நிறுவனங்கள் மூலம் 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இருந்து ஏற்கனவே நிலவிய காலனித்துவ எதிர்ப்பு சிங்கள பௌத்த மறுமலர்ச்சி நாகரீகத்தின் பொறுப்பை ஏற்ற உன்னத பகுதியாகும்.

**இரண்டாவதாக, அரசு வெற்றிகரமாக மீள் ஸ்தாபிக்கப்பட்டு முன்னைய, மூன்று சந்தர்ப்பங்களுக்கு, அதாவது 1943 – 1948, 1970 – 72 மற்றும் 1977-78 ஆகிய காலகட்டங்களுடன் மாத்திரம் பொருந்தக்கூடிய அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான கருத்திட்டத்தின் உள்ளார்ந்த குவிமையப்படுத்தப்பட்ட தன்மையில் நிலவுகிறது. திருத்தங்களை மேற்கொள்வதை கிரகித்துக்கொண்டுள்ள மறுசீரமைப்புக்கள் அரசியல் முன்னுரிமை மிகத் தெளிவாகக் காணக்கூடிய பண்பானதை தெளிவான தொலைநோக்கு மற்றும் அசைய முடியாத வகையில் அதிகாரம் கையகப்படுத்தியுள்ளது.**

அவர்களுடைய முன்னுரிமை சில வேளைகளில் ஏதாவது கருத்தியல் ஏற்புடைமை வெற்றிகரமாகும் போது மறுசீரமைப்பிற்கான முறைமையின் பொதுக் குணவியல்புகளை அடிப்படையாகக் கொண்டு சிலவேளை சமத்துவப்படுத்தப்படுகின்றது. அல்லது மிகவும் முக்கியத்துவப்படுத்தப்படுகிறது. அவர்களுடைய வேலைத்திட்டத்தின் குவிமையம் கோட்பாட்டு ரீதியான கருத்துக்களை வலுவான அடிப்படையிலேயே உள்வாங்குகின்றது. சக்திவாய்ந்த புலமைத்துவம், தொடர்பாடலின் வெற்றிகரமான தன்மை மற்றும் தகவல் சுற்றாடலின் தலைமைத்துவ உரித்துரிமையைப் பெறுவதற்கான ஆற்றல் என்பன உறுதிப்படுத்தப்படுகின்றன. முன்னைய மூன்று சந்தர்ப்பங்களைப் போலவே இவ்வாட்சிக்கு அரசியல் அல்லது கருத்தியல் ரீதியான எதிர்ப்பு குறிப்பிட்டதொரு வகையில் அல்லது தடையாக அமையவில்லை.

தற்போதைய மறுசீரமைப்பு கருத்திட்டத்தின் குவிமையம் மற்றும் இறுக்கமான தன்மை ஸ்தூல அடிப்படையைக் கொண்டிராமல் கற்பனையானது என வலியுறுத்துவது முக்கியமாகும். அதாவது வெற்றியின் ஒரே குறிகாட்டி அவர்கள் விளிக்கும் பகுதியினருக்கு, அதாவது இலங்கை

"

**முன்னைய பரம்பரையினருக்கு மாற்றீடாக தற்போதைய உன்னதப் பகுதியினர் 1956 கலாசார, சமூக பொருளாதார மற்றும் அரசியல் வினைத்தடை போலி அல்லாத வரலாற்று விளைதிறன்களாகும். அது ஆனந்த வித்தியாலயம், கஜபா படையணி, பன்சலைகள், பல்கலைக்கழகங்கள் மாத்திரம் அல்லாது, நிபுணத்துவ தொழில்கள் மற்றும் தொழில் முயற்சிகள் போன்ற கலாசார நிறுவனங்கள் மூலம் 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இருந்து ஏற்கனவே நிலவிய காலனித்துவ எதிர்ப்பு சிங்கள பௌத்த மறுமலர்ச்சி நாகரீகத்தின் பொறுப்பை ஏற்ற உன்னத பகுதியாகும்.**

பொதுஜன முன்னணியின் வாக்காளர்கள் மத்தியில் எந்தக் காரணத்தின் நிமித்தமும் அல்லது எதுவித காரணமுமின்றியோ ஓர் உணர்வை ஏற்படுத்துவதாகும். வேறு நபர்களுக்கு செய்கடமை **(யுத்துகம) முன்மொழிவுகள் கட்டாயமாக சிறுபிள்ளைத் தனமானவை, அதன் குறிக்கோள்கள் துஷ்டத்தனமானவை. எண்ணக்கரு ரீதியில் முதல் முயற்சி அல்லது மூன்றினதும் கலவை எனத் தோன்றக்கூடும். இந்த ஆவணத்தின் சில பகுதிகள் ஊடாக மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல் இனவாத உணர்வின் மிக உச்சகட்ட, அரசியலமைப்பு என்ற விடயத்தில் மிகவும் கீழ்த்தரமான விடயங்களாகத் தோன்றும்.** ஆனால் கீழே கலந்துரையாடப்படும் காரணங்களின் நிமித்தம் இந்தத் திருத்தங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தல் ஏற்புடைய மாற்றீடு அல்ல. இத்தகைய விமர்சனங்கள் கோட்பாட்டு ரீதியான அல்லது சமநிலையில் ஒரு நிலைப்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற காரணத்தினால் இது அவ்வாறு அமைகிறது. எதிர்காலத்தில் முன்வைக்கப்படும் அரசியலமைப்புத் திருத்த முயற்சியின் அடிப்படைக் குறிக்கோள் இலங்கை அரசியலிலிருந்து அவற்றை இல்லாதொழிப்பதாகும்.

இதன் பின்னர் முன்வைக்கப்படும் கருத்துக்கள், நிகழ்ச்சித்திட்டம், தலைமைத்துவம் உபாயமார்க்கம், தொடர்பாடலில் வெற்றிகரமான கூட்டு முயற்சி அல்லாத போதும் **அரசியலமைப்பில் மாற்றத்தை எதிர்பார்க்கும் சிங்கள பௌத்த தேசியவாதக் கொள்கைக்குச் சார்பான வாக்காளர்களின் பெரும்பான்மையினர் அங்கீகரிக்கும் சட்டரீதியான கட்டமைப்புத் தன்மை கொண்டது. அரசியலமைப்பின் மாற்றத்திற்காக இந்த யோசனைகள் அவர்களுக்கு எதுவித முயற்சியுமின்றி கலாசார ரீதியில் ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.**

அவர்களின் உள்ளத்திற்கு ஒரு வேண்டுகோளை விடுப்பது பயனில்லை என்பதே மக்களில் பெரும்பான்மையினரின் இதயங்களுக்கு இத்தகைய நேரடியான உறவு நிலவுவதன் பொருளாகும். சிங்கள பௌத்த சந்ததியினர் பற்றிய ஒரு தொலைநோக்கிற்கு உடன்படாத அல்லது குறைந்த பட்ச உத்தேச சீர்திருத்தங்களின் அவசியம், விருப்பம் மற்றும் நடைமுறைச் சாத்தியம் என்பன பற்றிய சந்தேகம் கொண்டுள்ள மக்களுக்கு இரண்டு முறைகளில் சாதிக்க முடியும். இதன் மூலம் சிறுபான்மையினர் (நல்ல முறையிலோ தீய முறையிலோ) புறக்கணித்தல் பற்றியும் 2015, 2019 நல்லாட்சி முயற்சி கவலைக்கிடமான முறையில் பூர்த்தியானது மிக உயர்மட்டத்திலான சிக்கல்களுக்கும் அதிருப்திக்கும் உள்ளாகியுள்ள மக்கள் மீதான நம்பிக்கையை தக்க வைக்க முடியும்.

மூன்றாவது விடயம் மிக முக்கியமானது 1990 களிலிருந்து அரசியலமைப்புத் திருத்தங்களுக்காக மேற்கொண்ட முயற்சிகளின் யுகங்களுக்கேற்ப மாற்றங்களை அடையாளப்படுத்துவதாகும். காலாகாலமாக மாற்றமடைந்து வரும் புவிசார் அரசியல் சுற்றாடலுக்கமையவே இந்த அரசியலமைப்பு மாற்றம் நிகழ்கின்றது. ஆனால் அது தற்போது முன்னுதாரணங்களின் மாற்றாக (Paradigm shift) மாறுவதற்கான வகையில் மாற்றம் கண்டுள்ளது.

**வரலாற்று ரீதியாக இலங்கையின் அரசியலமைப்பு மாற்றங்கள் புவிசார் அரசியல் சூழமைவு மற்றும் தாக்கங்கள் தீர்மானகரமான பங்கை குறித்துள்ளன. இவை இந்தியாவிலிருந்தும் மேலைத்தேய நாடுகளிலிருந்தும் ஏற்படுகின்றன. தற்போது சீனா மிக முக்கியத்துவம் வாய்ந்த வெளிவாரி காரணியாக மாறியுள்ளது. பணிப்போர் ஐரோப்பிய செல்வாக்குடன் (European Enlightenment) போட்டிகரமான பொருள்கோடலின் கீழ் இது இடம்பெறுகின்றது. ஆசியாவில் மேலைத்தேய நாடுகளின் தாக்கம் காரணமாக பாரிய சரிவுகள் ஏற்பட்டுள்ளன. சீனாவின் எழுச்சி மிகவும் ஆழமான கலாசார ரீதியான அடிப்படைக் கோட்பாடுகள் பூகோள ரீதியான பிரிவினையின் வருகையை குறிப்பிடுகிறது.** இலங்கையின் பொருளாதார மற்றும் அபிவிருத்தித் துறையின் வளர்ச்சியின் வகிபாகத்தைத் தெளிவாகக் காண முடியும் ஆனால் அரசியலமைப்பு ரீதியான மாற்றங்கள் இன்னும் போதியளவு புரிந்துகொள்ளப்படவில்லை. பின் காலனித்துவத்தின் வளர்ச்சி என்ற வகையில் ஜனநாயக நாடான இலங்கையின் அரசியலமைப்புத் திருத்தத்திற்கான கலந்துரையாடல் எண்ணக்கரு ரீதியிலும் காலனித்துவத்திற்குப் பின்னர் (இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பின்னரே) மாதிரி வடிவமைக்கப்பட்டது. சர்வதேச சட்டத்தொகுதியின் தேசிய அரச உருவாக்கத்தின் போது முன்னுரிமை வழங்கப்பட்ட முன்னுதாரணங்களின் மாற்றம் என்ற **(Paradigm shift)** கருத்தியல் **சீனாவின் எழுச்சியுடன் இந்த எண்ணக்கருத் தொகுதி நிலையற்ற தன்மையை அடைந்தது. மேலைநாட்டு மாற்றுத் திட்டமான அரசியல், ஸ்தாபன எடுத்துக்காட்டுகளை சமர்ப்பிப்பதற்கு சீனா அதன் பொருளாதார பலத்தினூடாக அந்த ஆற்றல் காரணமாக மாத்திரம் அல்லாமல் அங்கு நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டங்கள் மற்றும் கலாசார எண்ணக்கருக்களை தேசியவாதிகள் தமது மரபுரிமையாக அரவணைத்துக்கொள்ள முடிந்தது.**

தற்போதைய ஆட்சியாளர்கள் பல்வேறு கொள்கைகள் காரணிகள் மற்றும் பொருளாதாரத் தேவைகள் காரணமாக சீனாவின் கருத்தியலை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால், கருத்தியல் ரீதியாக சீனாவுடனான கடப்பாடு வெளிநாட்டுக்கொள்கைகள், தேவைகள் என்பனவற்றிற்கு அப்பால் செல்கின்றன. அதன் கருத்தியல் கடப்பாடுகள் அரசியலமைப்பு சிந்தனையின் சமத்துவம் மற்றும் தேசிய அரசு பற்றிய நவீன சர்வதேச அங்கீகாரங்கள் ஐரோப்பாவை மையப்படுத்திய ஒழுங்குறுத்தல்கள் சட்ட ரீதியற்ற முறையில் ஓர் தொகுதியாக விமர்சிப்பதன் மூலம் நிராகரித்தல் வாயிலாக உருவாகும் வரலாற்று ரீதியான ஆசிய ரீதியான பொதுத் தன்மை மீது அடிப்படையாகக் கொண்ட கலாசாரக் கடப்பாடு மீது கவனம் செலுத்தப்படுகிறது. செய்கடமை (யுத்துகம) பிரேரணைகள், தெளிவாக இந்த கருத்தியல் பிரவேசம் மற்றும் வைத்திய கலாநிதி குணதாச அமரசேகரவின் “நாகரீகமான அரசை நோக்கி” என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்படுகின்றன. இந்த நூலில் ஸ்தாபிக்கப்பட்ட சிங்கள பௌத்த தேசிய சிந்தனை மேலைத்தேய தேசிய அரசுக்கு மாற்றீடாக “சீன நாகரீக அரசு” முன்னுதாரணங்களின் மாற்றாக ஏற்றுக்கொண்டு அதனோடு இணைக்கப்பட்டுள்ளது. இக்கருத்தியல் கடப்பாடுகள் இலங்கையின் அரசியலமைப்பு மீது ஏற்படுத்தும் தாக்கங்கள் உண்மையில் மிக ஆழமானவை. ஆசியாவில் தோன்றியுள்ள “நவ சீன அரசு மீது இந்த தரகு முதலாளித்துவ புதிய உன்னத பகுதிகளின் நாகரீக அரசின் வகையில் அதிகார சபையின் அதிகார பேரவையாக (Imperium in Imperio) எதிர்பார்க்கின்றது.

## நாகரீக அரசின் தத்துவம்

அமரசேகரவின் நாகரீக அரசு என்பது “நாகரீக அரசு என்பதன் சிங்களச் சொற்றொடராகும்” நாகரீக அரசு என்பது மார்ட்டின் ஜக்கீஸ் சீன அரசியலமைப்பின் முன்னுதாரணங்களின் மாற்றம் என்ற (Paradigm shift) கோட்பாட்டை வகுத்த முறைமையாகும். அவர்கள் கருதிய வினைத்திறனற்ற சீனாவை புரிந்துகொள்வதாயின் தேசிய அரசு முன்னுதாரணங்களின் மாற்றம் என்ற (Paradigm shift) அரசியலமைப்பின் அடையாளத்தை புரிந்துகொள்வதற்கு மேற்கொள்ளும் முயற்சி என்னும் தவறை செய்யக்கூடாது. பாரிய வரலாற்று ரீதியான காலவரையறையும் புவியியல்

பிரதேசத்திலும் பரந்து விரியும் சீனா, ஒரு தேசத்தைவிட நாகரீகமானது என சிந்தனையாளர்கள் வரைவிலக்கணம் செய்யும் சீன இயல்பைக் கொண்டதாகும். இந்த நாகரீகத்தின் மிகவும் விசேடமான நாகரீகம் நீண்டகாலமாக தொடர்ச்சியாக ஏற்பட்ட இருப்பு காரணமாக மாத்திரமல்லாமல் விசாலமான புவியியல் பிரதேசத்திலுள்ள பன்முகத்தன்மை மூலமே இந்த நாகரீகம் மிக விசேட தன்மை கொண்டது என வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. சீனாவின் இயல்பு தேசியத்துவத்தை விட நாகரீகம் பற்றிய விடயமாகும். அதற்குக் காரணம் ஏற்புடைய காலத்தினதும் தேவையினதும் அளவு காரணமாக அமைவதாகும். அதன் பொருளாதார பலம் முன்னோக்கி வருகை தந்ததும் நாகரீகமான அரசு மற்றும் கலாசார வெளிவாரித் தன்மை சர்வதேச தொகுதியினுள் மேலும் சக்திவாய்ந்த தேசிய அரசாகும். என்ற பொருந்தாமை மென்மேலும் பிரபலம் அடைந்தது.

**சீன நாகரீகம் - அரசு, அரசியலமைப்பு நடைமுறைக்கு அமைய தேசிய அரசிலிருந்து அதிக அளவில் வேறுபட்ட ஒரு சிருஷ்டியாகும். தேசிய அரசு மற்றும் மக்களின் இறைமை, ஜனநாயகம், மட்டுப்படுத்தப்பட்ட அரசாங்கம், தனிநபர் உரிமைகள், சட்டத்தின் ஆட்சி, அரசை மதங்களிலிருந்து வேறுபடுத்துதல், அரச / தனிநபர் பிரிவினை மற்றும் தனிநபர் அற்ற உத்தியோகத்தர் பொறிமுறையை உள்ளடக்கிய அதனோடு பின்னிப்பிணைந்த போதனைகள் அனைத்தும் ஐரோப்பிய European Enlightenment இன் சிருஷ்டியாகும்.** கடந்த 500 ஆண்டுகளாக மேலை நாடுகளின் அதிகாரம் முன்னுரிமை பெற்ற காரணத்தினால் இவை சர்வதேச நடைமுறையின் அடிப்படையாக அமைந்தது. சீனாவும் கடந்த நூறு ஆண்டுகளாக இந்த நடைமுறையின் பங்காளன் எனினும் வரலாறு, நாகரீகம் மற்றும் சிந்தனை நடைமுறை மாதிரிகளுக்கு அமைய அடையாளம் பற்றிய சீனாவினுடைய உணர்வுகள் மீது இந்தச் சிந்தனைகள் ஒன்றுமே செல்வாக்குச் செலுத்தவில்லை. சீன நாகரீக அரசின் ஒழுங்கமைக்கப்பட்ட கோட்பாடுகள் மேலைநாட்டு தேசிய அரசு பற்றிய விடயங்களில் இருந்து மாறுபட்டது மாத்திரமல்லாமல் பொறுத்தப்பாடும் கிடையாது. நாகரீக — அரசின் சமூக சட்டபூர்வமான தன்மையை ஜனநாயக குணவியல்புகளால் அல்ல. அரசு மற்றும் நாகரீகம் என்பவற்றிற்கு இடையே உள்ள அண்மித்த உறவுகளாகும். கன்ஃபியூசியசின் விழுமியங்களைப் போலவே, உணவு, மொழி, குடும்பம் மற்றும் விஸ்தாரமான சமூக வலையமைப்புக்களைச் சுற்றியுள்ள விசேடமான நடைமுறைகள் போன்ற வேறு குணவியல்புகளைக் கொண்டே நாகரீகம் வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. ஜக்கீஸ் பின்வருமாறு குறிப்பிடுகிறார். **"அரசு சீன நாகரீகத்தின் கட்சிலைகள் பொறுப்பாளர்கள் மற்றும் பாதுகாவலனாகக் கருதப்படுகின்றது. சீன கலாசாரத்தின், நாகரீகமான அரசின் ஐக்கியம், அதனுடைய கட்டமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு என்பவற்றை முன்னெடுத்துச் செல்வதாயின் உயர்ந்த முன்னுரிமையான இது சீன அரசில் உள்ள உயர்ந்த பணியாக கருதப்படுகிறது."** மேலும் நீண்டகால வரலாறு முழுவதும் சீனாவின் "ஹன்" தேசிய இனம் ஏனைய இனங்களை உள்வாங்கிக்கொண்டதோடு சீன நாகரீகத்தின் அரசு "ஹன்" அடையாளத்துடனேயே கட்டியெழுப்பப்பட்டது.

அமரசேகர 2016 இல் பிரசுரித்த நூலின் பிரதான குறிக்கோள் சீன நாகரீக அரசின் ஜக்கீஸ் கோட்பாடுகளுக்கு தேசிய சிந்தனை (ஜாத்திக சிந்தனைய) கருத்தியலை உட்புகுத்துவதன் மூலம் இலங்கையைப் புரிந்துகொள்வதும் எதிர்வரும் உலக நடைமுறையை இதனைப் பொருத்துவதற்கான விடயங்களை எதிர்வு கூறுவதுமாகும். அமரசேகர வழக்கம் போல சிங்கள பௌத்த நாகரீக அரசு சீன அரசை விட உயர்வானது என கூற முற்படுகிறார். அது சீன அரசை விட பழமை வாய்ந்தது என்பதற்கு மேலதிகமாக பழைய சிங்கள பௌத்த அரசியல் சீன முன்னுதாரணத்திற்கோ அல்லது இலங்கையில் தற்போது நிலவும் நிலமையை விட ஜனநாயகத் தன்மை கொண்டது என்றே அவர் வாதிட முற்படுகின்றார். அரசனுடைய அதிகாரம் புவியியல் பிரதேசம் என்ற வகையில் கிராமிய அரசுகளையும், அரசரின் 10 நெறிமுறைகள் (தசராஜ தர்மம்) தொடர்பாக மட்டுப்படுத்தப்படுவதனால் இது அவ்வாறு அமைகிறது என்பது அவருடைய வாதமாகும்.

ஜக்கீஸின் சீன முன்னுதாரண கோட்பாடு அமரசேகர போன்றவர்களுக்கு கவர்ச்சியாக இருப்பதை நாம் புரிந்துகொள்வது இலகுவாகும். தேசிய சிந்தனையின் ரொமேன்டிக் பிற்போக்கு அரசியலமைப்பு பற்றிய உலகக் கண்ணோட்டம் சீன நாகரீக அரசுடன் மிகத் தெளிவாக சமப்படுத்தப்படுகிறது. அரசு பற்றிய இந்த முன்னுதாரணங்கள் இரண்டும் ஒரே கலாசார மற்றும் படிநிலை தன்மை வாய்ந்தது. அவர்கள் மையத்தின் இறைமை, மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசங்களின் வரி அறவிடும் முன்னுதாரணத்தை சமநிலைப்படுத்துவதற்கு கருதுகின்றார்கள். அவர்கள் உரிமைகளை விட கடமைகளால் கீழ்ப்படியப்படுகின்றனர். ஜனநாயக பன்மைத்துவத்தை விட சிறப்புரிமைகள் கொண்ட ஐக்கியத்தின் சகவாழ்வையே அவர்கள் வலியுறுத்துகின்றனர். இவ்விருசாராரும் அரசுக்கும் சமூகத்துக்கும் இடையேயான உறவை வேறுபடுத்தவில்லை. அது ஒரு குறைநிரப்பியாகவே அவர்கள் காண்கின்றனர். இவ்விருசாராருக்கும் அரசியலமைப்பு ரீதியான ஜனநாயகத்துடன் பண்பு ரீதியான எதுவுமே கிடையாது. இலங்கை ஆசியாவிலேயே மிகப்பழமைவாய்ந்த நடைமுறைகளைக் கொண்ட ஜனநாயக நாடு என அவர்கள் கூற முற்படுகின்றனர். எனவே தேசியச் சிந்தனை கோஷ்டி கட்டுரைகளிலும் சிங்களப் பௌத்த தேசியவாதிகளின் அலங்கரிப்புகளுக்கும் ஜனநாயகம், சமத்துவம் மற்றும் மக்களின் இறையாண்மை போன்ற சொற்களை பயன்படுத்தி குடியரசு, ஒற்றையாட்சி, அதிகாரங்கள் குறைந்த ஜனாதிபதி முறைமை என்பன மாத்திரம் அல்லாது மனித உரிமைகள் போன்ற நவீன, அதாவது மேற்கத்தைய நிறுவனங்களின் வடிவங்களைக் கொண்ட விடயங்களோடு நம்பிக்கையை தக்க வைப்பதற்கு நிர்ப்பந்திக்கின்றனர். அதற்கு மேலதிகமாக சீனா மற்றும் சிங்கள பௌத்த தேசியவாதம் நாகரீக அரசை மீள் உச்சரிப்பு செய்து அதை அதன் சட்டபூர்வமான தன்மையையும் அதன் கூட்டுத் தன்மையையும் அடிப்படையில் உரித்தாக்கிக்கொள்கின்றனர். ஜனநாயக சுயநிர்ணய உரிமை அல்லது. அங்கீகாரம் இன்றி வரலாற்று ரீதியாக ஏற்றுக்கொண்ட கலாசாரத்தினதும். அரசின் வெற்றியினதும் நியமங்களுக்கேற்பவே இது இடம்பெறுகிறது. இந்தப் படிநிலைகளில் உள்வாங்குவதற்கும் விசேட சிறுபான்மைக் கலாசாரங்களுக்கு இடமளிக்கும் அளவு பற்றியும் கட்டாயமாக எதுவித அர்ப்பணிப்பும் கிடையாது. ஆனால், ஸ்தாபிக்கப்பட்ட படிநிலைகளுக்கு அமைய உள்வாங்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சிறுபான்மையினரினதும் தனிநபர்களினதும் கோரிக்கைகளை இவர்கள் சகிப்பதில்லை.

**லிபரல் ஜனநாயக தர்க்க முறையை அடிப்படையாகக் கொண்ட விமர்சனங்கள் இம்முறைமையில் செல்லுபடியாகாது. அத்தகைய தர்க்க முறை அளவிலா உலகக் கலாசார தொலைநோக்கை அடிப்படையாகக் கொண்டே செயற்படும். சீன மற்றும் சிங்கள**

"

**ஜக்கீஸின் சீன முன்னுதாரண கோட்பாடு அமரசேகர போன்றவர்களுக்கு கவர்ச்சியாக இருப்பதை நாம் புரிந்துகொள்வது இலகுவாகும். தேசிய சிந்தனையின் ரொமேன்டிக் பிற்போக்கு அரசியலமைப்பு பற்றிய உலகக் கண்ணோட்டம் சீன நாகரீக அரசுடன் மிகத் தெளிவாக சமப்படுத்தப்படுகிறது. அரசு பற்றிய இந்த முன்னுதாரணங்கள் இரண்டும் ஒரே கலாசார மற்றும் படிநிலை தன்மை வாய்ந்தது. அவர்கள் மையத்தின் இறைமை, மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசங்களின் வரி அறவிடும் முன்னுதாரணத்தை சமநிலைப்படுத்துவதற்கு கருதுகின்றார்கள்.**



*சீன கலாச்சார நிகழ்வு*

**பௌத்த நாகரீக அரசின் சட்டபூர்வமான தன்மைக்கு உரித்தான மேலைத்தேய அளவுகோல்களுக்கு அமைய செயற்படாமல் தமது கலாசார மற்றும் வரலாற்று மதிப்பாய்வுகளை அடிப்படையாகக் கொண்டே செயற்பட வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் அரச அமைப்பின் இந்த முன்னுதாரணத்திற்கு வேறுபட்ட கருத்தை தெரிவிப்பது பயனற்றது. ஏனெனில் சரளமாகக் கூறுவதாயின் சமரசமற்ற தன்மைக்கு எதுவித வாய்ப்பும் இன்றி செயற்படுவதே இதற்கான காரணமாகும். நாகரீக அரசின் அரசியலமைப்பு முயற்சியின் முழுமையான வெற்றி நாகரீகக் கலாசார சமுதாயத்தின் அனைவரும் உடன்படுவதை அடிப்படையாகக் கொண்டே அவை தங்கியுள்ளன. மேலும் அதிகாரம் பற்றிய ஏகபோக உரிமை கொண்ட அரசின் அடிப்படைப் பொறுப்பு அதனை பராமரிப்பதாகும்.**

## நாகரீக அரசின் அரசியலமைப்பு

குமாரதுங்கவின் செய்கடமை (யுத்துகம) முன்மொழிவுகள் மேற்கூறிய அரசியலமைப்பு தத்துவார்த்த ரீதியில் முன்னுதாரணமாக எடுப்பதன் மூலமே மேற்படி முன்மொழிவுகள் அடிப்படையாகத் தங்கியுள்ளன. இதன் அரசியலமைப்பு ரீதியான மாற்றம் என்பது திட்டவட்டமான யோசனைகள் ஐந்து தலைப்புக்களில் வகையீடு செய்யப்பட்டுள்ளன.

(அ) எமது மரபுரிமையான நாகரீக அரசை நோக்கிப் பயணித்தல்,

(ஆ) மக்களின் உண்மையான பிரதிநிதித்துவமும் மக்கள் இறைமையும்

(இ) ஒற்றையாட்சி இலங்கையை உறுதிப்படுத்துதல்

(ஈ) நிறைவேற்றுத் துறை சட்டவாக்கத் துறை, நீதித் துறை ஆகியவற்றின் அதிகார சமநிலையாக்கம்

(உ) செய்கடமை (யுத்துகம) அமைப்பை அடிப்படையாகக் கொண்ட சமூகம் என்பனவாகும்.

மேற்படி தலைப்புகளின் கீழ் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடலுக்கு திட்டவட்டமான திருத்தங்கள் அல்லது ஏற்கனவே உள்ள நிகழ்ச்சித்திட்டத்தை அங்கீகரித்தல் உள்ளடக்கப்படுகிறது. இக்கலந்துரையாடலில் சில விடயங்கள் விவாதத்திற்குரியன. உதாரணமாக பகுப்பாய்வு அடிப்படையில் அநேகமான தப்பெண்ணங்களாக இருப்பினும் மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்கள் காரணமாக நாம் அது பற்றி கலந்துரையாட எண்ணவில்லை.

### (அ) எமது மரபுரிமையான நாகரீக அரசை நோக்கிப் பயணித்தல்,

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை தொடரந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். நேரடியாகத் தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதி, அரசினதும், அரசாங்கத்தினதும் தலைவராகவும், பாதுகாப்பு அமைச்சராகவும் கடமை புரிவார். 10 அரச தர்மங்களுக்கு (தசராஜ தர்மய) அமைய அரசத் தலைவர் ஆட்சியை முன்னெடுப்பார். அதே சமயம் அது ஜனாதிபதி சத்தியப்பிரமாணம் செய்வதற்கு உள்ளடக்கப்பட வேண்டும். ஜனாதிபதி கட்சி அரசியலில் இருந்து விலகி இருத்தல் வேண்டும். அதனை உறுதிப்படுத்துவதற்கு நிறைவேற்று அதிகாரம் பிரதமரை முதன்மையாகக் கொண்ட அமைச்சரவைக்கு, அரசியலமைப்புச் சபைக்கு மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உரித்தானவையாக வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் அனைத்து குடியிருப்பாளர்களும் உள்ளடக்கக் கூடிய வகையில் எல்லாப் பகுதிகளிலும் (ஒவ்வொரு கிராமத்திலும் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட சபைகள் அமைக்கப்படும். அதன் குறிக்கோள் எமது நாகரீகத்தின் அடிப்படையான கிராமத்தை வலுவூட்டுவதும் கட்சி அரசியலுக்கு அமைய உருவாகும் பிரிவுகளை இல்லாதொழிப்பதாகும். ஒவ்வொரு பகுதியிலும் நல்லிருப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய அனைத்து விடயங்களும் இதன்போது தீர்மானிக்கப்படும். உள்ளூ ராட்சித் தேர்தலின் போது உள்ளூ ராட்சிப் பிரிவில் வெற்றியீட்டும் வேட்பாளர் சமூக அடிப்படை சபையின் தவிசாளர் ஆவார். இதன் மூலம் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட சபையினதும் உள்ளூராட்சி அதிகாரிகளுக்குமிடையிலான இணைப்பு இடம்பெறுகிறது. பிரதேசச் செயலகப் பிரிவில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர், விவசாய உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், தொழில்நுட்ப ஆலோசகர், சமாதான நீதவான், பொலிஸ் உத்தியோகத்தர், சுகாதார உத்தியோகத்தர் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்கள் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட சபையின் அங்கத்தவர்களாவர். அடிப்படைச் சமுதாய சபையின் உறுப்பினர்களாவர். அடிப்படைச் சமுதாயச் சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் சட்ட அடிப்படை இவ் உத்தியோகத்தர்கள்




அம்பலங்கொடை பொம்மலாட்டங்கள்

www.youtube.com

உத்தியோகபூர்வமாக மேற்படிச் சபையில் கடமையாற்றுவதிலேயே தங்கியுள்ளது.

**(ஆ) மக்களின் உண்மையான பிரதிநிதித்துவமும் மக்கள் இறைமையும்**

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைக்குப் பதிலாக புதிய தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்படும். இது சம்பந்தமான முன்மொழிவுகள் தெளிவற்று இருப்பினும் உத்தேச திட்டத்திற்கு அமைய மக்கள் பிரதிநிதிகளில் 75 வீதமானோர் சாதாரண அறுதிப் பெரும்பான்மை தேர்தல் பிரிவுகளுக்கமைய தெரிவுசெய்யப்படுவர். ஏனைய 20 வீதமானோர் விகிதாசார முறைப்படி தோல்வியுற்ற வேட்பாளர்களில் மிகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றவர்கள் மத்தியிலிருந்து நியமனம் பெறுவர். எஞ்சிய 05 சதவீதமானோர் ஒட்டுமொத்த நாட்டினது விகிதாசார முறைப்படி கட்சிகள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் அளவுக்கேற்ப தேசிய பட்டியலில் இருந்து நியமனம் பெறுவர்.

நேரடியாகவே தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதி தான் தெரிவுசெய்யப்பட்ட கட்சியில் இருந்து விலகினால் அல்லது. கட்சி அப்பிரதிநிதியை விளக்கினால் அவர் தெரிவுசெய்யப்பட்ட பிரதேசச் செயலகப் பிரிவின் சார்பில் இடைத்தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும். நியமனம் பெற்ற மக்கள் பிரதிநிதி ஒருவர் தமது கட்சியில் இருந்து விலகினால், அல்லது கட்சியிலிருந்து விலக்கப்பட்டால் தமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு அமைய செயற்பட்டதாக நீதிமன்றம் முன்னே உறுதிப்படுத்துவதற்கு அவரால் முடியாதுவிடின் பிரதிநிதிப் பதவி இல்லாதொழிக்கப்படும். இது அரசியல் விடயங்கள் பற்றிய நீதிமன்ற விசாரணையை அசாதாரணமான முறையில் நீடிப்பதாகும். நீதிமன்றம் அரசியல் மயப்படுத்தப்படாமல் நடைமுறையில் இதனைச் செயற்படுத்துவது கஷ்டம்.

ஏதாவது கட்சியின் மக்கள் பிரதிநிதிகளில் 25 சதவீதத்திற்கு மேற்பட்ட குழுவினர் சுயாதீனமாக செயற்படுவதற்கு ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டால், அவ்வாறு செய்ய இடமளிக்கப்பட வேண்டும். இந்த அங்கீகாரம் யாரிடம் கோரப்பட வேண்டும். யார் வழங்க வேண்டும் என்பது பற்றி தெளிவாகக் குறிப்பிடவில்லை.

பாராளுமன்றத்தில் குறைந்த பட்சம் இரண்டு தவணைகள் பணியாற்றிய மக்கள் பிரதிநிதிகளுக்கு மாத்திரம் ஓய்வூதியம் உரித்தாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெரும் வேட்பாளர் பெரும்பான்மை வாக்குகள் மாத்திரம் அல்லாமல் அதிகப்படியான தேர்தல் பிரிவுளில் வெற்றிபெற வேண்டும். ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படும் நபர் நாட்டின் பெரும்பான்மை புவியியல் பிரதேசங்களைப் பிரதிநித்துவப்படுத்துவதை உறுதிப்படுத்துவதையே இது சுட்டிக்காட்டுகிறது.

உள்ளூராட்சி தேர்தல்களின் போது தொங்கவிடப்பட்ட (overhang) தேர்தல் தொகுதிகள் என்ற கோட்பாடுஇல்லாதொழிக்கப்படும். விகிதாசாரப் பிரதிநிதித்துவத்திற்காக நடத்தப்படும் அனைத்து தேர்தல்களின் போதும் சாதகமான மட்டம் ஐந்து வீதமாகக் கணிக்கப்படும்.

மாகாண சபைகள், நேரடி தேர்தல்கள் என்பன இல்லாதொழிக்கப்பட்டு மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படும். மாகாண சபைகள் மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனத் தவிசாளர்களின் 75 வீதமானோரும், உள்ளூராட்சி நிறுவனங்களின் எதிர்க்கட்சிகளிலிருந்து 20 வீதமானோரும், உள்ளூராட்சி தேர்தல்களின் போது பெறும் வாக்குகளின் எண்ணிக்கைக்கு அமைய விகிதாசார முறைப்படி தெரிவுசெய்யப்படும் மாகாணப் பட்டியலில் இருந்து நியமனம் பெரும் ஐந்து வீதமானோரும் உள்ளடக்கப்படுவர். மாகாண சபைகள் மாகாணத்தின் அபிவிருத்தித் தொடர்பான நிறுவனமாக செயற்படும்.

சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்யப்படும் அரசியலமைப்பு திருத்தங்கள், அரசியலமைப்பிற்கேற்ப மேற்படி சட்டம் அங்கீகரிக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்குள் உயர் நீதிமன்றத்தில் சவால் விடுக்கும் அடிப்படை உரிமைஅனைத்து பிரஜைகளுக்கும் வழங்குவதன் மூலம் மக்களின் இறைமை வலுப்படுத்தப்படும்.

**(இ) ஒற்றையாட்சி இலங்கையை உறுதிப்படுத்துதல்**

பாராளுமன்றத்திற்குரிய சட்டவாக்கத்தின் உயர் தன்மை நிறுவப்பட வேண்டும். பாராளுமன்றத்தின் சட்டங்கள் மாகாண

சபை நியதிச் சட்டங்களை விஞ்சும். சமத்துவமின்மையை தடுப்பதற்கு சட்டமும் சமாதானமும் மத்திய அரசாங்கத்தின் விடயப் பொருளாக அமைதல் வேண்டும். சனத்தொகையில் மிகவும் வறுமைக்குட்பட்ட 10 வீதமானோரின் வாழ்க்கையின் பண்பு நலனை மேம்படுத்துவதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடையீடு செய்வது குடியரசின் கடமையாகும். காணி, வறுமை, வறுமையை இல்லாதொழித்தல், கல்வி, சுகாதாரம் என்பன மத்திய அரசுக்குரிய விடயப்பொருட்களாக அமைதல் வேண்டும். சிங்கள மொழி இலங்கையின் ஒரே தேசிய மொழியாக அமைவதோடு அது அரசகரும மொழியாகவும் அமைதல் வேண்டும். தமிழைத் தமது தாய்மொழியாகக் கொண்ட பிரஜைகள் தமிழ் மொழியில் கல்வி கற்பதற்கும் அரசாங்கத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கும் கொண்டுள்ள உரிமையை பேணிப்பாதுகாப்பதோடு சிங்களவர்களுடைய அதற்குச் சமமான உரிமை பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும். உத்தியோகபூர்வமான அறிக்கைகள் பதிவுகள் ஆகிய அனைத்தும் சிங்கள மொழியிலேயே இடம்பெற வேண்டும் என்பதை உத்தரவாதப்படுத்துவது அரசின் இன்றியமையாக் கடமையாகும். இக்குறிக்கோளுடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் உத்தியோகபூர்வ ஆவணங்கள் பதிவுகள் என்பவற்றை பதியும் பொருட்டு சிங்கள மொழியைப் பயன்படுத்துவதற்குரிய மட்டுப்பாடுகளை நீக்கி 19 வது திருத்தத்தை மறுசீரமைக்க வேண்டும்.

**(ஈ) நிறைவேற்றுத் துறை சட்டவாக்கத் துறை, நீதித் துறை ஆகியவற்றின் அதிகார சமநிலையாக்கம்**

அமைச்சரவை - பிரதமர் உட்பட 30 அமைச்சர்களுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும். ஜனாதிபதி பெரும்பான்மையினரின் நம்பிக்கைக்கு உரித்தானவராதல் வேண்டும். பெரும்பான்மை பாராளுமன்ற அங்கத்தவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான மக்கள் பிரதிநிதி பிரதமராக நியமனம் பெற வேண்டும். ஏனைய அமைச்சர்கள், பிரதமரின் அங்கீகாரத்துடன் அல்லது அவரது பரிந்துரைக்கு அமைய நியமிக்கப்பட வேண்டும். பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 50 பேருக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும். அதே சமயம் மேற்படி நியமனங்கள் பிரதமரின் அங்கீகாரத்தோடு (பரிந்துரைக்கமைய) மேற்கொள்ளப்பட வேண்டும். பிரதமரின் அங்கீகாரத்துடன் அல்லது பரிந்துரையுடன் அமைச்சர்கள் நியமனம் பெற வேண்டும் என்ற விடயம் தெளிவாக குறிப்பிடப்படவில்லை. ஆனால், மேலோட்டமாக தோற்றுவது போல 19வது திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட "ஆலோசனைக்கமைய என்ற அவசியம் நீக்கப்பட வேண்டும் எனத் தோன்றுகிறது,

அமைச்சுக்கள் மற்றும் பிரதியமைச்சுக்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படுவது சார்பற்றதாக அமைதல் வேண்டும். இந்த மட்டுப்பாட்டை மீறிச் செல்வதற்கு இராஜாங்க அமைச்சர் போன்ற வேறு வகையிலான அமைச்சுக்களை நியமிப்பதற்கோ அலலது அமைச்சுப் பதவிகளை அதிகரிப்பதற்கோ நிதி ஒதுக்கீடு செய்யக்கூடாது. எந்தவொரு அமைச்சரையம் பிரதி அமைச்சரையும் நீக்குவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. புதிய பாராளுமன்றம் ஆரம்பமாகி ஓராண்டு கடந்த பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதனைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

10 அங்கத்துவர்களை கொண்ட அரசியல் அமைப்புச் சபைக்கு பிரதமரினதும் எதிர்கட்சித் தலைவரினதும் பரிந்துரைகளுக்கு அமைய பெயர் குறித்துரைக்கப்படும் பிரதிநிதிகள் 05 உறுப்பினர்களை நியமிப்பதில் எதுவிட மாற்றமுமில்லை. ஆனால், அது பாராளுமன்றத்தின் உட்படுத்தப்பட வேண்டும். மேற்படி ஐவரில் மூவர் சிவில் சமூகத்திலிருந்து நியமிப்பதற்குப் பதிலாக ஒருவர் தேசிய மதத் தலைவர்களினால் பெயர் குறித்துரைக்கப்படும் ஒரு நபரும் மற்றுமொருவர் தொழில்சார் நிபுணத்துவ சங்கங்களிலிருந்து பெயர் குறித்துரைக்கப்படுபவராக இருத்தல் வேண்டும்.அடுத்தவர் வாணிபச் சபையினால் பெயர் குறித்துரைக்கப்படும் நபராயிருத்தல் வேண்டும். அதே சமயம் உத்தியோகபூர்வ அங்கத்தவராக சபாநாயகர், பிரதமர், எதிர்கட்சித் தலைவர் ஆகியோர் பதவி வகிக்க வேண்டும். அதே சமயம் ஜனாதிபதி மற்றும் ஏனைய எதிர்க்கட்சிகள் பெயர் குறித்துரைத்து நியமிப்போரும் உள்ளடங்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தின் அதிகப்படியான உறுப்பினர்களால் தெரிவுசெய்யப்பட வேண்டும். இதன் மூலம் எதிர்க்கட்சி மக்கள் பிரதிநிதிகளின் பெரும்பான்மையினரே கருதப்படுகின்றனர்.

உயர் நீதிமன்றங்களின் நீதியரசர்கள், சட்டமா அதிபர், பொலிஸ் மா அதிபர் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களின் அங்கத்தவர்களின் சுயாதீன ஆணைக்குழு உறுப்பினர்கள், அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரத்தின் கீழ் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட வேண்டும். நியமனங்கள் மேற்கொள்ளும்போது சேவை மூப்பு முக்கிய அளவுகோளாக கருதப்படுவதோடு இந்த அளவுகோளை கைவிடுவதானால் இக்கோட்பாட்டிலிருந்து விடுபடுவதற்கான காரணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.


இவ் உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் ஜனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் சேவைக்காலத்திற்கு ஏற்புடையவாறு ஐந்து ஆண்டுகள் அல்லது ஆறு ஆண்டுகளாயிருத்தல் வேண்டும். சேவைக்காலம் பற்றி ஓர் நிலையான தன்மை இல்லாமை (அரசியலமைப்பிற்கான 19வது திருத்தத்தின் மூலம் உத்தியோகபூர்வ காலம் ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டமை) ஆறு ஆண்டுகள் வரை உத்தியோகபூர்வ காலத்தை அதிகரிக்கும் கருத்து உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.


அமைச்சுச் செயலாளர்கள் அரச சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதியினால் நியமனம் பெற வேண்டும். ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்துவதாயின், அதனை அரச சேவை ஆணைக்குழு அங்கீகரித்தல் வேண்டும். அமைச்சுச் செயலாளரின் சேவைக்காலம் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் சேவைக்காலத்திற்கு சமப்படுத்தப்பட வேண்டும்.


**(உ) செய்கடமை அமைப்பை அடிப்படையாகக் கொண்ட சமூகம் என்பனவாகும்.**

அடிப்படை உரிமைகள் எனும் அத்தியாயத்திற்கு கடமைகள் என்ற கூற்றும் உள்ளடக்கப்பட வேண்டும்.

செய்கடமை (யுத்துகம) முன்மொழிவுகளைச் சாராம்சப்படுத்தினால், நவீன உயர்மட்ட பிரிவினரின் சிந்தனை பற்றி அனேகமாக திட்டவட்டமான அளவுகோல்களை வழங்குகிறது. அநேகமாக இது தேர்தலின் பின்னர் சமர்ப்பிக்கப்படும் அரசியலமைப்பிற்கான திருத்தங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அமைச்சர்களை நியமிக்கும்போது பிரதமருடைய ஆலோசனை அவசியம் என்ற வாசகத்தை பலவீனப்படுத்துதல், அமைச்சர்களை நீக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தை மீள ஸ்தாபிக்க வேண்டும். புதிய பாராளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஓராண்டு காலத்திற்குள் அதனைக் கலைக்கும் அதிகாரத்தை மீள உருவாக்குதல் உட்பட 19 வது திருத்தத்தின் சில குணவியல்புகளை நீக்குவதன் மூலம் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை மீண்டும் வலுவூட்டப்பட்டுள்ளது. மறுபுறம் பிரதமர் பாராளுமன்றத்தின் நம்பிக்கையை வென்றெடுக்காமல் பெரும்பான்மையைப் பெற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் ஜனாதிபதிக்கு உரித்தான தற்றுணிபு அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறுபான்மை அரசாங்கங்களை உருவாக்கும் ஆற்றலும் ஜனாதிபதியின்




கட்சிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத சந்தர்ப்பங்களில் ஜனாதிபதியின் பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறும் தருணங்களில் சட்டவாக்க அதிகாரம் வீழ்ச்சியடையும் பாரதூரமான நிலைமையைத் தவிர்க்க வேண்டியுள்ளது.

அடிப்படை மக்கள் சபைகள் பற்றிய யோசனைகள் அனேகமாக தொலைநோக்கு சிந்தனை கொண்டவை. அரசாங்கத்தின் வீண் விரயம் மற்றும் ஊழல் மோசடி பற்றி மேலும் ஒரு பிரிவை உருவாக்குவதன் மூலமும் அது அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது. அதை மேலும் விரிவாக்குவதற்கும் பிரச்சினைகளை மேலும் சிக்கலான பிரச்சினைகளாக வெளிப்படுத்துவதற்கும் காரணமாக அமைகிறது. இவை மத குருமாரையும் பிரதேச அரசியல்வாதிகளையும் உள்ளடக்கிய சமுதாயத்தின் இடையூறுகளை விளைவிப்பவர்களுக்கும் தனிப்பட்ட வாழ்க்கைபரந்துபட்ட ஆக்கிரமிப்பிற்கும் வாய்ப்பை ஏற்படுத்தும். அதேவேளை சில பிரதேசங்களில் பரந்து விரிந்திருக்கும் இனத்துவ மற்றும் மத சிறுபான்மைப் பிரிவினரின் வாழ்க்கைக்கும் சொத்துக்களுக்கும் நஷ்டத்தை ஏற்படுத்துவதற்கும் வாய்ப்புக்கள் உண்டு.

மாகாண சபைகளைப் பொறுத்தவரை செய்கடமை (யுத்துகம) குழுவினரின் யோசனைகளுக்கு, அவர்களின் நம்பிக்கைக்குப் பொறுத்தமான வகையில் மிகவும் சரளமாக மாகாண சபைகளை இல்லாதொழிப்பதற்கு பரிந்துரை செய்திருப்பின் மிகச் சிறந்த நிலைமையை உருவாக்கியிருக்க முடியும். அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் சட்டகத்திற்கு முன்மொழியப்பட்டுள்ள ஏனைய மாற்றங்கள் தெளிவான குறிக்கோள் இன்றியும் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரத்தைப் பகிர்தல் மொழிக் கொள்கையின் அடிப்படை சாதனங்களை நீக்குவது மூலம், வளங்களை வீண் விரயமாக்கும் பல நிறுவனங்கள் பராமரிக்கப்படுவதனால் 13வது திருத்தம் பற்றிய பிரச்சினைகள் மேலும் அதிகரிக்கும் சாத்தியமே உண்டு.

ஒட்டுமொத்தமாக இந்த கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடப்பட்ட அரசியலமைப்பு இதனூடாக அமைக்கப்படும் சட்டத்தின் ஆதிக்கத்திற்குப் பொருத்தமான வகையில் செயற்படுத்துவது கடினமாகவே அமையும். இத்தகைய திட்டமிடும் இயல்பில் "மீனும் அல்ல, கோழி இறைச்சியும் அல்ல" என்ற நிலைமை உருவாகும். அதனால் ஏற்படுத்தப்படும் தாக்கங்கள் பற்றி அல்லது ஒட்டுமொத்தமாக அதன் உள்ளடக்கம் பற்றிய புரிதல் இல்லாமையால் ஆகும். தேசிய சிந்தனையிலிருந்து விலகி மாற்றமடைவதை அடிப்படையாகக் கொண்டு ஒரே விடயம் மற்றும் நல்லாட்சியின் கீழ் அனைத்தும் நீக்கப்படுதலாகும். இந்த யோசனைகளின் ஊழல் செயற்பாடுகளைக் குறைப்பதற்கு எண்ணினாலும் அது இடம்பெறும் எனக் கருத முடியாது. தேசிய சிந்தனையிலிருந்து விலகி மாற்றமடையாமையை அடிப்படையாகக் கொண்ட ஒரே விடயம் நல்லாட்சியின் கீழ் செய்யப்பட்ட அனைத்தையும் நீக்குவதாகும். இம்முன்மொழிவுகள் மூலம் ஊழல் நடவடிக்கைகளைக் குறைப்பதற்கு எண்ணினாலும் அது இடம்பெறும் என சிந்திக்க முடியாது. அது இம்முறைமையில் ஜனாதிபதியின் ஏகபோக உரிமையை வலுப்படுத்துவதற்கும் கலாசார ரீதியாக பொறுத்தப்பாடற்றது எனும் காரணத்தினால் கிடையாகவும் நிலைக்குத்தாகவும் வகைப்பொறுப்புக் கூறும் சாராம்சமும் அதன் பொறிமுறைகளையும் நிராகரிப்பதன் காரணமாக, ஊழல்களுக்கான மூலாதாரங்களை நீக்குவதற்கு திட்டமிட்ட ஏதாவது மாற்றத்தின் மூலம் எதிர்பார்த்ததை விஞ்சி ச் செல்வதாகும். அடிப்படை மக்கட் சபையும் 10 அரச நெறிமுறைகளையும் (தசராஜ தர்மய) கலாசாரம் என்ற வகையில் அங்கீகரிக்கக் கூடிய வகையில் செயற்படுத்தப்படும் எனவும் அதனால் கடந்த காலத்தில் மனித உரிமைகளும் சட்டத்தின் ஆதிக்கமும் வெற்றியளிக்காத

**"**

**கடந்த காலத்தில் மனித உரிமைகளும் சட்டத்தின் ஆதிக்கமும் வெற்றியளிக்காத பட்சத்தில் அதிகாரத்தை மட்டுப்படுத்தும் பணிகள் மிகவும் பயனுறுதிவாய்ந்த முறையில் இடம்பெறும் என எண்ணுவோர் தீவிர நம்பிக்கை இழத்தலுக்கு உட்படுத்தப்படக் கூடும். நாகரீக அரசின் ஆட்சியை இனவாதத் தன்மை கொண்டதாக மாற்றியமைப்பதன் மூலம் ஊழல், தான்தோன்றித்தனம், பாரபட்சமான கவனிப்பு மற்றும் அதிகாரித்துவம் என்பன அதிகரிக்கும்.**

பட்சத்தில் அதிகாரத்தை மட்டுப்படுத்தும் பணிகள் மிகவும் பயனுறுதிவாய்ந்த முறையில் இடம்பெறும் என எண்ணுவோர் தீவிர நம்பிக்கை இழத்தலுக்கு உட்படுத்தப்படக் கூடும். நாகரீக அரசின் ஆட்சியை இனவாதத் தன்மை கொண்டதாக மாற்றியமைப்பதன் மூலம் ஊழல், தான்தோன்றித்தனம், பாரபட்சமான கவனிப்பு மற்றும் அதிகாரித்துவம் என்பன அதிகரிக்கும்.

சுருக்கமாகக் கூறுவதாயின், அரசியல் அமைப்புத் திட்டமிடலுக்கு மேலதிகமாக ஒன்றையும் அறியாத மற்றும் தமது உள்நாட்டு அரசியல் கருத்தியலை பிரகடனப்படுத்திய குறுகிய சிந்தனை காரணமாக வேறிடங்களில் நிலவும் அரசியலமைப்புக்கள் ஜனநாயகத்திலிருந்து ஒன்றையும் கற்காமல் இருக்கும் மனிதர்களால் பிரேரிக்கப்படும் அரசியலமைப்பு முறைமை ஓர் உதாரணமாகும். ஆனால், திட்டமிடும் நுணுக்கங்கள் மிக முக்கியத்துவம் அற்றதாக இருப்பின் நாகரீக அரச ஆட்சி முறைமைகள், சட்டத்தின் ஆட்சியின் மீது இல்லாமல் கலாசார போதனைகள் மூலம் உதவி பெறும் அரசியல் அதிகாரம் மீது தங்கி இருப்பதனால் ஆகும். இலங்கையில் ஆட்சி நிலுவையிலுள்ள வகைப்பொறுப்புக் கூறும் பொருட்களின் இத்துப் போன பகுதிகள் நிறுவன ரீதியாக உயிரூட்டப்படக்கூடிய வகையில் இனவாத பெரும்பான்மையால் நீக்கப்படும்.

செய்கடமை (யுத்துகம) பிரேரணைகளின் அடிப்படை அரசியலமைப்பாகக் கருதப்படும் இலங்கையின் அரசியலமைப்பு பண்புரீதியாக மாற்றப்பட வேண்டும் என்ற பொருளாகும்.

### நாகரீக அரசின் பின்னர் : பிரச்சினைகளும் அபிலாஷைகளும்

செய்கடமை (யுத்துகம) முன்மொழிவுகள் ரெடிகல் வாதத்தினதும் பழமைப் பாதுகாப்பினதும் ஒரு கலப்புத் தன்மை கொண்டது என விவரிக்கலாம். அரசின் அரசியலமைப்புத் தத்துவத்தையும் தேசிய அரசிலிருந்து நாகரீக அரசு வரையிலான முன்னுதாரணமாயுள்ள மாற்றங்கள் (Pradigm Shift) ஆக மீண்டும் தயாரிப்பதற்கு எண்ணியுள்ளமை ஆகும். ஆனால், அது 1978 அரசியலமைப்பின் முகவாசகம் மற்றும் நிறுவன மாற்றத்தை மேற்கொள்ள எண்ணும் வகையில் பழமை பாதுகாப்பதாகும். இது இலங்கையின் தேசிய சிந்தனை அரசியலமைப்பை உடனடியாக உருவாக்க எண்ணுவோருக்கு ஒட்டுமொத்தமாக தர்க்க ரீதியான ஓர் உபாயமார்க்கமாகும்.

அவர்கள் உடனடியாகச் செய்ய வேண்டியது இலங்கை அரசியலமைப்பின் சட்டபூர்வமான அரசியல் ரீதியான பகுதிகளை ஒன்றிணைத்து சிங்கள பௌத்த நாகரீக அரசின் தேசிய சிந்தனையிலிருந்து உள்வாங்கப்பட்ட அரசியல் யாப்பின் குறிக்கோள்களுக்கு மேலைத்தேசத்திலிருந்து உள்வாங்கப்பட்ட சட்டபூர்வமான அரசியலமைப்பை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவதாகும்.


இலங்கை அரசியலமைப்பு என்பது புதிய ஜனநாயகத்தின் பின் காலனித்துவத்தின் அரசியலமைப்பு விவாதமாகும். அதன் பயன்பாடு நவீனத்துவம் மற்றும் மரபுகளுக்கிடையே அழுத்தங்களில் தங்கியிருக்கும் நிலைமையாகும் என்பதே இதன் கருத்தாகும். அல்லது காலனித்துவ சட்ட மரபுரிமையும் காலணித்துவத்திற்கு முன்னைய பயன்பாட்டிற்கும் இடையே உள்ள முரண்பாடாகும்


**பின் காலனித்துவ உலகம் முழுவதும் பல்வேறு நாடுகள் தத்தமது சூழமைவு மீது தங்கி மேற்படி மரபுரிமைகளையும் நவீனத்துவத்தின் போட்டித் தேவைகள் இடையே மாற்றமடைந்த சமநிலைப்படுத்தலும் ஆகும். இந்த முன்னுதாரணங்களின் எல்லை ஒரு புறம் ஜவஹர்லால் நேரு, நெல்சன் மண்டேலா, ஜூலியஸ் நியரேரே, லீ ஷென் லூம் முதல் மறு முனையில் பொல்பொட், இடியமீன், பொக்காசா மற்றும் ரொபட் முகாபே வரை நீடிக்கிறது.**


பின் காலனித்துவ சுதந்திர இலங்கையின் அரசியலமைப்பிற்கான விவாதத்தின் போது இரண்டு அரசியலமைப்புக்கள், சட்டபூர்வமாகவும் அரசியல் ஊடாகவும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டது. சட்ட ரீதியான அரசியல் யாப்பு இலங்கை அரசியலமைப்பின் அடையாளத்தின் நவீன தன்மையை பிரதிநிதித்துவப்படுத்தி சட்டப் புத்தகங்களில் காண முடிகிறது. அரசியல் ரீதியான அரசியலமைப்பு காலாசார ரீதியான ஒன்றிணைப்பு அரசியல் ரீதியாக மிகவும் சக்தி வாய்ந்த சிங்கள பௌத்த தேசிய வரலாற்றில் இருந்து உள்வாங்கப்பட்ட கூட்டு அடையாளமாகும். இறைமை. புவியியற் பிரதேசம் மற்றும் கலாசாரத்தைச் சூழ குவிமையப்படுத்தப்பட்ட கருத்துக்களாலேயே இது உருவாக்கம் பெறுகிறது. தேசிய சிந்தனை (ஜாத்திக்க சிந்தனய) அது மரபுரிமையையும் நவீனத்துவத்தையும் சமநிலைப்படுத்துவதற்கு எண்ணாமல் மரபுரிமையையும் நேர்மையையும் உன்னதத் தன்மையையும் உறுதிப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு நவீனத்துவம் மேலைத்தேய செல்வாக்கிற்கான ஓர் விளை நிலமாக புறக்கணிப்பதற்கு நவீனத்துவம் மரபுரிமைக்கு கீழ்மைப்படுத்தப்படுகிறது.

இலங்கையின் அரசியலமைப்பு இதுவரை சட்டபூர்வமானதும் அரசியல் ரீதியானதுமான அரசியல் அமைப்பு முறைமையில் எவ்வாறு செயல்படுகிறது ? காலத்திற்குக் காலம் இடம்பெறும் தேர்தல்களின் ஊடாக வாக்காளர்கள் பரந்துபட்ட இரண்டு குழுக்களுக்கிடையே அதிகாரத்தைப் எவ்வாறு மாற்றுவது என்பதை குறிக்கும் விபரங்களாகவே அமைகிறது. அரசியலமைப்பு நிறுவனங்களின் பாரதூரமான தோல்வி அல்லது இனத்துவ பெரும்பான்மைப் பிரச்சினை பற்றிய திருப்திகரமான முறையில் செயற்பட முடியாதுவிட்டாலும் **இலங்கை 1931 இலிருந்து ஜனநாயகத்தைத் தவிர வேறு ஒன்றும் இங்கு இடம்பெறவில்லை என்பதை புரிந்துகொள்வதற்கு இதுவே அடிப்படையாகும். செய்கடமை (யுத்துகம) முன்மொழிவுகள் அல்லது அதனோடு சமமான ஏதாவதொன்றை எதிர்வரும் தேர்தலின் பின்னர் எதிர்பார்க்கும் அரசியலமைப்புத் திருத்தங்களை அடிப்படையாகக்கொள்வதாயின் மேற்படி திருத்தங்களின் குறிக்கோள் அநேகமாக குறைகளைக் கொண்டதாகவே அமையும். ஆனால், அடிப்படையில் ஜனநாயக அரசியல் - சட்ட ரீதியான வெகுமதிகள் ஒட்டுமொத்தமாக நீக்கி விடுவதாகும். அதன் பெறுபேறு பாரியதாக அமையலாம். யுத்தத்தின் வெற்றியாகிய இந்த உன்னதப் பகுதிகளில் சிங்கள பௌத்த நாகரீக அரசை ஸ்தாபித்தல் தர்க்கரீதியானதா ? என்பது அடுத்த நடவடிக்கையாகும். இதன் மூலமே வரலாற்று ரீதியான பயணப்பாதையை சீர்செய்ய முடியும். அவர்களுடைய குறிக்கோள் மிகவும் சாதகமான முறையில் புரிந்துகொண்டு நெறிமுறை சார்ந்த நாகரீகமான தன்மையுடன் ஜனநாயக ஊழல் முறைமையை நீக்குவதாக இருக்கலாம். அத்தகைய அரசியலமைப்பு முறைமையில் தொடர்ச்சியாக பொருளாதார ரீதியான குறை வளர்ச்சி கிளர்ச்சிகரத் தன்மை மற்றும் சிவில் யுத்தம் இடம்பெற்றாலும் இலங்கை தோல்வி யுற்ற ஒரு அரசாக மாற்றமடைவதைத் தடுத்த, மையப்படுத்தப்பட்ட பல நபர் ஆட்சி என்பவை அடித்தளத்தை அளித்த விடயங்களாக அமைந்திருக்கலாம்.**

அவர்களின் புதிய தீர்வுகள் பிரபஞ்ச ரீதியானதும் சதா காலம் ஏற்புடைமைக்கும் உட்பட்டவை என எண்ணுவது மடமையாகும். இந்த நாகரீகமான அரசு மரபு ரீதியான அறிவின் மூலம் பெறும்பான்மையினரை வெற்றிகொள்ளக்கூடும் என ஏற்றுக்கொண்டாலும் எத்தகைய


ஜவஹர்லால் நேரு


நெல்சன் மண்டேலா


ஜூலியஸ் நியரேரே



லீ ஹசியன் லூங்


toppr.com/biography.com/time.com/ nhc.org.za

நிலைமையின் கீழேனும் அதை அங்கீகரிக்கச் செய்வதற்கு வன்முறை உட்பட பலவந்தத்தை பயன்படுத்துவதற்கு வலிமை உண்டு என எண்ணினாலும், சீனாவைப் போலல்லாது இலங்கையில் தேர்தல் ஜனநாயக மரபு தீவிரமாக வேரூன்றியுள்ளது. புதிய உன்னத பகுதியினரின் கருத்தியல் நிறுவன ரீதியான திருத்தத்தின் நடைமுறை ரீதியான யதார்த்தத்துடன் அவர்களின் தத்துவார்த்த ரொமேன்டிஸ வாதத்தை கலக்க நேர்ந்துள்ளது. எனவே, வேறு சொற்களில் கூறுவதாயின் தேசிய சிந்தனைக்கு அமைய அரச கருத்தியலின் சாராம்சம் மீள்சிருஷ்டிக்கும் போது இலங்கைச் சூழமைவில் ஒரு கொடுக்கல் வாங்கலாக தேர்தல் ஜனநாயகத்திற்கு இடமளிக்க வேண்டும். அதற்கு மாற்றீடாக நாகரீகமான அரசுக்கு, மிக அண்மைக் காலத்தில் ஹொங்கொங்கில் இடம்பெற்ற சம்பவங்களின் மூலம் சுட்டிக்காட்டப்படும் ஒரு விடயம் இருக்கிறது. அரசியலமைப்பு ரீதியாக இடமளிக்க வேண்டிய அவசியமில்லை. சிங்கள பௌத்த நாகரீகத்தின் மேன்மை உள்ளடக்கக் கூடிய அரசையும் சமூகத்தையும் இருக்கமாக பிணைக்கும் தாராளவாத ஜனநாயகப் பெறுமானங்களை விட அரசரின் பத்து நெறிமுறைகளின் (தசராஜ தர்ம) மூலம் அதிகாரம் ஈடுபடுத்துவதை ஒழுங்குறுத்துவதற்கு அவர்கள் ஆட்சி ரீதியாக மாற்றியமைக்கும் (கூடக் குறைய) ஜனநாயக தேர்தல் பொறிமுறையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். சதாகாலம் நாகரீக அரசின் சட்டபூர்வமான தன்மையை புதுப்பித்து முன்னெடுத்துச் செல்வதற்கு தேர்தல்களை நடத்துவது மிகவும் பயனுறுதிவாய்ந்த நிறுவனமாகையால் அவர்களில் சிலருக்கு அது சிக்கலாக தோன்றமாட்டாது.

அரசாங்கங்களை மாற்றியமைப்பதற்கு பயன்படுத்தும் மரபுரீதியானதும் மனிதர் பாவித்த பழக்கவழக்கங்களை உள்ளடக்கிய பன்மைத்துவ அரசியல் தேர்தல் ஜனநாயகத்தில் ஆழமாக வேரூன்றிய மரபுகள் பற்றிய சிக்கலான நடவடிக்கைகள் அதன் சட்டரீதியான தன்மை பற்றியதாகும். வேறு எவரும் அதனோடு போட்டிபோட முடியாது என்ற கருத்து அவர்கள் மத்தியில் நிலவுகிறது. தினசரி வகைப்பொறுப்பு இல்லாத மதகுருமார், தம்மைப் பற்றி செருக்கோடு எண்ணும் அரசியல்வாதிகள், நாகரீகத்தின் தீர்மானகரமானவர்கள், 2500 ஆண்டுகள் பழமை வாய்ந்த கலாசார மேம்பாடுடைய மக்களின் செவிகளை நிரப்பும் போது, அதிருப்தியையும் களைப்பையும் அவசரப்படுதலுக்கும் அவர்கள் முகம் கொடுத்து அதன் மூலம் தமது சந்தோஷம் இன்மையைக் காட்டுவதற்கு பொருத்தப்பாடுடைய மாற்றத்திற்காக உறுதிப்படுத்தப்பட்ட கருவியின் உதவியை நாட முடியும். தேசிய சிந்தனையின் (ஜாதிக்க சிந்த்தனய) அரசியலமைப்புக்கான 18 வது திருத்தத்தின் கீழ் மஹிந்த சிந்தனையின் அரசியலமைப்பைப் போலவே சட்டரீதியான தற்காலிக புலக்காட்சியாக மாறும் புத்தர் அருளியவாறு இது ஒரு பிறப்பிலிருந்து மற்றுமோர் பிறப்பை நாடிச் செல்வதாகும். 2020 ஆகஸ்ட் 05 ஆம் திகதி அரசாங்கத்திற்கு 3இல் இரண்டு பெரும்பான்மையை வழங்காமல் இந்த துர்ப்பாக்கிய கருத்தியல் நடைமுறைப்படுத்துவதை ஒரு போதும் தடுக்க முடியாது.


பொல்பொட்



இடி அமீன்


ரொபர்ட் முகாபே


பொக்காசா

historycollection.com/ www.pbs.org/ www.biography.com/ newslibre.com

**ஒவ்வொரு மனிதனுக்கும் தனது தாய்மொழி என்பது இதயபூர்வமாக உணரக்கூடிய, புரியக்கூடிய, ஆத்மீக ரீதியான பிணைப்புக் கொண்ட கருவியாகும். அது பௌதீக ரீதியாகவும் ஒரு மனிதனுக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்துகிறது. அதே சமயம் தான் பேசும் தனது தாய்மொழி, தனது அடையாளத்தை வெளிப்படுத்தும் கண்ணாடியாகுமென அறிமுகப்படுத்துவது உசிதமானதாகும். எனவே, தனது ஆத்மீக, பௌதீக அடையாளத்தை வெளிப்படுத்தும் மொழி தனது விடயத்துறையில் மாத்திரமல்லாது, ஏனையோரின் செயற்பாடுகள் குறித்தும் மரியாதையையும் அங்கீகாரத்தையும் பெறுவதற்கான ஆத்ம அபிமானத்தை மெருகூட்டும் அடிப்படைச் சாதனமாகும். இதனூடாக ஏற்படக்கூடிய சாதகமான விளைவுகளும் பல்வேறு விடயங்கள்மீது பரந்துபட்ட முறையில் விரிவாக்கம் பெறுகிறது.**




# நுகர்வோர் உரிமை விடயத்தில் வலுவூட்டப்பட்ட

# அரசகரும மொழிக்கொள்கை





சட்டத்தரணி **துமிந்து மதுஷான்**
ஆய்வாளர்
மாற்றுக் கொள்கைகளுக்கனா நிலையம்


### மொழி உரிமைபற்றிய அரசியலமைப்பின் அடிப்படைகள்

மொழியை ஓர் உரிமையாக ஏற்றுக்கொள்வதும், வலுவாக்கம் பெறச் செய்வதும், அந்த மொழியைப் பேசுகின்ற, பயன்படுத்துகின்ற மக்களுக்கு வழங்கப்படும் ஒரு கௌரவமாகும். சிலவேளை அது ஒரு கௌரவத்திற்கு அப்பால் செல்லும், ஆத்மீக ரீதியாக வழங்கப்படும் ஒரு நிவாரணமாகும். இதன்மூலம் தான் சமூகத்தினுள்ளும் அரச பொறிமுறையினுள்ளும் பேணிப்பாதுகாக்கப்படுவதான உணர்வாகும். உரிமைகளை நடைமுறையில் செயற்படுத்துவதற்கும், அவை மீறப்படும்போது மீளப்பெறுவதற்கும், அவசியமான சக்தியை வழங்குகிறது. இதற்கமைய 1978 அரசியலமைப்பின் மூன்றாம், நான்காம் அத்தியாயங்களில் மொழிபற்றிய சட்டம் அடிப்படை உரிமைகள் என்ற வகையீட்டுக்குள் உள்ளடக்கப்படுகிறது. அரசிலமைப்பின் (2)ம் உறுப்புரைக்கமைய எந்தவொரு பிரஜையும் இனம், மதம், மொழி, சாதி, ஆண்பெண் பால்நிலை, அரசியற் கருத்து அல்லது பிறப்பிடம் ஆகிய காரணிகள்மீது அல்லது அவற்றுள் எந்தவொரு காரணிமீதாவது பாரபட்சத்திற்கு அல்லது விசேட கவனத்திற்கு உட்படுத்தக் கூடாது. இங்கு பாரபட்சத்திற்கான அல்லது விசேட கவனிப்பு, குறைந்து அல்லது கூடுதலான கவனிப்பாகும். அதாவது,

www.yamu.lk




சட்டத்தின்மூலம் அமுல்படுத்த வேண்டிய சமநீதி அமுல்படுத்தாமை பாரபட்சமாகும். இந்த பாரபட்சம் நிறைவேற்று அல்லது நிருவாக நடவடிக்கையின்மூலம் ஓர் பிரஜைக்கு ஏற்படலாம். அப்போது 12(2) உறுப்புரைக்கு அமைய நிவாரணம் பெறமுடியும். அரசியலமைப்பின் நான்காம் அத்தியாயத்தின் 18 ஆவது உறுப்புரைக்கு அமைய சிங்களமும் தமிழும் இலங்கையின் அரசகரும மொழிகளாகும். ஆங்கிலம் இணைப்பு மொழியாக கருதப்படுகிறது. அதேசமயம் 19 ஆவது உறுப்புரைக்கு அமைய சிங்கள மொழியும் தமிழ் மொழியும் இலங்கையின் தேசிய மொழிகளாகும். 22 ஆவது வாசகத்திற்கமைய சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகள் இலங்கை முழுவதிலும் நிருவாக மொழியாகும். இதன்போது புரிந்துகொள்ள வேண்டிய விடயம் என்னவெனில், அரச நிறுவனங்களில் பணியாற்றுவதற்கு அறிக்கைகளைப் பதிவு செய்வதற்கு உரித்தான மொழி நிருவாக மொழியாகும். சிங்களம் அல்லது தமிழ் அல்லாத வேறு மொழி (ஆங்கில மொழி) நிருவாக மொழியாக இருப்பினும் இதுவரை அவ்வாறு விதிக்கப்படவில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிருவாக மொழி தமிழ் மொழியாகும். ஏனைய மாகாணங்களில் நிருவாக மொழி சிங்கள மொழியாகும். அதேசமயம் நிருவாக மொழியாக குறித்துரைக்கப்பட்ட பிரதேசங்களில் இரண்டு அரசகரும மொழிகளை விதிக்க முடியும். அப்போது சிங்களமும் தமிழும் நிருவாக மொழியாகச் செயற்படும்.

இதற்கமைய ஒட்டுமொத்தமாக நோக்குகையில் அரசின் நடவடிக்கைகளும் அரசு பிரஜைகளுக்காகச் செயற்படுத்தும் அனைத்துப் பொறிமுறைகளும் அரசகரும மொழிக் கொள்கைகளுக்கமைய இடம்பெற வேண்டும். இந்நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு 2012 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை அரச பொறிமுறைகளில் அரசகரும மொழிக்கொள்கை உரிய முறையில் செயற்படாமை காரணமாக பிரஜைகளின் மொழி உரிமை மீறப்படுவதை அடிப்படையாகக் கொண்டு அவற்றிற்குப் பொறுப்புக் கூறவேண்டிய அதிகாரிகளிடம் முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் நடவடிக்கை எடுத்தது. இதற்கமைய இவ்வாறு பொறுப்புக் கூறவேண்டிய இரண்டு அடிப்படை நிறுவனங்களாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும், அரசகரும மொழிகள் ஆணைக்குழுவும் அடையாளம் காணப்பட்டதோடு அரசகரும மொழிக்கொள்கையை மீறியமை பற்றிய விடயம் பல சந்தர்ப்பங்களில் இவ்விரு நிறுவனங்களுக்கும் முறைப்பாடு செய்யப்பட்டது.

### பிரஜைகளின் மொழி உரிமைபற்றிய மாற்றுக்கொள்கைகள் நிலையத்தின் வெற்றிகள்

இவற்றிடையே சில உரிமை மீறல்களுக்கான பரிகாரங்களைப் பெறுவது, மேற்படி இரண்டாவது நிறுவனங்களின் இடையீடுகள் போதியதாக இருப்பினும், மற்றுமொரு சந்தர்ப்பத்தில் உயர்நீதிமன்றம் வரை சென்று, மேற்படி உரிமைகளை வலுவாக்கம் பெறுவதற்கு கிடைத்த வாய்ப்புக்கள் உண்டு. இதற்கு உதாரணமாக தேசிய அடையாள அட்டை சிங்களம் மற்றும் தமிழ்மொழிகளில் வெளியிடுதல், பணநோட்டுக்களில் சில வாசகங்கள்



> **உயர்நீதிமன்றம் வரை சென்று, மேற்படி உரிமைகளை வலுவாக்கம் பெறுவதற்கு கிடைத்த வாய்ப்புக்கள் உண்டு. இதற்கு உதாரணமாக தேசிய அடையாள அட்டை சிங்களம் மற்றும் தமிழ்மொழிகளில் வெளியிடுதல், பணநோட்டுக்களில் சில வாசகங்கள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் அச்சிடுதல், சட்டங்கள் சிங்களம் மற்றும் தமிழ்மொழிகளில் வெளியிடுதல், ஔடதங்கள் பொதியில் அடைக்கப்பட்ட பின்னரான தகவல்கள் சிங்களம் மற்றும் தமிழ்மொழிகளில் வெளியிடுதல் போன்ற சம்பவங்கள் முன்னுரிமை பெறுகின்றன. இவ்வெற்றிகள் அனைத்துமே பிரஜைகளுக்காக மாற்றுக்கொள்கைகள் நிலையம் வென்றெடுத்த வெற்றிகளாகும். இவற்றின் பெறுபேறுகள் ஒட்டுமொத்தப் பிரஜைகள் சமத்துவமாக அனுபவிக்கக்கூடியதாக உள்ளது.**

சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் அச்சிடுதல், சட்டங்கள் சிங்களம் மற்றும் தமிழ்மொழிகளில் வெளியிடுதல், ஔடதங்கள் பொதியில் அடைக்கப்பட்ட பின்னரான தகவல்கள் சிங்களம் மற்றும் தமிழ்மொழிகளில் வெளியிடுதல் போன்ற சம்பவங்கள் முன்னுரிமை பெறுகின்றன. இவ்வெற்றிகள் அனைத்துமே பிரஜைகளுக்காக மாற்றுக்கொள்கைகள் நிலையம் வென்றெடுத்த வெற்றிகளாகும். இவற்றின் பெறுபேறுகள் ஒட்டுமொத்தப் பிரஜைகள் சமத்துவமாக அனுபவிக்கக்கூடியதாக உள்ளது.

### நுகர்வுப் பொருட்களின் தகவல்களுக்கேற்ப ஏற்புடைய மொழி உரிமைகள் செயற்படாதபோது அவற்றை சவால்களுக்கு உட்படுத்துதல்.

2012 முதல் 2018 வரையிலான காலகட்டத்திற்குள் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தினால் இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவிற்கும், அரசகரும ஆணைக்குழுவிற்கும் சுமார் 150 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் செய்யப்பட்டன. அரசகருமமொழிக் கொள்கைகளுக்கமைய நுகர்வுப் பண்டங்கள் பற்றிய மிக முக்கியமான தகவல்களை வழங்காமைபற்றி குறிப்பிடப்பட்டது. மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தினால் 2013 ஆம் ஆண்டில் இருந்தே நுகர்வு நடவடிக்கைகள் பற்றிய அதிகாரசபைக்கு சுட்டிக்காட்டியவாறு நுகர்வுப் பண்டங்களின் அத்தியாவசியத் தகவல்கள், அதாவது நுகர்வுப் பண்டத்தின் பெயர், உச்ச சில்லறை விலை, காலாவதியாகும் திகதி, உற்பத்தி செய்த திகதி, அதனுடைய எடை, கனஅளவு, இறக்குமதி செய்யப்பட்ட நாடு ஃ

உற்பத்தி செய்யப்பட்ட நாடு, பொதியில் அடைத்த திகதி ஆகிய தகவல்கள் ஆங்கிலமொழியில் மாத்திரம் அச்சிட்டு இருந்தது. இதனை மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டியதோடு பண்டங்களின் தகவல்கள் ஆங்கிலமொழியில் மாத்திரமோ அல்லது ஒரு அரசகரும மொழியில் (சிங்களம் அல்லது தமிழ்) மாத்திரமோ அச்சிடுதல், நுகர்வோர் தகவல்களைப் பெறும் உரிமை மீறப்படுவதாகும். 2013 இல் இருந்து நுகர்வு நடவடிக்கைகள் பற்றிய அதிகாரசபைக்கு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் முன்வைத்த முறைப்பாடுகளின் ஊடாக இந்நிலைமைகளுக்கு தீர்வும், அதேவேளை இலங்கை அரசகரும மொழிக்கொள்கையை ஏற்பதற்கு நுகர்வோர்பற்றிய அதிகாரசபைக்கு அதிகாரமும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டுள்ளமையை வலியுறுத்த முடிந்தது.

### தகவல்களுக்கான உரிமைகள் ஊடாக விடயங்கள் வெளிப்படுதல்

மேற்படி முறைப்பாடுகளுக்கான பிரதிபலிப்பாக பல ஆண்டுகளாக மனித உரிமைகள் ஆணைக்குழுவும் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவும் பல பரிசோதனைகளை நடத்தியுள்ளன. ஆனால், இன்றுவரை குறிப்பிடத்தக்க சாதகமான முன்னேற்றத்தைக் காணமுடியவில்லை. எனவே, 2016இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைக்கான சட்டத்தின்கீழ், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் முறைப்பாடு செய்த விடயங்கள் தொடர்பான முன்னேற்றம்பற்றி நுகர்வோர்பற்றிய அதிகாரசபையிடம் கேட்டுக்கொண்டதோடு அதற்குப் பிரதிபலிப்பும் கிடைத்தது.

### நுகர்வோருக்கான அதிகாரசபை மேற்கொண்ட நடவடிக்கைகள்

2013 ஆம் ஆண்டில் இருந்து 2018 ஆம் ஆண்டுவரை நாம் முன்வைத்த முறைப்பாட்டுப் பிரிவின் கவனத்திற்கு உட்படுத்தப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக உரிய முறையில் கவனம் செலுத்தப்படவில்லை. அதேசமயம், மேற்படி முறைப்பாடுகள் தொடர்பாக நுகர்வோர் நடவடிக்கைகளுக்கான அவதானிப்புகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் 2135 / 53 மற்றும் 2019.08.07 திகதியிடப்பட்ட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிட்டவாறு, கட்டளை இலக்கம் 68 இற்கமைய மேற்படி கட்டளைகளின் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பண்டங்களின் அதிஉயர் சில்லறை விலை, உற்பத்தி தொகுதி இலக்கம், காலாவதியாகும் திகதி, உற்பத்தி செய்த பண்டத்தின் எடை / கனஅளவு, இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்தி நாடு, மீண்டும் பொதியில் அடைக்கப்பட்டிருப்பின் அவ்வாறு பொதியில் அடைக்கப்பட்ட திகதி, ஆகிய தகவல்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் விளக்கமாக அச்சிட்டு விநியோகிக்கப்பட வேண்டுமென

**அரசகரும மொழிகள் ஆணைக்குழு தனது நடவடிக்கைகளை அமுல்படுத்துகையில் அனுசரித்த மந்தமான போக்கு, இது விடயமாக மாத்திரமல்லாது பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகி உள்ளது. அதற்கான சிறந்த உதாரணம் கடந்த ஒரு சில ஆண்டுகளாக அரசகரும மொழிக்கொள்கை மீறப்பட்டமை தொடர்பாக அரசகரும மொழிகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட எந்தவொரு முறைப்பாட்டிற்கும் ஆணைக்குழு தனது பரிந்துரைகளை செயற்படுத்தாமை காரணமாக, மேல்நீதிமன்றத்தில் எதுவித வழக்கும் தொடரப்படவில்லை.**

கட்டளையிடப்பட்டது. எவ்வாறாயினும், மேற்படி கட்டளைகள் 68 ஆம் இலக்கத்தை வெட்டி 2156 / 16 கொண்ட 2019.12.31 திகதியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டளை இலக்கம் 71 விநியோகிக்கப்பட்டதோடு மேற்படி கட்டளை 2020.09.01 ஆகிய திகதியில் இருந்து செல்லுபடியாகும். மேலும் மேற்கூறிய வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் மும்மொழிகளிலும் பண்டங்களின் சிட்டைகளில் அச்சிடுவதன்மூலம் சிட்டையின் எல்லை, சிறிய அளவில் பண்டங்களுக்காக இம்முறைமை, பல கஷ்டங்களை ஏற்படுத்தக்கூடும். தொழில்நுட்பத் தடைகள், மும்மொழிகளிலும் உள்ளடக்குதல் வேறு ஆலோசனை பற்றிய தகவல்களை அச்சிட நிர்ப்பந்திக்கப்படுவதனால் நுகர்வுப் பொருட்களின் விலை உயர்தல் / போன்ற நடைமுறைச் சிக்கல்கள் உள்ளதாக இலங்கையின் வாணிபப் பேரவையின் (உணவு, குடிபானங்கள் பிரிவு) நுகர்வு விவகாரங்கள் பற்றிய அதிகாரசபைக்கு அறிவித்துள்ளது. எனவே, மேற்படி வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பண்டங்களின் சிட்டைகளில் உள்ளடக்கப்படும் தகவல்களை அச்சிடுகையில் மும்மொழிகளிலும் அச்சிட வேண்டுமா? என்பதுபற்றி அரசகரும மொழிக்கொள்கை பற்றி அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2019.10.16 திகதியிடப்பட்ட கடிதமூலம் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி கடிதம் தொடர்பாக இதுவரை ஒரு பதிலும் கிடைக்கவில்லை என்பதை அறிகிறோம்.

- **அரசகரும மொழி ஆணைக்குழுவின் மந்தமான போக்கு**

நுகர்வோர் நடவடிக்கைகள் பற்றிய அதிகாரசபையினால் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்ட கடிதம் தொடர்பாக அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் பதில் அளிக்கப்படவில்லை. இது அரசகரும மொழிக்கொள்கையை அமுல்படுத்துதல் தொடர்பான பாதகமான அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளதோடு, இது தொடர்பான வினைத்திறனின்மை கவலைக்குரிய விடயமாகும். அரசகரும மொழிகள் ஆணைக்குழு தனது நடவடிக்கைகளை அமுல்படுத்துகையில் அனுசரித்த மந்தமான போக்கு, இது விடயமாக மாத்திரமல்லாது பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகி உள்ளது. அதற்கான சிறந்த உதாரணம் கடந்த ஒரு சில ஆண்டுகளாக அரசகரும மொழிக்கொள்கை மீறப்பட்டமை தொடர்பாக அரசகரும மொழிகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட எந்தவொரு முறைப்பாட்டிற்கும் ஆணைக்குழு தனது பரிந்துரைகளை செயற்படுத்தாமை காரணமாக, மேல்நீதிமன்றத்தில் எதுவித வழக்கும் தொடரப்படவில்லை. அதேசமயம், ஆணைக்குழுவின் பதவிகளுக்காக நியமிக்கப்படும் அதிகாரிகளின் உற்சாகமும் குறைந்தமை ஒரு பகிரங்க உண்மையாகும். ஏற்கனவே தமக்குள்ள வளங்களை உரியமுறையில் பயன்படுத்தி அரசகரும மொழிக்கொள்கையை வெற்றிகரமாகவும், முறையாகவும் நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு சரியான திட்டம் தீட்டப்படவில்லை. ஓர் அமைச்சரின்கீழ் இயங்கும் ஆணைக்குழு என்றபடியால் இங்கு இவ்வாணைக்குழு அனுசரிக்க வேண்டிய சுயாதீனத்தன்மையை பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக்கூறும் ஓர் இயல்பு இல்லாமை காரணமாக, இது சுயாதீன ஆணைக்குழுவாக மாற்றியமைக்கும் அவசியம் அத்தியாவசியமாகக் காணப்படுகிறது.

எவ்வாறாயினும், அரசகரும மொழிக்கொள்கையை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து, நுகர்வோர் விவகாரங்களுக்கான அதிகாரசபை விநியோகித்துள்ள, 2019.12.31 திகதியிடப்பட்ட 2156 / 16 இலக்கம் கொண்ட வர்த்தமானியினால் திருத்தப்பட்ட, 2019.08.07 திகதிகொண்ட 2135 / 53 வர்த்தமானப் பத்திரிகை 2020.06.22 ஆந் திகதி வெளியிடப்பட்டமை பாராட்டுக்குரியது. மேற்படி வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைய நுகர்வோர் விவகாரம்பற்றி அதிகாரசபையினால் அனைத்துப் பண்டங்களினதும் உற்பத்தி பற்றிய முக்கிய விபரங்கள், அனைத்துப் பண்டங்களையும் பொதியில் அடைக்கும்போது, சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அதுபற்றிய விபரங்களை அச்சிடுமாறு அனைத்து உற்பத்தியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்கும், விநியோகஸ்தர்களுக்கும், வியாபாரிகளுக்கும் விதிக்கப்பட்டுள்ளது. இந்த விதிகள் நுகர்வோர் பண்டங்கள் என்னும் தலைப்பில் 76 பொருட்களுக்கு ஏற்புடையதாகும்.

- **மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் மேற்கோள் காட்டிய உரிமை மீறல்கள்பற்றிய விசேட கவனம்**

இதன்போது குறித்துரைக்கப்பட வேண்டிய விசேட விடயம்: மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் மேற்கொண்ட முறைப்பாடுகளில் அடையாளம் கண்டுள்ள பண்டங்களில் அதிகமானவை மேற்படி வர்த்தமானப் பத்திரிகைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதன்விளைவாக, வர்த்தமானப் பத்திரிகை வலுவாக்கப்படும் திகதியான 2020.09.01 ஆந் திகதி முதல் மும்மொழிகளிலும் நுகர்வுப் பொருட்கள் தொடர்பாக அத்தியாவசிய தகவல்மீது கவனம் செலுத்துவதற்கு, அனைத்து நுகர்வோருக்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. இதற்கமைய, நுகர்வோருக்கு ஆகக்குறைந்தபட்சம் உற்பத்தி பற்றிய அடிப்படைத் தகவல்களைப் பெறுவதற்கு முடிந்துள்ளமை மிகவும் முக்கிய விடயமாகும். மேற்படி நுகர்வுப் பொருட்கள் அவர்களின் பாவனைக்கு அனுகூலமானதா? தகுதியானவையா? என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடிந்துள்ளது. நுகர்வோர் புரியக்கூடிய மொழியில் இத்தகைய தகவல்கள் வழங்கப்படுவதன் காரணமாக, தனிநபர்களுக்கு தமது தாய்மொழியில் (சிங்களம் அல்லது தமிழ்) ஆலோசனை பெறுவதற்கான உரிமை பேணப்படுவது மாத்திரமல்லாமல் நுகர்வோரின் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுமீதும் அது நேரடியாக தாக்கம் செலுத்துகிறது.

- **ஔடத சிட்டைகளின் தகவல்கள் அரசகரும மொழிக்கொள்கைகளுக்கு ஏற்ப அனுசரிக்கும் முறைமைகளுக்கான போராட்டம்**

அரசகரும மொழிக்கொள்கை பற்றிய உரிமை மீறில்கள் தொடர்பாக மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தொடர்ந்து குரலெழுப்பி வந்துள்ளது. இது தொடர்பாக பொறுப்புவாய்ந்த அதிகாரிகளுடன் முறைப்பாடு செய்தல், நுகர்வோர் உரிமைகள் பற்றிய விடயத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை. அது மிகவும் பரந்து விரிந்த விடயத்துறையில் செயற்படுகிறது. இது தொடர்பான மற்றுமோர் முறைப்பாடு பின்வருமாறு: ஔடதங்களின் சிட்டைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் அரசகரும மொழிக்கொள்கைகளுக்கு ஏற்ப குறிப்பிடப்படாமை தொடர்பாக தேசிய ஔடத ஒழுங்குறுத்தல் அதிகாரசபைக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவிற்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் இதுவிடயமாக பொறுப்புக் கூறவேண்டிய ஏழு பிரதிவாதிகளின் பெயர்கள் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

1. தவிசாளர், அரச ஔடத கூட்டுத்தாபனம்
2. முகாமைத்துவ பணிப்பாளர், அரச ஔடத உற்பத்தி கூட்டுத்தாபனம்
3. பணிப்பாளர், ஔடதங்களை ஒழுங்குறுத்தும் அதிகாரசபை
4. சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம், சுகாதார அமைச்சு
5. பணிப்பாளர் வைத்திய வழங்கல் பிரிவு, சுகாதார அமைச்சு
6. தவிசாளர், தேசிய ஔடத உற்பத்தியாளர்களின் கூட்டுத்தாபனம்
7. தவிசாளர், நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை

இது தொடர்பாக அரசகரும மொழிகள் ஆணைக்குழு மேற்கொண்ட நடவடிக்கைகளாக இறக்குமதி செய்யப்படும் ஔடத பொதிகளில் குறிப்பிடப்படும் ஔடதப் பயன்பாடு பற்றிய விபரங்கள் அரசகரும மொழிக் கொள்கைகளுக்கு அனுகூலமாக தயாரித்தல்பற்றிய முறைப்பாட்டிற்கு ஏற்புடைய கலந்துரையாடல் 2012.03.26 ஆந் திகதி அரசகரும மொழிகள் ஆணைக்குழுவில் இடம்பெற்றது. அதேசமயம் அங்கு பரிந்துரைக்கப்பட்ட இறக்குமதி செய்யப்படும் ஔடதங்களில் குறித்துரைக்கப்படும் காலாவதி திகதி, களஞ்சியப்படுத்தல் சம்பந்தமான ஆலோசனைகள், பயன்பாட்டின் பின்னர் செய்யத் தகாத நடவடிக்கைகள்/ இடைநேர் விளைவுகள், மருந்தின் அளவு என்பன ஒரு நோயாளர் கட்டாயமாக அறிந்திருக்க வேண்டிய விடயங்கள். அரசகரும மொழிக்கொள்கைகளுக்கு அனுகூலமாகத் தயாரிக்கப்பட வேண்டும். இந்நிலைமை உள்நாட்டிலும் உற்பத்தியாளர்களின் ஔடதங்கள் தொடர்பாகவும் ஏற்புடையது என குறித்துரைக்கப்பட்டது.

இதுபற்றி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டிற்குரிய விசாரணையின்போது நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை முறைப்பாட்டாளர் தரப்பில் முன்வைக்கப்பட்ட யோசனை தகுதியானதென ஏற்றுக்கொண்டு பின்வரும் முன்மொழிவுகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தது. அதாவது நுகர்வோர் விசாரணை செய்யும்போது, தாம்பெறும் ஔடதங்கள் பற்றி நுகவர்வோருக்கு அவசியமான அனைத்து விபரங்களும் அவர்களுக்கும் கூடிய தேர்ச்சியுள்ள மொழிமூலம் மருந்தாளரிடம் கேட்டு அறிவதற்கு உரிமை உண்டு. அதேவேளை, சகல ஔடத விற்பனை நிலையங்களிலும் இரண்டு அரசகரும மொழிகளிலும் இணைப்பு மொழியான ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படும் விளம்பரப்பலகையில் காட்சிப்படுத்துவதன் மூலம் நுகர்வேரை அறிவூட்ட முடியும். அதேசமயம், இலங்கையின் ஔடத உற்பத்தியாளர்கள் இரண்டு அரசகரும மொழிகளிலும் தமது சிட்டைகளில் அல்லது பொதிகளில் மேற்படி ஔடதம் தொடர்பான தகவல்களைக் குறிப்பிடுதல் வேண்டும். இதன்போது குறிப்பிட்ட ஔடதம் பற்றி சாதாரணமாக ஒரு நோயாளர் அறிய வேண்டிய விபரங்கள் மாத்திரம் போதுமானதென இந்த அதிகாரசபை பரிந்துரைக்கும் அதேவேளை, மேற்படி தகவல்கள் ஔடத ஒழுங்குறுத்தல் அதிகாரசபையின் பரிந்துரைகளுக்கமைய குறிப்பிடப்பட வேண்டுமெனவும் இந்த அதிகாரசபை பரிந்துரைக்குமென ஓர் இணக்கப்பாடு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னே உறுதிப்படுத்தப்பட்டது.

- **ஔடத பொதிகளில் உள்ள தகவல்கள் அரசகரும மொழிக்கொள்கைகளுக்கு அமையாவிடின் அதுபற்றிய அடிப்படை உரிமைகள் சார்ந்த வழக்கு**

பின்னர் மேற்படி நியமங்களுக்கு பிரதிவாதிகள் உடன்படாத காரணத்தினால் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் இதுவரை அடிப்படை உரிமைகள் தொடர்பான SEFR / 102/16 இன்கீழ் வழக்குத் தொடரப்பட்டது. அவ்வழக்கு தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. இதன் சாதகமான நடவடிக்கையாக, அடையாளம் காணப்பட்ட சில ஔடதங்களின் தகவல்களை அரசகரும மொழிக்கொள்கைகளுக்கமைய 2020.01.01 திகதி முதல் விநியோகம் செய்வதற்கு ஏற்புடையவாறு தேசிய ஔடத ஒழுங்குறுத்தும் அதிகாரசபையினால் 2019.10.14 திகதிய வர்த்தமான பத்திரிகை இலக்கம் 2145ஃ01 இன்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் தேசிய ஔடத ஒழுங்குறுத்தும் அதிகாரசபையினால் விநியோகிக்கப்பட்டுள்ள இந்த வர்த்தமானப் பத்திரிகை இலங்கை ஔடத கைத்தொழிற் சபையினால் மேல் நீதிமன்றத்தின்முன்னே சவாலுக்கு உட்படுத்தப்பட்ட அதேவேளை இது எதிர்காலத்தில் கவனத்தில் கொள்ளப்படும்.

இந்த வர்த்மானப் பத்திரிகையின் மூலம் அரசகரும மொழிக்கொள்கையை அமுலாக்குதலும், நுகலர்வோருக்கு தீர்மானகரமான தகவல்களை வழங்கும் முக்கிய முன்நடவடிக்கையை குறிப்பிடும் அதே வேளை, இந்த சாதகமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டமைக்கு எதுவித சான்றும் கிடையாதென்பதை வலிஷயுறுத்த வேண்டியுள்ளது. இத்தகைய பின்னணியில் நுகர்வோரின் உரிமைகளையும் நல்வாழ்வினையும் பாதுகாத்து பொறுப்புடன் செயற்படுவது அனைத்து தரப்பினரதும் சட்டம் மற்றும் சமூகக் கடமையாகும். இக்குறிக்கோள் சகல மட்டங்களிலும் சாதகமாகவும் ஒழுங்காகவும் அமுலாக்குவதை சான்றுப்படுத்துவதற்கு அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறையில் செயற்படுத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர்காலத்திலும் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுக்கும்.

**நாடாளுமன்ற தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தலில் எந்தக் கட்சி வெற்றி பெறும் என்பது தொடர்பில் சந்தேகம் இல்லை. ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) உடனான கூட்டரசாங்கத்தின் கருத்தியல்வாதம் நாட்டின் அரசியல் விதியினை எவ்வாறு தீர்மானிக்கப் போகின்றது ? என்பது மாத்திரமே ஒரே ஒரு சந்தேகமாகும். ஜனாதிபதி மற்றும் அவரது ஆதரவாளர்கள் அதிகாரத்துவ ஆட்சி வடிவமொன்றை முன் கொண்டு செல்வதோடு, கூட்டரசாங்கத்தில் இருக்கின்ற ஏனையோர் வழமையான சார்புவாத தேர்தல் அரசியலையே விரும்புகின்றனர். தசாப்தங்களாக தொடர்ந்து வருகின்ற பாரம்பரிய அரசியல் மீதான அதிருப்தி நிலையானது அதிகாரத்துவ வடிவ ஆட்சியொன்றினை ஏற்படுத்தியுள்ளது. இக் கட்டுரையானது, அதிகாரத்துவம் சார்ந்த எந்த ஆட்சி வடிவமும் இலங்கையின் நடமாட முடியாத ஜனநாயத்திற்கான ஒரு அறிவார்த்தமான மாற்றீடு அல்ல என்பது தொடர்பில் விவாதிக்கின்றது.**



# நடமாட முடியாத இலங்கை ஜனநாயகத்திற்கு அதிகாரத்துவம் ஒரு மருந்தல்ல


கலாநிதி **பிரதீப் பீரிஸ், சக்கினா மொஹினுதீன், எம். கிருஷ்ணமூர்த்தி**
மாற்றுக் கொள்கைகளுக்கனா நிலையம்


**ஜனநாயக ஆட்சியுடனான சமூகத்தின் அதிருப்தி நிலை**

கடந்த பல வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிப்பிராய ஆய்வுகளானவை நாட்டினது ஜனநாயகம் மற்றும் ஜனநாயக நிறுவனங்கள் தொடர்பில் பொதுமக்களின் அதிருப்தியானது அதிகரித்துச் செல்வதை வெளிப்படுத்தி வருகின்றன. உதாரணமாக, 2012ஆம் ஆண்டு சமூக விஞ்ஞானிகள் சங்கம் மேற்கொண்ட 'தென்னாசிய அரசுகளின் ஜனநாயகம்' தொடர்பான அபிப்பிராய ஆய்வில் நாட்டின் 24.4% மான சிங்களவர்கள் சக்தி வாய்ந்த ஒரு தலைவரை விரும்புகின்றனர் எனவும், 91.1% மான சிங்களவர்கள் "சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலொன்றின் தலைவரொருவர் தெரிவு செய்யப்படல் வேண்டும்" எனவும் குறிப்பிட்டனர். கடந்த இரு வருட காலப்பகுதியில் நல்லாட்சி அரசாங்கத்தின் மிகவும் குழப்பகரமான ஆட்சிப் பின்னணியில் சக்தி வாய்ந்த ஒரு தலைவர் என்பதன் மீதான மக்களின் விருப்பானது தீவிரமடைந்தது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அபிப்பிராய ஆய்வுப் பிரிவான சோஷல்



www.colombotelegraph.com

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ**

இன்டிகேட்டர், "2018ஆம் ஆண்டு நடாத்திய, 70 வருட சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையினது பெறுமானங்கள் மற்றும் மனப்பான்மைகள் தொடர்பான ஆய்வு முடிவுகளில் சிங்கள சமூகத்தைச் சேர்ந்த 52.1% மானவர்கள் சக்தி வாய்ந்த ஒரு தலைவரின் ஆட்சியினை விரும்புவதாகவும், 52.7% மானவர்கள் 'துறைசார் வாண்மையாளர்களின் ஆட்சியினை' விரும்புவதாகவும், 80.9% மானவர்கள் "தேர்தலொன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்ட தலைவரின் ஆட்சியினை" விரும்புவதாகவும் தெரிவித்திருந்தனர். அதாவது, பெரும்பான்மை சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தேர்தலொன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்ட அதேசமயம் சக்தி வாய்ந்த மற்றும் துறைசார் வாண்மையாளரான தலைவர் ஒருவரின் ஆட்சியை விரும்புவதை ஆய்வு முடிவுகள் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன.

இது சிங்கப்பூர் மாதிரியான ஜனநாயகமாக அமைவதுடன் சக்தி வாய்ந்த மற்றும் துறைசார் வாண்மைமிகு தலைவர் மீதான விருப்பமும் நாடாளுமன்றம் மற்றும் அரசியல் கட்சிகள் தொடர்பான பொதுமக்களின் நம்பிக்கை வீழ்ச்சியும் நேர்மாறாக இடைதொடர்புறுகின்றது. "சோஷல் இன்டிகேட்டர்" நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட தொடர்ச்சியான அபிப்பிராய ஆய்வு முடிவுகளின்படி, சிங்கள சமூகத்தில் நாடாளுமன்றம் மற்றும் அரசியல்வாதிகள் தொடர்பான நம்பிக்கையின் அளவானது, 2011-2018 காலப்பகுதியில் சீராக குறைவடைந்து வந்துள்ளதுடன், இராணுவம் மீதான நம்பிக்கை தொடர்ந்து உயர்வாகவும் நிலையானதாகவும் இருந்து வருகின்றது.

இராணுவம், பாராளுமன்றம் மற்றும் அரசியல் கட்சிகள் மீதான சிங்கள மக்களின் நம்பிக்கை

## தற்போதைய அதிகாரத்துவவாதத்தை நோக்கிய ஆதரவின் அரசியல் இலாபம்

இவ் அதிகாரத்துவ வடிவ ஜனநாயகத்திற்கான தற்போதைய தூ ண்டற் காரணிக்கு அதற்கேயுரிய அரசியல் இலாபம் உண்டு. புதிய உயர்குடி குழுமத்தைச் சேர்ந்தவர்கள் அவ்வாறான அரசாங்க வடிவத்தினூடாக நன்மை பெறுகின்றனர். மறுபுறத்தில், புதிதாக உருவாகி வரும் இராணுவ வகுப்பினர் மூன்று தசாப்த யுத்தத்தின் விளைவாக குறிப்பிடத்தக்களவு செல்வம் மற்றும் அந்தஸ்தினை அனுபவித்து வருகின்றனர். மறுபுறத்தில், நவ தாராண்மைவாத சேவையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமானது கடந்த முப்பது வருடமாக புதிய வகுப்பொன்றினை உருவாக்கியுள்ளது. அவ் வகுப்பானது வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், முகாமையாளர்கள் போன்ற தொழில் வாண்மையாளர்களையும் மற்றும் அதிகார வர்க்கத்தினரையும் உள்ளடக்கியது. நாட்டில் செல்வம் மற்றும் அந்தஸ்து ஆகியவற்றைக் கொண்டு இவர்களும் ஒரு வகுப்பாக உருவாகியுள்ளனர். சுவாரஸ்சியமான விடயம் என்னவெனில், இவ் இரு குழுக்களும் ஒத்த இயல்புடைய சமூக மற்றும் கலாசார பின்புலங்களிலிருந்து வந்தவர்கள். அதாவது, பிரதானமாக சிங்கள-பௌத்த சமூகத்தைச் சேர்ந்த

மற்றும் கொழும்பிற்கு அப்பால் வெளிப் பிரதேசத்தினராக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஆகவே, இப்புதிய வகுப்பினரில் பெரும்பான்மையானவர்கள் சிங்கள-பௌத்த இனத்துவ தேசியவாத அனுதாபம் கொண்டவர்களாவதுடன், நவ தாராண்மைவாதப் பெறுமானங்களை கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.


பிரதானமாக, 2010ஆம் ஆண்டு தொடங்கி இப் புதிய உயர்குடியினர் தாம் அடைந்த புதிய செல்வம் மற்றும் அந்தஸ்து போன்றவற்றோடு மட்டும் திருப்தியடையாததுடன், வெளிப்படையாகவே அரசியல் அதிகாரத்தில் விருப்பம் கொண்டவரகளாக இருக்கின்றனர். வம்சாவளி மற்றும் அரசியல் ஆதரவு அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட வாக்காளர்களைக் கொண்ட பாரம்பரிய அரசியல்வாதிகளைப் போல் இராணுவ உயர்குடி மற்றும் தொழில் வாண்மையாளர்கள் ஆகிய இரு வகுப்பினரும் அவர்களுக்கான சொந்த வாக்காளர்களைக் கொண்டவர்கள் அல்ல. இவ்வாறான பின்புலத்தில் கோட்டபாய ராஜபக்ஷவினது அதிகாரத்துவ வடிவ ஜனநாயக கருத்து இவ் புதிய உயர்குடிகளுக்கு மிகப் பொருத்தமான ஒன்றாக பொருந்தியுள்ளது. ஏனெனில், அவர்களுக்கு போட்டிமிக்க நாடாளுமன்ற அரசியலை அடைவதற்கு ஒப்பீட்டளவில் இது இலகுவாக அமைகின்றது. மறுபுறம் இதனாலேயே பெரும்பான்மையான தொழில் வல்லுனர்கள், இராணுவம் மற்றும் அதிகாரவர்க்கத்தினர் அதிகாரத்துவ வடிவ ஜனநாயகமாக எமது சமூகத்தை நிலைமாற்றுவதற்கு ஜனாதிபதியுடன் அணி வகுத்து நிற்கின்றனர்.

## அதிகாரத்துவ ஜனநாயகத்திற்கான பிளவுபட்ட நிலைமைகள்

ஜனாதிபதி, அவரது அரசியல் சகபாடிகள் போலன்றி ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு முன்பிருந்தே அவர் தெரிவு செய்யப்பட்ட அரசாங்க வடிவம் தொடர்பில் மிகவும் வெளிப்படைத் தன்மை கொண்டவராகவே செயற்பட்டார். உண்மையில், இந் நிபந்தனைகளின் பெயரிலேயே அவரது தேர்தல் தளமானது ஒழுங்கமைக்கப்பட்டதுடன் வளைந்து கொடுக்கத் தேவையற்ற அல்லது அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் நியமங்களையும் விதிகளையும் கைவிடுவதற்கு தயங்காத ‘சக்தி வாய்ந்த தலைவர்’ என்ற தேவைப்பாட்டினை முன்னிறுத்தியே செயற்பட்டார். இந்த நிறைவேற்று ஜனாதிபதி பாரம்பரிய அரசியல் கட்சி ஒழுங்கமைப்புகளுக்கு வெளியிலான ஒரு வகையில், அதிகாரத்திற்கு வந்ததுடன், உண்மையில் இலங்கைக்கு அதிகாரத்துவ வடிவ ஆட்சியொன்று தேவை என்ற நம்பிக்கையுடையவராகவும், மக்களின் ஆட்சிமுறை தொடர்பான எதிர்பார்ப்புக்களை சிறந்த முறையில் பூர்த்தி செய்கின்றவராகவும் இருக்கின்றார். அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு வழங்குதல் தொடர்பில் இராணுவம் மற்றும் தொழில்சார் வாண்மையாளர்கள் சிறந்த திறன்களைக் கொண்டுள்ளனர் என்ற அவரின் நம்பிக்கையானது அவருக்கு முன்னர் வெளிப்படையில் ஜனநாயக அரசாங்கங்கள் என்று கூறிக்கொண்ட அரசாங்கங்களின் மோசமான பதிவுகளால் நிரூபிக்கப்பட்டது. மேலும், கடந்த காலத்தை போலன்றி, இன்றைய சுதந்திர உலகில் அதிகளவான நாடுகளின் தலைவர்கள் வலதுசாரி கருத்தியல்வாதங்கள் மீது ஆர்வமுடையவர்களாக இருப்பதினால், இலகுவான அதிகாரத்துவவாதத்தை நோக்கிய தள்ளுகை தொடர்பில் சர்வதேச சமூகத்திடமிருந்து பெரியளவில் விமர்சனம் எதுவும் வரப்போவதில்லை. தற்போதைய கொவிட்-19 தொற்று ஆட்சியிலுள்ள அரசாங்கத்திற்கு அதிகாரத்துவ வடிவ அரசாங்கத்தினை கொண்டு செல்வதனை இலகுவாக்கியுள்ளது. ஆகவே, அனைவரும் ஒன்றிணைந்து இதனை எதிர்க்காதுவிடின், ஜனநாயக அரசாங்க பண்பியல்புகள் மேலும் அழிவடைவதை நாம் எதிர்கொள்ள நேரிடும். 70 ஆண்டு கால ஜனநாயக ஆட்சி தொடர்பிலான விரக்தி என்பது நியாயமானது. எனினும், அது அதிகாரத்துவ வடிவ ஆட்சியை சகித்துக்கொள்வதற்கான நியாயமாகாது.

## அதிகாரத்துவவாதம் தொடர்பான கட்டுக் கதைகள்

ஜனநாயகம் தொடர்பில் அநேகமான கட்டுக்கதைகள் புனையப்பட்டுள்ளது போலவே, அதிகாரத்துவவாதத்தை பிரச்சாரம் செய்யவும் நியாயப்படுத்தவும் அநேகமான கட்டுக் கதைகள் உள்ளன. தேசியவாதத்தினைப் போன்று அதிகாரத்துவவாதமும் அச்சத்தை அடிப்படையாகக் கொண்டே வளர்கிறது. அதிகாரத்துவ ஆட்சி பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்றது என்பதாக மக்களை நம்பச் செய்கின்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன், சிங்கள தேசியவாத அரசியல்வாதிகளின் ஜனநாயக அரசாங்கம் மீதான வசைப்பாடல் ஆரம்பமானதுடன், உறுதியான இராணுவ ஆட்சிக்கான ஆதரவும் ஆரம்பமானது. உண்மையில், நிகழ்கால உலக அரசியலில், அதிகாரத்துவ அரசுகளுக்கும் தீவிரவாத தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்கான திறன் இல்லை என்பதற்கு போதுமானளவு ஆதாரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், ஜனநாயகங்கள் உள்ளக சவால்களைப் போலவே வெளிப்புற சவால்களையும் சிறந்த முறையில் வெற்றி கொண்டதற்கான அநேகமான ஆதாரங்கள் காணப்படுகின்றன. சில நூற்றாண்டுகளுக்கு முன்பு போலன்றி, இன்று வெளிப்புற சவால்களை விடவும் தமது சொந்த சமூக சவால்களுக்கே உலக அரசுகளில் பெரும்பான்மையானவை முகம் கொடுக்கின்றன. ஆட்சி செயன்முறையில் குறிப்பிட்ட ஒரு குழுவிற்கு பாகுபாடு காட்டல் அல்லது விலக்குதல் என்பது எப்பொழுதும் அரசுகளை பலவீனமாக்குவதுடன், உள்ளக கிளர்ச்சியினை உண்டு பண்ணும்.





தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் www.nytimes.com

அரசியல் அதிகாரம் ஒரு சிலரின் கைகளில் மாத்திரம் குவிக்கப்படுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல், ஒருமித்த கருத்தை உருவாக்குதல் போன்றவை தடைப்படும் பிரஜைகளுக்கு பொறுப்புகூறாத தொழில் வாண்மையாளர் குழுவினால் ஆட்சி நடாத்தப்படல் போன்றவை நிச்சயமாக பொதுமக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்துவதுடன் அரசியல் ஸ்திரமற்ற நிலைமையையும் உருவாக்கும். ஆகவே, ஆட்சி வடிவமைப்பில் விவாதிக்கக்கூடிய வகையில் அதிகாரத்துவ வடிவ ஆட்சி ஜனநாயக ஆட்சியினை விடவும் ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்த வாய்புள்ள ஒன்றாக காணப்படுகின்றது.

சீனாவின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் சிங்கப்பூரின் ஈர்க்கக்கூடிய அபிவிருத்தி போன்றன அதிகாரத்துவ வடிவ ஆட்சிக்கு பிரபல்யமான சார்புநிலையை வழங்கக்கூடிய விடயங்களாகும். 1980களில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவும் பொது மக்கள் ஆதரவினை பெற்றுக் கொள்வதற்கு இலங்கையை சிங்கபூராக மாற்றும் கனவை நிறைவேற்றுவதாக வாக்குறுதியளித்ததுடன், ஆட்சியை அதிகாரத்துவ வடிவ ஆட்சியாக மாற்றியமைத்தார். இன்று தற்போதைய ஆட்சியாளர்கள் அதிகாரத்துவ இலட்சியத்தினை நியாயப்படுத்துவதற்கு அதே மந்திரத்தை ஓதுவதை நாம் கேட்கின்றோம். அபிவிருத்தித் திட்டங்களை இலகுவாகவும், ஒழுங்கானதாகவும் செயற்படுத்துவதற்கு அதிகாரத்துவ ஆட்சி சில சந்தர்ப்பங்களில் உதவும் என்பது உண்மையாகும். அவ்வாறான ஆட்சியில் கொள்கை உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல் போன்றவற்றிற்கு பெரும்பான்மை விருப்பு அல்லது பல குழுக்களின் ஆலோசனை என்பது தேவையற்ற ஒன்றாகும். எவ்வாறாயினும், பொறுப்புக்கூறலுக்கு கட்டுப்படாத அபிவிருத்தித் திட்டங்கள் பாரிய ஊழல் மற்றும் தகுதியடிப்படை இன்றி தாம் தீர்மானிப்பவருக்கு சலுகைக்கே வழங்கும் நிலைமைக்கு இட்டுச் செல்லும். தாராண்மைவாத ஜனநாயகத்தில் குறைந்தபட்சம் ஊடகம் மற்றும் ஏனைய ஆர்வக் குழுக்கள் ஆட்சியாளர்களின் ஊழலை வெளிப்படுத்துவதுடன், தவறான செயல்களுக்கு எதிராக மக்கள் போராட்டம் செய்யவும் முடியும். அதிகாரத்துவவாதத்தின் கீழ் பாரியளவான ஊழல் மூலம் சிறிய குழுக்கள் நன்மையடைவதுடன் முறையற்ற அரசாங்கத்திற்கு எதிராக சமாதான வழிமுறைகளை கையாளவும் முடியாது போகும். ஆக, அதிகாரத்துவ ஆட்சி அபிவிருத்தியினை உறுதிப்படுத்தும் என்பது நிச்சயமற்றதாகும்.

சிவில் விவகாரங்களை கவனிப்பதற்கு இராணுவ உத்தியோகஸ்தர்களை நியமிப்பதினால் ஒழுக்கம் மற்றும் சமூக ஒழுங்கு முறையினை பேணலாம் என்று கூறப்படுவது மற்றுமொரு கட்டுக் கதையாகும். அண்மையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியில் அதிகமான இராணுவ உத்தியோகஸ்தர்கள் உள்ளடங்கியிருக்கின்றனர். அவர்கள் நடைமுறைப்படுத்த முயலும் ஒழுக்கம், ஒழுங்கு மற்றும் நல்லொழுக்கம் என்பன ஆழமான விமர்சனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்த வேண்டியுள்ளது.
ஒரு எடுத்துக்காட்டாக ஆறுமுகம் தொண்டமானின் இறுதிச் சடங்கை எடுத்துக் கொண்டால், இது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் ஒரு சீர்தன்மை, ஒழுக்கம் மற்றும் ஒழுங்கு என்பதாக அடையாளப்படுத்தப்படும் விடயத்திற்கு மாறாக இருக்கும் விதிவிலக்குகளில் தெளிவாக வெளியில் தெரியும் ஒன்று.

இலங்கையின் ஜனநாயக பின்னடைவுகளுக்கு பரிகாரமாக அதிகாரத்துவ வடிவ ஆட்சியை விரும்புவதானது சமூக பகுத்தறிவு தொடர்பான முதிர்ச்சியின்மை மற்றும் புராதன பழங்குடியினராகும் நாட்டம் மட்டுமே ஆகும். ஜனநாயகம் என்பது பரிபூரணமானது அல்ல என்பதை நாம் அனைவரும் அறிவோம். உண்மையில், ஜனநாயகம் நாட்டினை யுத்தங்களுக்கு இட்டுச் சென்றது, வினைத்திறனற்ற மற்றும் ஊழல் மிகுந்த தலைவர்களை உருவாக்குகின்றது, மற்றும் கோமாளிகள் ஆட்சி செய்ய வழிவகுத்தது. எனினும், ஆளப்படுபவர்கள் ஆட்சியாளர்களை அமைதியான முறையில் பதவியில் இருந்து நீக்குவதற்கு இயலுமான ஒரே முறைமை ஜனநாயகமே ஆகும். ஆகவே, நடமாட முடியாத நாட்டின் ஜனநாயகத்திற்கான பரிகாரம் அதனை அதிகாரத்துவ வடிவ ஆட்சியாக மாற்றுவது அல்ல, மாறாக பிரஜை மற்றும் அரசுக்கு இடையிலான ஒப்பந்தத்தினை மீள்சமரசம் செய்து, பிரஜைகளின் தீவிர பங்குபற்றலை ஊக்குவிப்பதே ஆகும்.



மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்ரமசிங்ஹ

## உயர்நிலை–நடுத்தர வருமான நிலையில் இருந்து கீழ்நிலை–நடுத்தர வருமான நிலைக்குத் தள்ளி

# நல்லாட்சி அரசு நாட்டை வறுமை நிலைக்குத் இட்டுச் சென்றுள்ளது

பேராசிரியர்
**மில்டன் ராஜரத்ன**

இக் கட்டுரை மூலம் 2015 - 2019 வரையான ஐந்தாண்டு கால முடிவில் இலங்கையின் பொருளாதாரம் உயர்நிலை-நடுத்தர வருமான மட்டத்தில் இருந்து கீழ்நிலை-நடுத்தர வருமான மட்டம் வரை வறுமை நிலைக்கு மாற்றமடைந்த விதம் பற்றி ஆராய்கிறது. அதற்காக உலக வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள தரவுகள் பயன்படுத்தப்படுவதுடன் குறிப்பாக இந்த ஆய்வு ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தி தொடர்பான தரவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பொருளாதார வளர்ச்சியின் வேகம் சனத்தொகை வளச்சி வேகத்தை விட அதிகரிக்கின்றபோது தனி நபர் வருமானத்தில் ஓர் அதிகரிப்பு காட்டப்படுவதன் காரணமாக ஒரு நாடு எவ்வாறு வறுமை நிலைக்கு ஆளாக்கப்படுகிறது என ஒருவருக்கு வாதாட முடியுமாக இருந்த போதும் சர்வதேச அளவுகோள்களின் அடிப்படையில் இலங்கை எவ்வாறு வறுமை நிலையினை அடைந்துள்ளது

என்பது பற்றி ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

துனி நபர் வருமானத்தினை அடிப்படையாகக் கொண்டு உலக வங்கியினால் ஒவ்வொரு ஆண்டும் உலக நாடுகளின் வருமானம் நான்கு மட்டங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. இது 2020 யூலை முதலாம் திகதி முதல் ஏற்புடையதாகும் வகையில் 1,036 அமெரிக்க டொலர்களுக்கு குறைவான தனி நபர் வருமானத்தைப் பெறும் நாடுகள் கீழ்நிலை வருமான வகுதியிலும், 1,036-4,045 வரை தனி நபர் வருமானம் பெறும் நாடுகள் கீழ்நிலை-நடுத்தர வகுதியிலும், 4,046-12,535 வரை தனி நபர் வருமானம் பெறும் நாடுகள் உயர்நிலை-நடுத்தர வகுதியிலும் 12,535 இற்கும் கூடுதலான தனிநபர் வருமானம் பெறும் நாடுகள் உயர்நிலை வருமான வகுதியிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் சூடான், அல்ஜீரியா மற்றும் இலங்கை ஆகிய மூன்று நாடுகள் முன்னைய ஆண்டை விடவும் வறுமை நிலையினை அடைந்துள்ள நாடுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை 2018 ல் 4,079 அமெரிக்க டொலர் தனி நபர் வருமானத்தில் இருந்து 2019 ல் 3,852 டொலர் தனி நபர் வருமானம் வரை 227 டொலர்களால் வறுமை நிலையினை அடைந்துள்ளது. அதன் விளைவாக இலங்கை உயர்நிலை-நடுத்தர வருமான மட்டத்தில் இருந்து கீழ்நிலை-நடுத்தர வருமான மட்டத்திற்கு கீழ் நோக்கி வீழ்த்தப்பட்டுள்ளது. தெற்காசிய நாடுகளுள் உயர்நிலை-நடுத்தர வருமான வகுதிக்குள் மாலைத்தீவு மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டு இலங்கை உயர்நிலை-நடுத்தர வருமான வகுதிக்குள் உள்ளடக்கப்பட்டிருந்த




போதும் பொருளாதார வளர்ச்சி வேகம் இடையறாது வீழ்ச்சியடைந்ததன் காரணமாக 2018 ல் 4,079 டொலர்களாகக் காணப்பட்ட தனி நபர் வருமானம் 2019 ஆம் ஆண்டளவில் 3,852 டொலர்களாக வீழ்ச்சியடைந்தது. ஆகவே உயர்நிலை-நடுத்தர வருமான வகுதியில் இருந்து கீழ் நோக்கி வீழ்ச்சி கண்டது. மாலைத்தீவு தவிர்ந்த தெற்காசியாவின் ஏனைய நாடுகள் போன்று தற்போது இலங்கையும் ஒரு வறிய நாடாக உலக அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது.

நவ தாராண்மை (புதிய லிபரல்) முதலாளித்துவ மார்க்கத்தில் பொருளாதாரத்தை வழிநடாத்திய ஐக்கிய தேசியக் கட்சி - ஆட்சி நடாத்திய காலங்களில் பொருளாதார வளர்ச்சி வேகம் உயர்வானதொரு பெறுமதியினைக் கொண்டிருந்த காரணத்தால், அது பொருளாதார வளர்ச்சியின் வித்தகராக பிரசித்தம் அடைந்தது. ஆகவே துரித பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக 2015 ல் அவர்கள் ஆட்சி பீடம் அமர்த்தப்படார்கள். அதன் பிரகாரம் 2014 ல் காணப்பட்ட 5% சதவீத பொருளாதார வளர்ச்சி வேகத்திற்குப் பதிலாக 2015 ஆம் ஆண்டு முதல் 7% – 8% சதவீத பொருளாதார வளர்ச்சியினை அடைந்துகொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும், அதற்கு வித்தியாசமாகவே விடயங்கள் நடைபெற்றன. அந்த அரசாங்கத்தால் 2015 ஆம் ஆண்டு 5மூ சதவீத பொருளாதார வளர்ச்சி வேகத்தை பாதுகாத்துக் கொள்ள முடிந்த போதும் அதன் பின்னர் இலக்கம் 1 வரைபில் காட்டப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு ஆண்டும் வளர்ச்சி வேகம் சடுதியாக வீழ்ச்சி கண்டது.


2015-2019 வரையான ஐந்தாண்டு கால எல்லைக்குள் பிரதமரது தலைமையில் பொருளாதார அபிவிருத்திக் குழுவொன்று தாபிக்கப்பட்டதுடன் அதன் மூலம் ஏழு முதல் எட்டு வகையான கொள்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக சனாதிபதியின் தலைமையில் தேசிய பொருளாதாரப் பேரவை (National Economic Council) தாபிக்கப்பட்டது. அவ்வாறான எந்தவொரு நிறுவனத்திற்கும் அல்லது கொள்கைக்கும் நேர்கணிய பதில் தெரிவிக்கப்படாமலேயே பொருளாதாரம் பின் நோக்கி தள்ளப்பட்டது. இந்த வளர்ச்சி வேகத்தின் வீழ்ச்சி 5மூ சதவீதத்தில் இருந்து 2.3மூ சதவீதம்




வரையாகக் காணப்பட்டதில் இருந்து இது எவ்வாறான ஒரு வீழ்ச்சி என்பதனை மதிப்பிட்டுக் கொள்ள முடியும். இது 18 ஆண்டுகளுக்கு முன்னர் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பினர் கட்டுநாயக்க விமான நிலையம் மீது பாரிய தாக்குதலை மேற்கொண்டு பொருளாதாரத்திற்கு படு மோசமான சேதம் விளைவிக்கப்பட்ட பின்னர் பதிவாகிய ஆகக் குறைவான வளர்ச்சி வேகம் ஆகும். உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டு சுற்றுலாக் கைத்தொழில் மீது ஏற்படுத்தப்பட்ட பாதக விளைவு தவிர 2015-2019 காலப் பகுதிக்குள் எமது நாட்டில் யுத்தம், புரட்சிகள் மற்றும் வன்செயல்கள், வரட்சி அனர்த்தங்கள், ஆட்கொள்ளி நோய்கள் போன்ற இடர்கள் நிகழவில்லை. மறுபுறம் பொருளாதாரத்தை வழிநடாத்துவதற்காக இரண்டு நிறுவனங்கள் அரசாங்கத்தால் நிறுவப்பட்டன. இவ்வாறு நிறுவப்பட்ட இரண்டு நிறுவனங்களும் ‘கதை அளப்பதற்கு’ மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது என்பதே அக் கால கட்டத்தில் இடம்பெற்ற பொருளாதார வீழ்ச்சியில் இருந்து புலப்படுகிறது.

பொருளாதார வளர்ச்சி வேகம் சடுதியாக குறைவடைந்ததைத் தொடர்ந்து அது மொத்த தேசிய உற்பத்தியின் வீழ்ச்சியின் மீது செல்வாக்குச் செலுத்தியது. ஒளிவிலகல் விலைகளின் அடிப்படையில் ரூபாவில் மதிப்பீடு செய்வதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியில் ஒரு வளர்ச்சியை அவதானிக்க முடியும் என்பது உண்மை என்ற போதும் அதன் மூலம் மனதைத் திருப்திப்படுத்திக்




கொள்ள முடியுமே தவிர சர்வதேச ரீதியிலான பொருளியல் விளக்கத்திற்கு போதுமான அடிப்படை அதன் மூலம் கிடைக்கப் பெறுவதில்லை. ஆகவே டொலர்களின் பெறுமதிக்கு ஏற்ப இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தி 88.4 பில்லியனில் இருந்து 84.0 பில்லியன் வரை வீழ்ச்சி கண்டுள்ளமை இலக்கம் 2 வரைபின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் செலாவணி முகாமைத்துவத்தில் உள்ள குறைபாட்டின் காரணமாக ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி அடைந்தமையே விசேடமாக இதன் மீது தாக்கம் செலுத்தி உள்ளது.


உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சிக்கு சமாந்நதரமாக தனி நபர் வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி இலக்கம் 3 வரைபில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இது 2016 ஆம் ஆண்டின் தனி நபர் வருமானத்தை விட 2019 ஆம் ஆண்டின் இறுதிக் காலப் பகுதியில் வருமான மட்டத்தில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சி ஆகும். 2018 ஆம் ஆண்டின் புள்ளிவிபரங்களுடன் ஒப்பிடுகையில் இது தனி நபர் வருமானத்தில் 227 டொலர்கள் வீழ்ச்சி ஆகும். தனி நபர் வருமானத்தில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சியே உலக வங்கி உயர்நிலை-நடுத்தர வருமான வகுதியில் இருந்து கீழ்நிலை-நடுத்தர வருமான வகுதிக்கு இலங்கையை வீழ்ச்சியடையச் செய்தமைக்கான காரணமாய் அமைந்தது.

சில அறைகுறை அறிஞர்கள் மனத் திருப்திக்காக ரூபாய் வருமானம் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டுவதற்கு முயற்சிக்கின்றார்கள். சனத்தொகை வளர்ச்சி வேகத்தை விட பொருளாதார வளர்ச்சி வேகம் அதிகரித்துக் காணப்படின் உள்நாட்டு பண அலகினால் மதிப்பீடு செய்யப்பட்ட தனி நபர் வருமானம் அதிகரித்துக் காணப்படல் உண்மையான ஒரு நிலை ஆகும். ஆயினும் அது உலகப் பொருளாதாரத்துடன் இலங்கையை ஒப்பீடு செய்வதற்கு துணை புரியாது.

வரைபு இலக்கம் 4 மூலம் 2015-2019 காலப் பகுதியின் உண்மையான மொத்த தேசிய உற்பத்தியுடன் 5மூ சதவீத நிலையான வளர்ச்சி வேகத்தின் அடிப்படையில் பெற்றுக் கொள்ள முடியுமாகக் காணப்பட்ட உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடு ஒப்பீடு செய்யப்படுகிறது. அண்மைய ஆண்டுகளில் பெற்றுக் கொள்ளக் கூடிய 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் 5மூ சதவீத பொருளாதார வளர்ச்சி வேகம் காணப்படல் மற்றும் கடந்த ஏழு தசாப்த காலத்திற்குள் (புத்து தசாப்த யுத்தம், ஜேவீபி



ரனில் விக்ரமசிங்ஹ ரவி கருணாநாயக்க மங்கள சமரவீர




**இக் கட்டுரையாளரால் 2016 முதல் ஒவ்வொரு ஆண்டும் இடம்பெற்ற அரசாங்கத்தின் வெற்றியளிக்காத பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான விவரிப்பு மற்றும் பலத்த விமர்சனம் முன் வைக்கப்பட்டது. பொருளாதாரம் பாதாளத்திற்குள் விழுந்து கொண்டிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

புரட்சி மற்றும் ஏனைய இடர்களுக்கு முகம் கொடுத்த நிலையில்) சுமார் 5% சதவீத சராசரி பொருளாதார வளர்ச்சியினை பேணிச் செல்வதற்கு இலங்கை திறமை பெற்றதன் காரணமாகவே இங்கு எடுகோள் கொள்ளப்படும் வளர்ச்சி வேகம் 5மூ சதவீதம் எனக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் 2015 ல் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டமிடல்கள், கொள்கைகள், வெளிநாட்டு உறவுகள், வெளிநாட்டு முதலீடுகள், வணிக முயற்சியாளர்களின் நம்பிக்கை, சர்வதேச ஒத்துழைப்பு ஆகியன புதிய அரசாங்கத்திடம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டதன் காரணமாக ஆகக் குறைந்தது 2014 ல் காணப்பட்ட 5% சதவீத பொருளாதார வளர்ச்சி வேகத்தைக் கூட பேணிச் செல்வதற்கு திறமை பெறாமல் இருக்கக் கூடாது எனும் எடுகோள் கொள்ளப்படுகிறது. 2015 ல் 5% சதவீத பொருளாதார வளர்ச்சி வேகத்தை பேணிச் செல்ல முடியுமான போதும் அதற்குப் பின்னரான அதனுடைய துரித வீழ்ச்சியின் பயனாக (செலாவணி விகிதம் வீழ்ச்சியடைதல் உள்ளடங்களாக) உண்மையான மொத்த தேசிய உற்பத்தி 84 பில்லியன் டொலர்கள் வரை வீழ்ச்சியடைய வழிவகுக்கப்பட்டது. அதன் பிரகாரம் இழக்கப்பட்ட உண்மையான உள்நாட்டு வருமானம் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 4.4 பில்லியன் டொலர்கள் ஆகும். மறுபுறத்தில் 5% ஆகக் குறைந்த பொருளாதார வளர்ச்சி வேகத்தினை தக்க வைத்துக் கொள்வதற்கு முடிந்திருப்பின் 2019 ஆம் ஆண்டளவில் மொத்த தேசிய உற்பத்தியினை 98 பில்லியன் டொலர்கள் வரை அதிகரிக்கச் செய்யக் கூடியதாய் இருந்திருக்கும். ஆயினும் அரசாங்கத்தின் இயலாமையின் காரணமாக 2016 ல் 2.2 பில்லியன் டொலர்களாக ஆரம்பிக்கப்பட்ட இந்த வருமான சேதம் 2019 ல் 14 பில்லியன் டொலர்கள் சேதம் வரை அதிகரித்திருப்பதாக மதிப்பீடு செய்ய முடியும்.

இலக்கம் 5 வரைபு மூலம் 5% பொருளாதார வளர்ச்சி வேகத்தினை பேணிச் செல்வதற்கு திறமை பெறாததன் காரணமாக இழக்கப்பட்ட உள்நாட்டு வருமானம் காட்டப்பட்டுள்ளது. 2015 இற்குப் பின்னர் மதிப்பீடு செய்யப்பட்ட உள்நாட்டு வருமானம் 2016 ல் இருந்து 2019 வரையான கால எல்லைக்குள் இடையராது துரித கதியில் வீழ்ச்சியடைந்ததுடன் இதன் மூலமான வருமான இழப்பு மொத்தம் 22.6 பில்லியன் டொலர்களுக்குச் சமமானது ஆகும். இது தனி நபர் வருமானம் மீது ஏற்படுத்தப்பட்ட ஒரு தாக்கமாக மதிப்பீடு செய்யப்படின் 5,000 டொலர் தனி நபர் வருமான மட்டத்தை தாண்டிச் செல்ல இருந்த வாய்ப்பினை இழக்கச் செய்த ஒன்றாக குறிப்பிட முடியும். தனி நபர் வருமானம் மானுட அபிவிருத்திக் குறிகாட்டியின் ஒரு நிகழ்வு என்பதன் காரணமாக 2020 ல் இலங்கை மானுட அபிவிருத்தி குன்றிய ஒரு நாடாக மாற்றமடையும். கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் 5% வளர்ச்சி வேகத்தினைப் பேணிச் செல்ல முடியாது போனதன் காரணமாக இழக்கப்பட்ட 22.6 பில்லியன் டொலர்கள் தற்போதைய உள்நாட்டு உற்பத்தியின் 27% இற்குச் சமமாகும். இது கொஞ்ச நஞ்சமான ஓர் இழப்பு அல்ல. அதனை ஈடு செய்வதற்கு ஆகக் குறைந்தது 8மூ பொருளாதார வளர்ச்சியினையேனும் எதிர்வரும் ஐந்தாண்டு காலத்திற்குள் பேணிச் செல்லுதல் வேண்டும். அது ஒரு கடினமான இலக்கு ஆகும். ஆகவே கடந்த ஐந்தாண்டு காலத்திற்குள் இழக்கப்பட்ட வருமானத்தை மீளமைத்துக் கொள்ள முடியுமான ஒரு மார்க்கம் காணப்படாதிருக்கும் அளவிற்கு அது பாரதூரமானது ஆகும்.

2015-2019 காலப் பகுதியில் உற்பத்திக காரணிகள் சுருங்குதல் அல்லது காரணிகளை முழுமையாக உற்பத்திச் செயன்முறையில் ஈடுபடுத்தும் ஒரு நிலைமை அல்லது ஏனைய வெளிவாரியான அழுத்தம் பிரயோகிக்கும் தலையீடு காணப்படவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக ஏற்பட்ட பின்னடைவு மாத்திரம் இங்கு கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். தெற்காசியாவில் ஆப்கானிஸ்தான் தவிர்ந்த அனைத்து நாடுகளிலும் ஒரு துரித பொருளாதார வளர்ச்சி காணப்பட்டமை காரணமாகவும் மொத்தத்தில் உலகப் பொருளாதாரத்தில் வளர்ச்சி காணப்பட்டமை காரணமாகவும் நல்லாட்சியின் இயலாமையின் விளைவாகவே இலங்கையின் பொருளாதாரம் வறுமை நிலையினை அடைந்தது என்ற முடிவுக்கு வரக் கூடியதாக உள்ளது. இக் கட்டுரையாளரால் 2016 முதல் ஒவ்வொரு ஆண்டும் இடம்பெற்ற அரசாங்கத்தின் வெற்றியளிக்காத பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான விவரிப்பு மற்றும் பலத்த விமர்சனம் முன் வைக்கப்பட்டது. பொருளாதாரம் பாதாளத்திற்குள் விழுந்து கொண்டிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது. அதனை உண்மைப்படுத்தி நல்லாட்சி அரசாங்கம் பொருளாதாரத்தை “ரிவஸ் கியரில்” (reverse gear) இட்டு தப்பி ஓடி உள்ளது. தற்போதைய அரசாங்கத்திடம் பொருளாதாரத்தை “போவட் கியரில்” (forward gear) இடுவதற்கும் அதன் பின்னர் “ஹை கியரில்” (high gear) இட்டு ஓட்டிச் செல்வதற்குமான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆயினும் சுமார் ஓராண்டு காலம் கடந்துள்ள போதும் சாரதி ஆசனங்களில் பொருத்தமான சாரதிகள் அமர்த்தப்பட்டுள்ளார்களா என்பது பற்றி அரசாங்கத்திடம் வினவ வேண்டி உள்ளது.

(பிரித்தெடுப்பு : ராவய பத்திரிகை)

### பாரிய தொற்று நோய் மத்தியில் இடம்பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல்:

# இலங்கையில் நீதி மற்றும் நல்லிணக்கத்துக்கான தாக்கங்கள்



www.dailynews.lk / www.dailymirror.lk/



சட்டத்தரணி
**பவானி ஃபொன்சேகா**

இலங்கை அடுத்த பாராளுமன்றத்துக்கான அங்கத்தினர்களைத் தெரிவுசெய்வதற்காக ஆகஸ்ட் 05 ஆந் திகதி பாராளுமன்றத் தேர்தல்களை நடாத்தவுள்ளது. உறுப்புரை 70(1) இல் விதிக்கப்பட்டவாறு 8 ஆவது பாராளுமன்றம் 4-5 வருடங்களைப் பூர்த்திசெய்த நிலையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவினால் மார்ச் 02 ஆந் திகதி கலைக்கப்பட்டதால், இத்தேர்தலுக்கான அவசியம் ஏற்பட்டது. பாராளுமன்றத்தைக் கலைக்கும் பிரகடனத்தில் வேட்புமனுத் தாக்கல் மற்றும் அதன்பின்னர் 2020 ஏப்பிரல் 25 இல் தேர்தல் இடம்பெறுதல் சம்பந்தமான கால அட்டவணை இடம்பெற்றிருந்தன. இவை கொவிட் 19 தொற்று நிகழ்வுகள் அதிகரித்துக்கொண்டிருந்த நேரத்திலும், உலக சுகாதார அமைப்பு மே 11 ஆந் திகதி கொவிட் 19 ஒரு பெரும் தொற்றுப் பரவல் நோயென்று பிரகடனம் செய்தது. பெரும் தொற்று நோயினால் ஏற்பட்ட அதிகரித்த கரிசனைக்கவலைகள் காரணமாக, வேட்புமனுத் தாக்கல்கள் முடிந்தவுடன் தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதாக அறிவித்தது. இக்காலத்தில், தேர்தல்

கண்காணிப்பாளர்களும், சிவில் சமூகமும் ஒரு பெரும் தொற்று நோய்க்காலத்தில் தேர்தல்களை நடத்துவது குறித்துக் கவலை வெளியிட்டதோடு, உறுப்புரை 70(7) ஏற்பாடுகளுக்கமைவாக 8 ஆவது பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறும் வலியுறுத்தினர். பிரசாரவேலைகள் மற்றும் ஏனைய தேர்தல் செயற்பாடுகள் பெரும் தொற்று நோயின் தாக்கத்தை மேலும் மோசமாக்கும் என்னும் பீதியின் அடிப்படையிலேயே இவை இடம்பெற்றன. இது மக்கள் நடமாட்டத்தையும், ஒன்றுகூடல்களையும் குறைக்கும்வகையில் நாடளாவிய வகையில் மேற்கொள்ளப்பட்ட முடக்க நடவடிக்கைகளின் சூழமைவிலும் இடம்பெற்றது.




**இக்காலப்பகுதியில் கலைத்த பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டமுடியுமா ? என்பது குறித்தும், ஒரு புதிய பாராளுமன்றம்தான் ஒரேயொரு தெரிவா ? என்பது குறித்தும் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றன. தேர்தல்கள் அவசியம் என்றும், தேர்தல் இடம்பெறும்வரையில் நிறைவேற்றுத்துறை ஆட்சி நடத்தலாமென்றும் அரசாங்கம் வலியுறுத்தியது. எதிர்க்கட்சியும், சிவில் சமூகத்தைச்சேர்ந்த பலரும் பெரும் தொற்று நோயையும் ஏனைய அவசரமான விடயங்களையும் கையாளுவதற்கும், சட்டவாக்கச் சபையின் மேற்பார்வையை உறுதிசெய்வதற்கும், எதேச்சாதிகாரத்தை நோக்கி விடயங்கள் செல்வதைத் தடுப்பதற்கும் பாராளுமன்றம் மீண்டும் கூட்டப்படவேண்டுமென்று வலியுறுத்தினர். 1977 இன் அரசியலமைப்பு இத்தகைய சூழ்நிலையில் எழக்கூடிய எதிர்பாராத அவசரநிலைகள் குறித்துச் சிந்தித்து, எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்த அதிகாரங்களை வழங்கியது. உறுப்புரை 70(7) பாராளுமன்றம் அவசியப்படும் இத்தகைய ஒரு சூழ்நிலைக்கு உரியதாகும். இது அரசாங்கத்தின் மூன்று அங்கங்களான நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை மற்றும் நீதித்துறை என்பவை ஓர் அரசியலமைப்பு ஜனநாயகத்துக்கு அவசியம் என்பதன் அடிப்படையிலும் அமைந்த ஒன்றாகும். இந்த அடிப்படை அம்சமே அரசியலமைப்பின் உறுப்புரை 70(5) இல் காணப்படுவதுபோன்று, பாராளுமன்றம் இல்லாதிருக்கும் அதிகூடுதலான காலப்பகுதி மூன்று மாதங்கள் மாத்திரமே என்னும் ஏற்பாட்டையும் வழங்குகின்றது.**

இந்த விடயத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷ வைத் தலையிடவைப்பதில் தோல்விகண்ட தேர்தல்கள் ஆணைக்குழு ஜூன் 20 ஆந் திகதி புதிய தேர்தல் இடம்பெறுமென்று அறிவித்தது. மூன்றுமாத விதியின் பிரகாரம் புதிய பாராளுமன்றம் ஜூன் 2 ஆந் திகதிக்குப் பிந்தாமல் கூடவேண்டும். ஆகவே, தேர்தல் இடம்பெறும் புதிய திகதி மூன்றுமாத விதிக்குக் கூடுதலான ஒன்றாகவும், அரசியலமைப்பை மீறுவதாகவும் அமைந்தது. இது மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு பாராளுமன்றத்தின் மேற்பார்வையின்மை மற்றும் நிறைவேற்று அதிகாரத்தின்மீதான செவ்வை பார்த்தலின்மை என்பவற்றோடு இலங்கையின் அரசியலமைப்பு ஜனநாயகம் குறித்த தீவிர தாற்பரியங்களை எழுப்புவதாகவும் அமைந்தது. பல சிவில் அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் மூன்றுமாத விதி அடிப்படையில் ஜூன் 20 இல் தேர்தல் நடத்துவது குறித்து நீதிமன்றத்தில் சவால் விடுத்தன. வழக்கை விசாரிப்பதற்கான அனுமதிகுறித்த ஆரம்ப கட்டத்துக்கு நீண்டகாலம் எடுத்துக்கொண்ட பின்னர் உயர்நீதிமன்றத்தின் ஐந்து நீதியரசர்கள் வழக்கை விசாரிக்க அனுமதி மறுத்ததால், சட்டம் சம்பந்தமான சவால் முடிவுக்கு வந்தது. உயர்நீதிமன்றக் கட்டளைக்குப்பின்னர், தேர்தல்கள் ஆணைக்குழு ஆகஸ்ட் 5 ஆந் திகதி தேர்தல் இடம்பெறுமென்று அறிவித்தது.

தற்போதைய நிலைமைகளின்படி, இலங்கையில் தேர்தல்கள் கொவிட் 19 தொற்று நிகழ்வுகள் அதிகரிப்பின் மத்தியிலும், மட்டுப்பாடுகள் மீண்டும்

"

**பெரும் தொற்று நோயினால் ஏற்பட்ட அதிகரித்த கரிசனைக்கவலைகள் காரணமாக, வேட்புமனுத் தாக்கல்கள் முடிந்தவுடன் தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதாக அறிவித்தது. இக்காலத்தில், தேர்தல் கண்காணிப்பாளர்களும், சிவில் சமூகமும் ஒரு பெரும் தொற்று நோய்க்காலத்தில் தேர்தல்களை நடத்துவது குறித்துக் கவலை வெளியிட்டதோடு, உறுப்புரை 70(7) ஏற்பாடுகளுக்கமைவாக 8 ஆவது பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறும் வலியுறுத்தினர். பிரசாரவேலைகள் மற்றும் ஏனைய தேர்தல் செயற்பாடுகள் பெரும் தொற்று நோயின் தாக்கத்தை மேலும் மோசமாக்கும் என்னும் பீதியின் அடிப்படையிலேயே இவை இடம்பெற்றன. இது மக்கள் நடமாட்டத்தையும், ஒன்றுகூடல்களையும் குறைக்கும்வகையில் நாடளாவிய வகையில் மேற்கொள்ளப்பட்ட முடக்க நடவடிக்கைகளின் சூழமைவிலும் இடம்பெற்றது.**



கொண்டுவரக்கூடிய இரண்டாவது அலைகுறித்த அச்சத்தின் மத்தியிலும் இடம்பெறவுள்ளது.

தேர்தல், ஜனாதிபதி ராஜபக்ஷ வின் பொதுஜன பெரமுனவுக்கு SLPP அடுத்த பாராளுமன்றத்தில் கணிசமான ஊக்குவிப்பையும், அவரின் அதிகாரத்தை மேலும் திரட்டி வலுப்படுத்தப்படுவதற்கான வாய்ப்பையும் வழங்கக்கூடும். SLPP ஆதிக்கம் செலுத்தும் ஒரு பாராளுமன்றத்தில் நிறைவேற்றுத்துறையைப் பலப்படுத்தி, செவ்வைபார்த்தல்கள் சமநிலைப்படுத்தல்களை அகற்றி, சுயாதீன நிறுவனங்களை மேலும் பலவீனப்படுத்தும் ஒரு வீச்சான அரசியலமைப்பு மற்றும் சட்டவாக்கச் சீர்திருத்தங்கள் இடம்பெறக்கூடும். அதிகரிக்கும் எதேச்சாதிகாரம், இராணுவமயமாக்கல் மற்றும் இனத்துவ தேசியவாதம் போன்ற சமீபத்திய செல்நெறிகளைவைத்து நோக்கும்போது இது, இலங்கையின் அரசியலமைப்பு ஜனநாயகத்துக்கும், மிகவும் பலவீனமான சமாதானத்துக்கும் கவலையான விடயம் என்பதே இதன் கருத்தாகும். இக்கட்டுரை இத்தகைய ஒரு சூழமைவில் சில முக்கியமான கரிசனை விடயங்கள் குறித்துச் சுருக்கமாகப் பரிசீலனைசெய்கின்றது.

### பெரும் தொற்றுநோய் மற்றும் அதுசம்பந்தமான கரிசனை விடயங்கள் காலப்பகுதியில் ஆட்சிச் செயல்முறை

பெரும் தொற்றுநோய் ஆட்சிகுறித்த பல சவால்களை எழுப்பியுள்ளது. இலங்கை கொவிட் 19 உடன் வெற்றிகரமாகப் போராடி சமாளிக்கமுடியுமா ? என்பதே ஆரம்பக் கரிசனைவிடயமாக இருந்தது. இலங்கையின் உன்னதமாக பொதுச் சுகாதாரத்துறை சுகநலம் குறித்த கரிசனைவிடயங்களையும், சவால்களையும் மிகவும் வெற்றிகரமாகக் கையாண்டு சுகாதார குறித்த வரைவு ஆசாரங்களையும், செயற்பாடுகளையும் உறுதிசெய்தது. பெரும் தொற்று நோயின் சுகாதார பரிமாணங்களைக் கையாண்டவிதம்குறித்து இலங்கையைப் பாராட்டுதல் வேண்டும். ஆயினும், இது ஆட்சிச்செயல்முறை மற்றும் ஏனைய விவகாரங்கள் சம்பந்தமான பாரதூரமான தாற்பரியங்களையும் ஏற்படுத்தியது. குறிப்பாக, பகிரங்கச் சேவை ஓரங்கட்டப்பட்டு, அரசியல் நியமனம் பெற்றோரும், இராணுவமும் தீர்மானம் மேற்கொள்வதில் ஒரு பாத்திரத்தை வகிக்கும் நிலை ஏற்பட்டது. சுயாதீனமான தனியதார்த்த நிறுவனங்களின் பொறுப்பிலுள்ள கொள்கைவகுத்தலில் நிறைவேற்றுத்துறை தலையீடு செய்யும் நிலையும் ஏற்பட்டது. 2020 ஜூனில் இடம்பெற்ற கூட்டத்தில் அவசியமான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை குறித்து ஜனாதிபதி கோத்தாபய மத்திய வங்கி அதிகாரிகள்மீது வசை பாடியமை இதன் வெளிப்பாடாகும்.

பெரும் தொற்று நோய்க்காலத்தில் எழுந்த பன்முக விவகாரங்களுக்கான பிரதிவினையாக பெரும் எண்ணிக்கையிலான ஜனாதிபதி செயலணிகளும், ஒரு தேசிய மத்திய நிலையமும் தாபிக்கப்பட்டன. சில செயலணிகளின் பணிப்பாணைகள் சட்டநிலை மற்றும் அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட விடயங்கள் சம்பந்தமான கேள்விகளை எழுப்பின. கொவிட் 19 க்கு எதிர்வினையாக நியமிக்கப்பட்ட தனியதார்த்த அமைப்புகளில் இராணுவ அல்லது முன்னாள் இராணுவ அதிகாரிகளே தலைமைப் பதவிகளில் அல்லது வேறு வகைகளில் அதிகமாக இடம்பெற்றிருந்தனர். இத்தனியதார்த்த அமைப்புகள் சிலவற்றின் பணிப்பாணைகளும், உறுப்பமைவுகளும் முன்னாள் இராணுவத்தினரும், நிறைவேற்று அதிகாரிக்கு நெருக்கமானவர்களும் பாராளுமன்ற மேற்பார்வையோ, பலம்வாய்ந்த எதிர்க்கட்சியோ இல்லாத ஒரு சூழ்நிலையில், பாரதூரமான தாற்பரியங்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஆட்சிசெய்ய முயற்சிக்கின்றார்களோ என்னும் கரிசனைக் கவலைகளை ஏற்படுத்தியுள்ளன. பகிரங்கச் சேவையும், சுயாதீன நிறுவனங்களும் அதிகரிக்கும் வகையில் அரசியல்மயப்படுத்தப்படுவதும், ஓரங்கட்டப்படுவதும் எதேச்சாதிகார நடைமுறைகள்குறித்த கவலைகளை ஏற்படுத்தியுள்ளன. பாராளுமன்ற மேற்பார்வையின்மை, அதிகாரத் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றலோ, விருப்புநிலையோ இல்லாத நிறுவனங்கள் இருத்தல் என்பவை காரணமாக பீதி நிலை மேலும் மோசமடைந்துள்ளது.

### இராணுவமயப்படுத்தல் மற்றும் அதன் தாற்பரியங்கள் குறித்த கரிசனைக்கவலைகள்

யுத்தத்தின் பின்னர் இலங்கையில் இராணுவமயப்படுத்தலென்பது ஒரு புதிய விவகாரமல்ல. ஆயினும், கவலையை ஏற்படுத்துவது அதன் அளவும், உரிமைகள், மீளிணக்கம் மற்றும் ஆட்சிச் செயல்முறை சம்பந்தமான அதன் சாத்தியத் தாற்பரியங்களுமாகும். பாதுகாப்புத் தேவைகள் காரணமாகப் பாதுகாப்புத்துறைக்கு ஒரு பாத்திரம் உண்டு

**பல சிவில் அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் மூன்றுமாத விதி அடிப்படையில் ஜூன் 20 இல் தேர்தல் நடத்துவது குறித்து நீதிமன்றத்தில் சவால் விடுத்தன. வழக்கை விசாரிப்பதற்கான அனுமதிகுறித்த ஆரம்ப கட்டத்துக்கு நீண்டகாலம் எடுத்துக்கொண்ட பின்னர் உயர்நீதிமன்றத்தின் ஐந்து நீதியரசர்கள் வழக்கை விசாரிக்க அனுமதி மறுத்ததால், சட்டம் சம்பந்தமான சவால் முடிவுக்கு வந்தது. உயர்நீதிமன்றக் கட்டளைக்குப்பின்னர், தேர்தல்கள் ஆணைக்குழு ஆகஸ்ட் 5 ஆந் திகதி தேர்தல் இடம்பெறுமென்று அறிவித்தது.**

என்பதை அங்கீகரிக்கும் அதேவேளையில், இராணுவ மற்றும் முன்னாள் இராணுவ அதிகாரிகள் மனித உரிமைகள், ஆட்சிச் செயல்முறை மற்றும் மீளிணக்கம் சம்பந்தமான பாரதூரமான தாற்பரியங்களை ஏற்படுத்தும் வகையில் சிவில் நிர்வாகத்தைத் தமது பொறுப்பில் எடுத்துக்கொள்ளும்போது கரிசனைக் கவலைகள் ஏற்படுகின்றன.

கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற 2019 இலிருந்து, புதிய மட்டங்களிலான இராணுவமயப்படுத்தல்கள் இடம்பெற்றுள்ளன. ராஜபக்ஷ அரசாங்கத்தின்கீழ் ஏனையவற்றோடு பாதுகாப்பு அமைச்சு, சுகாதார அமைச்சு, விவசாய அமைச்சு, இலங்கைத் துறைமுக அதிகாரசபை மற்றும் இலங்கைச் சுங்கம் என்பவற்றுக்குப் பெரும் எண்ணிக்கையிலான இராணுவ மற்றும் முன்னாள் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு, பெரும் தொற்று நோய்க்கு எதிர்வினையாக, இராணுவத்தினருக்கும், முன்னாள் இராணுவத்தினருக்கும் அதிகரித்த பாத்திரம் வழங்கப்பட்டது. தொடர்பிலிருந்தோரைக் கண்டறிதல் மற்றும் நுண்கண்காணிப்பு போன்ற விடயங்களில் இராணுவமும், உளவுத்துறையும் முக்கிய பாத்திரத்தை வகிப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவை மக்களின் சிவில் உரிமைகளை மீறுமா ? என்னும் கேள்விகள் எழுந்துள்ளன. இராணுவம் தொற்றுநோய்த் தடைமுகாம்கள் செயல்முறை சம்பந்தமாகவும் ஒரு பிரத்தியட்சமான பாத்திரத்தை வகித்தது.

அத்தோடு, சமீபத்திய விவகாரங்கள் காரணமாக நியமிக்கப்பட்ட பல செயலணிகளில் முன்னாள் மற்றும் தற்போதுள்ள இராணுவ அதிகாரிகள் உள்ளனர். அவற்றுள் சிலவற்றில் முன்னாள் இராணுவ அதிகாரிகள் தலைமைப் பாத்திரத்தில் உள்ளனர். உதாரணமாக – ஜூன் 2 ஆந் திகதி நியமிக்கப்பட்ட இரு செயலணிகளைக் குறிப்பிடலாம். இவை பாதுகாப்பான நாட்டையும், ஒழுக்கசீலமுள்ள, சட்டத்தை மதிக்கும் சமூகத்தையும் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி செயலணி (வர்த்தமானி இல.2178/17) என்பவையாகும். இவ்விரண்டு செயலணிகளிலும் தலைவராக இருப்பவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணவர்த்தன ஆவார். முழுக்கமுழுக்கச் சிங்களவர்களே இவற்றில் உறுப்பினர்களாகவும் உள்ளனர். பெரும் தொற்று நோய் காணப்படுவதும், தேர்தல் நடைபெறவுள்ளதுமான காலப்பகுதியில் இவை இரண்டினதும் பணிப்பாணைகளும், உறுப்பமைவும், காலக்கணிப்பும் கவலையை ஏற்படுத்துவனவாக உள்ளன. மேலும், நிறைவேற்றுத்துறை அதிகாரியினால் நியமிக்கப்பட்டுள்ள இத் தனியதார்த்த அமைப்புகள் அமைச்சுக்களினதும், நியதிச்சட்ட அதிகாரசபைகளினதும் கருமங்களைப் பொறுப்பேற்கின்றனவா ? என்பது குறித்த கரிசனைக்கவலையும் எழுந்துள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக, பாதுகாப்புத்துறையின் முன்னாள் மற்றும் தற்போதைய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவம் மற்றும் பதவி உயர்வுகள் சிலரோடு தொடர்புற்ற பாரதூரமான உரிமைமீறல்கள் குறித்த குற்றச்சாட்டுக்களின் பின்னணியில் இடம்பெறுபவையாகும். இது சிலர் வகைப்பொறுப்பைத் தட்டிக்கழிக்க முடியும் என்பதற்கும், அவர்களுக்குத் தற்போதைய ஆட்சிமுறையின்கீழ் பதவி உயர்வுகளும் கிட்டும் என்பதற்குமான சமிக்ஞையை வழங்கியுள்ளது.

அவசரகால நிலைமைகள் மற்றும் அனர்த்தங்களுக்கான பதில்வினை அனைத்துமடங்கும் ஒன்றாக அமைந்திருக்கவேண்டுமென்பதில் எவ்வித ஐயமுமில்லாத அதேவேளையில், அத்தகைய பதில்வினை ஆற்றலும், பயனுறுதியும்கொண்ட சுகாதாரத்துறை உள்ளிட்ட வகையில் இலங்கையின் சிவில்சேவையின் பூரண ஈடுபாட்டுடன், அதன் தலைமையில் இடம்பெறுவது முக்கியமானதாகும். விசேடமாக, பாராளுமன்றத்தின் மேற்பார்வையின்மை மற்றும் உரிமைகள், சட்டத்தின் ஆட்சி சிறிதுசிறிதாக அரிப்புண்டு செல்லும் நிலை என்பவற்றின் சூழமைவில் அதிகரிக்கும் இராணுவமயப்படுத்தல் கரிசனைக் கவலைகளை எழுப்புவதாகவுள்ளது.




சுவசெரிய





ஃப்ளொயிட்டின் படுகொலைக்கு எதிரான முன்னரங்கு சோசலிசக் கட்சியின் ஆர்ப்பாட்டம்

www.menafn.com / www.ucanews.com

"

**பெரும் தொற்று நோய்க் காலப்பகுதியில், பாரதூரமான தாற்பரியங்களைக்கொண்ட வகையில் ஏனைய உரிமைகள்மீதான தாக்குதல்களும் இடம்பெற்றன. உதாரணமாக– இக் காலப்பகுதியில் ஊடகவியலாளர்களும், எதிர்ப்பு நடவடிக்கையாளர்களும், தொற்றுநோய்த் தடைப்பிரமாணங்களை மீறினார்களென்று தெரிவித்து, தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். இது முறையான சட்டச் செயல்முறைப் பாதுகாப்புகள் உதாசீனஞ் செய்யப்பட்ட, சட்டத்தரணிகள் தமது தொழில்சார் கடமைகளை நிறைவேற்றியமைக்காக இலக்கு வைக்கப்பட்ட காலமுமாகும்.**

### மனித உரிமைகளும், தண்டனையிலிருந்து விலக்களித்தலும்

பெரும் தொற்று நோய்க்காலத்தில் பல மட்டுப்பாடுகள் சுமத்தப்பட்டன. இவை கொவிட் 19 ஐ எதிர்த்துப் போராட அவசியமானவையென்று தெரிவிக்கப்பட்டன. ஓர் அவசரகால நிலைமையின்போது சில மட்டுப்பாடுகள் அனுமதிக்கப்படக்கூடியவை என்றபோதிலும், திணிக்கப்படும் விடயம் சட்டரீதியானதா ? விகிதாசார முறைப்படி அமைந்துள்ளதா ? மற்றும் அவசியமானதா ? என்பவைகுறித்த வினாக்கள் எழுப்பப்படுதல் வேண்டும். உதாரணமாக – பெரும் தொற்று நோய் கொவிட் 19 ஐ எதிர்த்துப் போராடுவதற்கு மக்கள் நடமாட்டங்களை மட்டுப்படுத்தும் வகையில் அதிகாரிகள் மார்ச் 20 முதல் ஓர் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்தனர். நடமாட்டங்களை மட்டுப்படுத்தும் ஆரம்ப அறிவித்தலின் பின்னரான வாரங்களில் சிலர் அது ஒரு பொலிஸ் ஊரங்குச் சட்டமென்றும், வேறு சிலர் அது தொற்றுநோய்க் கட்டுப்பாடு மற்றும் நோய்த்தடைக் கட்டளைச்சட்டத்தின் கீழான ஊரடங்குச் சட்டமென்றும் தெரிவித்து, அதன் சட்டநிலை சம்பந்தமான குழப்பநிலையை உருவாக்கினர். ஊரடங்குச் சட்ட அறிவிப்பு சம்பந்தமான உத்தியோகபூர்வ ஆவணங்களின் தீவிர பரிசோதனை மட்டுப்பாடுகளின் சட்டபூர்வமான அடிப்படை குறித்த வினாக்களை எழுப்பியது. பின்னர் மனிதஉரிமை விவகாரங்கள் சம்பந்தமாக அரசாங்கங்களுக்கு மதியுரை வழங்கும் பணிப்பாணையைக்கொண்ட மனிதஉரிமைகள் ஆணைக்குழு இத்தகைய மட்டுப்பாடுகளை அனுமதிக்கும்வகையில் தற்போதுள்ள சட்டச் சட்டகத்தைச் சுட்டிக்காண்பித்து, சட்டவாக்கங்கள் முறையாகப் பிரயோகிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியது.

பெரும் தொற்று நோய்க் காலப்பகுதியில், பாரதூரமான தாற்பரியங்களைக்கொண்ட வகையில் ஏனைய உரிமைகள்மீதான தாக்குதல்களும் இடம்பெற்றன. உதாரணமாக- இக் காலப்பகுதியில் ஊடகவியலாளர்களும், எதிர்ப்பு நடவடிக்கையாளர்களும், தொற்றுநோய்த் தடைப்பிரமாணங்களை மீறினார்களென்று தெரிவித்து, தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். இது முறையான சட்டச் செயல்முறைப் பாதுகாப்புகள் உதாசீனஞ் செய்யப்பட்ட, சட்டத்தரணிகள் தமது தொழில்சார் கடமைகளை நிறைவேற்றியமைக்காக இலக்கு வைக்கப்பட்ட காலமுமாகும். பிரத்தியேகமாக, பல தசாப்த காலமாகச் சிறுபான்மை இனத்தவர்களையும், அரசாங்கத்தை விமர்ச்சிப்போரையும் இலக்கு வைப்பதற்கும் பயன்படுத்தப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தடுத்துவைக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம். இக்குறிப்பிட்ட வழக்கில், சட்டத்தின் சரியானசெயல்முறைப் பாதுகாப்புகள் உதாசீனம் செய்யப்பட்டு, திரு.ஹிஸ்புல்லா



**"**

**அவசரகால நிலைமைகள் மற்றும் அனர்த்தங்களுக்கான பதில்வினை அனைத்துமடங்கும் ஒன்றாக அமைந்திருக்கவேண்டுமென்பதில் எவ்வித ஐயமுமில்லாத அதேவேளையில், அத்தகைய பதில்வினை ஆற்றலும், பயனுறுதியும்கொண்ட சுகாதாரத்துறை உள்ளிட்ட வகையில் இலங்கையின் சிவில்சேவையின் பூரண ஈடுபாட்டுடன், அதன் தலைமையில் இடம்பெறுவது முக்கியமானதாகும். விசேடமாக, பாராளுமன்றத்தின் மேற்பார்வையின்மை மற்றும் உரிமைகள், சட்டத்தின் ஆட்சி சிறிதுசிறிதாக அரிப்புண்டு செல்லும் நிலை என்பவற்றின் சூழமைவில் அதிகரிக்கும் இராணுவமயப்படுத்தல் கரிசனைக் கவலைகளை எழுப்புவதாகவுள்ளது.**

நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படாது, அர்த்தமுள்ள வகையில் தனது சட்டத்தரணிகளை அணுகுவதும் தடைசெய்யப்பட்டது.

இலங்கையின் தண்டனையிலிருந்து விலக்களிக்கும் கலாச்சாரத்தைவைத்து நோக்குகையில், 2020 முதல் அரைப்பகுதியின்போது கவலையளிக்கும் பல சம்பவங்கள் இட்மபெற்றதைக் காணலாம். 2020 மார்ச்சில் சுனில் ரத்நாயக்கவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி மன்னிப்பு ஓர் உதாரணமாகும். பல சிவிலியன் மக்களைக் கொலைசெய்தமைக்காக வழங்கப்பட்டதும், பின்னர் இலங்கை உயர்நீதிமன்றத்தினால் உறுதிசெய்யப்பட்டதுமான குற்றத்தீர்ப்பு நிறைவேற்றுத்துறைத் தலைவரின் நடவடிக்கையால் வலுவிழக்கச் செய்யப்பட்டது. இந்த மன்னிப்பு வழங்கப்பட்டமை குற்றவியல் நீதிச் செயல்முறையின் பலவீனத்தையும், இலங்கையின் தண்டனையிலிருந்து விலக்களிக்கும் கலாசாரத்தையும் வெளிச்சமிட்டுக் காட்டியது. மேலும், பல முக்கியமான வழக்குகளின் விசாரணைகளின் தாமதங்களும் நீதிமன்ற விசாரணைகளில் தாமதங்களும் பாதிப்புற்றோருக்கு நீதி குறித்த நம்பிக்கையைச் சீரழித்துவிடுமென்ற கரிசனைக் கவலைகளை ஏற்படுத்தியுள்ளன. பல முக்கிய வழக்குகளில் விசாரணையிலும், நீதிமன்ற நடவடிக்கைகளிலும் எண்ணற்ற தாமதங்கள் இடம்பெறுகின்றன. இலங்கையின் குற்றவியல் நீதிமுறைமை சுயாதீனமான, பக்கச்சார்பற்ற செயல்முறையை வழங்க முடியாதுள்ளது என்னும் அச்சத்தை அதிகரித்துள்ளன. அரசியல் தலையீடுகளும், தாமதங்களும் மற்றும் ஏனைய தடைகளும் குற்றமிழைத்தோரெனத் தெரிவிக்கப்படும் பலர் வகைப்பொறுப்பிலிருந்து தப்பிச்செல்வதற்கு இடமளித்துள்ளன. விசாரணைகள், வழக்குத்தொடரல்களின்றிப் பல வருடங்கள் கழிந்துசெல்லும் நிலை, சில வழக்குகள் பல தசாப்தகாலமாக இழுபறியாகவுள்ள நிலை இலங்கையில் வகைப்பொறுப்பு சம்பந்தமான தோல்விகள் குறித்த கவலையூட்டும் சமிக்ஞைகளை ஏற்படுத்துகின்றன. பல சுயாதீன நிறுவனங்களின் சிறப்பான பணிகள் இருந்த வேளையிலும், ஏற்படுத்தப்பட்டுள்ள மட்டுப்பாடான மறுசீரமைப்புகள் பாராளுமன்றத் தேர்தல்களின் பின்னர் மீண்டும் பழைய நிலைக்குச் சென்றுவிடுமோ ? என்னும் அச்சம் நிலவுகின்றது. இந்த நிலைமை உரிமைகள் சம்பந்தமான மேலதிக மீறல்களையும், தண்டனையிலிருந்து விலக்களித்தலை மேலும் நிலைபேறாக்கப்படும் நிலையையும் உருவாக்கும்.

## சிறுபான்மையினர் உரிமைகளும், நல்லிணக்கமும்

யுத்தம் முடிவடைந்து ஒரு தசாப்தம் கடந்த நிலையிலும், இலங்கை பலவீனமான சமாதானம் மற்றும் நல்லிணக்கம் குறித்த சவால்களைத் தொடர்ந்தும் எதிர்கொள்ளுகின்றது. 2019 நவம்பரில் ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டதிலிருந்து, இனத்துவ தேசியவாதத்தின் அதிகரிப்பு மற்றும் சிறுபான்மையோரை ஓரங்கட்டுதல் என்பவை ஏற்பட்டுள்ளன. உதாரணமாக- ஜனாதிபதி கோதாபயாவின் அரசாங்கத்தில் எந்த முஸ்லீம் அமைச்சரோ, பிரதி அமைச்சர்களோ நியமிக்கப்படவில்லை. இதுவரையில், இரண்டு தமிழ் அமைச்சர்கள் மாத்திரமே நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், 2020 பெப்ரவரியில் இடம்பெற்ற சுதந்திரதின விழாவில் சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் தேசியகீதம் பாடப்படவேண்டுமென்ற வேண்டுகோளை அரசாங்கம் நிராகரித்து, தேசியகீதம் சிங்கள மொழியில் மாத்திரமே இசைக்கப்பட்டது. இத்தகைய சம்பவங்களும், சில பொதுப் பிரகடனங்களும், அரசாங்கத்தின் கொள்கைத்தீர்மானங்களும் சிறுபான்மையினருக்கு எதிரான ஒன்றுபட்ட பிரயத்தனங்கள் மற்றும் நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை ஊக்குவிக்கும் முயற்சிகளுக்குக் குந்தகம் ஏற்படுவது குறித்த ஐயங்களை எழுப்புகின்றன.

குறிப்பிடத்தக்கவகையில், பௌத்த மதகுருமார் இலங்கை அரசியலில் ஓர் அதிகரிக்கும் சக்தி என்ற வகையில் பகிரங்கமான, துருவப்படுத்தல் பாத்திரத்தை வகித்துவந்துள்ளனர். உதாரணமாக- ஜனாதிபதித் தேர்தல் பிரசாரவேளையில் அவருக்குப் பல

பௌத்த குருமார்களின்  ஆதரவு இருந்ததோடு,  பதவியேற்புக்குப் பின்னர்,  கொள்கை விவகாரங்களில்  மதியுரை கூறுவதற்கு, ஒரு பௌத்த மதியுரைக் குழுவையும் அவர் தாபித்துள்ளார். மேலும், கிழக்கு மாகாணத்தில்  அகழ்வாராய்ச்சி, மரபுரிமை முகாமைத்துவத்துக்கான செயலணி நியமனத்திலும்  இரு பௌத்த குருமார்  இடம்பெற்றுள்ளனர்.  கிழக்கு மாகாணத்தில் மத மற்றும் இனத்துவ சிறுபான்மையினர் வசிக்கின்றபோதிலும், அவர்களுக்கு  எவ்வித  பிரதிநிதித்துவமும் வழங்கப்படவில்லை. சிறுபான்மையோர் உரிமைகள் மற்றும்  நல்லிணக்கம் என்பவற்றில் தாக்கம் செலுத்தக்கூடிய  இனத்துவ தேசியவாதத்தின் அதிகரிப்புச் சம்பந்தமான  பீதிகளை, இதுகாலவரை எந்தப் பௌத்த மதகுருவும்  மத உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் செயற்பாடுகள் குறித்த  வகைப்பொறுப்புள்ளவரெனத் தண்டிக்கப்படவில்லையென்ற  நிகழ்வுண்மை மேலும்  மோசமாக்கியுள்ளது. கொவிட் 19 நீதி மற்றும் நல்லிணக்கத்துக்கான  தாற்பரியங்களைக் கொண்ட  வேறு பல விவகாரங்களை  முன்னிலைக்குக் கொண்டுவந்துள்ளது. உதாரணமாக – பெரும் தொற்று  நோய்க்காலத்தில் சில ஊடகங்களும்,  ஏனையோரும்  நோயாளர்களை இனத்துவரீதியில் பிரித்துப்பார்க்கும் விடயம் காணப்பட்டது. பெரும் தொற்று நோய்க்காலத்தின்போது ஊடகவியலார்களும், சட்டத்தரணிகளும் கைதுசெய்யப்பட்ட வேளையிலும் இனவாதக் கருத்துரைகளும், அறிக்கையிடலும் இடம்பெற்றன. இக்காலத்திலேயே சுகாதார கரிசனை விடயங்களென்ற போர்வையில்,  அந்த மத ஜனசமூகத்தின் நம்பிக்கைகளுக்கு எதிரான வகையில், முஸ்லீம்களை அடக்கம் செய்வதற்கெதிரான தடை திணிக்கப்பட்டது. இது உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) பெரும்  தொற்று நோய்க்காலத்தில்  இறந்தவர்களை அடக்கம் செய்யலாமென்று விதித்த வழிகாட்டல்களையும்  உதாசீனம் செய்யும்வகையில் இடம்பெற்றது.

2019 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல்  இலங்கையினுள் நிலவும் துருவப்படுத்தலை எடுத்துக்காட்டுவதாக அமைந்தது, பெரும்பான்மைச் சிங்களச் சமூகம்  ஆதிக்கம் செலுத்தும் தெற்கின் மக்கள்  பெரும்பாலும் ஒழுக்கம், பாதுகாப்பு மற்றும்  பொருளாதாரச் செழிப்பு  என்பவற்றை  முக்கிய கருப்பொருட்களாகக்கொண்டு 2019  பிரசார இயக்கத்தை முன்னெடுத்த கோத்தாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்தனர். வடக்கு, கிழக்கிலுள்ள பெரும்பாலான  சிறுபான்மை இனத்தவர்கள் அரசியல் தீர்வு மற்றும் நல்லிணக்கத்தைத் தெரிவுசெய்து வேட்பாளர் சஜித்  பிரேமதாசவுக்கு  வாக்களித்தனர். ஜனாதிபதி ராஜபக்ஷ  நவம்பரில் இடம்பெற்ற தனது அங்குரார்ப்பண வைபவத்தில்  இந்த விடயம்குறித்துக் குறிப்பிடத் தவறவில்லை. பெரும் தொற்று நோய் மற்றும்  சுகாதாரக் கரிசனைவிடயங்கள் காரணமாக  இதுவரையில் பாராளுமன்றத் தேர்தல்  பிரசாரங்கள் முன்னைய தேர்தல்களோடு  ஒப்பிடுகையில்  மந்தகதியிலேயே இடம்பெறுகின்றன.  ஆயினும், தேசீயவாதம்  மற்றும்  இனத்துவ வழிகளில்  நாடு மேலும்  துருவப்படுத்தல் குறித்த சான்றுகள் தென்படுகின்றன.

நல்லிணக்கம் குறித்த  கரிசனைக்கவலைகளை மேலும் அதிகரிக்கும் வகையிலான  ஏனைய காட்டிகளும் உள்ளன. அரசாங்கம் பகிரங்கமாகவே 2015 இல் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் மன்றத் தீர்மானத்துடன்   தாபிக்கப்பட்ட செயல்முறையுடன்  ஈடுபட்டுப் பணியாற்றும்  விருப்பமின்மையைத் தெரிவித்துள்ளது. இத்தீர்மானம் உண்மை, நீதி,  மீளளிப்புகள் மற்றும் மீண்டும் உரிமைமீறல்கள்  இடம்பெறாமை குறித்த நான்கு பொறிமுறைகளைக் கொண்டிருந்தது. முன்னைய அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட  காணாமல்போனோருக்கான அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் என்பவற்றின்  தலைவிதி  என்னவாயிற்றென்று எவருக்கும் தெரியவில்லை. ஆயினும், 2015 முதல் அறிமுகஞ்செய்யப்பட்ட பல மறுசீரமைப்புகள் இல்லாமற்போவது சாத்தியமாகும்.

## எதிர்காலம் குறித்த கரிசனைவிடயங்கள்

இச்சிறிய கட்டுரை 2019 நவம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றதிலிருந்து  காணப்படும் சில போக்குகளையும், இலங்கையில் உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் சம்பந்தமான அவற்றின் தாற்பரியங்களையும் பரிசீலனை செய்கின்றது. பாராளுமன்றத் தேர்தல்களின் பின்னர் ஸ்ரீலங்கா  பொதுஜன பெரமுன (SLPP) அடுத்த பாராளுமன்றத்தில்  ஆதிக்கம் வகிக்கும் கட்சியாக மாறக்கூடும். அது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வின் கட்டுப்பாட்டை மேலும் திரட்டி வலுப்படுத்தக்கூடும்.  இது ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஆரம்ப மாதங்களில் காணப்பட்ட ஆட்சிச் செயல்முறை மற்றும் ஏனைய  விவகாரங்களில் எதேச்சாதிகாரப் போக்கு,  இராணுவமயமாக்கல் மற்றும் பாதுகாப்பு வாதங்களைப் பலப்படுத்தலாம். இத்தகைய போக்குகள்  சிறுபான்மை மக்களுக்கும்,  உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை மதிக்கும்  குடிமக்களுக்கும்  ஆழமான கவலையை  ஏற்படுத்தி, அடுத்த பாராளுமன்றத்தில்  சுயாதீன நிறுவனங்கள் உள்ளிட்டவகையில்  செவ்வைபார்த்தல்கள் மற்றும்  சமநிலைப்படுத்தல்களைப் பலவீனமாக்கி,  சட்டத்தின் ஆட்சியை  அரிப்புண்டு செல்லவைக்கும்  அரசியலமைப்பு மற்றும்  சட்டவாக்கச் சீர்திருத்தங்களை  அறிமுகஞ் செய்வதற்கு இட்டுச்செல்லக்கூடும். மேலும்,  விடயங்களை மோசமாக்குவது யாதெனில் வளர்ந்துவரும் இனத்துவத் தேசீயவாதமும், அதிகரித்துவரும் வகையில் சிறுபான்மை மக்களை ஓரங்கட்டி, இலக்குவைக்கும் வகையில் சிங்கள பௌத்த மதத்துக்கு  அரச பாதுகாப்பு  வழங்கப்படுவதுமாகும்.

இத்தகைய பெரும்பான்மையினச்  சக்திகளின் வலுப்படுத்தல் உண்மையான  நல்லிணக்கம் மற்றும்  அதிகாரப்பகிர்வுக்குப் பாதகமாகவே அமையும்.  2010 இல்  வெற்றிகரமான மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம்  பாராளுமன்றத்தில்  18 ஆவது திருத்தத்தை  நிறைவேற்றியது.  அந்தவேளையில் பாராளுமன்றத்திலிருந்த  அரசியல் கட்சிகள்  மட்டுப்பாடான எதிர்ப்பினையே  வெளிக்காட்டின. 2020 இலும்,  அதற்கு அப்பாலும்  காத்திருப்பது உண்மையான  தலைமைத்துவமோ, இலட்சியக் காட்சியோ இல்லாதநிலையில்  பிளவுற்றுள்ள எதிர்க்கட்சியின்  நிலைமையைவைத்து  நோக்குகையில், மேலும் அதைரியமூட்டுவதாகும்.  இத்தகைய ஒரு சூழமைவில், இடைமாற்றுக்கால நீதி மற்றும் நல்லிணக்கம் சம்பந்தமான உண்மையான முன்னேற்றம் குறித்த  மட்டுப்பாடான அல்லது அறவே இல்லாத  நம்பிக்கையையே காணமுடிகின்றது.  இந்தப் பீதிகள் தீவிர  கவலை ஏற்படுத்தும் பெரும் தொற்று நோய் மற்றும் வாய்பிளந்து நிற்கும்  பொருளாதார நெருக்கடிச்  சூழமைவிலேயே காணப்படுகின்றன. இத்தகைய ஒரு பின்னணியில்  இலங்கை எதிர்காலத்தில்  பன்முக மற்றும்  இதுவரை கண்டிராத சவால்களை எதிர்நோக்குவது  சாத்தியமாகும்.  இலங்கையின் எதிர்காலச் செல்நெறியைத் தீர்மானிக்கும்  பொறுப்பு ஒவ்வொரு பிரஜைக்கும் உரியதாகும்.  ஆகவே, அடுத்த பாராளுமன்றத்துக்கு  அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யும் வாக்கு மிகவும்  தீர்மானகரமானதாகும். காத்திருப்பது என்னவென்பதை நாமனைவரும்  நினைவில்கொண்டு பொறுப்புணர்வுடன் வாக்களித்தல்  வேண்டும்.

## அதிகாரப் பகிர்வு

# ஒரே தீர்வல்ல




http://slcgdxb.com/

**யுத்தத்தின் பின்னர் யாழ்தேவி மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு...**




பேராசிரியர்

**நவரத்ன பண்டார**


**2015 ஜனாதிபதி தேர்தல் என்பது இலங்கையில் ஆட்சிமுறையின் மறுசீரமைப்புக்கள்பற்றிய கருத்து மிகவும் சக்திவாய்ந்த முறையில் முன்னோக்கிவந்த ஒரு சந்தர்ப்பமாகும். ஒட்டுமொத்தமாக வடக்கிலும் தெற்கிலும் அதுபற்றி முன்னர் இடம்பெறாத வகையில் ஓர் இணக்கப்பாடு ஏற்பட்டது. இந்த அபிலாஷைகள் நிறைவேறுவது பற்றி உங்களுடைய மதிப்பாய்வு எத்தகையது.**

உண்மையில் 2015 ஜனாதிபதி தேர்தல் ஜனநாயகத்திற்கான ஓர் வரிசைக்கிரமமாகும். அதன் பிரதான அரசியல் கோரிக்கையாக நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதே மையப்பொருளாக இருந்தது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமை காரணமாக ஜனநாயகத்தில் பாரிய சுருக்கம் ஏற்பட்டிருந்தமையால், அதனை இல்லாதொழித்து ஜனநாயகத்தை வலுப்படுத்துவது பிரதான கோஷமாகக் கொண்ட பாரிய எண்ணிக்கையினர் வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் ஒன்றிணைந்திருந்தனர். 1978 அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்ட




ரணில் விக்ரமசிங்ஹ

மைத்திரிபால சிறிசேன

**2015 இல் ஏற்பட்ட ஜனாதிபதி தேர்தலில் அதிகாரத்தில் ஏற்பட்ட மாற்றத்தோடு முன்னகர்ந்தவர்கள் அதுபற்றிய திருத்தத்தை முன்கூட்டியே தயாரித்து வைத்திருக்கவில்லை. உதாரணமாக அன்று 1972 இல் அரசியலமைப்பைத் தயாரித்தோர் 1970 தேர்தலைச் சந்திக்கும்போது தாம் தயாரித்த ஓர் வரைவுடன் சென்றனர். 2015 ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பாராளுமன்றத் தேர்தலுக்கு முகம்கொடுக்க நேர்ந்திருந்த காரணத்தினால், புதிய அரசியலமைப்பை முன்வைப்பது காலங்கடத்தும் ஒரு கஷ்டமான பணியாக இருந்தது. அன்றைய தலைமை 19ஆவது திருத்தத்தை சமர்ப்பித்தது.**

பின்னர் தொடர்ச்சியாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை மையப்படுத்தி அதிகாரம் குவிமையப்படுத்தப்பட்டது. அதற்கெதிரான எதிர்ப்பு 1994 இல் முன்வந்தது. 2000 ஆம் ஆண்டில் உச்ச கட்டத்தையடைந்திருந்த போர்ச் சூழலில் அது தற்காலிகமாக மறைந்தது. 2009 இல் யுத்தம் ஓய்ந்தபின்னர் சமூகம் எதிர்பார்த்ததுபோல ஜனநாயகச் சட்டகத்தை வலுவூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அத்திசையை நோக்கிய மறுசீரமைப்புக்கள் கிடைக்கவில்லை. யுத்த வெற்றிகளோடு அதிஉச்சகட்டத்தை அடைந்திருந்த அதிகாரத்தோடுதான் நாடு முன்னகர்ந்தது. இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் 2015 இல் மீண்டும் ஜனநாயகம்பற்றிய அபிலாசைஷகள் முன்னகர்த்தப்பட்டது.

ஆனால் 2015 இல் ஏற்பட்ட ஜனாதிபதி தேர்தலில் அதிகாரத்தில் ஏற்பட்ட மாற்றத்தோடு முன்னகர்ந்தவர்கள் அதுபற்றிய திருத்தத்தை முன்கூட்டியே தயாரித்து வைத்திருக்கவில்லை. உதாரணமாக அன்று 1972 இல் அரசியலமைப்பைத் தயாரித்தோர் 1970 தேர்தலைச் சந்திக்கும்போது தாம் தயாரித்த ஓர் வரைவுடன் சென்றனர். 2015 ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பாராளுமன்றத் தேர்தலுக்கு முகம்கொடுக்க நேர்ந்திருந்த காரணத்தினால், புதிய அரசியலமைப்பை முன்வைப்பது காலங்கடத்தும் ஒரு கஷ்டமான பணியாக இருந்தது. அன்றைய தலைமை 19ஆவது திருத்தத்தை சமர்ப்பித்தது. ஆனால் ஏற்கனவே தயாரித்த திருத்தம் அங்கீகரிக்கப்படவில்லை. சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லவேண்டுமென உயர்நீதிமன்றம் பரிந்துரைத்த பகுதிகளை விடுத்து மீண்டும் தயாரிக்கப்பட்ட திருத்தங்கள் 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தமாக அங்கீகரிக்கப்பட்டது. அன்று பழைய பாராளுமன்றமே நடைமுறையில் இருந்தது. அந்தப் பாராளுமன்றமே பெரும்பான்மை வாக்குகளால் மேற்படி யாப்புத் திருத்தத்தை அங்கீகரித்தது.

மேற்படி மட்டுப்பாடுகள் இருக்கையிலும், 19ஆவது அரசியலமைப்பிற்கான திருத்தத்தின்மூலம் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு குறிப்பிடத்தக்க மட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. ஒரு புதிய பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்டு ஓராண்டு காலத்திற்குள் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரம் இல்லாதொழிக்கப்பட்டது. பாராளுமன்றத்தைக் கலைப்பதாயின் ஜனாதிபதி $4\frac{1}{2}$ ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. பாராளுமன்றம் கோரினாலேயொழிய அக்காலகட்டத்திற்குள் பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாது. அதேசமயம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை அங்கத்தவர்களின் நம்பிக்கை இருக்கும்வரை நியமிக்கப்பட்ட பிரதமரை பதவிநீக்கம் செய்ய ஜனாதிபதியினால் முடியாதென்ற மட்டுப்பாடும் உருவாக்கப்பட்டிருந்தது. அமைச்சரவை பிரதமரின் விருப்பத்திற்கமைய நியமிக்க வேண்டுமென்பதும், நியமனம்பெற்ற அமைச்சர்களைப் பிரதமரின் விருப்பமின்றி நீக்க முடியாத ஒரு நிலைமையும் இருந்தது. ஜனாதிபதி அரசாங்கத்தின் தலைவர் என்ற நிலைப்பாடு தொடர்ந்து இருந்தாலும் தற்போது ஜனாதிபதி அமைச்சுப் பதவியையும் வகிக்க முடியாது. நாட்டின் நிறைவேற்று ஆட்சி அமைச்சரவையினால் முன்னெடுக்கப்பட வேண்டுமென்ற அரசியலமைப்பில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் தற்போது அமுலில் இருக்கின்றன. இவ்வாறாக ஜனாதிபதியின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டது. பிரதமரை முதன்மையாகக் கொண்ட அமைச்சரவையினதும், பாராளுமன்றத்தினதும் அதிகாரம் மேலோங்கியது.

அதேசமயம் ஜனாதிபதியினது மாத்திரமல்லாமல் பிரதமர் உட்பட அமைச்சரவையின் அதிகாரத்தை மட்டுப்படுத்தும் சுயாதீன ஆணைக்குழுக்கள் முறைமை 19ஆவது அரசியலமைப்பின் மூலம் வலுப்படுத்தப்பட்டது. நீதிமன்றத்தின் சுயாதீனம், சுயாதீன




youtube.com

அரசசேவைக்கான அடிப்படையை உருவாக்குதல், தேர்தல் நடைமுறை சுயாதீனமாக்கப்படுதல் என்பன இதன்மூலம் இடம்பெற்றன. இதற்கமைய 2015 ஜனாதிபதி தேர்தலின் பின்னர், நிறைவேற்று ஜனாதிபதியிடம் இருந்த அத்துமீறிய அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டு பாராளுமன்ற ஆட்சிமுறையை நோக்கிய முக்கியமான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், அதற்கப்பால் சென்று பாராளுமன்றம் அமைச்சரவை முறைமைக்குச் (கபினெட் முறைமை) செல்வதற்கு அவசியமான புதிய அரசியலமைப்பை உருவாக்கும் செயற்பாடு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதற்காகப் பயன்படுத்தப்பட்ட வழிமுறை மிக நீண்ட வழிமுறையாகும். அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் முடியும்வரை இறுதி ஆவணமொன்றை தயாரிக்க முடியவில்லை. மறுபுறம்இந்நடைமுறை பற்றிய நம்பிக்கையை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் அரசாங்கம் வெற்றிகொள்ளவில்லை. அரசாங்கத்தின் தலைவர்கள் ஒட்டுமொத்தமாக இதற்காக மக்களோடு கலந்துரையாடவும் இல்லை. இதனை முன்னெடுத்துச் செல்லும் திடசங்கற்பம் அவர்களுக்கு இருக்கவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. உருவாக்குவதற்கு எதிர்பார்க்கும் அரசியலமைப்பு பற்றி ஆட்சியாளர்கள் காலம்கடத்திக்கொண்டு இருக்கையில் இது நாட்டைப் பிளவுபடுத்தும் ஒரு செயல்முறையென அறிமுகப்படுத்தியவாறு எதிர்க்கட்சியினர் அவர்களது அரசியலை முன்னெடுப்பதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிட்டியது. பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் இந்தக் கருத்தியலே சமூகமயப்படுத்தப்பட்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் பொதுமக்கள் ஜனநாயகம் பற்றிய அபிலாஷைகளை ஒரு பக்கத்தில் வைத்தனர். இறுதியில் 19 ஆவது அரசியலமைப்பிற்கான திருத்தத்தின் விளைவுகள் மாத்திரமே எஞ்சின.

**2020 ஜனாதிபதி தேர்தலையொட்டிய நடவடிக்கைகளும் அதன் விளைவாக அதுவரை பலவீனமான மட்டத்தில் அல்லது முன்னோக்கிப் பயணித்த அரசியல் மறுசீரமைப்பு பற்றிய கலந்துரையாடல்கள் முழுமையாக பின்னால் திருப்பப்பட்டன. இதற்கான காரணங்கள் யாவை?**

ஒட்டுமொத்தமாக நல்லாட்சி அரசாங்கத்தின் தோல்வியே இக்கலந்துரையாடலை மறைப்பதற்கு காரணமாக அமைந்தது. அவர்கள் நல்லாட்சியெனக் கூறி கட்டியெழுப்பிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக முன்வைத்த பிரதான விடயங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியவில்லை. ஊழல், மோசடி என்பவற்றை நிறுத்துதல், பெருங் கள்வர்களைப் பிடித்தல், ஆகிய ஒன்றுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதற்குப் பதிலாக மத்தியவங்கி பிணை முறி போன்ற பாரிய ஊழல்கள், மோசடிகள் இடம்பெற்றன. அரசாங்கத்தின் அமைச்சர்கள் மோசடிக்காரர்களுடன் தொடர்புகொண்டார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் காரணமாக ஒரு சிலர் பதவி விலகினார்கள். அவர்களில் சிலர் மீண்டும் பதவிகளுக்கு வந்தனர். அதேசமயம் அரசாங்கத்தின் முக்கிய தலைவர்களுக்கிடையிலான கருத்து வேற்றுமைகள் அம்பலத்திற்கு வந்தன. இவை அனைத்தும் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய மக்கள் மத்தியில் நம்பிக்கையை சிதறடிப்பதற்கு காரணமாக அமைந்தன. குறிப்பாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக ஏற்பட்ட பாதுகாப்பற்ற உணர்வு காரணமாக மீண்டும் சக்திவாய்ந்த ஒரு தலைவன் ஆட்சியாளனாகத் தேவையென்ற கருத்து மேலோங்கியது. நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி மீண்டும் மேலோங்கினார். தேசிய பாதுகாப்பு, ஒற்றையாட்சி, ஐக்கியம் ஆகிய அனைத்தும் உறுதியான ஜனாதிபதி பதவியினாலேயே நிலைநாட்ட முடியும் என்ற கருத்து மேலோங்கியது. 1978 இல் இருந்தே ஜனாதிபதிப் பதவி பலம்வாய்ந்த பதவியாக கருதப்படுவதற்கு காரணம் பாதுகாப்பிற்கான நெருக்கடிகளை எதிர்நோக்கிய காரணமாகவேயாகும். ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தி ஜனநாயகத்தை வலுவூட்டவேண்டுமென்ற கருத்து புறக்கணிக்கப்பட்டு, தேசிய பாதுகாப்பு என்ற விடயம் மேலோங்கியது.

ஆனால் மிகக்கூடிய ஜனநாயகச் சுதந்திரம் மற்றும் உரிமைகள்பற்றிய மக்கள் அபிலாஷை மீளத் திரும்பியதென தீர்மானிக்க் முடியாது. சமூகத்தில் இந்த அபிலாஷை இயல்பாகவே இருக்கும் ஒரு விடயமாகும். அரச மறுசீரமைப்பு, மிகக்கூடிய ஜனநாயகம், மனித உரிமைகளைப் பாதுகாக்கும் சுதந்திரமான சமூகம்பற்றிய அபிலாஷை என்பன இந்த சமூகத்தின் அடிமட்டத்தில் இருக்கின்றன. அது இவ்வாறாக காலத்திற்குக்காலம் பொருட்படுத்தப்படாவிட்டாலும் தற்காலிக நிலைமை காரணமாக மக்கள் அவற்றை ஒருபுறம் வைப்பதற்கு இணங்கினாலும், இந்த அபிலாஷை நீரில் மிதக்கும் ஒரு ரப்பர் பந்துபோல மீண்டும் மீண்டும் தோற்றம் பெறும்.

**ஏற்கனவே இலங்கையின் இனங்களுக்கிடையேயான பிளவுகள் வேறெப்போதையையும்விட பாரதூரமாக மேலோங்கியுள்ளன. இந்நிலைமையை எப்படி வெற்றிகொள்வது?**

இக்கூற்றோடு என்னால் உடன்பட முடியாது. இனங்கள் மத்தியிலான பிளவுகள் கலாசார ரீதியாக நிலவினாலும் அது மோதலை ஏற்படுத்தும் பாரதூ ரமான ஒரு நிலைமை அல்ல. இந்த நாட்டில் இனங்களுக்கிடையில் பரஸ்பரம்

சகவாழ்வு எப்போதும் இருந்து வந்தது. சமூக வாழ்விலும், வர்த்தக வாழ்விலும், தொழில் வாண்மை மற்றும் நிருவாக வாழ்விலும், கல்வி வாழ்விலும் இலங்கையின் எல்லாப் பிரதேசங்களிலும் அனைத்து இனங்களையும் சார்ந்த அங்கத்தவர்கள் ஒன்றாகப் பணியாற்றுகின்றார்கள். அரசியல்வாதிகளே பிளவுகளையும் மோதல்களையும் ஏற்படுத்தி வருகின்றனர். அரசியல்வாதிகளே தமது அரசியல் கோட்பாடுகளுக்கமைய இனம், மதம் என சமூகத்தில் பிளவுகளை ஏற்படுத்துகிறார்கள். இனவாதமும் மதவாதமும் இயல்பான புலக்காட்சி அல்ல. இவை அதிகாரப் போராட்டங்களுக்காகவே உருவாக்கப்படுகின்றன.

தேசியம் என்ற உணர்வு கூடாததொன்றல்ல. அது நல்லது. தமது தேசியத்தை ஆதரிப்பவர் ஏனைய தேசியங்கள் மீதும் பாசம் செலத்த முடியும். அதன் முன்னேற்றமடைந்த ஒரு கட்டமே சர்வதேச வாதமாகும். தேசியவாதத்தின் தீமையான அம்சம்தான் இனவாதம்.. ஹாவார்ட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவர் இதனை “பகுதி காட்டுமிராண்டித்தனமென அறிமுகப்படுத்தினார். இவற்றைக் காட்டு இயல்பற்ற முறையில் நடைமுறைப்படுத்தினால் அதனை நன்நோக்கத்திற்குப் பயன்படுத்த முடியும். உலகில் தேசிய அரசுகள் தேசியவாதத்தின் மூலமே உருவாக்கப்பட்டன. ஐரோப்பாவில் இத்தகைய தேசிய அரசுகளை ஐக்கியப்படுத்தியே ஐரோப்பிய ஒன்றியம் உருவாக்கப்பட்டது. அவர்கள் அதனை நல்ல நோக்கத்திற்காகப் பயன்படுத்தினர். ஹிட்லர் அதனை இனவாதவெறி பிடித்த ஆட்சிக்காக பயன்படுத்தினான். ஜேர்மன் தேசத்தின் மகிமை என்ற சொற்றொடரைப் பயன்படுத்தி அவன் இலட்சக்கணக்கான யூத ர்களைக் கொன்று குவித்தான். இன்றும் அதே வனவிலங்குகள் திடீரென மீளத் தோன்றுவதைக் காணமுடியும். கூட்டமாக வாழத்தொடங்கிய மனிதன் தமது இனத்தின் பகைவர்கள் என மற்றுமோர் மனிதக் குழுமத்தை அறிமுகப்படுத்தி ஏனைய இனங்கள்மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விடுகிறான். இன்று அநேகமான நாடுகளில் இனவாதம் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது. இனவாதத்தை உறுதிப்படுத்துவதற்கு தேசியவாதம் பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்க வெள்ளையர்களின் வியர்வை மீண்டும் உறுதிப்படுத்தப்படுகின்றதெனக் கூறி அமெரிக்காவில் டொனல் ரம்ப் அதிகாரத்தைக் கைப்பற்றினார். ஆனால், கறுப்பு நிறத்தவர் ஒருவரை கொலை செய்த பொலிஸ் மிருகத்தனத்தை எதிர்த்து பாரிய மக்கள் எதிர்ப்பலை உருவாக்குவதற்கு அதே சமூகம் முன்னணிப் பாத்திரம் வகித்தது. அதன் பின்னால் வெள்ளை மனிதனின் உயர்தன்மையைக் காட்டி முன்னெடுத்த ஆட்சியின் யதார்த்தத்தை மக்கள் அடையாளம் கண்டனர். ஐரோப்பா முழுவதும் அவுஸ்திரேலியா பூராவும் அது பேரலையாக பரந்து விரிந்தது.

எனவே, இனங்கள் மற்றும் ஜனநாயகம்பற்றிய விடயங்களை நாம் சாதகமான முறையில் நோக்க வேண்டும். இனங்கள் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும். இனங்களுக்கிடையே நிலவும் வர்க்க வேறுபாடுகளிடையே உள்ள ஏற்றதாழ்வுகளைக் குறைத்தல் வேண்டும். இனங்களுக்கிடையே விளிம்பு நிலையில் வாழும் மக்கள் மத்தியில் உள்ள அசமத்துவங்களை இல்லாதொழித்தல், சுற்றாடலில் சமநிலையை விருத்தி செய்யக்கூடிய வகையில் செல்லுதல் ஆகிய விடயங்களையும் நோக்கும் தேசிய இணக்கப்பாடுகளை அல்லது தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவது பற்றிய பிரச்சினை எம்முன்னே உள்ளது. 1948 இல் நாம் சுதந்திரம் அடையும்போது எம்முன் இருந்த சவால்களும், வேறு வகையில் கூறுவதாயின் அரசை தேசியமாக மாற்றுகின்ற சவாலையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும். அனைத்து இனங்களும் ஒன்றாக வாழக்கூடிய ஒரு சூழமைவை உருவாக்குவதன் மூலமே அதனை வெற்றிகொள்ள முடியும்.

**அதை எவ்வாறு செய்ய முடியும் ?**

இதுபற்றி பல்வேறு உரு மாதிரிகள் இருக்கக்கூடும். அவை அரசியல், நிருவாகம், சமூக, கலாசார, பொருளாதார, தொழில்நுட்ப ஆகிய அனைத்துத் துறைகளும் உள்ளடக்கக்கூடிய துல்லிய நிகழ்ச்சித்திட்டமாக அமைய வேண்டும். நாம் அநேகமாக இவ்விடயத்தை அரசியல் ரீதியாக மாத்திரமே நோக்க பழக்கப்பட்டிருக்கிறோம். நாம் அரசியல் ரீதியாக நோக்கும்போது அரசாங்க அதிகாரத்தைப் பகிரும் வகையிலேயே நோக்குவோம். அதிகாரப் பகிர்வு அரசியல் ரீதியாக இருக்கக்கூடிய ஒரே மாதிரியல்ல. அவசியமாயின் இந்த அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்தை உருவாக்க முடியும். லெபனான் நாடு இதற்கு சிறந்த உதாரணம். லெபனன் நாட்டின் அனைத்து இனங்களையும் ஒன்றிணைத்து தேசிய ஐக்கிய அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. அதிகாரத்தைப் பகிர்வதற்கு அச்சமாயின் அல்லது விரும்பாவிட்டால் நாமும் அத்தகைய ஒரு மாதிரிக்கு செல்ல முடியும். சிங்களம் - தமிழ் - முஸ்லிம் ஆகிய அனைத்து இனங்களையும் இணைத்து ஐக்கிய அரசாங்கமொன்றை அமைத்து வடக்கில் இருந்தும் பங்குபற்றக்கூடிய ஓர் அமைச்சரவையை மேற்படி பிராந்தியத்திலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். இது ஒரு புதிய கருத்து அல்ல. 1931 இல் டொனமூர் அரசியலமைப்பு முறையில் நான்கு சட்டவாக்க உறுப்பினர்கள்

**"**

**தேசியம் என்ற உணர்வு கூடாததொன்றல்ல. அது நல்லது. தமது தேசியத்தை ஆதரிப்பவர் ஏனைய தேசியங்கள் மீதும் பாசம் செலத்த முடியும். அதன் முன்னேற்றமடைந்த ஒரு கட்டமே சர்வதேச வாதமாகும். தேசியவாதத்தின் தீமையான அம்சம்தான் இனவாதம்.. ஹாவார்ட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவர் இதனை “பகுதி காட்டுமிராண்டித்தனமென அறிமுகப்படுத்தினார். இவற்றைக் காட்டு இயல்பற்ற முறையில் நடைமுறைப்படுத்தினால் அதனை நன்நோக்கத்திற்குப் பயன்படுத்த முடியும். உலகில் தேசிய அரசுகள் தேசியவாதத்தின் மூலமே உருவாக்கப்பட்டன. ஐரோப்பாவில் இத்தகைய தேசிய ௌரசுகளை ஐக்கியப்படுத்தியே ஐரோப்பிய ஒன்றியம் உருவாக்கப்பட்டது.**

பணியாற்றியதோடு அமைச்சர் ஒருவரையும் நியமிப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டு அனைத்து இனங்களும் அங்கத்துவம் வகித்த அமைச்சரவை உருவாக்கப்பட்டது. 1947 சோல்பரி அரசியலமைப்பின்மூலம் தேசிய ஐக்கிய அரசாங்கம் உருவாக்கப்பட்டு சிறுபான்மையினரின் உரிமைகள் அரசியலமைப்பின்மூலம் பாதுகாப்பு வழங்கக்கூடிய சட்டகம் உருவாக்கப்பட்டது. செனெற் சபை, சிறுபான்மை இனங்களின் பிரதிநிதித்துவத்தை உத்தரவாதம் செய்தல் என்பனமூலம் அனைத்து இனங்களும் ஒன்றாக இணைந்து பணியாற்றுவதே எதிர்பார்க்கப்பட்டது. 1947 இல் சோல்பரி பிரபு கண்ட மத்தியதர வர்க்கம் இறுக்கமான இன பிரிவினையைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் நிருவாக நடவடிக்கைகளின்போது ஒத்துழைப்புடன் பணியாற்றினார்கள். 1947 இன் முதலாவது அரசாங்கம் டி.எஸ். சேனாநாயக்கவினால் அமைக்கப்பட்டது. அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய வகையிலேயே அது உருவாக்கப்பட்டது. அனைத்து இனங்களும் ஒன்றிணைந்து செயற்படாவிட்டால் சுதந்திரம் வழங்கப்பட மாட்டாதென்று இங்கிலாந்து கூறியது. அதன் காரணமாகத்தான் "ஐக்கிய தேசிய கட்சி" என்ற பெயரில் கட்சியின் பெயர்கூட உருவாக்கப்பட்டது. இவ்வாறு அனைத்து இனங்களையும் சார்ந்த வலதுசாரித் தலைவர்கள் ஒன்றிணைந்து முதலாவது அரசாங்கத்தை உருவாக்கிய பின்னர்தான் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது. அனைத்து அரசியல் கட்சிகளிடையே அடிப்படை விடயங்கள் தொடர்பாக ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதன்மூலம் முன்னோக்கிச் செல்வதே இன்று அத்தியாவசியமாகும். இதன்மூலம் அநேகமான பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும். எமக்குத் தேவையான கலாசாரங்களுக்கிடையே மோதலுக்குப் பதிலாக கலாசாரங்களுக்கிடையே ஒரு கலந்துரையாடலை உருவாக்கி தேசத்தைக் கட்டியெழுப்பும் சவாலை வெற்றிகொள்ள முடியும். 70 ஆண்டுகளுக்குப் பின்னரும் இதுபற்றி சிந்திக்க முடியுமானால் மிகச் சிறந்தது. இதன்பொருட்டு எமது குறுகிய உலகங்களில் இருந்து நாம் வெளியே வரவேண்டும்.

**எதிர்வரும் தேர்தலின் பின்னராவது புதிய பாராளுமன்றத்தின் முன்னே இருக்கக்கூடிய முதலாவது சவால் எத்தகையது?**

அடுத்த பாராளுமன்றத்தில் கட்சிகளின் சமநிலை எவ்வாறு அமைந்தாலும் இலங்கையின் அனைத்து மக்களையும் ஐக்கியப்படுத்தும் தேசிய கொள்கைகளை நாம் அனுசரிப்பதே எம்முன் உள்ள பிரதான சவாலாகும். அனைத்துக் கட்சித் தலைவர்களும் இதன்பொருட்டு தம்மை அர்ப்பணித்தல் வேண்டும். இனவாதம், மதவாதம் பகைமைக் கூற்றுக்கள் என்பவற்றைப் புறக்கணிப்பதற்கு ஒரு வேலைத்திட்டம் அவசியம். அதற்கு பூரண அதிகாரம்கொண்ட ஓர் ஆணைக்குழுவை நியமிப்பது பொறுத்தமாகும். தேர்தல் ஆணைக்குழுவைப்போல ஏற்புடைய விடயங்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மேற்படி ஆணைக்குழுவிற்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். அதேசமயம் நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குவதற்கு அனைத்துக் கட்சிகளும் கொள்கைரீதியான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கமைய நடவடிக்கை எடுப்பது முக்கியமானது. நாட்டில் அதிகரித்துவரும் சமூக முரண்பாடுகளைப் போலவே வீடற்ற, பருகுவதற்கு குடிநீரற்ற காட்டு யானைகளின் சகிக்க முடியாத படி வாழ்வா சாவா என வாழ்க்கை நடத்தவேண்டிய மனிதர்களைப் போலவே, இளைஞர்களின் அபிலாஷைகளை வெற்றிகொள்வது பற்றியும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். தேசத்தை ஐக்கியப்படுத்துவதாயின் இப்படியான ஒரு துல்லிய நிகழ்ச்சித்திட்டம் இருக்க வேண்டும்.

பாராளுமன்றம் என்பது எதிர்தரப்பு பயில்வான்கள் சந்திக்கும் ஓரிடமல்ல. இவ்விடயங்களைப்பற்றி ஆழமாகக் கலந்துரையாடும் ஒரு சபையாக பாராளுமன்றம் மாற்றப்பட வேண்டும். குறிப்பாக கடந்த காலகட்டங்களில் நாம் அவதானித்ததுபோன்ற வெட்கக்கேடான மோதல்கள் மீள ஏற்படாத வகையில் செயற்பட்டு பாராளுமன்றத்தின கௌரவத்தை மீண்டும் ஸ்தாபிப்பது முக்கிய விடயமாகும். அதேசமயம் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கான நெறிமுறைக் கோவையொன்றையும் உருவாக்குவது அத்தியாவசியமாகும். இத்தகைய அனைத்து நடவடிக்கை ஊடாகவும் பாராளுமன்றத்திற்கு இருக்கக்கூடிய அவப்பெயரை நீக்கி, இந்த நாட்டின் அனைத்து தேசிய இனங்களையும் ஐக்கியப்படுத்தும், அனைத்து இனங்களுக்கும் கலாசாரங்களுக்குமிடையே ஒரு கலந்துரையாடலுக்கு அடிகோலும் ஓர் அமைவிடமாக பாராளுமன்றத்தை உருவாக்க வேண்டும்.

**இத்தருணத்தில் சிவில் சமூகத்தின் பணிகளும் அது எதிர்நோக்கும் சவால்களும் யாவை?**

மனிதன் சிறந்த சிவில் சமூக வாழ்க்கைக்காகவே அரசை உருவாக்கினான். எனவே சிவில்சமூகம் எனக் கூறும்போது அதனைப் பிரதிநிதித்துவப்படுத்துவோர் நல்லொழுக்கமுடைய நாகரீகமான சமூகம் என்றே கருதப்படுகிறது. எனவே சிவில் சமூக அமைப்புக்கள் என்பன நன்னெறிகொண்ட ஒரு சமூகத்திற்காக செயற்படும் சமூக குழுமங்களின் கூட்டாக அமைதல் வேண்டும். ஒருபுறம் அரசியல் தலைமைத்துவத்துடனும், மறுபுறம் மக்களுடனும் இதுபற்றி ஒரு பரந்துபட்ட கலந்துரையாடலை உருவாக்குவது இச் சிவில்சமூகத்தின் கடமையாகும். பிரஜை, நாகரீகத்தன்மை என்பவற்றுடன் இணைக்கப்பட்ட கல்வியறிவை ஏற்படுத்துவது எமது அரசோடு இருக்கக்கூடிய பிரஜைகள் சமூகத்தின் முக்கிய பிரச்சினையாகும். ஆனால் எமது கல்விமுறை அதனை அமுலாக்குவது இல்லை. அதிக போட்டித்தன்மை வாய்ந்த பரீட்சைகளை மையப்படுத்திய சான்றிதழ்களைச் சேகரிக்கும் ஒரு கல்விமுறையே எமது நாட்டில் உள்ளது. எமது பல்கலைக்கழகங்களில் பிரவேசிக்கும் மாணவர்களில் ஒருசிலர் பல்கலைக்கழகத்திற்கு நுழையும் சந்தியிலேயே பட்டச்சான்றிதழ் கிடைப்பதாக இருந்தால் அதனைப் பெற்றுக்கொண்டு திரும்பிச்செல்லத் தயாராகவே இருக்கிறார்களென, பல்கலைக்கழகக் கல்விபற்றி நான் அடிக்கடி கூறுவதுண்டு. பகுப்பாய்வும், திறனாய்வும் கொண்ட சுதந்திரமான கல்வியியலாளர்களை உருவாக்கும் வேலைத்திட்டம் அல்லது தேவை கிடையாது. கல்வி என்பது மனிதத் தன்மையை உருவாக்குவதாகும். மானுடவியல் கூடிய கவனத்தை இது தொடர்பாகவே கவனம் செலுத்துகிறது. அனைத்து தொழில்நுட்ப பாடங்களைக் கற்கும் மாணவர்களுக்கும் இந்த மானுடவியல் பற்றிய புரிதலை இதன் காரணமாகவே வழங்கவேண்டியுள்ளது. அதேசமயம் மானுடவியல் பாடவிடயங்களைக் கற்கும் மாணவர்களுக்கு தொழில்நுட்ப பாடங்களைப்பற்றிய புரிதலும் இருத்தல் வேண்டும். அனைத்து சமயங்கள், கலாசாரங்கள் பற்றிய போதியளவு புரிதல் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும். இந்த அனைத்து விடயங்களும் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தவதற்கான அழுத்தங்களையும் பொறுப்புக்களும் சிவில் சமூகத்துக்கு ஒப்படைக்கப்படுகிறது.

கலந்துரையாடியவர்
**ஜயசிறி ஜயசேக்கர**



# ஜனநாயக நிறுவனங்கள் மீது மக்கள் இழந்த நம்பிக்கையை

## மீளக் கட்டியெழுப்புதல்



ரொஹான் எதிரிசிங்ஹ

**பாராளுமன்றத் தேர்தல் முறையின் பரிணாமம்**

சுதந்திரம் கிடைத்ததுமுதல் முதலாவது தனி அங்கத்தவர் தொகுதிமுறை அல்லது சாதாரண பெரும்பான்மை தேர்தல்முறை நிலவியது. குறிப்பாக அரசியற்கட்சிகள் பெறும் வாக்குகளின் எண்ணிக்கை, சாதாரண பெரும்பான்மை தேர்தல் முறையின்கீழ் குறிப்பிட்ட கட்சிக்கு பாராளுமன்றத்தில் உரித்தாகும் தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கைக்கிடையே பொருத்தப்பாடு இல்லாமையால் 80 களின் ஆரம்பத்தில் விகிதாசார பிரதிநிதித்துவமுறை மாற்றியமைக்கப்பட்டது. எவ்வாறாயினும், இறுதியில் இலங்கையின் அண்மைக்கால அரசியல் வளர்ச்சிக்கான காரணமாக அறிமுகப்படுத்தப்பட்ட விசேட வகையைச் சார்ந்த விகிதாசார பிரதிநிதித்துவமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாண்டின் ஆரம்பத்தில் பாராளுமன்றம் கலைக்கப்படும்வரை நடைமுறையில் இருந்த பாராளுமன்றம் மக்கள் மத்தியில் பாரிய வெறுப்புக்கு



**"**

**இவ்வாண்டின் ஆரம்பத்தில் பாராளுமன்றம் கலைக்கப்படும்வரை நடைமுறையில் இருந்த பாராளுமன்றம் மக்கள் மத்தியில் பாரிய வெறுப்புக்கு உட்படுத்தப்பட்டது. தற்போதைய சட்டவாக்கத் நிலைமையின்கீழ் பாராளுமன்றம் மீள ஆரம்பிக்கப்பட இருந்தாலும் பாராளுமன்றத்தை மீள ஆரம்பிக்கும் தேவை பொதுமக்களுக்கு இருக்கவில்லை. அதுமாத்திரமல்ல பாராளுமன்றத்தை மீளக் கூட்டுவதற்கு பொதுமக்களுக்கு அவசியம் கிடையாதென பத்திரிகைகளில் பல கட்டுரைகளும் பிரசுரிக்கப்பட்டமை இங்கு மனம்கொள்ளத் தக்கது.**

உட்படுத்தப்பட்டது. தற்போதைய சட்டவாக்கத் நிலைமையின்கீழ் பாராளுமன்றம் மீள ஆரம்பிக்கப்பட இருந்தாலும் பாராளுமன்றத்தை மீள ஆரம்பிக்கும் தேவை பொதுமக்களுக்கு இருக்கவில்லை. அதுமாத்திரமல்ல பாராளுமன்றத்தை மீளக் கூட்டுவதற்கு பொதுமக்களுக்கு அவசியம் கிடையாதென பத்திரிகைகளில் பல கட்டுரைகளும் பிரசுரிக்கப்பட்டமை இங்கு மனம்கொள்ளத் தக்கது. பாராளுமன்றத்திற்குப் பதிலாக இராணுவத்திற்கு அதிகாரம் கிடைக்கும் ஆட்சிமுறைக்கு பகிரங்கமாக ஒத்துழைப்பு வழங்கி ஏற்கனவே பொதுமக்கள் அபிப்பிராயம் உருவாக்கப்பட்டது. அது தொடர்பான செய்தி அறிக்கைகள் ஊடாக இக்கருத்து மேலும் மெருகூட்டப்பட்டது. இதுவொரு பாரதூரமான விடயமாகும். இராணுவ ஆட்சிபற்றி புகழாரம் பேசுவோர் அவர்களுடைய கருத்தியலின் விளைவுகளைப்பற்றி பாரதூரமாகச் சிந்தித்துப் பார்த்தார்களா ? அவர்கள் தமது கருத்தை சட்டவாக்க ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சிபற்றிய அடிப்படை குணவியல்புகளோடு பொருத்திப் பார்க்கின்றார்களா ? என்பதுபற்றி நான் ஆச்சரியப்படுகிறேன். எவ்வாறாயினும், இத்தகைய கருத்துக்களை நாம் நிராகரிக்க முடியாது. பாராளுமன்றமும் அரசியல்வாதிகளும் ஏன் இவ்வளவு தூரம் கீழ்த்தரமான முறையில் மதிக்கப்படுகின்றார்கள் என்ற விடயம்பற்றியே நாம் கேள்விக்குட்படுத்த வேண்டியிருக்கிறது. பாராளுமன்றம் இவ்வளவு தூ ரம் மக்கள் மத்தியில் வெறுப்புக்கு காரணமாகவதற்கு இத்தேர்தல்முறை காரணியாக அமைந்துள்ளதென நான் நினைக்கின்றேன். 1940 களில் இருந்து 1977 வரை தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைவிட மிகவும் வித்தியாசமானவர்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர் என்பது இதற்கான காரணியாகும்.

### 1977 இல் இருந்து பொதுமக்கள் தமது பிரதிநிதிகள்பற்றி மக்கள் நம்பிக்கை இழந்தல்

**தேர்தல் முறையில் நிலவும் அடிப்படை பிரச்சினை இதன்மூலம் பொதுமக்களின் பிரதிநிதிகளாகச் செயற்படாமல் தமது அரசியல் கட்சிகளின் தூதுவர்களாகத் தம்மை எண்ணுகின்றனர். பாராளுமன்றத்தில் செயற்படுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். இதற்குக் காரணம் தத்தமது கட்சிகளின் நியமனப்பத்திரங்கள் மூலம் தெரிவுசெய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாக கூடிய அதிகாரங்கள் அரசியல்கட்சிகளுக்கு வழங்கப்பட்டன.** சரளமாகக் கூறினால் 70 களில் அறிமுகப்படுத்தப்பட்ட தேர்தல்முறைமூலம் ஒரு பிரச்சினை ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தீர்க்கப்பட்டது. அதாவது வாக்குகளின் எண்ணிக்கைக்கும் தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கைக்கும் இடையே காணப்பட்ட சீர்கேடுகள் (விகாரம்) பற்றிய பிரச்சினையாகும். அவ்வாறாயினும், அதன்மூலம் பல பிரச்சினைகள் எழுந்தமையால், துரதிர்ஷ்டவசமாக அதுவும் தவறற்ற முறைமையாக அமையவில்லை.

**இரண்டாவது விடயம் தமது வாக்காளர்கள்மீது பாராளுமன்ற உறுப்பினர்களின் வகைப்பொறுப்பு இல்லாமற்போனமை காரணமாக மக்கள் பிரதிநிதிகள்மீது பொதுமக்களின் நம்பிக்கையை இழப்பதற்கு காரணமாக அமைந்தது. பாராளுமன்ற உறுப்பினர்கள் தம்மைத் தெரிவுசெய்த மக்களுக்கு வகைப்பொறுப்பு கூறுவதைவிடுத்து தமது கட்சித் தலைவருக்கு வகைப்பொறுப்புக் கூறுவதற்கே அவர்கள் முயற்சித்தனர். இதன் விளைவாக பாராளுமன்றத்தின் மிக முக்கியமான நடவடிக்கை மழுங்கடிக்கப்பட்டது.** ஒரு திறனாய்வு சபையாகக் கருதப்பட்ட பாராளுமன்றம் நிறைவேற்றுத்துறையின் காவல் நாயாக செயற்படுவதற்கும், அவர்களின் இறுதி வகைப்பொறுப்பு தமது கட்சிக்கு அல்லது கட்சித் தலைவருக்கு வகைப்பொறுப்புக் கூறாமல் மக்களுக்கு விசுவாசமாக இருக்கவேண்டுமென்ற கருத்து மேலோங்கியது. உண்மையில் சுதந்திரத்தின் பின்னர் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டங்களின் உருவாக்கத்தை பரிசீலனை செய்யாமல் பாராளுமன்றத்தில் உரியமுறையில் வினா எழுப்பாமல் நிறைவேற்றுத்துறையை பயனுறுதிவாய்ந்த முறையில் நிர்வகிக்காத வரலாறு எமக்குண்டு. அவர்கள் தமது வாக்காளர்களுக்கு – அதாவது மக்களுக்கு வகைப்பொறுப்புக் கூறுவதற்கு கடப்பாடுடையவர்களாக இருந்தனர். **உதாரணமாக பாராளுமன்றத்தில் பெர்ணாட் சொயிசா என்ன செய்தார் என்பதை மத்திய கொழும்பு மக்கள் அறிந்திருந்தனர். அதேசமயம் டட்லி சேனாநாயக்க என்ன சொன்னார் என்ன செய்தார் என்பதை தெடிகம தொகுதி மக்கள் அறிந்திருந்தனர்.**

**அதேவேளை அத்தனைகல மக்கள் தமது பாராளுமன்ற உறுப்பினரான சிறீமா பண்டாரநாயக்கவுடன் சிறந்த நல்லுறவைக் கொண்டிருந்தனர். அவ்வாறாயினும், இன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விசேட விகிதாசார தேர்தல் முறைமைக்கமைய பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் விசேட புவியியல் பிரதேசத்திற்கிடையே உள்ள வாக்காளர்களுடன் எதுவித உறவும் கொண்டிருக்காத காரணத்தினால் அவர்கள் மக்களுக்கு வகைப்பொறுப்புக் கூறவோ அல்லது பாராளுமன்ற உறுப்பினருக்கு ஓர் அழுத்தமோ ஏற்படுவதில்லை.** தான் மீண்டும் நியமனப் பத்திரங்களைப் பெறுவதோ அல்லது அவர்களின் அரசியல் வாழ்க்கையை முன்னகர்த்திச் செல்வதற்கோ உள்ள மிகச் சிறந்த மார்க்கம் கட்சித்தலைவரை மகிழ்விப்பதாகும் என்பதை அவர்கள் அனுபவ வாயிலாக அறிகின்றனர். எனவே சட்டவாக்கங்களை பரிசீலனை செய்வது அல்லது பாராளுமன்றத்தினுள் சுயாதீனமான தீர்மானங்களை மேற்கொள்வதன்மூலம் உண்மையிலேயே தமது அரசியற்கட்சியின் முன்னோக்கிய பயணத்திற்கு தீமை ஏற்படுவதாகவே அவர்கள் உணர்கின்றனர்.

**ஜனநாயகத்தில் பாராளுமன்றத்தின் பிரதான கடமை தகவல்களுடனான கலந்துரையாடல் மற்றும் கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டு திறனாய்வு கொண்ட சபையாகவும் விவாத அரங்காகவும் செயற்படுவதாகும். அதாவது அரசகொள்கைகள் மற்றும் பிரச்சினைகளைக் கலந்துரையாடும் விவாதிக்கும் ஒரு சபையாகவே பாராளுமன்றம் திகழவேண்டும். இந்நிலைமை இன்று அநேகமாக மாற்றம் கண்டுள்ளது. கட்சி தமது பாராளுமன்ற உறுப்பினர்களை மிகத் தீவிரமாகக் கட்டுப்படுத்துகிறது. எவ்வகையான விசேட சட்டங்களாயினும் ஒரு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்கு முன்னர் வாக்குகள் எப்படி வழங்கப்படும் என்பதை தற்போது முன்கூட்டியே கூறக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. இதற்குக் காரணம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எப்போதுமே தமது கட்சி விதிக்கும் முறையிலேயே வாக்களிக்க முற்படுவதே இதற்குக் காரணமாகும்.** 1982 இற்கு முன்னர் பாராளுமன்றத்தில் இத்தகைய நிலைமை இருக்கவில்லை. மிக அபூர்வமாகவே அத்தகைய நிலைமை உருவாகும். பாராளுமன்றம் அங்கு இடம்பெறும் அனைத்து விடயங்களையும் முன்கூட்டியே கூறக்கூடிய அமைவிடமாக அது வீழ்ச்சியடைந்தது. அங்கு இடம்பெறும் விவாதங்கள் பயனற்றவையாகவே திகழ்ந்தன. நாம் அடையாளப்படுத்திய தேர்தல் முறைகளுக்கிடையே உள்ள உறவுமுறையை அடையாளம்காண முடிந்தது. உட்கட்சி ஜனநாயகமே பிரச்சினையாக அமைந்தது. அல்லது கட்சிகளுக்கிடையே ஜனநாயகம் இல்லாத ஒரு நிலை காணப்பட்டது. எனவே சுதந்திரமான சிந்தனைக்கு ஊக்கமளிக்கப்படவில்லை. நாம் ஏற்கனவே குறிப்பிட்டவாறு விசேட வகையைச் சார்ந்த விகிதாசார தேர்தல்முறை இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது.

எனவே, பாராளுமன்றம் ஒரு நிறுவனமாக சீரழிந்தது. தேர்தல் முறைமைக்கிடையேயான உறவு கவனத்திற்கு எடுக்கப்பட்டபோது எமது தேர்தல்முறை மாற்றப்பட வேண்டும் என்பதே தீர்வாக அமைக்கப்பட்டது. **அரசியற் கட்சிகளின் செயற்பாட்டை நிர்வகிக்கும் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதேசமயம் கட்சிகளின் செயற்பாட்டிற்கு குறைந்தபட்ச தரநிர்ணயம் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்தது. அத்தகைய சட்டத்தின்மூலம் கட்சிகளுக்கிடையே உள்ளக ஜனநாயகம் உறுதிப்படுத்துவதன்மூலம் கட்சித் தலைவர்களின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட வேண்டிய அதேவேளை அறிவுசார் சுயாதீன் மனப்பாங்கு கொண்டவர்கள் அரசியலுக்கு வருகை தருவது ஊக்குவிக்கப்பட வேண்டும்.** அரசியற் கட்சிகளை நிர்வகிக்கும் சட்டங்களும் குறைந்தபட்ச தரநிர்ணயங்களை அறிமுகப்படுத்துவது ஜனநாயக உலகத்தில் அதிகளவில் காணக்கூடிய ஒரு நிலைமையாகும்.



மகளை பாலர் பாடசாலைக்குக் அழைத்துச் செல்லும் பிரித்தானிய பிரதமர்


ஆயுதப்படைகளின் பாதுகாப்புடன் பயணிக்கும் இலங்கை அரசியல்வாதிகள்

### சர்வதேச மட்டத்தில் ஏனைய நாடுகளிடமிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள்

இலங்கையைப் பொறுத்தவரை நாம் முன்வைக்கும் சில பிரச்சினைகள் வேறு நாடுகளில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டன என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். நிறைவேற்றுத்துறை சட்டவாக்கத்துறை மீது ஆதிபத்தியத்தைச் செலுத்தும் போக்கு மற்றும் சட்டவாக்கத்துறையின் அதிகாரம் மற்றும் செல்வாக்கு பலவீனமடைதல் சர்வதேச போக்கைக் கொண்டதாகத் தோன்றுகிறது. அவ்வாறாயினும், கூர்மையான விவாதங்கள் மற்றும் பரிசீலனை உடனான திறனாய்வுகள் இடம்பெறும் அரங்காக பாராளுமன்றம் செயற்பட வேண்டியது அதன் முக்கிய கடமைகளில் ஒன்று. இதற்கான உதாரணங்களை நாம் தொடர்ந்தும் காணமுடியும்.


**கடந்த வருடத்தில் இங்கிலாந்தில் BREXIT விவாதத்தை நாம் அவதானித்தோம். அதன்போது அந்நாட்டின் சட்டவாக்க உருவாக்கத்தில் பாராளுமன்றம் எவ்வளவு சக்திவாய்ந்தது என்பதை நாம் அறியக்கூடியதாக இருந்தது. திரேசாமேயும் பின்னர் பொரிஸ் ஜொன்சனும் பாராளுமன்ற அங்கீகாரத்தைப் பெறத் தவறிவிட்டனர். அவர்கள் இதுவிடயமாக கடும் பிரயத்தனத்தை மேற்கொண்டனர். பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட பல்வேறு பிரேரணைகளின்போது மிகத் தீவிரமான விவாதப் போட்டியை எதிர்நோக்க வேண்டியிருந்தது. பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமான தீர்மானங்களை மேற்கொள்ளும் நிலைமை இருந்தமையே இதற்குக் காரணமாகும். அவர்கள் சுயாதீனமாக தீர்மானங்களை மேற்கொண்டது மாத்திரமல்லாமல் தாம் வாக்காளர்களையும் தேர்தல் தொகுதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதை புரிந்துகொண்டிருந்தனர். அவர்கள் அதன் காரணமாக நானாவித பிரேரணைகளின்போது மேற்கொள்ள வேண்டிய நிலைப்பாட்டை தீர்மானிக்கையில் தமது தேர்தல் தொகுதியின் கருத்தைக் கண்டறியவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் முற்பட்டனர்.**

தென்னாசியாவை நாம் கவனத்தில் எடுத்தால் சாதாரண பெரும்பான்மை வாக்காளர்கள்மூலம் தெரிவுசெய்யப்படும் தேர்தல் முறையினை கைவிடும் அல்லது அப்போக்கு ஒரு அலங்காரத் தன்மைவாய்ந்ததாகக் காணப்படும் விகிதாசார தேர்தல் முறையை அவர்கள் அனுசரிப்பதை இந்தியா மிகத் தீவிரமாக நிராகரித்தது. இந்தியாவிலும் "லோக் சபா" விவாதங்கள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்கின்றன. முறையே ஜேர்மனி மற்றும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் தொடர்ந்தும் கணிசமான அதிகாரத்தைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். அமெரிக்கா போன்ற நாடுகளில்கூட புண்டஸ் டா மற்றும் காங்கிரஸின் அங்கீகாரம் குறிப்பிடத்தக்க அளவு முக்கியத்துவம் பெறுகிறது. சிலவேளை தமது கட்சியின் நிலைப்பாட்டிற்கு எதிராக வாக்களிக்கும் ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சியினர் ஒன்றில் தமது சுயாதீன தீர்ப்பில் அல்லது மனச்சாட்சிக்கு உடந்தையாக செயற்படுகின்றனர். எனவே பொதுமக்களின் அழுத்தம் காரணமாகவே அவர்கள் அவ்வாறு செயற்படுகின்றனர். இம்மக்கள் பிரதிநிதிகள் தமது அரசியல்கட்சிகளை விட தமது தொகுதி மக்களுக்கு வகைப்பொறுப்புக் கூறவேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

எனவே, காலனித்துவ ஆட்சிக்கு முன்னர்கூட இலங்கையில் பிரதிநிதித்துவ ஆட்சிமுறை இருந்ததென்பதையிட்டு இலங்கை பெருமைப்பட முடியும். ஆனால், பொதுமக்கள்மீது நம்பிக்கை இல்லாமையும் அதன்மூலம் ஜனநாயக நிறுவனங்களும், மக்கள் பிரதிநிதிகளும் சீரழியத் தொடங்கியமை பாராதூரமாகக் கவனிக்க வேண்டிய ஒரு பிரச்சினையாகும்.

### பாராளுமன்ற முறைமை பற்றிய மதிப்பை மீளக் கட்டியெழுப்புவோம்.

சாதாரண பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறைமையின் நல்ல குணவியல்புகளையும் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் அடிப்படைக் கோட்பாடுகளையும் தொடர்புபடுத்தி கலப்பு தேர்தல் முறைமையாக எமது தேர்தல் முறைமையை மாற்றியமைக்க வேண்டும். அதேசமயம் அரசியல் கட்சிகளின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை தற்போது அறிமுகப்படுத்த வேண்டியது மிக அவசியமாகும். **அத்தகைய சட்டத்தின்மூலம் நிருவகிக்கக்கூடிய மற்றுமோர் விடயம் அரசியல்கட்சிகள் நிதி திரட்டும் செலவுசெய்யும் முறைமையைக் கண்டறிவதாகும். ஐக்கிய அமெரிக்கா உட்பட அநேகமான நாடுகளில் அரசியற்கட்சிகளினதும் பரப்புரைக்கான செலவுகளையும் கட்டுப்படுத்துவதற்கான ஓர் வழிமுறை உண்டு. இலங்கையில் சக்திவாய்ந்த ஓர் அரசியல் கட்சிமுறைமை**



"

**விகிதாசார தேர்தல் முறையை அவர்கள் அனுசரிப்பதை இந்தியா மிகத் தீவிரமாக நிராகரித்தது. இந்தியாவிலும் "லோக் சபா" விவாதங்கள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்கின்றன. முறையே ஜேர்மனி மற்றும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் தொடர்ந்தும் கணிசமான அதிகாரத்தைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். அமெரிக்கா போன்ற நாடுகளில்கூட புண்டஸ் டா மற்றும் காங்கிரஸின் அங்கீகாரம் குறிப்பிடத்தக்க அளவு முக்கியத்துவம் பெறுகிறது. சிலவேளை தமது கட்சியின் நிலைப்பாட்டிற்கு எதிராக வாக்களிக்கும் ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சியினர் ஒன்றில் தமது சுயாதீன தீர்ப்பில் அல்லது மனச்சாட்சிக்கு உடந்தையாக செயற்படுகின்றனர். எனவே பொதுமக்களின் அழுத்தம் காரணமாகவே அவர்கள் அவ்வாறு செயற்படுகின்றனர்.**




ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மற்றும் இந்திராகாந்தி

**இல்லாமைக்கு ஒரு பிரதான காரணி அரசியற்கட்சிகள் நிதியை எவ்வாறு திரட்டுகின்றன என்பதுபற்றிய பரிசீலனை அல்லது தேர்தல் பரப்புரைகளுக்கான செலவினங்களை அவதானிப்பதற்கு ஒரு வழிமுறை இலங்கையில் இல்லாமையாகும். கடந்த காலத்தில் கட்சிகளின் நிதிபற்றி சில சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.** போதிய அரசியல் ஒத்துழைப்பு இல்லாமையால் அவை அனைத்தும் தோல்வி கண்டன. அத்தகைய முயற்சிகளுக்கு அரசியல்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தன. எவ்வாறாயினும், பரப்புரை செலவுகள் மற்றும் கூடிய பொதுமக்கள் பரிசீலனைக்கான சட்டத்தின் அவசியம் அதிகரித்து வருகிறது. இதுதொடர்பான எவ்வித சட்டமும் இல்லாமை காரணமாக பாராளுமன்ற உறுப்பினர்களாக செயற்படுவதற்கு உரித்தான தகைமைகள் மற்றும் ஆற்றல்கள் கொண்ட அறிவுபூர்வமான நபர்களுக்குப் பதிலாக பாரிய அளவு நிதியை வழங்கக்கூடிய அல்லது அத்தகைய நிதியை நன்கொடையாக வழங்கக்கூடிய கட்சி அங்கத்தவர்களுக்கும் வேட்பாளர்களுக்கும் அனுசரணை வழங்கும் ஓர் முறைமையே நிலவுகிறது.

இரண்டாவதாக, **பாராளுமன்ற முறைமையின் சீரழிவு ஜனாதிபதி முறைமையை அறிமுகப்படுத்திய பின்னர் இரண்டும் சம மட்டத்திற்கு வந்துள்ளன. இவற்றிற்கிடையே ஓர் உறவு காணப்படுகிறது. இலங்கையில் பாராளுமன்ற நிறைவேற்றுத்துறை அமுலாக்கப்பட்ட காலத்தில் நிறைவேற்றுத்துறையைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரம் அதிகளவில் பாராளுமன்றத்திற்கு இருந்தது. நிறைவேற்று ஜனாதிபதி பாராளுமன்றதத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டார். அதேசமயம் சக்திவாய்ந்த நிறைவேற்று ஜனாதிபதி ஒருவரான திரு.ஆர். பிரேமதாசவின் ஆட்சியின்கீழ், மக்களால் தெரிவு செய்யப்படாத ஆலோசகர்கள் அநேகமாக அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சர்களைவிட செல்வாக்குடையவர்களாகச் செயற்பட்டனர். தற்போது அதேவிதமான போக்கை இப்போது காணக்கூடியதாக உள்ளது.**

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் மூலம், நிறைவேற்றுத்துறைக்கு கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதேசமயம் அதன் ஊடாக பாராளுமன்றத்தைப் போலவே மக்களுக்கும் நிறைவேற்றுத்துறையின் வகைப்பொறுப்பைக் குறைக்க முடிந்தது. 1970 களின் ஆரம்பத்தில் **திரு.டட்லி சேனாநாயக்க நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை எதிர்த்தார். நிறைவேற்று ஜனாதிபதி முறைமை மூலம் பாராளுமன்றமும் நீதிமன்றமும் ஏனைய ஜனநாயக நிறுவனங்களும் தரம் குறைக்கப்படுவதாக திரு.டட்லி சேனாநாயக்க குறிப்பிட்டார். இலங்கை அரசியலின் முக்கிய கவனத்திற்கு உள்ளாக்கப்படும் அமைவிடமான பாராளுமன்றம் திறனாய்வுச் சபையாக செயற்படும் அதன் முக்கியத்துவத்தை நிறைவேற்று ஜனாதிபதி முறைமை மூலம் மிகத்தெளிவாக தாழ்த்தப்பட்டுள்ளது.**

**மேலும், அரசியற்கட்சிகளிடையே ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் சட்டங்களை அறிமுகப்படுத்துவதும் பெண்களையும் மற்றும்**

"

**நேபாள பாராளுமன்றத்தின் பெண் பிரதிநிதித்துவம் இலங்கையைவிட அதிகமாகும். அது பாராளுமன்றத்தில் மாத்திரமல்லாமல் உள்ளூ ராட்சி, மாகாணசபைகள் உட்பட அனைத்து ஜனநாயக நிறுவனங்கள் தொடர்பான யதார்த்தமாகவும் அமைந்துள்ளது. உண்மையில் பெண் பிரதிநிதித்துவத்தைப் பொறுத்தவரையில் இலங்கை இப்பிராந்தியத்தில் மிகவும் பின்னடைந்த அரசுகளில் ஒன்றாகத் திகழ்கின்றது.**

**இளைஞர்களையும் உள்ளடக்கக்கூடிய வகையில் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடிய அளவு பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துவதும் பொதுமக்களின் நம்பிக்கை இழந்த நிலையில் அதற்கான மாற்றீடுகளை ஈடுபடுத்துவதும் அவசியமான காரணிகளாகின.**

பாராளுமன்றத்திற்கு கூடிய உட்பிரவேசத்தையும் பன்முகத்தன்மையையும் முன்னெடுப்பதன்மூலம் அது சிறந்த பிரதிநிதித்துவ நிறுவனமாக மாற்றமடையும். அதேசமயம் அதன்மூலம் பாராளுமன்றம் ஒரு நிறுவனமாக மிகக்கூடிய பயனுறுதிவாய்ந்த நிறுவனமாக மாற்றமடையுமென எதிர்பார்க்க முடியும். உதாரணமாக நேபாள பாராளுமன்றத்தின் பெண் பிரதிநிதித்துவம் இலங்கையைவிட அதிகமாகும். அது பாராளுமன்றத்தில் மாத்திரமல்லாமல் உள்ளூராட்சி, மாகாணசபைகள் உட்பட அனைத்து ஜனநாயக நிறுவனங்கள் தொடர்பான யதார்த்தமாகவும் அமைந்துள்ளது. உண்மையில் பெண் பிரதிநிதித்துவத்தைப் பொறுத்தவரையில் இலங்கை இப்பிராந்தியத்தில் மிகவும் பின்னடைந்த அரசுகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. இத்தகைய மாற்றங்கள்மூலம் அனுசரணை அரசியல்பற்றிய நிகழ்கால அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது அவர்கள் எவ்வளவு வினைத்திறனுடன் தமக்கு அனுசரணை பெறுகின்றனர், அவர்களுடைய வாகனங்கள் எவ்வளவு பெரிதானதாக அமையவேண்டும்? பாதுகாப்பு படையினர் எத்தனைபேர் இருக்க வேண்டும்? என தீர்மானிப்பவர்களாக அரசியல்வாதிகள் மாறியுள்ள நிலைமையை மாற்றியமைக்க முடியும். எமது அரசியல் கலாசாரத்தில் ஏற்படும் இத்தகைய மாற்றங்கள்மூலம், நாட்டின் அரசியல் நிறுவனங்கள்மீது கூடிய பொதுமக்கள் நம்பிக்கையைக் கட்டியெழுப்;புவதற்கு அடிப்படை தோன்றுமென எதிர்பார்க்கலாம்.

அதற்கு மேலதிகமாக, **தமது மனச்சாட்சிக்கேற்ப வாக்களிக்கும் வாய்ப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டும். உறுப்பினரின் மனச்சாட்சிக்கும் கட்சித் தலைவரின் தொலைநோக்கிற்குமிடையே ஒரு மோதல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் இது முக்கியமானது. இதனைத் தவறாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு உண்டாயினும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உரித்தான மனச்சாட்சி சுதந்திரத்தை உறுதிப்படுத்தக்கூடிய எல்லோரும் மிகவும் கூருணர்வுகொண்ட தவறுகளாக நடைமுறையில் குறைந்தபட்ச வழிமுறையை அபிவிருத்தி செய்வது முக்கியமாகும். உதாரணமாக எந்தப் பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்கட்சியில் இருந்து அரசாங்கக் கட்சிக்குத் தாவ முடியாத வகையில், எதிர்க்கட்சியில் இருந்து அல்லது சுயாதீன நியமனப் பத்திரத்தின்மூலம் நியமனம்பெற்ற எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் அரசாங்க நிறைவேற்றுத்துறையின் எந்தவொரு பதவியையோ அல்லது அமைச்சர் பதவியையோ பெற முடியாத வழிமுறை எமக்கு இருத்தல் வேண்டும். அத்தகைய மட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தி, தமது பாராளுமன்ற தொகுதியை இழக்காத வகையில் சில விடயங்களின்போது தமது கட்சிக்கு மாறாத நடைமுறைப்படுத்துவதற்கு பாராளுமன்ற உறுப்பினருக்கு இடமளித்தல், பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடிய சுயாதீனமான கலாசாரத்தை நிர்மாணிப்பதற்கு உதவுவார்கள். எமது தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள்மீது பொதுமக்களின் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு இது முக்கியமாகும்.**

### ஜனாதிபதி செயலணிகளும் பாராளுமன்ற குழு முறைகளுக்கும் இடையே உள்ள மோதல்கள்

செயலணிகளுக்கும் பாராளுமன்ற முறைமைக்கும் இடையே Conflict off Interst ஏற்படுவது இயல்பானது. செயலணிகளின் சட்டபூர்வமான தன்மைபற்றி பாரதூரமான ஒரு பிரச்சினை இருக்கிறது. அவ்வாறாயினும், நாம் தற்போது சட்டபூர்வமான தன்மைக்கோ அல்லது சட்டத்தின் ஆட்சிக்கோ குறைந்த மதிப்பை அளிக்கும் ஒரு காலகட்டத்திலேயே வாழ்கின்றோம். **இலங்கையின் அரசியலமைப்பிற்கு அமைய நாட்டின் பாராளுமன்றம் இயங்காமல் மூன்று மாதங்களுக்கு மேல் செயற்பட முடியாது. எனவே, கொரோனா தொற்று பரவிய காரணத்தினால் தேர்தல்கள் பிற்போடப்பட்ட போது, எது நடந்தாலும், 2015 இல் தெரிவுசெய்யப்பட்ட 2020 செத்தெம்பர் வரை நடைமுறையில் இருந்த பாராளுமன்றத்தை மீளக் கூட்டியிருக்க வேண்டும். பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளை ஒருவர் ஏற்றுக்கொண்டாலும் சட்டபூர்வமான தன்மை அதுவே. பாராளுமன்றம் இல்லாமல் ஆட்சி நடைபெறும் ஒரு நாட்டில் ஜனநாயகம் நிலவுகிறதென கூற முடியாது. துரதிர்கூஷ்டமாக அரசியலமைப்பை பாதுகாப்பதற்கு இருக்கக்கூடிய அங்கீகாரம் கொண்ட நிறுவனமான உயர்நீதிமன்றத்தின் முன்னே இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த அடிப்படை உரிமை தொடர்பான மனுக்களை பரிசீலனை செய்ய இடமளிக்க முடியாதென உயர்நீதிமன்றம் மறுதலித்தது. அதேசமயம் அதன்மூலம் விசாரணை செய்வதற்குக்கூட இதன்போது ஒரு பிரச்சினையும் கிடையாதென்றே உயர்நீதிமன்றம் தீர்மானித்தது. 1950 களில் பிரஜா உரிமைப் பிரச்சினை, 1956 களில் மொழிப் பிரச்சினை ஆகிய முக்கிய விடயங்களில் நம்பிக்கை இழக்க நேரிட்ட உயர்நீதிமன்ற தீர்ப்புக்களைப் போலவும், 1982 இல் அரசியலமைப்பிற்கு எதிராக ஜே.ஆர்.ஜெயவர்த்தன முன்மொழிந்த சர்வஜன வாக்கெடுப்புக்கு இடமளிக்க மேற்கொண்ட தீர்மானமும், உயர்நீதிமன்றம் என்ற முறையில் தமது வகைப்பொறுப்புக்களைத் தட்டிக்கழித்த சந்தர்ப்பங்களாக இவற்றை எடுத்துக் காட்டலாம்.**

நான் ஏற்கனவே குறிப்பிட்டவாறு அமைச்சரவையையும் பாராளுமன்றத்தையும் விஞ்சும் ஜனாதிபதி செயலணிகளைத் தாபித்தல் அரசியலமைப்பிற்கு முரணானதாகும். எவ்வாறாயினும், தற்போதைய கலந்துரையாடலின்போது கூடுதலாக கவனிக்க வேண்டிய விடயம், மேற்படி வளர்ச்சிப்போக்கு பற்றி பொதுமக்களின் கூடுதலான கவனமோ அல்லது அது சம்பந்தமான இடையறா முயற்சியோ காணப்படாமையாகும். இதற்குக் காரணம்: **அமைச்சரவை நெறிப்படுத்தும் ஆட்சியைவிட இராணுவத்தின் தலைமைத்துவத்துடனான செயலணிகளுக்கு அநேகமானோர் ஒத்துழைப்பு வழங்குகின்ற அளவிற்கு இலங்கையின் அரசியல்வாதிகள் மற்றும் ஜனநாயக நிறுவனங்கள்மீதும் பொதுமக்களின் நம்பிக்கை இல்லாத ஒரு நிலைமை உருவாகி உள்ளது. மிகக் கூடுதலாகக் கவனம் செலுத்தப்பட வேண்டிய இந்த விடயம்பற்றி பின்நோக்கிப் பார்ப்பது மிக மிக அவசியமாகும். கடந்த 20 ஆண்டுகளாக கூடிக்குறைந்த காலஎல்லைக்குள் எமது அரசியல்வாதிகள் பொதுமக்களின் நம்பிக்கையை இழந்துள்ளனர். அதேசமயம் சுதந்திரமான சட்டரீதியான ஜனநாயகத்தின் அடிப்படை கோட்பாடுகள் மற்றும் குணஇயல்புகளான பொதுமக்களின் நம்பிக்கையை இழப்பதற்கு பங்களிப்புச் செய்துள்ளமையை நாம் புரிந்துகொள்வது மிக முக்கியமாகும்.**




# ஒழுங்குறுத்தப்படாத தேர்தல் செலவினம்

## நாட்டு மக்களின் வாழ்க்கைச் சுமை அதிகரிப்பதற்கும் ஒரு காரணம்




**மஞ்சுள கஜநாயக**
தேசிய ஒருங்கிணைப்பாளர்
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV)


நாட்டின் ஜனநாயத்தை பலப்படுத்துவதற்காக தேர்தல் என்று வருகின்ற போது உருவாக்கப்பட வேண்டிய சமூகப் பின்னணியினை நீதிமன்றத்தின் ஊடாக அடைந்து கொள்வதற்காக இந்தியாவின் தேர்தல்கள் ஆணைக்குழுவானது இதுவரை ஒரு மகத்தான இடத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளது. இந்திய நீதிமன்றத்தால் அண்மைக் காலமாக வழங்கப்பட்டுள்ள சில தீர்ப்புக்கள் மூலம் அதன் நீதிமன்ற மனப்பாங்கானது தீவிரத் தன்மை மற்றும் மறுசீரமைப்பு ரீதியிலான பிரயோகம் ஆகியவற்றின் சேர்க்கையுடன் நடைமுறைப்படுத்தப்படுவதனைப் பிரதிபலிக்கின்றது.

அவ்வாறான ஒரு தீர்ப்பின் போது இந்திய உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு பகுதி பின்வருமாறு:

“அதிகாரம், செல்வம் மற்றும் சமூக அந்தஸ்து ஆகியன இருக்குமாயின் இந்தியாவில் 60 வயதுக்கு மேற்பட்ட ஒரு நபருக்குக் கூட எந்தவிதமான தடைகளும் இன்றி அழகான இளவயது யுவதி ஒருத்தியை தனது வாழ்க்கைத் துணையாக தேர்ந்தெடுக்க முடிந்த ஒரு யுகம் இருந்தது. அவ்வாறான யுவதிகள் தங்களது திருமணங்களுக்கு எவ்வளவு தான் எதிர்ப்புத் தெரிவித்த போதும் அவர்களால் கண்ணீர் வடிப்பதைத் தவிர எதுவும் செய்ய முடியாதிருந்தது. ஆயினும், இன்று இளைஞர் யுவதிகள் தமது திருமணத்திற்கு முன்னர் தங்களது துணைவி அல்லது துணைவர் பற்றி நன்றாக தகவல்களை விசாரித்து அறிவதுடன்




**அரசியல் கட்சிகள் என்பது நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் உள்ள மனித வளத்தை வளர்த்தெடுத்து அதனை மெருகூட்டும் பணியினை மேற்கொள்ளும் ஒரு முன்னுரிமைக் கட்டமைப்பு ஆகும். ஆதலினால் அதனிடம் உள்ள சமூகப் பொறுப்புடன் இணைந்ததாக அவர்களது புனிதத் தன்மை பற்றி எந்தவொரு பிரசைக்கும் கேள்வி கேட்கக் கூடிய ஆற்றல் இருத்தல் வேண்டும். அதன் காரணமாகவே ஓர் அரசியல் கட்சியாக இருந்த போதும் ஏதோ ஒரு வகையில் ஒழுங்குறுத்தலுக்கு உட்படுத்தப்படல் வேண்டி உள்ளது. அதன்போது அரசியல் கட்சிகளினால் மேற்கொள்ளப்படும் செலவுகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்படும் உதவிகளை சரியான முறையில் கணக்காய்விற்கு உட்படுத்தல் மற்றும் அது தொடர்பாக வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளல் ஒரு சமூகப் பொறுப்பாகக் காணப்படுகிறது.**

தேடிப் பார்ப்பார்கள். அதன் போது தாம் திருப்தியடையும் பட்சத்தில் மாத்திரமே அவர்கள் திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்கின்றனர். நாம் தேர்தல் ஒன்றின் போது மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்ற போதும் அவ்வாறு தேடிப் பார்த்து தெரிவு செய்தல் வேண்டுமென எவரேனும் எண்ணிப் பார்த்தது உண்டா? ஒப்பற்ற ஒரு ஜனநாயக முறைமையில் அடிமட்ட மக்கள் மத்தியில் உள்ள வாக்காளர்கள் கூட தாம் வாக்களிக்கும் அபேட்சகரின் வாழ்க்கைத் தகவல்கள் பற்றி அறிந்திருத்தல் மற்றும் அதன் பிரகாரம் தனது எதிர்கால ஆட்சியாளர்கள், சட்டம் இயற்றுபவர்கள் அல்லது தனது இனத்தின் தலைவிதி தொடர்பாக பொறுப்புக் கூறும் நபர்கள் பற்றி தீர்மானம் மேற்கொள்வது அத்தியவசியம் தானா? (சிவில் உரிமைகளுக்கான தொழிற்சங்க ஒன்றியம் மற்றும் ஏனையவை எதிர் இந்திய தொழிற்சங்க ஒன்றியம் மற்றும் ஏனையவை).

இதன் மூலம் உருவாகும் இலகுவான கருத்து யாதெனில் வாக்காளர் தனது தெரிவு தொடர்பாக இரண்டு தடவைகள் அல்ல நூறு தடவைகள் சிந்தித்தல் வேண்டும் என்பதாகும். அவ்வாறான ஒரு எண்ணப்பாட்டின் போது தவிர்க்க முடியாத ஒரு காரணியாக பணம் காணப்படுகிறது.

பணம் தொடர்பாக ஒருவருக்கு ஒருவர் மத்தியில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. பணம் இல்லாத ஒரு மக்கள் சமூகம் பற்றிச் சிந்திப்பது கடினமான ஒரு விடயம் ஆகும். ஒரு சந்தர்ப்பத்தில் 'செவத்' நகரத்தின் 'தெவ்றம்' விஹாரையில் வீற்றிருந்த கௌதம புத்த பெருமான் பணத்தை ஒரு பாம்புடன் ஒப்பிட்டுக் காட்டினார். முறையாக கிரகித்துக் கொள்ளாத ஒரு நபர் பணத்தை தீமையான செயல்களிலேயே ஈடுபடுத்துவார் என்பதனை இதன் மூலம் புரிந்து கொள்ள முடிகின்றது. அதன் காரணமாகவோ என்னவோ ஐக்கிய அமெரிக்க குடியரசின் புகழ்பெற்ற ஓர் அரசியல் அவதானியான ஜெஸ்.எம். உன்றுஹ் (Jesse M'Unruh) பணத்தை "அரசியலின் தாய்ப் பால்" என அழைத்தார்.

### தேர்தல் செலவினங்கள்: யாவை? யாருடையது?

தேர்தல் என்பது சனநாயக சமூகம் ஒன்றின் பிரசைகளைக் கவரச் செய்யும் ஓர் அபூர்வமான பயன்பாடு ஆகும். அதனாலேயே அது சனநாயகத்தின் மகோத்சவம் என அழைக்கப்படுகிறது.

தெற்காசிய மக்கள் மதத்திற்கும் அப்பால் சென்று மதிமயங்கும் ஒரு விடயம் உண்டு என்றால் அது காலத்திற்குக் காலம் நடாத்தப்படும் தேர்தல்கள் ஆகும் என்பதுடன் இலங்கையர்களும் தமது அறுசுவையினை நீண்டகாலத்திற்கு பேணிச் செல்லும் ஒரு தேசிய நிகழ்வாக தேர்தல்கள் காணப்படுகின்றன. இந்த நாட்டுக்கு சர்வஜன வாக்குரிமை கிடைக்கப் பெற்ற போது நடாத்தப்பட்ட இலகுவான ஒரு தேர்தல் செயன்முறையினை இன்று காண முடியாது உள்ளது. வர்ணங்கள் தீட்டப்பட்ட வாக்குப் பெட்டிகளுக்குள் இடப்பட்ட வாக்குகள் இன்று பாதுகாப்பாக தயார் செய்யப்பட்ட ஒரு காட்போட் பெட்டிக்குள் இடப்படுவதன் காரணமாக இலகுவான தன்மை புலப்படக் கூடும். ஆயினும் உண்மையாகவே உலகம் மென் மேலும் வர்த்தகமயமாக்கலுக்கு உட்படுவதற்குச் சமாந்தரமாக தேர்தல்களும் பணம் எனும் சூறாவளியின் முன் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மக்களது கருத்தினை அரசியல் ரீதியாக ஒழுங்கமைக்கும் பணி அரசியல் கட்சிகளினால் மேற்கொள்ளப்படுகிறது. இந்த அர்த்தத்திலேயே பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினைக் கொண்ட இலங்கை போன்ற ஒரு நாட்டுக்கு அரசியல் கட்சிகள் முக்கியம் பெறுகின்றன. ஒரு தடைவ ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் ஓர் அரசியல் கட்சி மறுதடவை ஆட்சியில் இருந்து புறம் தள்ளப்படுகிறது. அவ்வாறு இருந்த போதும் அரசியல் கட்சிகள் சமூகத்தை அரசியல் ரீதியாக ஒழுங்கமைக்கும் பொருட்டு மேற்கொள்ளும் முயற்சிக்காக பணம் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற தலையீடு முடிவினை நிர்ணயிக்கக் கூடியது ஆகும். ஆகவே அதனை இரண்டு முறைகளில் அளவீடு செய்ய முடியும்.

அரசியல் கட்சிகள் என்பது நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் உள்ள மனித வளத்தை வளர்த்தெடுத்து அதனை மெருகூட்டும் பணியினை மேற்கொள்ளும் ஒரு முன்னுரிமைக் கட்டமைப்பு ஆகும். ஆதலினால் அதனிடம் உள்ள சமூகப் பொறுப்புடன் இணைந்ததாக அவர்களது புனிதத் தன்மை பற்றி எந்தவொரு பிரசைக்கும் கேள்வி கேட்கக் கூடிய ஆற்றல் இருத்தல் வேண்டும். அதன் காரணமாகவே ஓர் அரசியல் கட்சியாக இருந்த போதும் ஏதோ ஒரு வகையில் ஒழுங்குறுத்தலுக்கு உட்படுத்தப்படல் வேண்டி உள்ளது. அதன்போது அரசியல் கட்சிகளினால் மேற்கொள்ளப்படும் செலவுகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்படும்

உதவிகளை சரியான முறையில் கணக்காய்விற்கு உட்படுத்தல் மற்றும் அது தொடர்பாக வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளல் ஒரு சமூகப் பொறுப்பாகக் காணப்படுகிறது.

அரசியல் நிதி: வருடத்தின் 365 நாட்கள் தினங்கள் பூராகவும் ஏதோ ஒரு அரசியல் செயற்பாட்டுக்காக சேகரிக்கப்படும் அல்லது செலவு செய்யப்படும் நிதி இப் பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது.

தேர்தல் பிரச்சார செலவுகள்: ஏதோ ஒரு தேர்தலுக்காக ஓர் அரியசியல் கட்சி வேட்பாளர் மேற்கொள்ளும் செலவினம் மற்றும் பெற்றுக் கொள்ளும் பணம் இவ்வாறு அழைக்கப்படும்.

இந்த நாட்டில் உத்தியோகபூர்வமாக 70 அரசியல் கட்சிகள் செயற்படுகின்றன. இவ்வாறான ஒரு பின்னணியில் வருடம் பூராகவும் இடம்பெறும் அரசியல் செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்து அது தொடர்பாக பின்னாய்வினை மேற்கொள்ளல் அவ்வளவு தூரம் இலகுவான ஒரு காரியம் அல்ல. அது அபிவிருத்தி அடைந்த ஒரு நாட்டுக்கு இலகுவான காரியமாக அமைகின்ற போதும் இலங்கை போன்ற நடுத்தர வருமானம் ஈட்டும் ஒரு நாட்டுக்கு தாங்கிக்கொள்ளக் கூடிய ஒரு செலவு அல்ல. ஆகவே தேர்தல் பிரச்சார செலவுகள் தொடர்பான விடயங்களை வெளிக்கொணர்வதற்கு முயற்சி மேற்கொள்ளல் பெரிதும் நடைமுறை சாத்தியமான ஒரு மாற்று நடவடிக்கை எனக் குறிப்பிடுவது சுயநலம் கொண்ட ஒரு கூற்றாக இருக்க முடியாது.

**தேர்தல் பிரச்சார செலவுகள் ஏன் ஒழுங்குறுத்தப்படல் வேண்டும்?**

நீங்கள் கயிறு இழுக்கும் போட்டி ஒன்றில் போட்டியிட முன் வருகிறீர்களாயின் அதன்போது காணப்பட வேண்டிய ஆகக் குறைந்த தர நிர்ணயம் யாது? யாரும் அனுகூலத்தைப் பெற்றுக் கொள்ள முடியாத விதமாக ஒரே மாதிரியான புவியியல் பிரதேசம் காணப்படல் வேண்டும். ஆயினும் ஒரு நாட்டின் மக்களை வழிநடாத்துவதற்கு மற்றும் ஓர் உன்னத நாட்டை உருவாக்குவதற்காக நடைபெறும் ஒரு தேர்தலில் அவ்வாறு நடுநிலையான புவியியல் பிரதேசம் இல்லாமை பிரச்சினைக்கு உரியது என்பதுடன் அளவு கடந்த சொத்துக்களை தம் வசம் வைத்திருக்கும் நபர்கள் மாத்திரம் மக்கள் பிரதிநிதியாக தெரிவு செய்யக்கூடியதாக இருப்பது தவிர்க்க முடியாத ஒன்று ஆகும். பெண் அபேட்சகர்கள் விடயத்திலும் இது பாதக விளைவினை ஏற்படுத்துவதுடன் ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண் அபேட்சகர்களுக்கு பணம் செலவு செய்வதற்கு பிரதான நீரோட்டத்தில் உள்ள அரசியல் கட்சிகள் கூட அவ்வளவு தூரம் ஆர்வம் காட்டுவதில்லை.

**கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தேர்தல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நேரடி செலவினம்:**


| ஆண்டு | செலவினம் ரூ. | தேர்தலுக்கு பயன்படுத்தப்பட்ட பெயர் பட்டியல் | பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | வாக்காளர் ஒருவருக்காக செலவு செய்யப்பட்ட ஆகு செலவு ரூ. | தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் எண்ணிக்கை | மக்கள் பிரதிநிதி ஒருவரைத் தெரிவு ஆகு செய்வதற்கான செலவு ரூ |
|---|---|---|---|---|---|---|
| 2005 | 715,937,310 | 2004 | 13,327,160 | 54 | 1 | 715,937,311 |
| 2010 | 1,856,830,997 | 2008 | 14,088,500 | 132 | 1 | 1,856,830,997 |
| 2015 | 2,706,306,830 | 2014 | 15,044,490 | 180 | 1 | 2,706,306,830 |

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தரவுகள் மற்றும் தகவல்களின் அடிப்படையில்

**கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்காக தேர்தல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நேரடி செலவினம்:**

| ஆண்டு | செலவினம் ரூ. | தேர்தலுக்கு பயன்படுத்தப்பட்ட பெயர் பட்டியல் | பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | வாக்காளர் ஒருவருக்காக செலவு செய்யப்பட்ட ஆகு செலவு ரூ. | தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் எண்ணிக்கை | மக்கள் பிரதிநிதி ஒருவரைத் தெரிவு செய்வதற்கான ஆகு செலவு ரூ |
|---|---|---|---|---|---|---|
| 2004 | 865,964,698 | 2002 | 12,899,139 | 67 | 225 | 3,848,732 |
| 2010 | 1,953,845,873 | 2008 | 14,088,500 | 139 | 225 | 8,683,759 |
| 2015 | 2,975,398,622 | 2014 | 15,044,490 | 198 | 225 | 13,223,994 |

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தரவுகள் மற்றும் தகவல்களின் அடிப்படையில்




**உத்தியோகபூர்வ மற்றும் உத்தியோகபூர்வ மற்ற தேர்தல் செலவினம்**

எந்தவொரு தேர்தல் தொடர்பிலும் இரண்டு வகையான செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவை உத்தியோகபூர்வ மற்றும் உத்தியோகபூர்வமற்ற தேர்தல் செலவினம் என அழைக்க முடியும். இதன் போது ஒரு ஜனநாயக நாட்டில் மக்கள் பிரதிநிதிகளை உருவாக்குவதற்காக எவ்வாறான செலவுகளை மேற்கொள்வதற்கு நேரிடுகிறது (Production Cost of Public Representatives) என்பதே மிகவும் முக்கியமானது ஆகும். அச்சு - இலத்திரனியல் செலவு ரூபா. மில்லியன் பிறசெலவுகள் பொதுக்கூட்டங்கள் ரூபா மில்லியன் ஒட்டுமொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா. மில்லியன்

செல்வம் அல்லது அதிகாரம் அற்ற ஆயினும் அறிவு மற்றும் அனுபவம் என்பவற்றால் சிறந்த பரிச்சயம் கொண்ட ஒரு தரப்பினருக்கு பாராளுமன்றத்தில் நுழைவதற்கு அது துணை புரிகின்றதென்பதே அவ்வாறான ஒன்றைப் பற்றி அவதானம் செலுத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவம் ஆகும். அதற்கு ஏற்புடைய ஏதேனும் சட்டக் கட்டுக்கோப்பை தயாரிப்பதே அவ்வாறான ஒன்றுக்கான பாதையை திறந்து விடக்கூடிய ஒரு மார்க்கம் ஆகும். அவ்வாறான சட்டத்திற்கு அடிப்படையாகக் கொள்ளக்கூடிய ஓர் ஆரம்ப வரைவினை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) மற்றும் 'பெப்ரல்' ஆகிய அமைப்புக்கள் இணைந்து 2018 ஆம் ஆண்டளவில் தயாரிப்பதற்கு ஆற்றல் பெற்றன. அதனோடு இணைந்ததாக தேர்தல் ஆணைக்குழுவும் சர்வதேச அனுபவங்கள் மற்றும் உள்நாட்டு பாவனைகளை உள்ளடக்கிய சட்ட வரைவு ஒன்றைத் தயாரித்து சட்டவரைஞரின் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொள்வதற்கு திறமை பெற்றது. அதன் பிரகாரம் இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ள சட்ட வரைவிற்கு புத்துயிர் கொடுப்பதே பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படவுள்ள புதிய மக்கள் பிரதிநிதிகளின் ஒரு முக்கிய பொறுப்பு ஆகும்.

## தேர்தல் பிரச்சார செலவுகளை கணக்கீடு செய்தல்

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (ஊஆநுஏ)

மதிப்பீடு செய்த மொத்தச் செலவு (மில்லியன் ரூபாய்)

2019 ஒக்டோபர் 13 ஆம் திகதி முதல் நவம்பர் 13 ஆம் திகதி வரை

| கட்சி | அச்சு ஊடகம் | இலத்திரனியல் ஊடகம் (100% கழிவு) | ஏனைய செலவுகள் (கூட்டங்கள் போன்றன) | மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவு (மில்லியன் ரூபாய் |
|---|---|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி | 107 | 1126 | 593 | 1,826 |
| புதிய ஜனநாயக முன்னணி | 216 | 793 | 728 | 1,737 |
| தேசிய மக்கள் சக்தி | 14 | 39 | 116 | 169 |
| ஜனசெத்த பெரமுண | 0 | 7 | 0 | 7 |
| தேசிய மக்கள் கட்சி | 3 | 0 | 0 | 3 |
| தேசிய மக்கள் இயக்கம் | 1.5 | 2.5 | 0 | 4 |
| மொத்தம் | 341.5 | 1967.5 | 1437 | - |
| ஏனைய 29 ஜனாதிபதி வேட்பாளர்களின் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு | | | | 50 |


தேர்தல் செலவினங்களை மதப்பீடு செய்வதில் உள்ள சவால்கள்:

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முதற் தடவையாக தேர்தல் செலவினம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட கண்காணிப்புக்களை மேற்கொள்ளும் பாரதூரமான பொறுப்பு தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் போது ஏற்புடைய விடயம் தொடர்பான அறிவுடைய சிரேஷ்ட ஆராய்ச்சியாளர்களின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு விசேட நிகழ்ச்சித்திட்டப் பிரிவுக்காக முறையாக பயிற்றப்பட்ட ஆளணியினரை ஆட்சேர்த்து மேற்கொள்ளப்பட்ட குறித்த நாடளாவிய கண்காணிப்பின் போது நான்கு துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. அவையாவன,

- அச்சு ஊடகம் (பத்திரிகைகள்)
- இலத்திரனியல் ஊடகம் (அரச மற்றும் தனியார் தொலைக்கட்சி அலைவரிசை)
- அடிமட்ட தேர்தல் பிரச்சாரங்கள் (பிரச்சாரக் கூட்டங்கள், ஏனைய உதவி வழங்கள்கள் மற்றும் நிதி அல்லாத ஒதுக்கீடுகள்)
- சமூக ஊடக வலையமைப்பு (முகநூல் - பிரதானமாக Face Book )

அதன் மூலம் தெரிய வந்த தேர்தல் செலவு சுமார் நான்காயிரம் மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன் அவ்வாறு ஒரு செலவு பற்றி அறியக் கிடைத்தவுடன் இலங்கையில் வாழும் ஒரு குடிமகன் அளவு கடந்த ஆச்சரியத்திற்கு ஆளாவான் என எண்ணிய போதும் இந்த நாட்டு குடிமகன் செல்வம் மற்றும் அதிகாரத்தைக் கொண்ட அபேட்சகர்களை சிம்மாசனத்தில் அமர வைக்கும் ஒரு போதும் முற்றுப் பெறாத ஆசையில் இருக்கின்றான் என்பதை எழுதி வைக்காமல் இருக்க முடியாது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தினால் வெளிக்கொணரப்பட்ட தேர்தல் செலவுகளானவை தேர்தலின் மொத்த செலவு அல்ல. அது சிலவேளை 30 வரையறைக்குள் உள்ளடங்கியதாக அமையக் கூடும். ஆயினும் குறித்த கணக்கிடல் கூட எம்மைப் போன்ற ஒரு நாட்டுக்கு தாங்க முடியாது என்பதனை பின்வரும் உதாரணம் மூலம் புரிந்து கொள்ள முடியும்.




நாட்டின் சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்காக வருடம் ஒன்றுக்கு அரசாங்கத்தால் 373 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் தெரிய வருகிறது. ஆயினும் தேர்தலில் அபேட்சகராக போட்டியிடுவதற்கு 40 நாட்களுக்கு அபேட்சகர்களின் இணைந்த செலவுத் தொகை 3796 மில்லியன் ரூபாவாகும். அதாவது சிறுவர் அபிவிருத்திக்காக சதவீத ரீதியாக தேர்தல் பிரச்சார செலவுகளின் விகிதாசாரமாக சிறந்த ஒன்றாக கிடைக்க வேண்டிய சிறுவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 9.8% சதவீதம் ஆகும்.

“கூரை ஏறி கோழி பிடிக்காதவன் வானம் ஏறி வைகுண்டம் போனானாம்” என்ற பிரசித்தி பெற்ற தமிழ் பழமொழி ஒன்று உண்டு.

தேர்தல் செலவுகளை சட்டம் ஒன்றைக் கொண்டு வந்து பாராளுமன்றத்தில் புதிய மக்கள் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து அங்கீகரிப்பார்கள் என்று நினைப்பது பயங்கரமான ஒரு கனவாக அமையாது என எண்ண முடியாது. இருப்பினும் கோழியைப் பிடிப்பது எப்படிப் போனாலும் கூரைக்கு ஏறுவதற்கு கூட இயலாதவர்களே இன்று வரை எமது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி உள்ளார்கள். அவ்வாறு ஏறுவதற்கு முடிந்தவர்கள் கூட ஒரு கோழியையாவது பிடிக்கவில்லை. அவ் வகையில் பார்க்கின்ற போது இவ்வாறான ஒரு ஒழுங்குறுத்தல் சட்டத்திற்காக பிரஜைகளே பாடுபட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பிரஜைகளின் கழுத்தில் ஏறி சொர்க்கத்துக்குப் பயணிக்க எண்ணுகின்ற மக்கள் பிரதிநிதி ஒருவர் இருப்பாரேயானால் அவர்களை சொர்க்கத்துக்கு அன்றி அதற்கு மாற்றமாக வேறு ஒரு வாசஸ்தலத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது பிரஜைகளின் உண்மையான பொறுப்பாக அமைதல் வேண்டும்



# வேலைத்தளமாகக் காணப்பட்ட நாட்டை நல்லாட்சி அரசாங்கம் தரிசு நிலமாக மாற்றியது

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

அரசியல் வரலாற்றில் முதன் முறையாக எதிர்க்கட்சிக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஒரு போட்டி காணப்படவில்லை. அவர்களிடம் சிரிகொத்தவைப் பிடிக்கும் போட்டியே காணப்படுகிறது. ஏன் சிரிகொத்தவைப் பிடிப்பதற்குத் தடுமாறும் நபர்களுக்கு வாக்களிக்க வேண்டும்? நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு வேலைத்திட்டத்தை முன் வைக்கும் நபர்களுக்கே வாக்களிக்க வேண்டும். நாட்டை சீரமைக்கும் வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தக் கூடிய முடியுமான ஓர் அரசாங்கம் தான் வேண்டுமென நான் நினைக்கின்றேன். ஜனாதிபதிக்கு 69 இலட்சம் மக்கள் வாக்களித்து ஒரு பாதையைக் காட்டி உள்ளார்கள். அவ்வாறாயின் நாட்டைக் கட்டியெழுப்பும் அந்த வேலைத்திட்டத்தை பாராளுமன்றம் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை அதிகாரம் கொண்ட உறுப்பினர்களை எங்களுக்கு பெற்றுத் தாருங்கள். அரசியலமைப்பில் மாற்றப்பட வேண்டியவைகளை மாற்றியமைப்பதற்கு, நாட்டை ஒற்றையாட்சி நாடாக மாற்றுவதற்கும் நாம் மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளோம். அரசாங்கத்தின் அதிகாரம் ஜனாதிபதியைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிக்கே அன்றி வேறு கட்சியிடம் இருக்க கூடாது. திரு சிறிசேனவினதும் திரு ரணிலினதும் மோதலை நாம் பார்த்தோம். திரு ரணில் சொன்னதை திரு சிறிசேன செய்யவில்லை. திரு சிறிசேன




சொன்னவற்றை திரு ரணில் செய்யவில்லை. அதன் காரணமாக இருவருக்கும் ஒரு கஷ்டமான நிலைமை ஏற்பட்டது. இந்த நிலைமை மாற்றமடைதல் வேண்டும்.

தனக்கு கோட்டாபய ஜனாதிபதியுடன் பணியாற்ற முடியும் என தற்போது திரு சஜித் பிரேமதாச சொல்கிறார். அவரை விட எனக்கு நன்றாக திரு கோட்டாவுடன் வேலை செய்ய முடியும் என்று நான் சொன்னேன். நானும் அவரும் வேலை செய்துள்ளோம். நான் ஜனாதிபதியாக இருந்த போது அவர் பாதுகாப்புச் செயலாளராக செயற்பட்டார். தற்போது அவர் ஜனாதிபதி, நான் பிரதமர். நாட்டில் நாம் மேற்கொண்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் கடந்த நாலரை வருட காலத்திற்குள் தடைப்பட்டது. மத்தள துறைமுகம் அமைத்தோம். அத் துறைமுகத்தை நல்லாட்சிக்காரர் விற்று விட்டார்கள். விமான நிலையம் ஒன்றை அமைத்தோம் அதை விற்பனை செய்ய முற்பட்ட போது நான் ஒருவாறு அதைக் காப்பாற்றிக் கொண்டேன். இம் முறை இந்தியாவிற்குச் சென்று இந்தியப் பிரதமரிடம் அதை எடுக்க வேண்டாம் என்று கூறினோம். அவர் எங்களுக்கு செவி சாய்த்தார். இந்த மாதிரியான நாட்டைக் காட்டிக் கொடுக்கும் ஒப்பந்தங்களைச் செய்துள்ளார்கள். நாட்டில் உள்ள வளங்கள் உங்களுடையவை ஆகும். அவை எமது பிள்ளைகளுக்குரியவை. பிறக்க இருக்கும் பிள்ளைகளுக்குரியவை ஆகும். ஆகவே இது தொடர்பாக நீங்கள் சிந்திக்க வேண்டும். இந்த வளங்களை விற்பனை செய்வதற்கு இடமளிக்க முடியாது. நாம் இந்த வளங்களை எதிர்காலத்தில் பிறக்கவுள்ள பிள்ளைகளுக்காகப் பாதுகாக்க வேண்டும். நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு நாங்கள் எங்களை அர்ப்பணித்துள்ளோம்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாம் வேகமாக உருவாக்கிய அபிவிருத்தி மீண்டும் நாட்டில் ஏற்படுத்துவதற்கு, உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம். அன்று வேலைத்தளமாகக் காணப்பட்ட நாட்டை நல்லாட்சி அரசாங்கம் தரிசு நிலமாக மாற்றியுள்ளது. அன்று நல்லாட்சி அரசாங்கம் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் விளைவித்த மிகப் பெரிய சேதத்தின் பாதக விளைவினை நாம் இன்று அனுபவிக்கின்றோம். இந்த அரசியலமைப்பின் காரணமாகவே 2015 ல் அரசாங்கத்தை தோற்கடித்து நல்லாட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதாகக் கூறி நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அனைத்து அதிகாரங்களையும் ரணில் தனதாக்கிக் கொண்டார்.

இப் பாரதூரமான வீழ்ச்சியில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் இம் முறை பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுண ஆகக் கூடிய விகிதாசாரத்தில் வெற்றி பெறல் வேண்டும். 19 ஆவது அரசியலமைப்பை ஒரு புறம் வீசி விட்டு எமது நாட்டுக்கு நன்மைபயக்கும் புதிய ஒரு அரசியலமைப்பை அங்கீகரித்தல் வேண்டும். அதன்போது ஜனாதிபதிக்கு இந்த நாட்டை முன் கொண்டு செல்வதற்கு பலம் வாய்ந்த அரசாங்கத்தை உருவாக்க முடியும். இந்த மூன்று மாத காலத்திற்குள் என்ன தான் செய்தோம் என்று சிலர் கேட்கின்றார்கள். ஜனாதிபதி அவர்கள் நவம்பர் மாதத்தில் நியமிக்கப்பட்ட போதும் இன்னமும் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். வரவு செலவுத் திட்டம் ஒன்றை சமர்ப்பிக்காது அரசாங்கம் ஒன்றை அமைக்காது சாதாரணமாக நியமிக்கப்பட்ட ஒரு காபந்து அமைச்சரவையை வைத்துக் கொண்டு தான் நாங்கள் தற்போதுள்ள இந்த வேலைகளைச் செய்து வருகின்றோம். ஒரு நாட்டில் அரசாங்கம் ஒன்றை அமைத்ததன் பின்னர் தான் நாடு என்ற வகையில் முன்நோக்கிச் செல்ல முடியும். நாட்டை முன்நோக்கிக் கொண்டு செல்வதற்கு, மாகாணங்களை முன்னேற்றுவதற்கு போக்குவரத்து வீதிகள் தேவைப்படுகின்றன. நாம் கடந்த காலங்களில் எல்லா இடங்களிலும் காப்பட் பாதைகள் அமைத்தோம். எல்லா இடங்களுக்கும் மின்சாரம் வழங்கினோம். குடிப்பதற்கு குடிநீர் வழங்கும் தேவை தற்போது எங்களுக்கு இருக்கிறது. 48% சதவீதத்தினருக்குத் தான் குழாய்நீர் வசதி கிடைக்கின்றது. எமது குறிக்கோள் அதனை 100% சதவீதமாக மாற்றுவது ஆகும். அதனை நாம் எதிர்காலத்தில் மேற்கொள்வோம்.

நாம் சொல்வதைச் செய்வோம். செய்தவற்றைச் சொல்கிறோம். நாம் மின்சாரம் வழங்குவதாகக் கூறினோம் 100% சதவீதம் வழங்கினோம். தென் மாகாணத்துக்கு மாத்திரம் அல்ல வடக்கு கிழக்கிற்கும் முழுமையாக வழங்கினோம்.

குடிநீர் விநியோகத்தை திட்டம் ஒன்றுக்கு அமைவாகச் செய்வோம். அங்கும் இங்குமாக சிறிது சிறிதாக செய்வதற்கு அல்ல. ஒரு திட்டத்தின் அடிப்படையில் பணியாற்றுவதற்கு ஜனாதிபதி முடிவு செய்துள்ளார். ஜனாதிபதியின் அந்த முடிவுக்கு அமைய திட்டமிடலை மேற்கொண்டு முழு நாட்டையும் அபிவிருத்தி செய்யும் ஒரு வேலைத்திட்டத்திற்கு நாம் தயாராகி உள்ளோம்.

(தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் வெளியிட்ட கருத்துக்களில் இருந்து....)

asia.nikkei.com




# ஐக்கிய தேசிய கட்சிக்கு மாத்திரமே நெருக்கடியை எதிர்நோக்க முடியும்

## ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க

கொரோனா தொற்று நோயும் பொருளாதார நெருக்கடியும் இந்த நாட்டில் உள்ள முக்கியமான இரண்டு பிரச்சினைகள் ஆகும். கொரோனா தொற்று நோய் இன்னமும் கட்டுப்படுத்தப்படவில்லை. தொற்று நோயைக் கட்டுப்படுத்தாது நாடு முன் நோக்கி நகர முடியாது.

உலகம் பொருளாதார நெருக்கடி தற்போது இலங்கைக்கும் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் அதிலிருந்து மீளுவதற்குரிய வழியை தயார் செய்ய முடியாமல் அரசாங்கம் திண்டாடுகிறது. பொருளாதாரத்திற்கு புத்துயிர் வழங்கி வீட்டுப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு மக்களது கைகளில் பணத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தை நாம் சமர்ப்பித்துள்ளோம். ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைப் பிரகடனமே அந்த நிகழ்ச்சித் திட்டம் ஆகும்.

துற்போது அதிகாரத்தில் உள்ள அரசாங்கம் கொள்கைப் பிரகடனத்தைச் சமர்ப்பித்துள்ள போதும் எவருமே அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் ஒன்பது மாதத்திற்கு முன்னர் கொள்கைப் பிரகடனத்தைச் சமர்ப்பித்து அரசாங்கத்தைப் பொறுப்பேற்றது. இக் கால கட்டத்தில் தாம் கொரோனாவைக் கட்டுப்படுத்தியதாக அரசாங்கம் கூறினாலும் அவ்வாறான ஒன்று இடம்பெறவில்லை.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நேரம் முதல் மக்களுக்கு நிவாரணம் வழங்கவில்லை. பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. உலகின் பல்வேறு நாடுகள் திட்டமிடப்பட்டவாறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தபோதும் இலங்கையில் உள்ள நாம் அவ்வாறு செய்யவில்லை. இறுதியில் அரசாங்கத்துக்கு சர்வதேசத்தின் நம்பிக்கையைப் பெற முடியவில்லை. இன்று நாடு சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டள்ளது.

தற்போது பதவியில் உள்ள கட்சியைத் தவிர அரசாங்கத்தின் அதிகாரத்திற்காகப் போட்டியிடும் ஒரேயொரு கட்சி ஐக்கிய தேசிய கட்சி ஆகும். நாம் சமர்ப்பித்த கொள்கைப் பிரகடனத்தை விவாதிப்பதற்கு பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பான எந்தவொரு வாதப் பிரதிவாதங்களுக்கும் முகம் கொடுக்க நாம் தயாராக உள்ளோம்.

மின்சாரம் மற்றும் நீர் பட்டியலுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். குறைக்கப்பட்ட அரச ஊழியர்களின் கொடுப்பனவுகளை மீளவும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சர்வதேச நிறுவனங்களுடன் கலந்துரையாடி 6000 மில்லியன் டொலர்களைப் பெற்று அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். அந்த உறுதியான தன்மையினை உருவாக்கியதன் பின்னர் பிணைமுறிகள் மற்றும் ஏனைய வழி முறைகள் மூலமாக ரூபாய்களை உழைத்துக் கொள்ள அரசாங்கத்துக்கு

முடியும். இந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் ஒரு இலட்சம் பேர் தொழில்களை இழக்கும் அபாயம் உள்ளது. இவ் எண்ணிக்கை சில சமயம் அதிகரிக்கக் கூடும். அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படல் வேண்டும். அவ்வாறு தொழில்களை இழக்கும் நபர்களுக்கு மாதம் ஒன்றுக்கு பத்தாயிரம் ரூபாய் வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றை நாம் சமர்ப்பித்தோம்.

தொழில்களைப் பாதுகாப்பதற்காக தொழில் வழங்கும் தொழில் முயற்சிகளுக்கும் உதவி செய்தல் வேண்டும். இதற்காக நாம் தனியான நிதியம் ஒன்றை ஈடுபடுத்துவோம். தனியார் துறையினர் சம்பளம் வழங்கும் நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கும் ஏற்றுமதிக் கைத்தொழில் தொடர்பில் மீண்டும் சந்தையில் நுழைவதற்கு உதவி வழங்குவதற்கும் சுற்றுலாக் கைத்தொழிலை பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். சிறு தொழில் முயற்சிகளையும் மறக்க மாட்டோம்.

முச்சக்கர வண்டி பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்காக குத்தகைக் கம்பனிகளுடன் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று தயாரிக்கப்படும். முச்சக்கர வண்டிகள் பலவந்தமாக பறிமுதல் செய்யப்படுவது நிறுத்தப்படும்.

நிர்மாணிப்புக் கைத்தொழிலுக்கு புத்துயிர் வழங்கப்பட்டு முன் நோக்கி கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நடுத்தர வகுப்பினருக்கு மற்றும் பாட்டாளி மக்களுக்கு வீட்டு உரிமைகளை வழங்குவதற்கு கடன் வசதிகள் வழங்கப்படும். வீடமைப்பு நிர்மாணிப்புக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் தயார் செய்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். உயர் நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் புதிய சட்டத்தைச் சமர்ப்பித்து அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அவ்வாறே விவசாயம் மற்றும் மீன்பிடிக் கைத்தொழில் தொடர்பில் நாம் கவனம் செலுத்தி உள்ளோம். விவசாயப் பயிர்களில் இலங்கையை தன்னிறைவடையச் செய்வதற்காகவும் எம்மால் நிகழ்ச்சித்திட்டங்கள் முன் வைக்கப்படும்.

2050 ஆம் ஆண்டளவில் தெற்காசியாவில் இருந்து இந்தோனேசிய வரையான கடல் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் சனத்தொகை 500 மில்லின் வரை உயர்வடையும். இன்று ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரத்தானியாவின் சனத்தொகைக்கு நிகரான ஒரு நிலைமைக்கு அப்போது இப் பிராந்தியத்தின் சனத்தொகை வளர்ச்சியடையும். அதில் பெரும்பாலானோர் நடுத்தர வகுப்பினர்களாக காணப்படுவார்கள். அவர்கள் வாழ்வதற்காக உணவு தேவைப்படும். அவர்களுக்கான உணவுகளை வழங்குதல் எமது பிரதான பணியாக அமையும். அதற்காக ஏற்றுமதிப் பயிர்களைப் பயிரிடும் நகிழ்ச்சித்திட்டத்தை ஆரமப்பித்தல் வேண்டும். சிறிய விவசாயிகளுக்கு உதவி வழங்கப்படும். கம்பனிகளுக்கும் உதவி வழங்கப்படும். முனைப்பான பயிரிடல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாத பத்து இலட்சம் ஏக்கர் காணிகளை இதற்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இப் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தால் உதவி வழங்கப்படும்.

நாட்டின் விவசாய மற்றும் மீன்பிடி விநியோக வலையமைப்பு மேலும் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். அதனை நவீனமயப்படுத்தும் நபர்களுக்கு உதவி வழங்கப்படும். இந்த நாட்டின் நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நெல்லுக்கான விலை போட்டித் தன்மை வாய்ந்ததாக மாற்றமடைந்தவுடன் அதில் ஒரு பகுதியை ஏற்றுமதிச் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும். மீன்பிடி ஏற்றுமதியை பலப்படுத்துவதற்கு எம்மால் நிகழ்ச்சித்திட்டம் வகுக்கப்படும். பிங்கிரிய மற்றும் றுகுணு வர்த்தக வலயங்களை மேலும் விரிவுபடுத்துவதற்காக ஜப்பான், சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும். முதலீட்டுக்கு அனுகூலமான சட்டங்களை அங்கீகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கொரோனா தொற்று நோய்க்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பதற்கான பொதுச் சுகாதார அவசர ஏற்பாடுகள் வரைவைத் தயாரித்தல் தற்போது எம்மால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. கொரோனா நோய் பரவுவதை தடுப்பதற்காக நாள் ஒன்றுக்கு ஐயாயிரம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

கொரோனா பரவுவதற்கு சூழல் மாசடைதலும் காரணமாகிறது என உலக சுகாதார நிறுவனம் குறிப்பிடுகிறது. அரை ஏக்கர் முதல் 25 ஏக்கர் வரையான சிறிய காடுகளை நடுவதற்கு அரசாங்கத்தால் உதவி வழங்கப்படும். எல்லா இடங்களிலும் சிறிய அளவு காடுகளை வளர்ப்பதே இதன் நோக்கம் ஆகும். பசுமை நிதி முறையினை நாம் உருவாக்குவோம்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் உதவியுடன் சுவசரிய பிணியாளர் காவு வண்டிச் சேவையை ஏற்படுத்த எம்மால் முடிந்தது. தற்போது அதனது ஒரு கட்டம் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்படுகிறது. கொழும்பு போன்ற வாகன நெரிசல் உள்ள பிரதேசங்களில் வைத்தியரை சிறிய மோட்டார் சைக்கிளில் நோயாளி உள்ள இடத்திற்கு அழைத்துச் செல்லும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக எமது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

ஆகாய சத்திர சிகிச்சைக் கூடம் அமைத்தல் மற்றும் ஆகாய வைத்தியசாலை அமைப்பது 'சுவசரிய' மூன்றாம் கட்டம் ஆகும். அதாவது பாரிய உலங்கு வானூர்திகளை சத்திர சிகிச்சைக் கூடம் உள்ளிட்ட வைத்தியசாலை வசதிகளுடன் நவீனமயப்படுத்தி நோயாளி இருக்கும் இடத்திற்கு கொண்டு செல்லல் ஆகும். நோயாளியை உலங்கு வானூர்தியில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதை விடவும் இந்த முறைமை இலகுவானது என உணரப்பட்டுள்ளது.

பாடசாலை முறைமையினை அபிவிருத்தி செய்தல் தொடர்பாகவும் எம்மால் முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கணிணிகளை வழங்குவதற்கு நாம் திட்டமிட்ட போதும் பல இழுத்தடிப்புக்கள் காரணமாக அதனை நிறைவேற்ற முடியவில்லை. பாடசாலை மாணவர்களுக்கு டெப் கணணி வழங்குவது எமது கொள்கை ஆகும். பாடசாலை மூடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் டெப் கணணி மூலம் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அரச பாடசாலை அல்லாத பாடசாலைகளில் கட்டணம் செலுத்துவதற்கு பெரும்பாலான பெற்றோர்களுக்கு கஷ்டம் ஏற்படுகிறது. கட்டணம் செலுத்தப்படாது போனால் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாது. அவ்வாறான பெற்றோர்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்கு எம்மால் நடவடிக்கை எடுக்கப்படும்.

சர்வதேச உறவுகளைப் பலப்படுத்தி உதவிகள் மற்றும் ஒத்தாசைகளைப் பெற்றுக் கொள்ள எம்மால் முடியும். அதுவே ஐக்கிய தேசிய கட்சியின் பலம் ஆகும். நாம் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆட்சியைக் கட்டியெழுப்புவோம். சுதந்திர ஆணைக்குழுக்கள் மேலும் பலப்படுத்தப்படும். பாராளுமன்றத்தின் அதிகாரத்தைப் பாதுகாப்பதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

அரசியல் மீது கசப்புணர்வு ஏற்பட்டுள்ளதாக இளைஞர்கள் கூறுகின்றார்கள். ஆகவே இளைஞர்கள் அரசியலில் இருந்து விலகி நிற்கின்றனர். இளைஞர்களின் நம்பிக்கையினை மீண்டும் கட்டியெழுப்புதல் வேண்டும். கேலிக்கிடமான அரசியலை இளைஞர்கள் விரும்புவதில்லை. அரசியலில் நீண்ட கால மற்றும் நடுத்தர காலக் கொள்கைகளை இளைஞர்கள் எதிர்பார்க்கின்றார்கள். நல்லாட்சி பற்றியும் தேசிய அரசாங்கம் பற்றியும் இளைஞர்கள் மத்தியில் நம்பிக்கை இல்லை.

நடுத்தர கால மற்றும் நீண்ட காலக் கொள்கை வகுத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். இவை நிறைவேற்றப்பட வேண்டியது ஊடகங்கள் மூலமாக அல்ல. பாராளுமன்றத்தில் அவ்வாறான கொள்கைகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

இலங்கையர்கள் என்ற ரீதியில் நாம் இப் பயணத்தை ஒன்றாக இணைந்து மேற்கொள்ளல் வேண்டும். இந்த நாட்டின் இனப் பிரச்சினைக்கும் தீர்வு வழங்கப்படல் வேண்டும். பிரச்சினைகளின் எதிரே நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான திட்டம் ஐக்கிய தேசிய கட்சிக்கு மாத்திரமே உண்டு. அத் திட்டத்தை ஐக்கிய தேசிய கட்சியால் மாத்திரமே நடைமுறைப்படுத்த முடியும்.



# ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் சகல முன்மொழிவுகளையும்

# உரிய காலத்தில் நிறைவேற்றுவேன்

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்

**சஜித் பிரேமதாச**

எமது தாய்நாட்டின் சனநாயக அரசியல் வரலாற்றில் புதியதொரு திருப்புமுனையின் ஆரம்பமாகவும் மக்களுக்கும் எமக்குமிடையே ஏற்படுத்திக் கொள்கின்ற சமூக ஒப்பந்தமாகவும் இச்சந்தர்ப்பத்தை நான் அறிமுகப்படுத்த விரும்புகின்றேன். ஒரு கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அக்கட்சியினால் அனுசரிக்க எதிர்பார்க்கப்படும் கொள்கைத் தொகுப்பே உள்ளடங்கியிருக்கும்.

குறிப்பாக இச்சந்தர்ப்பத்தில் எமது ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கைகளையும் எமது பயணத்தைப் பற்றியும் நான் சற்று விளக்கமளிக்க வேண்டியுள்ளது. சனநாயக ரீதியான வரலாறு முழுவதிலும் ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் பல்வேறு தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியிடப்படுவதை நாம் கண்டிருக்கின்றோம். அரசாங்க அதிகாரம் கிடைத்துவிட்ட சந்தர்ப்பத்தில் அவ்வாறு வெளியிடப்பட்ட கொள்கைகள் செயற்படுத்தப்படுகின்றனவா, என்பதை விசாரித்தால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில், அவ்வாறு அரசாங்க அதிகாரம் கிடைத்த பின்னர் அவை படிப்படியாக மறக்கப்பட்டு விடுவதையே காணக் கிடைக்கிறது.

முறையாக திகதிகள், கால எல்லைகளுடன் கூடிய திட்டத்துக்கு ஏற்றவாறு, நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை இந்நாட்டின் 220 இலட்சம் மக்களுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள முழுமையான அர்த்தமுள்ளதாக நடைமுறைப்படுத்துவதற்குத் தயாராகி உள்ளோம். ஐக்கிய மக்கள் சக்தி சமர்ப்பித்துள்ள மரபும் இச்செயல் ஒழுங்குகளும் இதுவரை காலமும் சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனங்களுக்கிடையே காணப்படும் வித்தியாசமாக அமைகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியானது இந்நாட்டின் நவீன சவால்களுக்கும், மக்களின் பிரச்சனைகளுக்கும் தீர்வு வழங்கும் ஒரு குழுவினராவர். பல்வேறு தலைவர்கள், நாட்டின் பல்வேறு பிரச்சனைகளுக்கு நிலைபேறான தீர்வுகளை வழங்கினார்களா? எனக் கேள்வியெழுப்ப வேண்டும். நாம் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பவர்களாகவே முன்வந்துள்ளோம். நாட்டின் உள்ளக அல்லது வெளிப்புறக் கோட்பாடுகளுக்கு ஏற்றவாறு தீர்வுகளை வழங்குவதற்கு நாம் முன்வரவில்லை. புதிய கருத்துகள் ஊடாக நவீன விதிமுறைகள் மூலம் எதிர்காலத்தை நோக்கும் கோட்பாடொன்றின் வாயிலாக நாட்டுக்குப் பொருத்தமான கொள்கையொன்றை நடைமுறைப்படுத்தவே நாம் முன்வந்துள்ளோம்.

எமது தேர்தல் விஞ்ஞாபனம் மிகவும் தூய முறையில் ஒழுங்கமைப்பட்ட விதிமுறையிலேயே சமர்ப்பிக்கப்பட்டது. பல வாரங்களாக பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்கள், தொழில் வாண்மையாளர்கள், ஆற்றல்மிக்கவர்கள் என்போரைச் சந்தித்து எப்போதும்,

நாம் ஒரு விடயத்தைப் பற்றி மிகவும் அறிவுபூர்வமான முறையில் பிரச்சனைகள் மீதான பார்வையைச் செலுத்தினோம். ஒவ்வொரு பிரச்சனையையும் தீர்க்கும் விதம் பற்றி விரிவாகக் கலந்துரையாடினோம். அதற்கேற்பவே நாம் இக் கொள்கைத் தொகுப்பை உருவாக்கியுள்ளோம்.

குறிப்பிட்டுக் கூறுவதாயின். நிகழ்காலத்தில் எமது நாடு முகங்கொடுக்கும் பிரச்சனைகளுக்கான தீர்வுகள் எம்மிடம் உள்ளன. கோவிட் 19 தொற்று நோய் காரணமாக அனைத்துத் துறைகளிலும் பல சவால்கள் உருவாகியுள்ளன. பொருளாதாரம், சமூகம், தேசிய பாதுகாப்பு என அனைத்துத் துறைகளிலும் உருவாகியுள்ள புதிய சிக்கல்கள் பற்றிச் சிந்தித்து அவற்றுக்கு ஆக்கபூர்வமான பதில்களை வழங்கவும் அவ்வாறே அதற்கேற்ப, கீர்த்திமிக்க அரச நிருவாகத்தையும் தேர்ச்சிமிக்க முன்னேற்றத்தையும் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கின்றோம்.

பல்வேறு தரப்பினர் இக் கோவிட் தொற்று நோய் பற்றி பல்வேறு முறைகளில் விளக்கமளிக்கிறார்கள். ஆனால் இத் தொற்று நோயானது எமது பொருளாதாரத்தின் மீது விழுந்த பலமான மரண அடி என்றே நாம் சொல்கின்றோம். அது எமக்குப் பாரிய சவாலாகும். சிலர் தேசிய பாதுகாப்பைப் பற்றிச் சொல்லும் போது மிகவும் குறுகிய நோக்கில் இராணுவப் பாதுகாப்பு என அறிமுகப்படுத்த எத்தனிக்கின்றனர். ஆனால் தேசிய பாதுகாப்பு தொடர்பில் எமக்கு ஒரு பரந்த நோக்கே காணப்படுகின்றது. இராணுவப் பாதுகாப்பு எனப்படுவது அதன் ஒரு பகுதி மட்டுமே.

நிகழ்காலத்தின் பொருளாதாரப் பாதுகாப்பு, சுகாதாரப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு, என அனைத்தும் சிக்கல் வாய்ந்ததாக அமைந்துள்ளது. இன்று இனங்களுக்கிடையே ஒற்றுமையின்மை ஏற்பட்டுள்ளது. ஆட்சியாளர்கள் பல்வேறு கருத்துக்களை உருவாக்கி அவற்றைப் பூதாகரமாக்கி இனவாதத்தையும் மதவாதத்தையும் உருவாக்கி தீவிரவாதத்திற்கு வாய்ப்பை ஏற்படுத்துகிறார்கள். இக் கோவிட் காரணமாக தேசிய பாதுகாப்பிற்குப் பலத்த பிரச்சனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சவால்களிலிருந்து நாம் தப்பிவிட முடியாது. இவற்றுக்கு நடைமுறை ரீதியான தீர்வுகளை வழங்கும் ஆற்றல் எம்மிடம் உள்ளது. இருந்ததைக் காட்டிலும் வலிமையுடனும், உறுதியுடனும், பிரமாண்டமான தேஜசுடனும் தாய்நாட்டைக் கட்டியெழுப்பும் திறமை எம்மிடம் உள்ளது.

கோவிடைக் கட்டுப்படுத்துவது எம்மால் செய்யப்பட வேண்டிய ஒன்று. பலவீனமானதொரு ஆட்சியில் கோவிட்டைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை இன்று தோன்றியவாறு உள்ளது. முக்காலத்தையும் உணரும் குழுவினராக ஐக்கிய மக்கள் சக்தியினரான நாம் கோவிட்டைப் பற்றி இன்று நேற்றுப் பேசவில்லை. கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களிலிருந்து இப்பயங்கர நிலைமை பற்றி நாம் பாராளுமன்றத்திடமும் அரசாங்கத்திடமும் தெரிவித்தோம். எனினும் அவற்றுக்குத் தீர்வுகள் வழங்கப்படவில்லை. முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய இடங்களைப் புறந்தள்ளிவிட்டு வேறு தனிப்பட்ட அரசியல் நடவடிக்கைகளுக்கு முதலிடம் கொடுத்ததால் இன்று கோவிட்டைத் தோல்வியடையச் செய்ய முடியாமல் இரண்டாம் மூன்றாம் நிலைகளுக்கு முகங்கொடுக்கும் நாடாக மாறியுள்ளது.

நாம் எப்படி இந்தப் பிரச்சனைக்கு முகங்கொடுக்கலாம் என்பதைப் பார்க்க வேண்டும். மனிதனை வாழ்வித்து நாட்டின் தேசிய வருமானம் அனைத்து மக்களுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். தனியார் தொழில்முயற்சிகளுக்கு முதலிடம் வழங்கி மனிதாபிமான முறையில் முதலாளித்துவத்தையும் சனநாயகத்தையும் ஒன்றாக இணைத்து பொருளாதார அனுகூலங்கள் அனைவருக்கும் கிடைக்கக்கூடிய விதிமுறையொன்றை நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டியேற்படும்.

அபிவிருத்தியை ஒன்பது மாகாணங்களிலும் உள்ள அனைத்து கிராமங்களிலும் நடைமுறைப்படுத்தி நாட்டில் துரிதகதியிலான அபிவிருத்தியை ஏற்படுத்தி, எமது நாட்டை வளர்ச்சியடைந்த உலகத்தை நோக்கி முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதற்கான சமூக ஒப்பந்தத்தை நாம் முன்வைப்போம்.

ஒரு நாட்டை ஒழுங்குமுறையிலேயே ஆட்சி செய்தல் வேண்டும். அவ்வாறே அழகும் காணப்பட வேண்டும். மனித நேயம் இருக்க வேண்டும். ஈவிரக்கமுள்ள வகையில் நாட்டை ஆள வேண்டும். மக்கள் பிரச்சனைகள் தொடர்பில் கூருணர்வுள்ளதாக அமைய வேண்டும். ஊடகங்களின் முன் மட்டுமன்றி மக்களின் பிரச்சனைகளுக்கு உண்மையான தீர்வுகளைப் பெற்றுத் தர வேண்டும்.

இச் சமூக ஒப்பந்தத்தை மக்கள் ஏற்றுக் கொண்டால் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் எப்போதும் நாட்டை விருத்தி செய்ய, மக்களுடைய பிரச்சனைகளுக்கு உண்மையான தீர்வுகளை வழங்க உறங்காத அரசாங்கமாக கூருணர்வுடன் புதிய முகாமைத்துவ விதிமுறைகளில் வினைத்திறன் மிக்க விதிமுறைகளில் நாம் தேர்ச்சிமிக்க அரச நிருவாகமொன்றை நாட்டில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கின்றோம்.

ஓர் அரச நிருவாகத்தில் தொலைநோக்குடன் செயற்பட வேண்டும். எதிர்காலத்தில் இடம்பெறக் கூடிய ஆபத்துக்கள் தொடர்பில் புரிதல் இருக்க வேண்டும். அவற்றுக்கான தீர்வுகளை வழங்குவதற்கு எப்போதும் தயாராக இருத்தல் வேண்டும். பிரயோகிக்கப்பட முடிந்த மற்றும் பிரயோகிக்கப்படக் கூடிய நடைமுறைத் தீர்வுகள் இருக்குமாயின் அந்நிருவாகத்தை வினைத்திறன் மிக்க நிருவாகமாகக் குறிப்பிடலாம்.

வரையறுக்கப்பட்ட ஒரு குழுவைக் கொண்ட ஆட்சியினால் மட்டும் நாட்டைக் கட்டியெழுப்பிவிட முடியாது. பெறுபேறுகளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படும் அரச முன்னேற்றம் தேவை. நாட்டில் உள்ளார்ந்த ரீதியில் ஐக்கியம் தேவைப்படுகின்றது. அதனை நாம் வலுப்படுத்த வேண்டும். நாட்டுக்குள் எரிமலைகளை வெடிக்கச் செய்வது ஆட்சியாளரின் பொறுப்பு அல்ல. அவற்றை அணைத்து விடுவதே ஆட்சியாளரின் பொறுப்பு ஆகும். மிகத் தெளிவாக, ஒன்றுபட்ட இலங்கையை நாம் செயற்படுத்துவோம். அதில் 13ம் திருத்தத்தின் ஊடாக அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் வேண்டும். அந்த இடத்தில் $13^+$ அல்லது $13^-$ கிடையாது. நாம் ஒருமித்த குரலில் செயற்படுவோம். வெளிநாட்டு இராஜதந்திரப் பயணமொன்றில் அந்நாட்டில் கூட்டல் (+) அடையாளத்தை இட்டுவிட்டு மீண்டும் நாடு திரும்பியதும் அதில் கழித்தல் (-) அடையாளத்தை இடுவது பாராட்டத்தக்கது அல்ல. நாம் ஒரே முறையில் ஒரே குரலுடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும். பல்வேறு வகையானவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப அசையும் அரச நிருவாகமொன்றை ஐக்கிய மக்கள் சக்தியிடமிருந்து எதிர்பார்க்க வேண்டாம். எங்களுடைய பயணம் தெளிவானதும் திட்டவட்டமானதாகும்.

இந்த நாட்டை அபிவிருத்தி செய்யும் போது நாம் காலப் பகுதிகளுடன் கூடிய நேர அட்டவணைக்கு ஏற்ப அரசாட்சியை நடத்துவோம். ஒவ்வொன்றையும் உரிய காலப்பகுதிகளில் நிறைவேற்றிக் கொண்டு முன்னோக்கிச் செல்வோம். நாம் மக்களுக்கான பொறுப்புகளை தேர்ச்சியுடன் நிறைவேற்ற விரும்புகின்றோம்.



தேசிய மக்கள் சக்தியின் தலைவர்
**அனுர குமார திசாநாயக்க**

# எத்தருணத்திலும் நாட்டை ஏற்றுக்கொள்ளத் தயார்

ஷமார்க்சிசக் கொள்கைகள் இன்றளவில் சிற்சில மாற்றங்களுக்கு ஆளாகியுள்ளன. உலகளாவிய ரீதியிலும் சமூகத்திலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் அடிப்படையில் அதற்கு ஏற்றாற்போல எமது கொள்கைகளிலும் சிற்சில மாற்றங்களை நாம் ஏற்படுத்திக்கொள்ள நேர்ந்துள்ளது. சோசலிச கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த எமது வேலைத்திட்டம், உபாயங்கள் போன்றவை எம்மை இற்றைப்படுத்தியுள்ளன.

நாம் அவ்வப்போது தோன்றும் அரசியல் சமூக பொருளாதார விடயங்கள் தொடர்பில் பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடி இருக்கிறோம். நாம் ரணிலோடும், மஹிந்தவுடனும், அன்று சந்திரிகாவுடனும் பேசியிருக்கின்றோம். தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களுடனும் நாம் கலந்துரையாடுவதற்கான ஏதேனும் விடயம் இருப்பின் அவருடனும் நாம் கலந்துரையாடுவோம். இல்லையேல் நாளை நாட்டுக்கு நன்மை பயக்கும் விடயமொன்றை மேற்கொள்வதற்கு கோட்டாபய எமது ஒத்துழைப்பை நாடினால் வேண்டினால் அதுபற்றியும் அவரோடு பேசுவதற்கு நாம் தயார். அதைத் தவிர, எமக்கோ எமது கட்சிக்கோ தனிப்பட்ட முறையில் எதனையும் பெற்றுக் கொள்வதற்காக நாம் எவரோடும் பேசியதும் இல்லை பேசவும் மாட்டோம். நாட்டை நல்வழியில் ஈடுபடுத்துவதற்காக பதவி வகிக்கின்ற எந்தவொரு ஆட்சியினரோடும் தேவைப்பட்டால் கலந்துரையாடி முடிவுகளையும் தீர்மானங்களையும் எட்டுவதுதான் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியற் கட்சியொன்றின் பொறுப்பாகவுள்ளது.

நல்லாட்சி அரசாங்கம் அரசியலமைப்புத் திருத்தங்கள் பற்றிய கலந்துரையாடல்களை ஆரம்பித்தது. அவற்றில் நாம் பங்குபற்றினோம் பத்தொன்பது முறை திருத்தங்கள் செய்யப்பட்டுள்ள எமது நாட்டின் அரசியலமைப்புக்குப் பதிலாகப் புதியதொரு சட்டத்தை உருவாக்க யாரேனும் நாளை தயாரானால் அதில் பங்கேற்க நாம் தயார். எமது அரசியலமைப்பில் மென்மேலும் ஜனநாயக ரீதியான குணாம்சங்களை அதிகரிக்கும் தேவை எமக்குள்ளது. சட்டமும் நியாயமும் யாருக்கும் நியாயமான முறையில் பகிரப்படுகின்ற, மீளமைப்பை உருவாக்க நாம் விரும்புகின்றோம். அதற்கேற்ப யாருடன் வேண்டுமானாலும் நாளையும் நாம் கலந்துரையாடத் தயார்.

ரணிலினதும் சஜித்தினதும் வெடிப்பு கொள்கை ரீதியான விடயமல்ல. கட்சியினுள்ளே காணப்படும் நெருக்கடியாகும். அவரவர்களுக்கிடையே பதவிகள் தொடர்பான நெருக்கடி. அதிகாரப் போராட்டம். சஜித் தன்னோடு வரும் அனைத்தையும் எடுத்துக் கொண்டார். ரணில் கட்சியில் எஞ்சியிருந்த அனைத்தையும் எடுத்துக் கொண்டார். கொள்கை அடிப்படையில் இவ்விரு தரப்பினரும் பிரிந்திருந்தால் அவ்வாறு இடம்பெற முடியாது. இலங்கை சுதந்திரக் கட்சிக்கும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான இணைப்பும் அவ்விணைப்பினிடையே காணப்படும் முரண்பாடுகளும் அதிகாரத்துக்காக ஏற்பட்டவையே தவிர கொள்கை விடயங்களின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள விடயங்கள் அல்ல. இந்தப் பிரிவுகளின் ஊடாக எமக்கு நல்லதொரு சாத்தியப்பாடு உருவாகியுள்ளது. ஐ.தே.க யின் பிரிவினாலும் ஸ்ரீ.ல.சு. கட்சிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கிடையிலும் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் காரணமாகவும் அவர்களுடன் இருந்த பாரிய அளவிலான மக்கள் இப்போது அவர்களுக்கு எதிராக முன்னோக்கி வந்துள்ளனர். எனினும் இந்தக் குழுவினரை எமது முகாமுக்குள் இன்னமும் சேர்த்துக் கொள்ள எம்மால் முடியாதுள்ளது. நாம் இப்போது அம்மக்களை எமது முகாமைச் சுற்றி ஒன்றிணைக்கும் பணியையே செய்து வருகின்றோம்.

பல அரசியற் கட்சிகள் கடந்த பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்தாலும், ஆறு கட்சிகள் மட்டுமே தேர்தலில் போட்டியிட்டன. அந்த ஆறில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஐ.தே.க. இணக்கப்பாட்டுடன், தேசிய அரசாங்கமொன்று கட்டியெழுப்பப்பட்டது. ஹக்கீமும் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கினார். தமிழ் தேசியக் கூட்டமைப்பும், மக்கள் விடுதலை முன்னணியும், டக்ளஸ் தேவானந்தாவும் உத்தியோகபூர்வ எதிர்க்கட்சி என்ற ரீதியில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிக்கு உரிய இருக்கைகளில் அமர்ந்தனர். அங்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி, ஆர். சம்பந்தனுக்கும் எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் பதவி எமக்கும் உரித்தானது. அவை அனைத்தும் ஜனநாயகத்துக்கு இணங்கியவாறே இடம்பெற்றன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் ஒரு குழுவினர் அரசாங்கத்துடன் சேர்ந்து, அரசாங்கத்தில் சேர்ந்த குழுவினரை விட அதிக எண்ணிக்கையினர் எதிர்க்கட்சியில் அமர்ந்தார்கள் என்பதற்காக அவ்விரு குழுவினரும் இரண்டு கட்சிகளைச் சேர்ந்த குழுவினராக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. யாரேனும் 160 ஆசனங்கள் மட்டில் வெற்றிபெற்று அரசாங்கம் ஒன்றை அமைத்தார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது அவர்களால் 113 ஆசனங்களுடன் அரசாங்கத்தை அமைத்துக் கொண்டு எஞ்சியவர்களை எதிர்க்கட்சியில் அமர்த்தி, எதிர்க்கட்சியின் பெரும்பான்மையைக் காட்டி அவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் பதவியையும் வழங்க முடியும். அப்படி நடந்தால் பாராளுமன்றத்தில் சனநாயகத்துக்கு என்ன நடக்கும். எனவே



# தேசிய அரசைப் பாதுகாப்பது எமது கொள்கையாகும்

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர்
**விமல் வீரவன்ச**

உலகத்தில் அரசு என்ற எண்ணக்கருவானது நன்மை தீமை இரண்டையும் பாதித்துள்ளது. இவ்வரச எண்ணக்கரு காரணமாகத்தான் இன்றும் எம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்துள்ளது. தேசிய அரச முறைமையைப் பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதே தேசிய சுதந்திர முன்னணி என்ற வகையில் எமது கொள்கையாக உள்ளது. அத் தேசிய அரசைப் பலவீனப்படுத்துவதற்காகக் கொண்டு வரப்படும் எந்தவொரு படிமுறையையும் அழிப்பதற்கு நான் முன்வருவேன். 19ம் திருத்தத்தை எதிர்த்ததை ஓர் உதாரணமாகக் காட்ட முடியும். மத நம்பிக்கையற்ற குழுக்கள் அதிகரித்தல், ஓரினச் சேர்க்கையை சட்டபூர்வமாக்க முயற்சித்தல் போன்ற விடயங்களை முறியடிக்க நான் கொள்கை ரீதியாக இணங்குகின்றேன். எமது கலாசாரத்தின் சிறந்த குணாம்சங்கள் அனைத்தையும் அழித்து செயற்கையான உலகத்தை உருவாக்குவதுதான் நியோலிபரல்வாதிகளின் தேவையாக உள்ளது. அதற்காக பல்வேறு வடிவங்களில் எம்மீது விடுக்கப்படும் அழுத்தங்களை இனங்கண்டு, அவற்றைத் தோற்கடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுதான் என்னுடைய முறைமை.

மக்கள்நேயமிக்கதென அமைத்துக் கொண்ட ரணில் மைத்திரி அரசாங்கம், நியோ லிபரல்வாதக் கொள்கைகளைச் சுமந்துகொண்டு செயற்பட ஆரம்பித்தது. எமது கலாசார மூலாதாரங்களை உதைத்துத் தள்ளி மதங்களற்ற அரசாட்சி ஒன்றை நடத்திச் செல்ல அவர்கள் முயற்சித்தனர். அதனால்தான். தேசிய அரசு எண்ணக்கருவை மதிக்கும் ராஜபக்ஷ அரசாங்கமொன்றை மீண்டும் உருவாக்குவதற்குத் தேவையான பின்னணியை அதனாற்தான் உருவாக்கிக் கொண்டோம்.

போலி நல்லாட்சியாளர்கள் மக்களையும் பாராளுமன்றத்தையும் திசைதிருப்பி நிறைவேற்றிக் கொண்ட 19வது அரசியலமைப்பில் நிறைவேற்று ஜனாதிபதியின் கைகால்கள் கட்டப்பட்டிருந்தாலும் அவரிடம் இப்போதிருக்கும் குறைந்தபட்ச நிறைவேற்று அதிகாரத்தைப் பாவித்துத்தான் இப்போது எம்மால் எமது நாட்டின் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளது. பாராளுமன்றமும் மாகாண சபைகளும் இல்லாத நேரத்தில் இத் தீவிரமான தொற்றுநோயைச் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையால் தான் சிறப்பாகக் கட்டுப்படுத்த முடிந்தது. மாநில ஆளுநர்கள் அமெரிக்க ஜனாதிபதி சொல்வதைக் கேட்டு செயல்புரிய விரும்பாததால் தான் அமெரிக்க ஜனாதிபதியால் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. இந்தியாவிலும் இவ்வதிகாரப் பரவலாக்கத்தில் காணப்படும் சிற்சில குறைபாடுகள் காரணமாகத்தான் கொரோனாவைக் கட்டுப்படுத்துவது சிரமமாக உள்ளது. எனினும் எமக்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையினுள் ஒரு கட்டளையின் மூலம் முழு நாட்டினதும் அவதானத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது. அதனால்தான் இன்று நாம் கொரோனாக் கட்டுப்பாட்டு விடயத்தில் வெற்றியைக் கண்டுள்ளோம். எமது நாட்டில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை செல்லுபடியற்றதாக்குவதாக இருந்தால் கண்டிப்பாக எமது அரசியலமைப்பின் 13வது திருத்தத்தையும் அகற்றியே ஆகவேண்டும். அவ்வாறே தொகுதி முறையில் தேர்தல்கள் இடம்பெற வேண்டும். அவ்வாறின்றி அவை அவ்வாறிருக்கும் வகையில் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை செல்லுபடியற்றதாக்கினால் எமது அரசின் தீர்மானங்களை எடுக்க முடியாத நிலையற்ற அரசாக மாறலாம்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியவர்கள் 2015ல் தோல்வியுற்ற பின்னர் அவரை மீண்டும் தொடர்ச்சியாக அரசியல் ஓட்டத்தில் இணைத்துக் கொள்வதற்காக மஹிந்த சூறாவளி பெப்ரவரி 19ம் திகதி நுகேகொடையில் ஆரம்பமானது. அதற்கு முன்னர் ஜனவரி 10 அல்லது 11ல் கொழும்பில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பொன்றில் நாம் மஹிந்தவை மீண்டும் அரசியலில் செயற்படச் செய்வதாக உறுதியளித்தோம். அப்போது மக்கள் கால்ட்டனுக்குப் போக தொடங்கியிருக்கவில்லை. அவ்வாறானதொரு பின்னணியில் தான் நாம் மஹிந்த ராஜபக்ஷ முன்னாள் ஜனாதிபதிக்கு மீண்டும் மக்களை செயற்பாட்டு அரசியலில் அணிதிரட்ட வேண்டும் என ஆலோசனை விடுத்தோம். அன்று மஹிந்த ஐயா ஸ்ரீலங்கா காரர்கள் தோற்றுவிட்டால் மீண்டும் எழுப்புவதற்கு ஐந்து வருடங்களேனும் செல்லும் என என்னிடம் சொன்னார். சிங்கள வாக்காளர்களில் பெரும்பான்மையானவர்கள் அன்று வாக்குகளை மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதிக்கே அளித்திருந்ததால்தான் அன்று அந்த நிலைமை வித்தியாசமானது என்பதை நாம் புரிந்து கொண்டோம். அதனாற்தான் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ வைத் செயற்பாட்டு அரசியலில் இணைத்துக் கொள்வதற்கான வலிமை உருவானது. அத்தோடு ஆரம்பிக்கப்பட்ட மஹிந்த காற்றுடன் எமக்கு பல்வேறு வகையான அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் ஏற்பட்டன. சிறைச்சாலைகளில் கிடக்கவும் நேர்ந்தது. அவ்வாறிருப்பினும் அப்போராட்டத்தை நாம் கைவிடாது தொடர்ச்சியாக எடுத்துச் சென்றதால்தான் போலி நல்லாட்சி அரசாங்கத்தை நான்கு ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்த எம்மால் முடிந்தது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் ஆரம்பம் முதலே இந்நாட்டுக்கு நல்லதெதையும் செய்யவில்லை. அக்ஸா ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டு மேற்கொண்ட அழிவை இன்னும் இந்த நாட்டால் தாங்க முடியவில்லை. சஹரான்மாரின் கொலைகளுக்கு அந்த அரசாங்கம் வெறுமனே இடங்கொடுத்துவிடவில்லை. அதன் பின்னணியில் பாரிய கதையொன்று உள்ளது. இன்று பொலிசின் உயர் அதிகாரிகள் கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூலங்களால்

தெளிவாகிறது. அன்று இந்த விசாரணைகளை மூடிமறைப்பதற்கு எவ்வாறு நடவடிக்கை எடுத்தார்கள் என்பது தெளிவு. இவ்வனைத்து ஆபத்துக்களையும் முன்கூட்டியே நாம் கண்டு நாட்டின் மீது அன்பு செலுத்தும் பெரும்பான்மை மக்களுக்கு அறிவூட்டி 2019ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முகங்கொடுத்த போது இந்நாட்டின் தீவிரவாத சக்திகள் அனைத்தையும் தகர்த்துக் கொண்டு நாட்டுப் பற்றுடைய தேசியவாத சக்திகள் கோட்டாபய ராஜக்ஷவை இந்நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்வதில் வெற்றியடைகின்றன. அவ்வாறுதான் நாம் நல்லாட்சி அரசாங்கத்திற்கு மூடு விழா நடத்தினோம்.

ஸ்ரீ.ல.சு.கட்சியின் அதிகாரம் மைத்திரிபால சிறிசேனவிடம் மாறியதுடன் கடந்த தேர்தலில் நாம் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் தொடர்பில் எமக்கு ஐயம் இருந்தது. அதனாற்தான் நானும் உதய கம்மன்பில ஆகிய இருவரும் தேர்தலில் தனியாகப் போட்டியிட ஆலோசித்தோம். ஆனால் ஸ்ரீ.ல.சு.கட்சி இன்றிப் போட்டியிட்டால் எம்மால் வெற்றிபெற முடியாது என்பதாகத்தான் அநேகமானவர்கள் கருதினார்கள். அதனால் இறுதியில் நாமும் அவர்களோடு ஒன்றாகப் போட்டியிடத் தீர்மானித்தோம். அப்பொதுத் தேர்தலில் நாம் பெரிய பாடமொன்றைக் கற்றுக் கொண்டோம். அப்பாடத்திற்கு ஏற்பத்தான் இந்நாட்டின் திக்குத் தெரியாதிருந்த ஸ்ரீ.ல.சு.கட்சியைச் சேர்ந்தவர்கள் உட்பட அனைத்து நாட்டுப்பற்றுக் கொண்டவர்களும் இணைந்து கொள்ளக் கூடியவாறு பசில் ராஜபக்ஷ வினால் ஸ்ரீலங்கா பொது பெரமுன உருவானது. இல்லையேல் எம்மால் உள்ளூராட்சித் தேர்தலையோ ஜனாதிபதித் தேர்தலையோ வெற்றிகொள்வது சவாலாக அமைந்திருக்கும்.

# எத்தருணத்திலும்........ 71 ஆம் பக்கத் தொடர்ச்சி

நாம் சனநாயக ரீதியாக செயற்பட்டுள்ளோம் என்பதை யார் வேண்டுமானாலும் புரிந்துகொள்ளலாம். எனினும் 51 நாள் அரசாங்கத்தை அமைத்த போது அதுவரை அரசாங்கத்தோடு இருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்த வந்தபோது, நாம் எமது எதிர்க்கட்சியின் பதவிகளை கைவிட்டுவிட்டு அவர்களிடம் ஒப்படைத்தோம். ஒவ்வொரு தருணத்திலும் நாம் பாராளுமன்ற சம்பிரதாயத்தைப் பாதுகாத்து, பாராளுமன்றத்தில் ஏற்படவிருந்த சீர்கேடுகளைத் தடுத்திருக்கின்றோம்.

பாராளுமன்றத்தில் நாம் பாராட்டுக்குரிய எதிர்க்கட்சியாக செயற்பட்டோம். அவ்வாறே பாராளுமன்றத்தில் கற்பனையான எதிர்க்கட்சியொன்று செயற்பட்டது. நாம் எம்சீசீ ஒப்பந்தத்தில் உள்ளடங்கியிருந்த உண்மை விடயங்கள் தொடர்பில் எமது எதிர்ப்பைத் தெரிவித்த போது அவர்கள் எம்சீசீ பற்றிய கட்டுக் கதைகளை கட்டவிழ்த்து விட்டனர் சீகிரியாவுக்குச் செல்ல வீசா எடுக்க நேரிடும் என்றார்கள், பொருளாதார வாயிற்கூடமொன்று உருவாகிறது, 12 இலட்சம் ஏக்கர் நிலம் 180 ரூபா வீதத்தில் அமெரிக்காவுக்கு வழங்கப்படும் போன்ற பொய்யான கற்பனா விடயங்கள் எதிர்க்கட்சியினால் சமூகமயப்படுத்தப்பட்டது. அதற்கேற்ப ராஜபக்ஷ முகாம் உண்மையான ஒரு விடயத்தைச் சுற்றி பாரிய கட்டுக் கதையொன்றை கட்டவிழ்த்து விடுவதில் வெற்றி பெற்றது. எனினும் நாம் கற்பனையின் பங்காளிகள் ஆகவில்லை. நாம் அக்கற்பனையின் பங்காளிகளாக இல்லாத போது பல்வேறு குற்றச்சாட்டுகள் எம்மீது விடுக்கப்பட்டன.

ம.வி.மு மதங்களற்ற சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களைத் தீட்டுகின்றது என்ற குற்றச்சாட்டுகளைக் கூறுபவர்கள் இன்று எங்களுடைய மதம் சீரழிவுக்கு உட்படுவதற்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள பிரதான காரணிகள் பற்றிக் கவனம் செலுத்தவில்லை. மதங்களை அரசியலோடு இணைத்துக்கொள்வதே உண்மையில் எமது மதச் சீரழிவுக்குப் பிரதான காரணியாக அமைந்துள்ளது. நானும் எனது கட்சியும் ஒருபொழுதும் மதத்தை அரசியல் நிகழ்ச்சிநிரலின் ஒரு பகுதியாக்கிக் கொள்ள மாட்டோம். மதத்துக்கு எம்மால் வழங்கக்கூடிய உன்னதமான கௌரவம் அதுதான் என நாம் நினைக்கிறோம். எவ்வாறாயினும் எமது நாட்டின் தோல்வியுற்ற அரசியல்வாதிகளுக்கு கருத்தியல் இல்லாத போது அவர்கள் ஒளிந்துகொள்ளும் இடங்களாகத்தான் இந்த இனமும் மதமும் காணப்படுகின்றன. இன்று அதுதான் நிகழ்ந்துள்ளது.

மிகவும் எளிய மொழிநடையில் எழுதப்பட்டுள்ள கொள்கைத் தொகுப்பொன்றையே நாம் முன்வைத்துள்ளோம். ஆனால் எமது நாட்டிலுள்ள நிலைமை என்னவென்றால், நாம் கலந்துகொள்ளும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், ஊடகக் கலந்துரையாடல்கள் போன்றவற்றில் அதற்காகக் வழங்கப்படும் நேரத்தில் அரைவாசிக்கும் மேலாக எமது எதிரிகளால் கட்டியெழுப்பப்படும் கட்டுக் கதைகளை மீண்டும் மீண்டும் தோற்றுவித்துப் பேசுவதற்கே வழங்குகிறாா்கள். அதில் நாம் களைத்துப் போயுள்ளோம். ஒரே கேள்விக்கு நான் இதுவரை பல தடவைகள் பதில் அளித்துள்ளேன்.


முதலில் நாம் ஒரு இணக்கப்பாட்டை உருவாக்கிக் கொள்ள வேண்டும். 72 வருடங்களாக இந்நாட்டை ஆண்ட தோல்விகரமான ஆட்சியாளர்கள் எமது நாட்டை தோல்வியின் உச்சிக்கே கொண்டு சென்றார்கள் என்பதே அது. அது பற்றி எம்மிடைய விவாதமொன்றிருக்க வேண்டும். அத்தோடு இதிலிருந்து மீண்டெழும் வழியென்ன என்பதைப் பற்றிய கலந்துரையாடலும் எம்மிடையே உருவாக வேண்டும். அக்கலந்துரையாடலைச் சிறப்பாகச் செய்து நாம் சாத்தியமான விடயங்களைத் தோற்றுவித்துக் கொள்ள முடியும் அவ்வாறு தோற்றுவித்த நான்கு விடயங்கள் எம்மிடம் உள்ளன. அதில் முதலாவது விடயம் அரசாங்கமொன்றின் பிரசை மீதான பொறுப்பு. இரண்டாவது அரசு என்ற வகையில் சமூகத்தின் மீதான பொறுப்பு, மூன்றாவது அரசு என்ற ரீதியில் தாய்நாடு மீதான பொறுப்பு அவ்வாறே அரசாட்சி செய்பவர்களின் பொறுப்பு என்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்ட ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்றை நாம் சமர்ப்பித்துள்ளோம். அதற்கேற்ப, அரசாங்கம் நபர்களுக்கு வருமான வழியொன்றை, வீடொன்றை, சிறந்த கல்வியை ஆரோக்கியமான வாழ்வு மற்றும் உளரீதியான சுதந்திரம் என்ற விடயங்களை அரசாங்கம் என்ற வகையில் ஒரு நபருக்கு வழங்க வேண்டும். அரசாங்கத்துக்கு சமூகப் பொறுப்புள்ளது. சமூக பாதுகாப்பு, சட்டத்தின் ஆணைகள் நியாயமாக நிறைவேற்றப்படுதல். போதைப் பொருள், வாகன விபத்துகள், கொள்ளைகள் போன்ற குற்றங்களைக் குறைத்தல் என்பன அரசாங்கத்தினால் சமூகத்துக்கு ஆற்றப்பட வேண்டிய பணியாகும். அரசாங்கம் தாய்நாட்டைக் காப்பாற்றியாக வேண்டும். தாய்நாட்டைக் காக்கவேண்டுமாயின் நல்லதொரு வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். உலகத்தில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை சிறப்பாக முகாமைப்படுத்தி நாம் எமது இடத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இறுதி விடயமாக ஊழல், விரயம், மோசடியற்ற வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்கப்பட வேண்டும்.

நாம் கடந்த பாராளுமன்றத்தில் இருந்த எண்ணிக்கையை விட அதிக எண்ணிக்கையிலான பிரதிநிதிகளை நியமிக்கும் எதிர்பார்ப்புடன் மக்களை அறிவூட்டி வருகின்றோம். அவ்வாறே எமது நாட்டின் உண்மையான அரசியலை ஆகஸ்ட் 5ம் திகதியின் பின்னர் அறிந்து கொள்ள முடியும் என நான் நம்புகின்றேன்.

நாம் காட்டுமிராண்டிப் பொலிசுக்கோ காட்டுமிராண்டி நீதிமன்றச் செயற்பாட்டுக்கோ செல்ல முடியாது. அவ்வாறாயின் அக்குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகள் செய்ய வேண்டியது அவற்றுக்கெனவுள்ள நிறுவனம் தான். அவ்வனைத்து நிறுவனங்களும் ஊழல் மிக்கவை. அந்நிறுவனங்களை நெறியாளும் நிருவாகிகளும் ஊழல் மிக்கவர்கள், இச்செயற்பாட்டின் ஊடே ஒரு சரளமான உண்மை உள்ளது. ஒரு மோசடிக்காரர் இன்னொரு மோசடிக்காரருக்கு தண்டனை வழங்க மாட்டார் என்பதே அது.

இந்த நிலையை மிக விரைவில் சீர்செய்ய வேண்டிய தேவை எமக்கும் உள்ளது. ஆனால் அதனை எங்கள் விருப்பத்திற்கேற்ப மாத்திரமே செய்துவிட முடியாது. அதற்காக இந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள் தயாராக வேண்டும். மக்களின் பங்களிப்பு கிடைக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் நாட்டை ஏற்றுக் கொண்டு சரியான திசை நோக்கிப் பயணிக் நாம் தயார்.

(பத்திரிகை நேர்காணல் ஒன்றிலிருந்து)



twitter.com

# மதத்தை அல்லது இனத்தை

## முதன்மைப்படுத்தி அரசியல் செய்யக்கூடாது

### கலாநிதி வண. பத்தேகம சமித்த தேரர்

**❍ கடந்த ஜனாதிபதித் தேர்தல், இலங்கைச் சமூகத்தில் நீண்டகாலமாக நிலவிய பிரிவு ரேகையை மேலும் பலவீனப்படுத்தி அடையாளப்படுத்திய தேர்தலாகும். சிறுபான்மையினங்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்காக, அரச தரப்பிலிருந்து போதியளவு கவனம் செலுத்தப்பட்டுள்ளதா?**

கடந்த தேர்தலின் முடிவுகளைப் புரிந்துகொள்வதற்கு அத்தருணத்தில் நிலவிய அரசியல் கூட்டணிகளைக் கவனித்தல் வேண்டும். அதனை அவதானித்து நாட்டில் இனங்களுக்கிடையே பாரதூரமான பிளவு ஏற்பட்டுள்ளதென தீர்மானிக்க முடியாது.

ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின்பு ருவன்வெலிசாய விகாரையின் முன்னிலையில் ஜனாதிபதி சத்தியப் பிரமாணம் செய்த வேளை ஆற்றிய உரை தொடர்பாகவும், பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இலங்கையின் இன நல்லிணக்கத்திற்கு அது பாதகமானதென பலர் அதனை வியாக்கியானம் செய்தனர். அது ஒரு பாதகமான கூற்றெனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அவர் தான் உணர்ந்த விடயத்தை நேர்மையாக வெளிப்படுத்துவதாகவே நான் அதனை நோக்குகின்றேன். உள்ளொன்று வைத்து புறமொன்று அவர் பேசவில்லை. இலங்கையின் யதார்த்த நிலைமையைப் பற்றிய ஒரு கூற்றாகவே நான் அதனை காண்கின்றேன். நான் தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மைச் சமூகங்களுடன் மிக நெருக்கமாகச் செயற்படுபவன் என்ற வகையில் அவர்கள் அதை புரிந்துகொண்ட விதம் பற்றி எனக்கு ஒரு புரிதல் உண்டு.

ஆரம்பத்தில் சிற்சில சந்தேகங்கள் ஏற்பட்டிருந்தாலும் சந்தேகத்தின் நிமித்தம் சில வரலாற்றுத் தவறுகள் ஏற்பட்டுள்ளன என்பதை தற்போது அவர்களே புரிந்துகொண்டுள்ளார்கள்.

இம்முறை தேர்தலில் அவர்களுடைய முடிவு முற்றிலும் மாறுபட்டதாக அமையும் என நான் நம்புகின்றேன். குறிப்பாக காலியில் வாழும் முஸ்லிம் மக்களோடு செயற்பட்ட அனுபவத்தினூடாகவே இதனை நான் கூறுகின்றேன். எனவே முன்னைய பிரிவு ரேகை தொடர்ந்தும் வலுவானதாக இருக்கும் என நான் நம்பவில்லை.

**❍ யுத்தம் ஓய்ந்து பத்து ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், இலங்கையின் அரசியல் தொடர்ந்தும் அதைச் சுற்றி ஒரே இடத்தில் சுழன்று கொண்டிருக்கும் இயல்பைக் காண முடிகின்றது. வடக்கைப் போலவே தெற்கின் நிலமைக்கும் இது பொதுவானது இதற்கு அப்பால் செல்ல வேண்டுமாயின் மேற்கொள்ள வேண்டிய பயணப் பாதை எது ?**

நீங்கள் கூறும் நிலமை ஏற்கனவே மாற்றமடைந்து வருகிறது என நான் நினைக்கின்றேன்.

என்றுமே வன்முறை மூலமும் பயங்கரவாதத்தின் மூலமும் தமது பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொள்ளத் தொடங்கியுள்ளனர். விடுதலைப்

**புலிகள் மீண்டும் என்றுமே தலைதூக்க முடியாது. அதே சமயம் நடைமுறையிலுள்ள அரசுடனான ஒத்துழைப்பின் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்து மக்கள் மத்தியிலிருந்து உருவாகியுள்ளது.**

அரசியற் கட்சிகளுக்குள்ளும் இத்தகைய உட்கட்சி கலந்துரையாடல்கள் உருவாக்கம் பெற்றுள்ளது. சிறுபான்மையினரின் வாக்குகள் கிடைத்தால் என்ன கிடைக்காவிட்டால் என்ன ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியுமென்பதை கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது முதல் முறையாக உறுதிப்படுத்தப்பட்டது. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இது தான் யதார்த்தம். சிறுபான்மைக் கட்சிகளின் அரசியல் நிகழ்ச்சி நிரலில் தெளிவான மாற்றத்திற்கு இது காரணமாக அமையும் என நான் கருதுகிறேன். நான் இது தொடர்பாக சாதகமான மனப்பாங்குடனேயே நோக்குகின்றேன். ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் போது அல்லது பாராளுமன்றத்தைத் தெரிவு செய்யும் போது சிறுபான்மை சமூகங்களின் ஒத்துழைப்பு கிடைத்தால் என்ன கிடைக்காவிட்டால் என்ன இது நிரூபிக்கப்பட்டுள்ளது. கடந்த கால தீவிர நிலைப்பாட்டிலேயே நாம் தொடர்ந்து வாழ முடியாது.

"

**தமிழர் விடுதலைக் கூட்டணி இளைஞர்களை ஏமாற்றியதாகவும் அதன் காரணமாக தென் இலங்கையைச் சார்ந்த நாம் தமிழ் மக்களுடன் நெருக்கமாக உறவுகொண்டு அவர்களுடைய சிக்கலான பிரச்சினைகளுக்கு நிரந்தரமாகத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களை எந்த வகையிலும் இரண்டாம் தர பிரஜைகளாக நோக்குவதில்லை எனச் சிங்கள சமூகம் நிரூபிப்பதன் மூலமே நாம் படிப்படியாக தீர்வுகளை முன் வைப்பதன் மூலம் நல்லிணக்கம் பற்றிய கருத்தை மேம்படுத்த முடியும். கருத்தியல் ரீதியிலும் நடைமுறையிலும் இந்த வழிமுறையையே நான் அனுசரித்து வருகிறேன்.**

**எல்.ரீ.ரீ.ஈ. அல்லது வடபுலத்தின் அரசியற் கட்சிகளை திறனாய்வுக் கண்ணோட்டத்தோடு நோக்குவதாயின் இன்று வடபுலத்தின் மக்களால் நோக்க முடியும். தொடர்ந்தும் பழைய பாணியிலேயே நோக்க முடியாது. இதனை வடபுலத்து அரசியற் கட்சிகளும்** துரிதமாகப் புரிந்துகொள்வார்கள். தமிழர் தேசியக் கூட்டணி விடுதலைப் புலிகளின் தேவைகளுக்கு அமைய செயற்பட்டதாக கடுமையான விமர்சனம் உண்டு. ஆனந்தசங்கரி போன்ற தமிழ்த் தலைவர்கள் இக்கருத்தை தமிழர் மத்தியில் சமூக மயப்படுத்தி வருகின்றனர்.

இளைஞர்கள் மத்தியிலும் இறுக்கமான கருத்தியல் நிலவுகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி இளைஞர்களை ஏமாற்றியதாகவும் அதன் காரணமாக தென் இலங்கையைச் சார்ந்த நாம் தமிழ் மக்களுடன் நெருக்கமாக உறவுகொண்டு அவர்களுடைய சிக்கலான பிரச்சினைகளுக்கு நிரந்தரமாகத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களை எந்த வகையிலும் இரண்டாம் தர பிரஜைகளாக நோக்குவதில்லை எனச் சிங்கள சமூகம் நிரூபிப்பதன் மூலமே நாம் படிப்படியாக தீர்வுகளை முன் வைப்பதன் மூலம் நல்லிணக்கம் பற்றிய கருத்தை மேம்படுத்த முடியும். கருத்தியல் ரீதியிலும் நடைமுறையிலும் இந்த வழிமுறையையே நான் அனுசரித்து வருகிறேன்.

**❍ இனங்களுக்கிடையே பரஸ்பர நம்பிக்கையையும் சகவாழ்வையும் கட்டியெழுப்புவதற்கு எதிர்காலத்தில் தெரிவுசெய்யப்படும் பாராளுமன்றத்திற்கு ஒப்படைக்கப்படும் பணிகள் எத்தகையவை ?**

அடுத்த புதிய பாராளுமன்றத்தில் சகவாழ்வுடனும் நம்பிக்கையுடனும் செயற்படும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான பின்னணியைத் தயாரிப்பதே முக்கிய பொறுப்பாக அமைதல் வேண்டும். இதன் பொருட்டு எமது நிகழ்ச்சி நிரலில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து “இது எமது நாடு” என்ற உணர்வுடன் செயற்படுவதற்கு ஊக்குவிப்பது எமது அடுத்த பாராளுமன்றத்தின் பொறுப்பாக அமைய வேண்டும். குறிப்பாக 2050 ஆகும் போது சீனா உலகின் வல்லரசாக வளர்ச்சியடையப் போகின்றது. இந்தியா அடுத்த வல்லரசாக வளர்ச்சியடையும். அதன் பொருட்டு நாட்டை தயாரிக்கையில் தேசிய நல்லிணக்கமும் மதங்களுக்கிடையேயான சகவாழ்வும் மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதே சமயம் தீவிரவாதத்தை நிராகரிப்பதும் அத்தியாவசியமான ஒரு விடயமாகும். தற்போதைய ஜனாதிபதி இவ்விடயங்களை மிகவும் அறிவுபூர்வமாக புரிந்துகொண்டுள்ளார். அதே சமயம் பங்களாதேசம் எமக்கு வழங்கிய உதாரணம் மிகவும் பெறுமதியானது. காரணம், பங்களாதேசம் மிகவும் பின்தங்கிய ஏழைகளால் நிரம்பிய முஸ்லிம் தீவிரவாத சரியாச் சட்டத்திற்கு ஏற்ப ஆட்சி நடத்தப்படுகின்ற ஒரு சமூகமாகவே இருந்தது. வறுமை காரணமாக அவர்கள் மிகவும் துன்பப்பட்டார்கள். எனவே தீவிரவாதத்தை புறக்கணித்தலும் அபிவிருத்திக்கான அடித்தளமிடுவதும் அங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. குறிக்கோள் அபிவிருத்தியாயின் இனங்களுக்கிடையேயான சகவாழ்வும் மதங்களுக்கிடையேயான நல்லிணக்கமும் எமது நிகழ்ச்சி நிரலில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

**❍ பாராளுமன்றத்தில் பௌத்த குருமாரின் பிரதிநிதித்துவத்தை தாங்கள் தான் அடையாளப் படுத்தினீர்கள் அதன் பின்னர் அது ஓர் அலையாக மாறியது. அதே சமயம் பின்னர் மக்கள் இச் செயற்பாட்டை நிராகரித்தனர். இதனை நீங்கள் எவ்வாறு அர்த்தப்படுத்துவீர்கள் ?**

பாராளுமன்றத்தில் பௌத்த குருமாரின் பிரதிநிதித்துவத்தை நான் ஆரம்பித்து வைத்தது உண்மை. ஆனால், அதன் பின்னர் உருவாகிய பௌத்த குருமாரின் அரசியல் அலை நான் அனுசரித்த அரசியற் கொள்கைகளுக்கு முற்றிலும் வித்தியாசமானது, அது தற்காலிகமானது. இச்செயற்பாடு காலக்கிரமத்தில் மக்களால் நிராகரிக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட கோஷ்டியினரின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய பௌத்த குருமார் செயற்பட நேர்ந்தமையால் அச்செயற்பாடு மக்கள் மத்தியில் அம்பலமாகியது. சிங்கள தேசத்தின் சார்பிலும் பௌத்த தர்மத்தின் சார்பிலும் அவர்கள் தோன்றுவதாக இனம் காட்டிக்கொண்டு மத சந்தர்ப்பங்களையும் அடையாளங்களையும் பயன்படுத்தி, முற்றிலும் பௌத்த தர்மத்திற்கு எதிரான தீவிரவாத கருத்துக்களையே அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தினர். அதனை அவர்கள் சமூகமயப்படுத்த முற்பட்டனர். இத்தகைய அரசியலின் விதி எவ்வாறு அமைந்தது என உங்களுக்குத் தெரியும். இத்தகைய தீவிரவாதங்களுக்கு நீண்டகாலம் நிலைத்திருக்க முடியாது என்பதை உறுதிப்படுத்துவதற்கு இது சிறந்த உதாரணம் ஆகும்.

எனது அரசியல் கருத்து இதற்கு முற்றிலும் மாறுபட்டது. நாம் மதத்தை அல்லது இனத்தை முதன்மைப்படுத்தி அரசியல் செய்யக் கூடாது என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்இனவாததத்தை அல்லது மத வாதத்தை என்றுமே நான் அரசசியல் நன்மைக்காக பயன்படுத்தியது கிடையாது உண்மையில் மேலே விபரித்த



பாராளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டிய ஒன்பது பௌத்த குருமார்

**பாராளுமன்றத்தில் பௌத்த குருமாரின் பிரதிநிதித்துவத்தை நான் ஆரம்பித்து வைத்தது உண்மை. ஆனால், அதன் பின்னர் உருவாகிய பௌத்த குருமாரின் அரசியல் அலை நான் அனுசரித்த அரசியற் கொள்கைகளுக்கு முற்றிலும் வித்தியாசமானது, அது தற்காலிகமானது. இச்செயற்பாடு காலக்கிரமத்தில் மக்களால் நிராகரிக்கப்பட்டது.**

**ஒரு குறிப்பிட்ட கோஷ்டியினரின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய பௌத்த குருமார் செயற்பட நேர்ந்தமையால் அச்செயற்பாடு மக்கள் மத்தியில் அம்பலமாகியது.**

அரசியல் அலை மேலெழுந்த போது எனது பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை நான் இழக்க நேரிட்டது. நான் ஏற்கனவே கூறிய மக்கள் அலை தோன்றிய போது எனது பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை நான் இழக்க நேர்ந்தது.தற்காலிக எழுச்சியுற்ற அலைக்குப் பின்னால் ஓடாமல் சரியான நிலைப்பாட்டில் நான் உறுதியாகஇருந்தேன். பௌத்த மத குருவின் கடமைகளுக்கு அமைய சமய ரீதியான நல்லிணக்கம் தேசிய நல்லிணக்கம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டால், கட்டாயமாக அதனை மக்கள் புறக்கணிக்கமாட்டார்கள். அதே சமயம். காலனித்துவவாதிகளுக்கு எதிராக விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் போது பௌத்த குருமாரின் நடவடிக்கைகள் புதிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் செயற்பட வேண்டும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

**❍ மோதல் முகாமைத்துவம் பற்றிய பௌத்த தத்துவம் மிக உன்னதமான முன்னுதாரணங்களை வழங்குகின்றது தற்போதைய நிலைமைகளுக்கு ஏற்ப அவற்றை நடைமுறையில் எவ்வாறு அமுல்படுத்துவது ?**

புத்தர் பெருமான் உலகின் ஏனைய மதத் தலைவர்கள் இடையே மாபெரும் அந்தஸ்தை வைக்கின்றார். அவர் கிறிஸ்துவுக்கு முன் 6வது நூற்றாண்டில் இருந்து உலகத்திற்கு உபதேசித்த விடயங்கள் சர்வகாலத்திற்கும் பொருந்தும். உலகம் முழுவதும் பௌத்த தர்மம் பெரிதும் பாராட்டப்படுவதற்கு இந்த விடயம் ஒரு காரணமாக அமைகின்றது.

“பகைமையை பகைமையால் அழிக்க முடியாது (பாளியில் “நஹீ வேறாண வேறாணி) என்று புத்தர் பெருமான் வன்முறையையும் பகைமை உணர்வையும் தெட்டத் தெளிவாக புறக்கணித்தார். போர் எந்த வகையிலும் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையும் என புத்தர் பிரான் ஏற்றுக்கொள்ளவில்லை. அதே சமயம் அனைத்து மதத்தினரும் மற்றைய மதங்களை பரிகசித்தல் தமது மதத்தை பரிகாசம் செய்வதற்குச் சமன் என்று புத்தர் பெருமான் உபதேசித்துள்ளார். நீரைப் பங்கிடுவது தொடர்பான யுத்தம், சாக்கிய - கோலிய வம்சத்தினரிடையே ஏற்பட்ட போரை நிறுத்துவதற்கு புத்தர் பிரான் மேற்கொண்ட நடவடிக்கைகள் நடைமுறைச்சாத்திய உதாரணங்கள். எனவே பௌத்தர் ஒருவருக்கு எந்தவகையிலும் யுத்தத்தின் மூலம் தீர்வுகாண முடியும் என்பதற்கு உடன்படி முடியாது. இந்த மனோபாவத்தை புத்தர் பெருமான் வலியுறுத்தி இருக்கின்றார். புத்தர் பெருமான் ஒரு போதும் வன்முறையை ஆதரிக்கவில்லை. தன்னைப் பின்பற்றுகின்றவர்கள் அமைதியான தீர்வுகளை நாட வேண்டும் அதன் பொருட்டு தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்றே அவர் தர்ம உபதேசம் செய்துள்ளார். நேர்மையான பௌத்தர்கள் இதற்கு அமைய உலகத்தை நோக்கி இத்தத்துவத்தை அமுலாக்குவதற்கு தம்மை அர்ப்பணிக்க வேண்டும். இதுவே பௌத்த குருமாரின் கடமையாக அமைய வேண்டும். புத்த தர்மத்தின் விழுமியங்களை உலகத்தாருக்கு எடுத்துக் கூறுவதை விடுத்து “சிங்கள பௌத்தர்கள் சார்பில் பேசுவது அன்னாரது போதனையாக அமையவில்லை. மிகவும் பரந்துபட்ட முறையில் உலகை நோக்குவதற்கும் தற்போதைய வன்முறையின் விளைவுகளை நடைமுறை ரீதியில் புரிந்துகொண்டவர்கள் என்ற வகையில் தமது ஆதரவாளர்களுக்கு புத்தர் பெருமான் உண்மையான தகவலை புரிய வைப்பதற்கு பௌத்த குருமார் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

**❍** பிரதிநிதித்துவ ஜனநாயகம் மீது இவ்வளவு பொதுமக்கள் நம்பிக்கை இழந்த வேறு ஒரு காலகட்டம் கிடையாது. ஒட்டுமொத்த ஜனநாயக முறையே இதன் மூலம் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இந் நிலைமைக்குப் பரிகாரமாக என்ன செய்யவேண்டும் ?

இலங்கையின் அரசியலமைப்புக்கு ஏற்ப இறைமையும் சுயாதிபத்தியமும் மக்களிடமே உள்ளது. பாராளுமன்றத்திற்கு தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் மக்கள் எதிர்பார்க்கும் குறிக்கோள்: தமக்காக மக்கள் பிரதிநிதிகள் தோற்றுவதாகும். ஆனால் இந்த உண்மையான குறிக்கோள் கடந்த காலத்தில் பாரதூரமான முறையில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் மக்களின் இறைமை அதிகாரத்தை போலி வாக்குறுதிகள் மூலம் பெற்றுக்கொண்ட பின்னர் அதனை தான் விரும்பியவாறு பயன்படுத்தக் கூடிய ஒரு தனிச்சொத்தாகக் கருதி மக்களின் அபிப்பிராயத்திற்கு எதிராக, பதவி, பணம், சொத்துக்கள் என்பவற்றிக்காக விலை பேசும் ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. இது பற்றி மக்கள் மத்தியில் உண்மையான அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். மீண்டும் அந்நம்பிக்கையை வென்றெடுப்பதற்கும் உண்மையான ஜனநாயகத்தை சமூகத்தில் பிரதிபலிப்பதற்கும் தமது மக்களின் பிரதிநிதி என்ற வகையில் அவர்களின் நம்பிக்கைக்கு துரோகம் விளைவிக்காமல் செயற்பட வேண்டும். மக்கள் பிரதிநிதிகளின் கடமை மக்களின் அபிப்பிராயத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாகும். மக்கள் பிரதிநிதி நேர்மையானவர் என்று ஏற்றுக்கொள்ளும் வகையில் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முடியாது. எனவே ஜனநாயகத்தை மதிக்கும் மக்கள் பிதிநிதிகள் பொதுமக்களின் கருத்தை விகாரம் செய்வதில் இருந்து தம்மை தவிர்த்ததுக்கொள்வதை ஒரு சீலமாக அனுஷ்டித்தல் வேண்டும்.



dailynews.lk

# ஒற்றை ஆட்சியைக் காப்பதற்காகவே அன்று நுகேகொடை அலை ஆரம்பிக்கப்பட்டது

மஹஜன எக்சத் பெரமுணவின் தலைவர்
**தினேஷ் குணவர்தன**

"

**இந்த யுகத்தின் கோரிக்கை கற்றுத் தேர்ந்த சமூகம். மக்களின் நம்பிக்கை கற்றவர்கள், அறிவுஜீவிகள், தொழில் வாண்மையாளர்கள் பாராளுமன்றத்தில் தேசியப் பணியை நிறைவேற்றுவார்கள் என்பதாகும்.**

உறுதியான அரசாங்கமொன்று இல்லாதிருத்தல் மக்கள் பிரதிநிதிகளால் மக்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாமைக்கு ஒரு காரணம். உண்மையில் உறுதியான நிலைத்த அரசாங்கம் இல்லாமையினூடாக நம்பிக்கையோடு ஒரு விடயத்தைச் செய்யும் ஆற்றல் மக்கள் பிரதிநிதிக்கு இல்லாமற் போகிறது. அவ்வாறான நிலைமையில் மக்களிடமிருந்து ஏற்படும் விரக்தியானது 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்படுவதைத் தடுக்க முடியாது.

தொகுதிவாரித் தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் மற்றும் விகிதாசார தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் என்ற இரண்டிலும் ஒரே பணியை நிறைவேற்ற முடியுமா ? என்ற கேள்வியும் உள்ளது. நான் சொல்லுகின்ற இந்த விடயம் மக்கள் ஆழமாகச் சிந்திக்காத ஒன்றாக இருப்பினும் இவ்விடயம் தொடர்பாக சிந்திப்பதற்கு ஒரு விடயமும் உண்மையான பிரச்சனையொன்றும் உள்ளது.

அது எப்படியாயினும், மக்கள் நினைக்கின்ற 225 பேரும் வேண்டாம் என விடயத்தில் அரசியல்வாதிகள் என்ற வகையில் சரிசெய்து கொள்ள வேண்டிய பல விடயங்கள் உள்ளன என்ற கருத்தில் நானும் இருக்கிறேன். அதில் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும்

கல்வியியலாளர்கள், அறிவுஜீவிகள் என்போர் பாராளுமன்றத்துக்கு வருகை தர வேண்டும்.

இந்த யுகத்தின் கோரிக்கை கற்றுத் தேர்ந்த சமூகம். மக்களின் நம்பிக்கை கற்றவர்கள், அறிவுஜீவிகள், தொழில் வாண்மையாளர்கள் பாராளுமன்றத்தில் தேசியப் பணியை நிறைவேற்றுவார்கள் என்பதாகும்.

பாராளுமன்றத்தை நடத்திச் செல்வதற்காகச் செய்யப்படும் பாரிய செலவுக்குச் சமமான உற்பத்தித் திறனை அதனூடாக நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

நாம் செய்தவற்றை நாமே வர்ணித்துச் சொல்லுவதைப் பொதுவாக நான் விரும்புவதில்லை. அசையாத ஒற்றை ஆட்சியைப் பாதுகாப்பதற்காக அசையாத குரலும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டுள்ளன என்பது மக்கள் அறிந்த விடயம்.

உண்மையில் இந்தப் பணிக்காக நாம் மிகவும் சிரமமான கடினமான காலப்பகுதிகளைக் கடந்துள்ளோம். எம்மோடு 8 உறுப்பினர்கள் மட்டுமே இருந்த போது கூட நாம் எழுப்பிய குரல் அரசாங்கத்தின் குரலைத் தாண்டிச் சென்றது. மோசமான பயங்கரவாத நிலைமை நாட்டில் காணப்பட்ட போதும் எமது இளம் உயிர்களைப் பாதுகாப்பதற்காக நாம் செய்த தலையீடுகள் எமது அரசியலை கூர்மையாக்கின. புத்த சாசனத்திற்கும் புத்த தர்மத்திற்கும் எதிராகக் காணப்பட்ட அச்சுறுத்தல்களுக்கு எதிராக நாம் அன்றும் இன்றும் எழுந்து நின்றோம். எதிர்காலத்திலும் அது அவ்வாறுதான்.

இந்த இடத்தில் நான் இன்னொன்றைச் சொல்ல வேண்டும். நாம் எமது ஆசனங்களை எதிர்பார்த்து வேலை செய்யவில்லை. எமது ஆசனங்களுக்கு உரித்துடையது அல்ல என்பதற்காக நாம் விழிகளையும் செவிகளையும் மூடிக்கொண்டிருக்கவில்லை. நாம் பிரச்சனைகளின் முன்னிலையில் ஒட்டுமொத்த இனத்தையும் முழு நாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்தியே செயற்பட்டோம்.

நான், 1983 மே மாதம் 18 மஹரகம இடைத் தேர்தலில் வெற்றிபெற்று தலதா புனித சின்னத்தின் முன்னிலையில் உறுதிமொழியொன்றை வழங்கினேன். அதாவது, ஒற்றை ஆட்சியையும் தாய் நாட்டையும் புத்த சாசனத்தையும் பாதுகாப்பேன் என்பதாகும். அந்த உறுதிமொழியை இன்றும் நாம் காப்பாற்றுகின்றேன்.

சில கடினமான காலகட்டங்களை நாம் கடந்தோம். தாய்நாட்டைக் காக்கும் திட்டம், அபயாராமவில் நடந்த மே தின நிகழ்வு அதன் விசேட அம்சங்களாக அமைந்தது.

நாட்டையும் இனத்தையும் மதத்தையும் காப்பாற்றிக் கொள்வதற்காக நாம் எந்தப் போராட்ட முன்னணிகளைக் கட்டியெழுப்பினாலும் ஒருபோதும் நாம் ஆயுதங்களை ஏந்தவில்லை. சிங்கள இனத்திற்கான ஆர்ப்பாட்டங்கள், சத்தியாக்கிரகங்கள் உள்ளிட்ட அனேகமான நடைமுறைகளை நாம் அகிம்சை முறையிலேயே முன்னெடுத்தோம்.

நாம் அரசியல் மாற்றங்கள் பலவற்றுக்கு முகங்கொடுத்த அரசியல்வாதிகள். எனினும் நாம் எமது நோக்கங்களை எந்தக் காரணத்துக்காகவும் காட்டிக் கொடுக்கும் அளவுக்கு ஈனமான கோழைகளாக இருக்கவில்லை.

தேசப்பற்றுள்ள மக்கள் உள்ளிட்ட பல்லாயிரக் கணக்கான மக்கள்தான் எமது பிரதான சக்தியாக இருந்தார்கள். பல தேசப்பற்றுமிக்க தலைவர்கள் எம்மோடு கைகோர்த்து செயலாற்றினார்கள்.

திரு.மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சியின் பயனாகவே தோல்வியுற்றார். புலிப் பயங்கரவாதத்தினை தோற்கடித்து நாட்டை ஐக்கியப்படுத்திய காரணத்தால் அவ்வாட்சியை அகற்றி மீண்டும் சமஷ்டியை நோக்கி நாட்டைக் கொண்டு செல்வதற்கு சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கான முடிசூடல்தான் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தோற்கடிப்பு. உண்மையில் ஆட்சி மாற்றம் எனும் சர்வதேசத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

நாட்டை ஐக்கியப்படுத்திய ஒரு தலைவர் எந்தக் காரணத்துக்காகத் தோற்கடிக்கப்பட்டார் என்பதை நாம் உரியவாறு புரிந்து கொண்டோம். எதிர்காலத்தில் நாட்டின் முன் எழும் நிலைமையானது நாட்டுக்கு மிகவும் பாதகமானது என்பதை எங்களால் காணக்கூடியதாக இருந்தது. எனவேதான் நாம் மக்கள் சக்தியின் மீது நம்பிக்கை வைத்து அத்திட்டத்தை தோற்கடிக்க முன்வந்தோம்.

அதற்கேற்பவே நுகேகொடையிலிருந்து மஹிந்த அலையை ஆரம்பித்தோம்.

அன்று பலர் நல்லாட்சி அரசாங்கத்திற்கு அஞ்சி, முடங்கிக் கிடந்தாலும் விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய எண்ணிக்கையிலான அரசியற் தலைவர்களைக் கொண்ட குழுவொன்றுடன்தான் இப் போராட்டத்தை நாம் ஆரம்பித்தோம்.

உண்மையில் சுமார் 5 வருட காலத்திற்குள் கோட்டாபய ராஜபக்ஷ அவர்களை ஜனாதிபதிப் பதவியில் நியமித்து எமது போராட்டத்தை வெற்றியோடு பூர்த்தி செய்தோம். மக்கள் சக்தி என்றால் என்ன என்பதை இந்நாட்டுக்கு துரோகம் செய்யும் ஒரு குழுவினருக்கு எடுத்துக் காட்டினோம்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் வலிமையால் நல்லாட்சி அரசு திட்டமிட்டிருந்த நாட்டுக்கு எதிரான பல திட்டங்கள் முறியடிக்கப்பட்டன. உண்மையில் எம்மிடமிருந்து பிரிந்து மறுபுறம் சென்றவர்களும், இறுதியில் எம்மோடு இணைந்து கொண்டார்கள். நாட்டின் தோன்றும் எந்தவொரு சவாலுக்கும் முகங்கொடுக்க நாம் ஒருபோதும் அஞ்சியவர்கள் அல்ல.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஊடாக நாட்டுக்கு நடக்கவிருந்த பல அழிவுகளை நாம் தடுத்து எமது ஜனாதிபதியொருவரை நியமித்துக் கொண்டோம். இப்போது மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பிரதமர் பதவியுடன் கூடிய உறுதியான அரசாங்கமொன்றை உருவாக்குவதுதான் இனிச் செய்ய வேண்டியுள்ளது.

திரு. கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் வினைத்திறன் மிக்க பொறுப்புமிக்க ஒரு ஜனாபதி என்பதை நிரூபித்திருக்கிறார். அவர் பிரச்சனைகளைப் பின்போடுவதில்லை. அவருடைய அனுபவங்களை அவர் மிகச் சிறப்பாக பயன்படுத்துகிறார் என்பது முழு நாடும் அறிந்த உண்மை.

இப்போது எதிர்க்கட்சியும் இரண்டு மூன்றாகப் பிரிந்து பிளவுபட்டுக் கிடக்கும் நிலையில் மூன்றில் இரண்டு தொகுதிகளின் வெற்றியைப் பெற்றுக் கொள்வது சிரமமான காரியமாக இருக்காது என்பது எனது உணர்வாகும்.

மூன்றில் இரண்டோடு அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் வறட்டுத்தனமான அரசியலமைப்பில் நாட்டுக்கு நன்மை நடக்காது. மூன்றில் இரண்டு ஆசனங்களுக்கு அதிகாரம் வழங்கப்படாமல் நாடு ஒரே இடத்தில் தேங்கிக் கிடப்பது சரியாக இருக்க முடியாதல்லவா?



/thinkworth.wordpress.com

"

**எமக்கு எம்.சீ.சீ அன்றும் ஒரு பூச்சாண்டி. இன்றும் ஒரு பூச்சாண்டி எமது நிலைப்பாடு ஒருபோதும் மாறவில்லை. இவ்வொப்பந்தத்தைக் கைச்சாத்திடப் போவதாக குற்றஞ்சாட்டும் எதிர்க்கட்சி அன்று இரகசியமாக கைச்சாத்திடப் போனது. நாம் இந்த மண்ணில் மேற்கொண்ட மாபெரும் போராட்டத்தால் அது தடுக்கப்பட்டது. இப்போது அரசாங்க அதிகாரம் எமக்கு இருக்கிறது. எனவே, நாம் எந்தவகையிலும் எம்.சீ.சீ ஒப்பந்தத்தை கையெழுத்திடவும் மாட்டோம். யாரையும் கையெழுத்திட இடமளிக்கவும் மாட்டோம்.**

# எம்.சீ.சீ.
# அன்றும் இன்றும் ஒரு பூச்சாண்டி

**உதய கம்மன்பில**

எமக்கு எம்.சீ.சீ அன்றும் ஒரு பூச்சாண்டி. இன்றும் ஒரு பூச்சாண்டி எமது நிலைப்பாடு ஒருபோதும் மாறவில்லை. இவ்வொப்பந்தத்தைக் கைச்சாத்திடப் போவதாக குற்றஞ்சாட்டும் எதிர்க்கட்சி அன்று இரகசியமாக கைச்சாத்திடப் போனது. நாம் இந்த மண்ணில் மேற்கொண்ட மாபெரும் போராட்டத்தால் அது தடுக்கப்பட்டது. இப்போது அரசாங்க அதிகாரம் எமக்கு இருக்கிறது. எனவே, நாம் எந்தவகையிலும் எம்.சீ.சீ ஒப்பந்தத்தை கையெழுத்திடவும் மாட்டோம். யாரையும் கையெழுத்திட இடமளிக்கவும் மாட்டோம்.

மூன்றில் இரண்டு அதிகாரத்தை மக்கள் எமக்கு வழங்கினால் 19வது திருத்தம் மட்டுமல்ல இந்நாட்டுக் தீங்கிழைக்கும் திருத்தங்கள் பலவற்றுடன் கூடிய தற்போதைய அரசியலமைப்பை முற்றாக இரத்துச் செய்ய முடியும். அதற்குப் பதிலாக மக்கள் அபிலாசைகள் கொண்ட புதிய அரசியலமைப்பொன்றை நிறைவேற்றிக் கொள்ள முடியும். அது எமது பிரதான நோக்கமாகும். சமவிகிதாசார முறையின் கீழ், வரலாற்றில் ஒருபோதும் மூன்றில் இரண்டு அதிகாரம் ஒரு அரசாங்கத்துக்கு எப்போதும் கிடைத்ததில்லை. அது மிகவும் சவால் மிக்கதாகும். அச்சவாலை வெற்றிகொள்ள மக்கள் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே ஜனாதிபதிக்கு நாட்டை மாற்றியமைக்கும் வலிமை கிடைக்கும்.

எந்தவொரு நபராலும் இத் தேர்தல்

இலக்கங்களை தயாரித்துக் கொள்ள முடியும். எந்தவொரு ஜனாதிபதித் தேர்தலையும் நடத்தி அதனை அண்மித்ததாக நடத்தப்படும் பொதுத் தேர்தலொன்றில் எப்போதும் ஜனாதிபதித் தேர்தலை வென்ற கட்சியின் வாக்களிப்பு வீதம் உயர்வடைந்துள்ளது. அது 1989 இலிருந்து காணக்கூடிய உண்மையாகும். கடந்த தேர்தலின் போது நாம் நூற்றுக்கு 52 வீதத்தைப் பெற்றுக் கொண்டோம். அவ்வாறாயின் இப் பொதுத் தேர்தலில் அது மேலும் உயர்வடையுமே தவிர வீழ்ச்சியடைவதை எதிர்பார்க்க முடியாது.

கடந்த ஐந்து மாதங்களிலும் இந்த நாட்டில் இரண்டாயிரம் கொரோனா நோயாளிகள் தான் கண்டுபிடிக்கப்பட்டார்கள். எனினும் இந்தியாவில் ஒரு நாளைக்கு 15,000 க்கும் 20,000க்குமிடையிலான எண்ணிக்கையிலானோர் கண்டுபிடிக்கப்படுகின்றார்கள். ஒட்டுமொத்த உலகமும் மரண பயத்தால் கட்டுண்டுக் கிடக்கையில் இலங்கையர்கள் நிம்மதிப் பெருமூச்சுடன் வழக்கமான வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார்கள். எனவே, முழு உலகத்திலுமுள்ள அரசத் தலைவர்களால் செய்து கொள்ள முடியாமற்போன ஒன்றை இலங்கையின் கோட்டாபய ஜனாதிபதி செய்தார் என சர்வதேச ஊடகங்கள் அறிக்கையிட்டன.

கடந்த அரசாங்கம் எம்மிடம் பூனைக்குட்டியொன்றினால் சிக்கவைக்கப்பட்ட நூற்பந்தொன்றுக்கு ஒப்பான நாடொன்றையே வழங்கியது. இப்போது நாம் அச் சிக்கல்களை ஒவ்வொன்றாக விடுவித்துக் கொண்டிருக்கின்றோம். துறைமுகச் சிக்கலை ஏற்படுத்தியது கடந்த அரசாங்கம். இப்போது நாம் அதை அவிழ்த்துக் கொண்டிருக்கின்றோம். மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், நிதிகளைத் திரட்டி கிழக்கு முனையை வளர்ச்சியுறச் செய்து மிகப்பெரிய வருமானம் ஈட்டும் துறைமுகமாக மாற்றிக் கொண்டிருந்தது. அரசாங்கம் மாறிய பின்னர் 2015 இல் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஜப்பானுக்குச் சென்று கிழக்கு முனையை ஜப்பானுக்கு வழங்க வாக்குறுதியளித்தார். அதற்கிடையில் பிரதமர் இந்தியாவுக்கு அதனை வழங்க உறுதியளித்தார். அதற்கேற்ப ஜப்பான், இலங்கை மற்றும் இந்தியா கூட்டு அபிவிருத்தியை மேற்கொள்ள கூட்டு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டனர். இதற்கிடையே துறைமுகத்தின் கிழக்கு முனையை விரிவாக்குவதாகக் கூறிக்கொண்டு, ஐந்து சதம் கூட முதலீடு செய்யாமல் அதில் பொருத்துவதற்கென மில்லியன் கணக்கில் டொலர்களைச் செலவழித்து, சீனாவில் இருந்து பாரந்தூக்கிகளுக்கான விலை மனுக்கள் கோரப்பட்டன. அதையும் 2018ம் ஆண்டில்தான் செய்தார்கள். இதற்கான ஒரு தேவை இருக்கவில்லை. இதற்கேற்ப இது தரகுக் கொடுக்கல் வாங்கலொன்று என்பது எமக்குத் தெரிகிறது. இவற்றுக்கு அனைத்துக் கட்டணங்களும் செலுத்தப்பட்டுள்ளன. ஆனால் அப்பாரந்தூக்கிகளைப் பொருத்துவதற்கு கிழக்கு முனை விரிவாக்கப்படவில்லை. அதனால் அவற்றைக் கிழக்கு முனையில் பொருத்த அரசாங்கம் தீர்மானித்தது.

இந்தியா எதிர்ப்பைத் தெரிவித்தது. தேசிய வளங்கள் விற்கப்படுவதை நாம் எதிர்க்கிறோம். இந்த ஒப்பந்தங்களில் திருத்த நடவடிக்கைகள் இடம்பெறும்போது பாரந்தூக்கிகள் இலங்கைக்கு வந்து சேர்ந்தன. இராஜதந்திர ரீதியிலான பிரச்சனை ஏற்பட்டது. எனினும் நாம் அப்பிரச்சனையைத் தீர்த்துள்ளோம்.

எமக்கு எம்.சீ.சீ அன்றும் ஒரு பூச்சாண்டி. இன்றும் ஒரு பூச்சாண்டி எமது நிலைப்பாடு ஒருபோதும் மாறவில்லை. இவ்வொப்பந்தத்தைக் கைச்சாத்திடப் போவதாக குற்றஞ்சாட்டும் எதிர்க்கட்சி அன்று இரகசியமாக கைச்சாத்திடப் போனது. நாம் இந்த மண்ணில் மேற்கொண்ட மாபெரும் போராட்டத்தால் அது தடுக்கப்பட்டது. இப்போது அரசாங்க அதிகாரம் எமக்கு இருக்கிறது. எனவே நாம் எந்த வகையிலும் எம்.சீ.சீ ஒப்பந்தத்தை கையெழுத்திடவும் மாட்டோம். யாரையும் கையெழுத்திட இடமளிக்கவும் மாட்டோம்.

இவ்வொப்பந்தத்தைக் கையெழுத்திட வேண்டுமானால் நாம் அதனை மீளாய்வு செய்வதற்கு அமெரிக்க காய்நகர்த்துபவர்களும் அமெரிக்காவைச் சார்ந்திருப்பவர்களும் கொண்ட குழுவொன்றை நியமிப்பதைத் தவிர தேசப்பற்று மற்றும் நேர்மையான நபர் என சமூகத்தின் கௌரவத்திற்கு ஆளாகியிருக்கும் பேராசிரியர் லலிதசிறி குணருவன் தலைமையிலான நபர்களைக் கொண்டு குழுவொன்றை நியமிக்கப் போவதில்லை. அரசாங்கத்தின் நோக்கம் குழுவிலிருந்து தெளிவாகிறது. 'பண்ணிய பயிரிலே புண்ணியம் தெரியும் என்று சொல்வார்களல்லவா? எம். சீ.சீ யை இரத்துச் செய்வதைத் தவிர முன் கொண்டு செல்லும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை என்பது குழுவின் உறுப்பினர்களிலிருந்தே தெளிவாகின்றது.

19வது திருத்தத்தின் பின்னர் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கிடையேயான ஒற்றுமை அரசாங்கத்துக்கு மிகவும் தீர்மானமிக்கது. அமெரிக்காவின் பிரதான புலனாய்வுச் சபையான ஹெரிடேஜ் மன்றம் இலங்கை தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில் இலங்கை ஓரிடத்தில் தேங்கிக் கிடந்தது கடந்த ஐந்து வருடங்களாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான மோதலால் எனக் குறிப்பிடுகின்றது. 19வது திருத்தத்தைக் கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். தன்னால் நாட்டைக் கொண்டு நடத்த முடியாமற் போனது பிரதமருடன் ஏற்பட்ட மோதல்களால் தான் எனவும் அண்ணனும் தம்பியும் போல செயலாற்றும் இருவர் இப்பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் 19வது திருத்தத்தின் கீழ் நாட்டை ஆள்வது கடினம் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். இம்முறை பொதுத் தேர்தலின் பின்னர் இந்நாட்டின் பிரதமராக பெயரிடப்படுபவர்கள் அண்ணன் தம்பி போல செயலாற்றுபவர்கள் மாத்திரமல்ல உண்மையிலேயே எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக உண்மையான ஒற்றுமையுடன் செயலாற்றிக் காட்டியுள்ள உண்மையான அண்ணன் தம்பிகளாகிய இருவருமாவர் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய இந்த நாட்டை முன்னேற்றுவார் என்ற நம்பிக்கை அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது. அவர் இந்த நாட்டின் ஜனாதிபதியாக ஆக வேண்டும் என நான் இற்றைக்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர் சொன்னேன். ஏனெனில் சிங்கப்பூரின் லீ க்வான் யுவின் தொலைநோக்கும் மலேசியாவின் மஹதீர் மொஹமதின் முகாமைத் திறனும் ரஷ்யாவின் புட்டினுடைய துணிச்சலும் ஒன்றாகச் சேர்ந்தால் உருவாவது கோட்டாபய என்பதனாலேயே அவ்வாறு கூறினேன். இன்று முழு நாடும் அவ்விடயத்தை நம்புகின்றது. நாட்டை ஜனாதிபதியால் தனியாக முன்னேற்ற முடியாது.

அவருடைய உதவிக்கு ஒரு குழு தேவை. ஜனாதிபதிக்குத் தேவையான, அவரைப் போன்று சிந்திக்கும், கருமமாற்றும் சிறிய கோட்டாபயமார் குழுவொன்று, நல்லிதயம், நல்லறிவு, திடமான முதுகெலும்புள்ள, திருட்டுகள், அடாவடிகள், தீய செயல்களில் ஈடுபடாத ஒரு குழுவினரை சிறிய கோட்டாபயமார்களாகக் குறிப்பிடலாம். இவ்வாறான குழுவொன்றைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பினால் இந்த நாட்டை மிகக் குறுகிய காலத்திற்குள் அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றியமைப்போம் என நாம் நாட்டு மக்களுக்கு உறுதியளிக்கின்றோம்.




# $\frac{2}{3}$ பெரும்பான்மையைப் பெற புரட்சி செய்ய நேரிடும்

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர்
## வாசுதேவ நாணயக்கார

"

**இத்தேர்தல் முறையை மாற்றியமைத்து தொகுதிக்குப் பொறுப்புக் கூறும் தேர்தல் முறையை நாம் மீண்டும் உருவாக்க வேண்டும். ஆனால், விகிதாசார தேர்தல் முறைக்கும் ஓரிடம் வழங்கப்பட வேண்டும். பழைய தேர்தல் முறைப்படி இரத்தினபுரி மாவட்டத்தில் தேர்தல் நடத்தினால், எட்டுத் தொகுதிகளிலும் நாம் வெற்றி பெறுவோம். ஐக்கிய தேசியக் கட்சி 08 தொகுதிகளிலும் தோல்வியடையும்.**

மாவட்ட அடிப்படை மற்றும் விருப்பு வாக்கு முறை காரணமாக தேர்தல் முறை விகாரமடைந்துள்ளது. இந்த விகாரமடைந்த ஜனநாயக முறையை மீண்டும் சரி செய்யும் தேவையை நான் பாரதூரமாக உணருகிறேன்.

எனது தேர்தல் இயக்கத்தின் முக்கிய காரணி இதுவே இதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நாம் வென்றெடுக்க வேண்டும்.

இந்தத் தேர்தல் முறையை வாக்களிப்பு நிறுவனங்கள் பலவீனப்படுத்தியுள்ளன. அதே சமயம் நியமனம் பெறும் பாராளுமன்ற உறுப்பினர் மக்கள் மத்தியில் இருந்து தூர விலக்கப்பட்டுள்ளனர். அடுத்து பணப் பலம் பிரதான சக்தியாக மாறியுள்ளது. தற்போது தொலைக்காட்சியில் மாத்திரமே விளம்பரங்களை வெளியிட முடியும். **சுவரொட்டிகளை ஒட்ட முடியாது. பொதுக்கூட்டம் இடம்பெறும் இடத்தில் மாத்திரம் சுவரொட்டிகளையும் கட் அவுட் விளம்பரங்களையும் காட்சிப்படுத்த முடியும் அதே சமயம் வீடுகளுக்குச் சென்று துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்க முடியும் தொலைக்காட்சி ஊடகங்களில் அறிவித்தல்களை காட்சிப்படுத்த முடியும். ஆனால் அதற்கு மிகப்பெரும் தொகைப் பணம் செலவாகும். பணம் படைத்தவர்கள் தொலைக்காட்சி விளம்பரங்களையும் காட்சிப்படுத்துவர். இத்தகைய விளம்பரங்களில் ஈடுபட என்னிடம் பணம் கிடையாது.**

எனவே இத்தேர்தல் முறைமையிலிருந்து நாம் விடுபட வேண்டும். அவ்வாறு விடுபட முடியாது போயின் பொதுமக்களின் வாக்குகளை பணம் படைத்தோர் அவர்களது பணப்பையில் எடுத்துச் செல்வார்கள்

இந்தத் தேர்தல் முறையில் உள்ள மிகத் தீங்கான விடயம் மாவட்டம் முழுவதிலும் விஜயம் செய்து புதிய வாக்குறுதிகளைக் கூறி வாக்குகளைப் பெறுவது ஆகும். வேட்பாளரின் செல்வாக்கு இருக்கக்கூடிய பிரதேசத்தில் வாக்காளர்கள்

வேட்பாளரை வெறுத்தாலும் மாவட்டத்தின் ஏனைய பிரதேசத்திலுள்ள வாக்குகள் மூலம் அவர் தேர்தல் மாவட்டத்தில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதே சமயம் மாவட்டம் பூராவும் பரந்து விரிந்து இருக்கும் வாக்காளர்களுக்கு எவ்வாறு சேவை செய்வது ? நான் அறிந்த பிரதேசத்திற்குள், எனக்கு அறிமுகமான வாக்காளர்கள் இருப்பின் அவர்களுக்குச் சேவை செய்வதில் எனக்கு எதுவித கஷ்டமும் இல்லை. 7 இலட்சம் 8 இலட்சம் வாக்காளர்கள் மத்தியில் இருந்து தான் நான் 81,000 வாக்குகளைப் பெற்றேன். 81, 000 பேர் வாக்களித்தாலும் பல்வேறு கருமங்களைச் செய்துகொள்வதற்காக அதைவிட மிகக் கூடுதலான வாக்காளர்கள் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதியிடம் வருவார்கள் எனவே, இப்போது அமுலில் உள்ள தேர்தல் முறை நடைமுறைச் சாத்தியமற்றது. எனவே தான் திரு. ஜே.ஆர்.ஜயவர்தன கூறினார். "நீங்கள் தேர்தல் தொகுதிக்குப் போகவேண்டிய அவசியமில்லை. கொழும்பிலிருந்துகொண்டே போட்டி போடலாம். வாக்களிப்பு நெருங்கும் போது புல் மேயும் பசு மாடுகள் ஓரிடத்தில் மேய்ந்துவிட்டு வேறு பிரதேசத்திற்குச் சென்று தேர்தலில் வெற்றிபெற முடியும்". எனவே இத்தேர்தல் முறையை மாற்றியமைத்து தொகுதிக்குப் பொறுப்புக் கூறும் தேர்தல் முறையை நாம் மீண்டும் உருவாக்க வேண்டும். ஆனால், விகிதாசார தேர்தல் முறைக்கும் ஓரிடம் வழங்கப்பட வேண்டும். பழைய தேர்தல் முறைப்படி இரத்தினபுரி மாவட்டத்தில் தேர்தல் நடத்தினால், எட்டுத் தொகுதிகளிலும் நாம் வெற்றி பெறுவோம். ஐக்கிய தேசியக் கட்சி 08 தொகுதிகளிலும் தோல்வியடையும். ஆனால், அவர்களுக்கும் வாக்கு கிடைத்துள்ளபடியால் அவர்களுக்கும் ஒரு பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். இதன் போது அவர்களும் இரண்டு அல்லது மூன்று பாராளுமன் உறுப்பினர் பதவிகளைப் பெறுவார்கள்.

1982 இல் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு முன்னர் அமுலில் இருந்த தேர்தல் முறைக்கு அமைய ஜனரஞ்சகமான கட்சிக்கு, பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வென்றெடுக்க முடியும். எனவே 1970 பொதுத் தேர்தலில், மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பாராளுமன்றத்தில் வென்றெடுத்தோம் 1977 இல் இடம்பெற்ற தேர்தலின் போது திரு ஜே.ஆர் ஜெயவர்தன மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வென்றெடுத்தார்.

திரு. ஜெயவர்தன பழைய தேர்தல் முறைப்படி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வென்றெடுத்தார் எனவே மீண்டும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற முடியாதவாறு ஒரு தேர்தல் முறைமையை உருவாக்கினார். தற்போது எம்மை ஓர் அறையில் தாழ்ப்பாழ் பூட்டு போட்டு அவர் சாவியையும் எடுத்துக்கொண்டு பரலோகம் போய் சேர்ந்து விட்டார். எனவே நாம் தற்போது மேற்படி அறையை உடைத்துக்கொண்டு போக வேண்டும்.

இந்தத் தேர்தல் முறையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமல் உடைத்துக்கொண்டு போக முடியாது. எனவே இப்போது என்ன செயய முடியும். நாம் தற்போது புரட்சிகரமான ஒரு நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

எனவே அன்று திரு. ஜயவர்தன எடுத்த வாக்குகளின் நூற்றுவீதத்தை நாம் எடுத்தால் எமக்கும் அதற்கான உரிமை கிடைக்கும். அன்று அவர் செய்த விடயங்களை இன்று நாம் செய்வதாயின் திரு ஜெயவர்தனவிற்கு அந்த உரிமை கிடையாது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறக்கூடிய வகையில் அதிகாரத்திற்கு வந்து, மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற முடியாத முறையை விதித்து அந்த வழிமுறை மூலம் மூன்றில் இரண்டைப் பெற வேண்டும் என விதிக்க வேண்டும்.

எனவே, அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் தெரிவுசெய்யப்படும் மக்கள் பிரதிநிதிகளின் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை பிரதிநிதிகளும் பாராளுமன்றத்திற்கு வெளியே கூடி, நாம் ஒரு அரசியலமைப்புச் சபையாக செயற்பட வேண்டும். அதன் மூலம் புதிய அரசியலமைப்பை தயாரித்துக்கொள்ள வேண்டும். நாம் அத்தகைய புரட்சிகரமான நடவடிக்கையை மேற்கொண்டேயாக வேண்டும்.

**1972 அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டபோது இந்த முறையை அனுசரித்தே இதனைச் செய்தோம். 1970 களில் இடம்பெற்ற தேர்தலில் எமக்கு** மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தது. ஆனால் மேற்படி பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு அல்ல புதிய அரசியலமைப்பை அங்கீகரித்துக்கொள்ள வேண்டும் எனச் சொன்னோம். நாம் பிரித்தானிய அரசியின் அரசியலமைப்பை ஏற்க மாட்டோம். என்று கூறினோம். ஆனால், அந்த அரசியலமைப்பை ஏற்காமல் பாராளுமன்றத்திற்குப் போக முடியாது. எனவே நாம் அந்தப் பாராளுமன்றத்திற்குச் சென்று அரசியலமைப்புச் சபையாக நவ ரங்கஹலவில் கூடினோம். அந்த அரசியலமைப்புச் சபையின் மூலம் தான் குடியரசு அரசியலமைப்பு அங்கீகரிக்கப்பட்டது. 1972 இன் அரசியல் அமைப்பு அங்கீகரிக்கப்பட்டது. அது புரட்சிகரமான நடவடிக்கையாகும். 1948 இல் இந்தியாவும் இதனையே செய்தது.

அரசு நடவடிக்கை எடுக்கும் போது அதிகாரிகளின் பொறிமுறையினூடாகச் செயற்படுகிறது. அந்த அதிகாரிகளின் பொறிமுறையுடன் மக்கள் பிரதிநிதிகளின் உறவு உறுதிப்படுத்தக்கூடிய பொறிமுறையை நாம் தயாரிக்க வேண்டும். அத்தகைய பொறிமுறை இல்லாதுவிடின் அதிகாரிகளின் பொறிமுறையூடாக அரசாங்கத்தின் கொள்கைகள் செயற்படுத்தப்படமாட்டா. கொரோனா அனர்த்தத்தின் போது மக்கள் பிரதிநிதிகள் தொடர்புபடுத்தப்பட்ட காரணத்தினால் தான் 5000 ரூபா வழங்கும் வேலைத்திட்டம் சிறப்பாக பரந்துபட்ட முறையில் அமுலாக்கப்பட்டது. அது அரச அதிகாரிகளுக்கு மாத்திரம் மட்டுப்பட்டு இருந்தால், பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டிருக்கும்.

எனவே அதிகாரிகளின் பொறிமுறையும் மக்கள் பிரதிநிதிகளும் தொடர்புபடுத்தப்படும் பொறிமுறை தயாரிக்கப்பட வேண்டும். மக்கள் பிரதிநிதி பொதுமக்களை பிரதிநிதித்துவம் செய்கிறார். அதிகாரிகள் மக்களின் தேவைகளை நிறைவேற்றுகின்றனர். எனவே இந்த இரு தரப்பினரும் இரண்டு பக்கத்தில் இருக்க முடியாது. அதன் பெறுபேறாகத் தான் கோட்டாபய ஜனாதிபதி மத்திய வங்கி அதிகாரிகளுக்கு மிகக் கடுமையாகப் பேசினார். இந்தச் சிக்கல் சிறைச்சாலை திணைக்களம் தொடர்பாகவும் ஏற்பட்டது. அதற்குக் காரணம் அதிகாரிகளின் பொறிமுறை அரசாங்கத்தின் கொள்கையை அமுல்படுத்துவதில் தோல்வி காணக்கூடும். இந்நிலைமையை கைவிடுவதற்கு புதிய பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

அதே சமயம் சக அனைத்து அரச நிறுவன ஊழியர்களின் சபைகளை உருவாக்க வேண்டும். மேற்படி சபைகளினூடாகத் தான் குறிப்பிட்ட நிறுவனங்களின் இருப்பு, மக்களுக்கான சேவை என்பன அந்நிறுவனங்களில் மிக சிறப்பாக முன்னேற்றகரமான முகாமைத்துவத்துடன் மேற்கொள்ள முடியும் என்ற தீர்மானம் மேற்கொள்வதற்கு ஊழியர் சபைகளை உருவாக்க ணே:டும் என நாம் ஒரு முன்மொழிவைச் சமர்ப்பித்திருக்கிறோம்.

அதே சமயம் தனியார் மயப்படுத்தலை நாம் முற்றிலும் எதிர்க்கிறோம். ஆனால் எதிர்கட்சியின் பிரதான கொள்கை அதுவாகும். சமூகத்திற்கு அரசு வகைபொறுப்புக் கூற வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம் .அதற்கே அரசு இருக்கிறது. ஆனால், எமது எதிர்தரப்பினரின் கருத்து சமூகத்தை விடுவிக்க வேண்டும் என்பதாகும். அரசின் இடையீடு தேவை என்றே நாம் கூறுகின்றோம்.

அதே சமயம் எமது நாட்டு மக்களுக்கு சுதந்திரத்தை வழங்குவதாயின் முதலில் கப்பம் கேட்பவர்கள், வன்முறையூடாக சமூகத்தை கட்டுப்படுத்துவதை நிறுத்த வேண்டும். சட்டபூர்வமாக பணியாற்றும் ஒரு செயலணியை உருவாக்க வேண்டும்.




# நல்லாட்சி அரசாங்கம் 100 நாட்கள் மாத்திரமே ஆட்சியில் இருந்தது

## சட்டத்தரணி ஷிரால் லக்திலக

**நீங்கள் அப்போதைய நல்லாட்சி அரசாங்கத்தில் மிகவும் முக்கியமான ஒரு வகிபாகத்தை ஆற்றிய ஒருவர். அந்த அரசாங்கத்தை உருவாக்குவதற்காக ஒன்றிணைந்த மக்கள் சக்தியின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்குத் திறமை பெற்றமை பற்றிய உங்களது மதிப்பீடு யாது?**

அந்த அபிலாசைகளில் சுமார் 25 சதவீதம் நிறைவேறியுள்ளது என்பதும் 75% சதவீதம் நிறைவேறவில்லை என்பதுமே எனது மதிப்பீடு ஆகும். நீங்கள் குறிப்பிட்ட மக்கள் சக்தி என்பது மாதுளுவாவே சோபித தேரருடன் இணைந்து கட்டியெழுப்பப்பட்ட இயலுருத்தோற்ற அரசியல் இயக்கம் ஆகும். அங்கு மனிதர்கள் இருக்கவில்லை. அங்கு கருத்துக்கள் தான் இருந்தன. நீதியான சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புதல் மற்றும் அதற்குத் தேவையான பொறிமுறை ஒன்றைக் கட்டியெழுப்புவதே அவ்வகையான கருத்துக்கள் ஆகும். அந்த இயலுருத்தோற்றம் அல்லது 'கருத்துக்களுக்கான' சக்தி முக்கியமாக ஐக்கிய தேசிய கட்சியைப் பிரதானமாகக் கொண்ட அரசியல் சக்தியிலேயே தங்கியிருந்தது. அதன் போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருந்த பிரச்சினை யாதெனில் ஜனாதிபதித் தேர்தல் போன்ற கடுமையான ஒரு போட்டிக்கு முன் நிறுத்துவதற்குப் பிரசித்தமான ஒரு தலைவர் காணப்படாமை ஆகும். அதன்போது யாரை முன் நிறுத்துவது என்ற பிரச்சினை தோற்றம் பெற்றது. ரணிலுக்குப் பதிலாக ஐக்கிய தேசிய கட்சியிடம் இருந்த மாற்று வழி கரு ஜயசூரிய ஆகும். ஆயினும் அவருக்கு அந்த இடத்தை வழங்குவதற்கு ரணில் விரும்பவில்லை. அச் சந்தர்ப்பத்தில் அந்த இடைவெளியை நிரப்புவதற்கு சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களினால் மைத்திரிபால சிறிசேன அவர்களின் பெயர் முன் மொழியப்பட்டது. அந்த இடத்தில் இருந்து தான் அவ் 'இயலுருத்தோற்ற' கருத்தினைக் கொண்ட ஓர் அரசியல் சக்தி கட்டியெழுப்பப்பட்டதா என்ற கேள்வி உருவாகின்றது.

எவ்வாறாயினும் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் நான் ஏற்கனவே குறிப்பிட்ட 25 சதவீத வெற்றியை முதலாவது நூறு நாட்களுக்குள் அடைய முடிந்தது. அது திறம்பட நடந்தேறியது என்றே நான் கருதுகின்றேன். கட்டமைப்பு ரீதியிலான மாற்றங்களுக்குத் தேவையான மூல விதை அக் கால கட்டத்திலேயே நடப்பட்டது. இந்த அரசாங்கத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால் திரு கோட்டாபய கொண்டு வந்த கருத்தினை விதைப்பதற்குத் தேவையான மூல விதை இதுவரை நடப்படவில்லை. ஆயினும் நல்லாட்சி அரசாங்கம் முதலாவது நூறு நாட்களுக்குள் பல்வேறு வகையான மூல விதைகளை உருவாக்கியது. 19 ஆவது அரசியலமைப்பு அதில் மிகப் பிரதானமானது ஆகும். தகவல் அறிந்து கொள்வதற்கான சுதந்திரம் தொடர்பான சட்ட வரைவு போன்ற பல துறைகளுக்குரிய மறுசீரமைப்புக்களின் ஆரம்ப பணிகள் இடம்பெற்றன. ஆயினும் அது நூறு நாட்கள் முடிவில் இடம்பெற்ற மத்திய வங்கி திருட்டுச்

சம்பவத்தைத் தொடர்ந்தே வீழ்ச்சி கண்டது. அதன் பின்னர் அந்த திட்டம் முற்றுப் பெற்றது. அதற்கு தொடர்ந்து நிலைத்திருக்க இயலாது போனது.

**நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தினை ஜனநாயகம் தொடர்பாக அண்மைய வரலாற்றில் வடக்கிலும் தெற்கிலும் அரசியல் அதிகாரங்களுக்கு இடையில் மிகவும் பரந்துபட்ட இணக்கப்பாடு நிலவிய ஒரு காலகட்டம் என அழைக்க முடியும். அதனை ஏன் முன் கொண்டு செல்ல முடியவில்லை?**

எந்தவொரு அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கும் அதிகாரம் தேவைப்படுகிறது. அரசியல் அதிகாரம் மனிதர்களைக் கொண்டு அல்லது வாக்காளர்களைக் கொண்டு கட்டியெழுப்பப்படுகிறது. ஆயினும் சோபித தேரரின் இயக்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட வேலைகளை முன் கொண்டு செல்லக் கூடிய பலம் மற்றும் அதற்கான மக்கள் அதிகாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஆற்றல் ரணில் விக்ரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகிய இரண்டு சக்திகளிடமும் காணப்படவில்லை. ஆகவே நாளுக்கு நாள் அந்த நிகழ்ச்சி நிரல் வீழ்ச்சி கண்டது. அரசாங்கம் அன்றாடம் மேற்கொள்ளும் தவறுகள் காரணமாக அதற்கு இருந்த அங்கீகாரம் இல்லாமல் போனது. நவம்பர் 16 ஆம் திகதி தோல்வியடைந்தது. ரணில் விக்ரமசிங்க அல்லது மைத்திரபால சிறிசேன அல்ல எம்மால் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலே தோல்வி கண்டது.

**2015 ல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலானது ஆட்சி முறையில் மிதமிஞ்சிய ஜனநாயகப்படுத்தலுக்கான ஒரு பரந்துபட்ட ரீதியிலான ஓர் அணிதிரட்டலாக அமைந்த போதும் 2020 ஜனாதிபதித் தேர்தல் அதனை மீளவும் திசை திருப்பும் ஓர் அலையாக மாற்றம் பெற்றது. இதனை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

அது மிகவும் பயங்கரமானது, அழிவினை ஏற்படுத்தும் ஒன்று ஆகும். ஆனாலும் அது தாமாகவே ஏற்படுத்திக் கொண்ட ஒன்று ஆகும். இன்று என்ன நடந்துள்ளது? சமூகம் ஒரு சர்வாதிகாரி வேண்டுமெனக் கோருகிறது, சமூகம் ஓர் இராணுவ ஆட்சி வேண்டுமெனக் கோருகிறது. பாராளுமன்றம் வேண்டாம் என சமூகம் சொல்கிறது. சிங்கள சமுதாயத்தினரால் பௌத்த மதம் பாதுகாக்கப்பட்டு வந்ததாக ஒரு கருத்து நிலவுகிறது. அதே போன்று தான் பொதுவாக இலங்கை சமூகத்தினால் கடந்த 70 ஆண்டுகளாக புனிதமாகக் கருதப்படும் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டு வந்தது. அதுவும் எமக்கே உரித்தான ஒரு பண்பு ஆகும். தெற்காசியாவில் இந்தியாவைத் தவிர நாம் ஜனநாயகத்தை மிகவும் உயர்வான தரத்துடன் பாதுகாத்து வந்த ஒரு நாடு ஆகும். அது நாம் பெருமையடையக் கூடிய ஒரு விடயம் ஆகும். ஆயினும் துரதிர்ஷ்டவசமாக கடந்த ஐந்து வருட காலத்திற்குள் இடம்பெற்ற, நாமும் பொறுப்புக் கூற வேண்டிய சில செயற்பாடுகளின் விளைவாகவே மக்கள் சமூகம் இன்று தங்களுக்கு அவை தேவையற்றது எனவும் பாராளுமன்றத்தில் உள்ள 225 பேரும் வேண்டாம் எனவும் கூறுகின்றது. என்ன தான் இங்கு நடைபெற்றுள்ளது? முதலாளித்துவத்தின் அதி உச்ச கட்டம் காலனித்துவம் என்பதாக லெனின் குறிப்பிட்டார். அதே போன்று ராஜபக்ஷவாதத்தின் உச்ச கட்டத்தினை நாம் ஏற்படுத்திக் கொடுத்தோம். அதைத் தான் எதிர்வரும் ஐந்தாண்டு காலத்திற்கு எமக்கு கடந்து செல்ல வேண்டி உள்ளது. ராஜபக்ஷவாதம் 'ஹெஜமொனிக்' ஆக மேலாதிக்கமாக மாறியுள்ளது. அதற்குத் தேவையான நியாயபூர்வமான கிரீடத்தை நாம் தயாரித்து வழங்கி உள்ளோம்.

**நல்லாட்சி அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்த சக்திகள் 2020 ஜனாதிபதித் தேர்தலில் ஓரளவு ஒன்றாக செயற்பட்ட போதும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் பாரதூரமாக பிளவுபட்டுள்ளது. பிரதான குழுவினரான ஐக்கிய தேசிய கட்சி கூட இரண்டாக பிளவு பட்டுள்ளது. அது ஏன்?**

தற்போது நாம் 2015 ஆரம்பத்திற்கு மீண்டும் செல்வோமேயானால் சோபித தேரரின் இயக்கமானது ஒரு கருத்துப் புரட்சி ஆகும். சரித்த ஹேரத் கூறுவது போன்று அது ஒரு பேசும் கருத்துக் கடை 'டோக் சொப்' ஆகும். ஆயினும் நாம் இந்த 'டோக் சொப்புக்கு' 'ஹை மோரல் கிரவுண்டை' வழங்கினோம். அதற்குப் பின்னர் ரணிலின் ஐக்கிய தேசிய கட்சி அதனை அரசியல் எண்ணக்கருவிற்கு உட்படுத்தி இருக்க வேண்டியதே முறை ஆகும். ஆயினும் அவ்வாறு இடம்பெறவில்லை. அவர்களைப் பொறுத்த வரை இது வெறுமனே அதிகாரத்தைப் பெற்றுத் தந்த ஒரு கருவி மாத்திரம் தான். அப்போதிருந்த சுத்தமற்ற கூட்டமைப்பு நவம்பர் 16 வரை தனிநபர்கள் என்ற அடிப்படையில் அன்றி ஒரு சிந்தனை நீரோட்டத்தில் முன் நோக்கி நகரவில்லை. அதன் விளைவாக இறுதியாக ரணில் மற்றும் மைத்திரி உள்ளிட்டோர் அரசியல் ரீதியாக அழிவுக்கு ஆளானார்கள். இதனை இன்று உள்ள ராஜபக்ஷவாதத்தை அடிப்படையாகக் கொண்டு புரிந்து கொள்ள முடியும். உண்மையாகவே தற்போது காணப்படுவது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுண அல்ல. இன்று காணப்படுவது 'தெரண' தொலைக்காட்சி ஆகும். அங்கு தான் சிந்தனைகள் உருவாக்கப்படுகின்றன. ஆயினும் ஐக்கிய தேசிய கட்சியின் அரசியல் சக்திக்கு இச் சிந்தனையை உருவாக்கும் உபகரணங்களை அவ் ஐந்து வருடங்களுக்குள் உருவாக்க முடியவில்லை. பொதுவாக குறிப்பிடுவதாயின் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றைக் கூட உருவாக்க முடியவில்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் யூஎன்பி மிகவும் மோசமான அதிகாரப் போராட்டத்தில் சிக்கிக் கொண்டது. அதன் போது ரணில் விக்ரமசிங்கவுடன் தொடர்ந்தும் பயணிக்க முடியாது என 95 சதவீதமானோர் நினைத்தார்கள். கிரிஎல்ல, மங்கள, மலிக் போன்றவர்கள் கூட அவ்வாறே சிந்தித்தார்கள். ஆயினும் ரணில் அதற்கு செவி சாய்க்கவில்லை. அது அவரது தனிப்பட்ட குறைபாடு அல்ல. அதற்கு பொருளாதாரக் காரணிகள் உண்டு. ரணில் விக்ரமசிங்க பிரதிநிதித்துவப்படுத்தும் 'கொம்புரொடோர்' தரகு முதலாளித்துவ வகுப்பினர் இந்த அரசியலில் பெற்றுக்கொள்கின்ற பயன்கள் காணப்படுகின்றன. அவற்றை ரணில் எடுப்பது கிடையாது. விஜேவர்தன பரம்பரை தான் அதனை பெற்றுக் கொள்கிறது. அவ்வாறான தேவைப்பாடுகளுக்காக இறுதி வரை பிடித்துக் கொள்ள ரணிலுக்கு நேர்ந்தது. அதுவே இவ்வாறான பிளவுக்கு காரணம் ஆகும். உண்மையிலேயே யூஎன்பி யின் பிளவுக்கும் நாம் முன்னர் குறிப்பிட்ட அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கும் இடையில் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

**ஐக்கிய தேசிய கட்சி நெருக்கடியின் விளைவு என்பதற்கான கூடுதலான ஒரு அர்த்தம் ஐக்கிய மக்கள் சக்திக்கு உண்டா? உண்மையிலேயே அதனை ஐக்கிய தேசிய கட்சியில் இருந்தே அதனைப் புரிந்து கொள்ள முடிகின்றது. அவை இரண்டுக்கும் இடையில் அடிப்படைக் கொள்கை வேறுபாடுகள் காணப்படுகிறதா?**

நிச்சயமாக காணப்படுகிறது. 2015 தேர்தல் வெற்றியின் பின்னர் அதனை தொடர்ந்து கொண்டு செல்ல முடியவில்லை என்று நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன். அது ஏன் என்பது பற்றிய கேள்வி ஆரம்பத்திலேயே கேட்கப்படல் வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக தேசத் துரோகிகள், சர்வதேசத்திற்கு சார்பானவர்கள், நாட்டின் சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்பவர்கள் என்ற குற்றச்சாட்டுக்கள முன் வைக்கப்படுகின்றன. அவ்வாறு லேபல் முத்திரை ஒட்டப்படுவதன் மறுபக்கமாக அவர்கள் தம்மை நாட்டுப் பற்றுள்ளவர்கள், சர்வதேசத்தின் பக்கம் சாராதவர்கள், நாட்டின் சொத்துக்களை பாதுகாப்பவர்கள், இடதுசாரிகள், என தம்மைக் காட்டிக் கொள்கின்றார்கள். உண்மையில் நாட்டை யாரால் அபிவிருத்தி செய்ய முடியும்? எவ்வாறு அபிவிருத்தி செய்ய முடியும் என்ற கேள்வி இங்கு எழுகின்றது. நான் நினைக்கின்றேன் கடந்த 70 வருடங்களாக இவை இரண்டும் இலங்கை அரசியலில் ஒரு ரயில் தண்டவாளத்தைப் போன்று தான் பயணம் செய்கின்றன. இரண்டாவதாக குறிப்பிடப்பட்ட, தற்போது அதிகாரத்தில் உள்ள குழுவின் கருத்துக்கே தற்போது கூடுதல் எடை காணப்படுகிறது. உண்மையிலேயே இலங்கையை அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின் பூகோளமயப்படுத்தல் மற்றும் உள்நாட்டுமயப்படுத்தல் ஆகியன ஒன்றிணைந்த ஒரு கலப்பு முறையே தேவைப்படுகிறது. அதனை நாங்கள் 'க்லோகலைசிங்' (glocalization) என அழைக்கின்றோம். பூகோளமயப்படுத்தலின் ஊடாக வருபவற்றை மாற்றமின்றி பொறுப்பேற்றலுக்குப் பதிலாக எமது தேவைக்கு ஏற்றவாறு அதனை பொருந்தச் செய்வதே இங்கு நடைபெறுகிறது.

அரைவாசியை பொறுப்பேற்று மற்ற அரைவாசியை கைவிடுதல் இடம்பெறுகிறது. செல்வத்தைப் பெருகச் செய்தல் மற்றும் செல்வத்தை நியாயமான முறையில் பங்கீடு செய்தல் அதற்கடுத்த விடயமாக் காணப்படுகிறது. உண்மையிலேயே செல்வம் இன்றி செல்வத்தை நியாயமான முறையில் பங்கீடு செய்ய முடியாது. இவை இரண்டுக்கும் இடையிலும் சமநிலை பேணப்படல் வேண்டும். ராஜபக்ஷவாதிகள் செல்வத்தை எவ்வாறு பெருக்குவது என்பது பற்றிக் கதைப்பதில்லை, செல்வத்தைப் பங்கீடு செய்வது பற்றிக் கதைக்கின்றார்கள். ஆயினும் அவர்களிடம் வேலைத்திட்டங்கள் எதுவும் இல்லை. ஆயினும் எம்மிடம் செல்வத்தை எவ்வாறு பெருக்குவது என்பது பற்றிய ஒரு வாதம் காணப்படுகிறது. அங்கும் இவ்வாறான ஒரு கலப்பு முறை தேவைப்படுகிறது. மூன்றாவது விடயமாக வெளிநாட்டுக் கொள்கை பற்றி பார்க்கின்ற போது எமது ஏற்றுமதிகள் குறிப்பிட்ட ஒரு இடத்திற்குச் செல்லும் அதே நேரம் நாங்கள் வேறு ஓர் இடத்தினைச் சார்ந்து இருக்கின்றோம். எமது பெரும்பாலான ஏற்றுமதிகள் கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கே செல்கின்றன. ஆனாலும் நாங்கள் சீனாவுடனேயே தொடர்புகளை வைத்துள்ளோம். அதே போன்று இந்திய எதிர்ப்புக் கொள்கையில் இருக்கின்றோம். ஆயினும் எமது வெளிநாட்டுக் கொள்கை ஒப்பீட்டு நயத்தின் அடிப்படையிலேயே அமைதல் வேண்டும். சிங்கள சமூகத்தின் மத்தியில் ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகளுக்கே அதிக விருப்பம் இருக்கின்ற போதும் உண்மையில் அதன் மூலம் எமக்கு எந்தவிதப் பயனும் இல்லை. நாங்கள் அமெரிக்கா, இந்தியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளையே எதிர்க்கின்றோம். இது போலியானதாகும். இங்கும் ஒரு கலப்பு அவசியம் என நாம் கூறுகின்றோம். நான்காவது எமது கலாசார கொள்கை ஆகும். ஒரு புறத்தில் நாம் எமது கலாசாரத்தை பாதுகாப்பதுடன் மறு புறத்தில் டிஜிட்டல் புரட்சிக்குச் செல்லுதல் வேண்டும்.

இந்த நான்கு விடயங்கள் தொடர்பில் ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் செயற்பாடுகள் எப்பொழுதும் ஒரு பக்கத்தினையே எடுத்தது. இந்த நான்கு விடயங்களையும் நாட்டுக்குத் தேவையான ஒரு நடுத்தர நிலையில் பேணுவதே ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கை ஆகும். இது அவசரமாக தேர்தல் ஒன்றுக்காக தயார் செய்யப்பட்ட ஒரு தொலை நோக்கு அல்ல. இது தொடர்பாக பாரியதொரு உள்ளகக் கலந்துரையாடல் காணப்பட்டது. இம்முறை தேர்தலுக்காக நாம் முன் வைக்கும் பிரகடனமானது இதுவரையில் நாம் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. 2025 அரசாட்சியினை இலக்காகக் கொண்ட பாரிய ஒரு வேலைத்திட்டமாக எதிர்காலத்தில் அது மாற்றம் பெறவுள்ளது.

**ஆயினும் ஐக்கிய தேசிய கட்சியின் நெருக்கடி எப்பொழுதும் வெறுமனே தலைமைத்துவப் போட்டியை மையமாகக் கொண்டே உருவாகியது. துற்போது கூறப்படும் கொள்கை ரீதியான உரையாடல் மேலே எழவில்லை. அது ஏன்?**

கொள்கைகளின் அடிப்டையிலேயே இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டது. உள்ளக ஜனநாயகம் என்ற விடயமும் இதன் போது மிகவும் வலுவாக மேலெழுந்தது. 2010 ல் முதன் முறையாக திரு கரு ஜயசூரிய அவர்களை போட்டியில் முன் நிறுத்தியதன் மூலம் அக் கொள்கை ரீதியான போராட்டம் வெளிப்படுத்தப்பட்டது. தனது புதிய தாராண்மைவாத (லிபரல்) கொள்கைக்கு மக்களது ஒத்துழைப்பு கிடைக்க மாட்டாது, அதன் காரணமாக அதிகாரத்திற்கு வர முடியாது என நாங்கள் ரணிலிடம் கூறினோம். சுமார் ஓராண்டுகள் அப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு அதன் பின்னரே தலைமைத்துவத்திற்கு போட்டியாளர் ஒருவர் முன் நிறுத்தப்பட்டார். 'கருவாத்தடி' மற்றும் சிறிகொத்தவிற்கு கல் எறிதல் ஆகிய சம்பவங்கள் அதன் பின்னர் தான் இடம்பெற்றன. அப் போராட்டம் பிரசித்தி பெறவில்லை என்று நீங்கள் கூறுவதாயின் அது ஏன் என்ற விடயத்தை நான் கூறுகின்றேன். இந்த நாட்டில் தாராண்மைவாத மற்றும் மாக்ஸிச வகுதியினர் காணப்படுகிறார்கள். விடயங்கள் பற்றி இவர்கள் தான் சமூகத்திற்கு விளக்கமளிக்கின்றனர். ஒரு சந்தர்ப்பத்தில் அவர்களுக்கும் ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்றை ஏற்படுத்துவதற்கு நான் தலையீட்டினை மேற்கொண்டேன். அவ்வாறு ஏற்பட்ட தொடர்பின் காரணமாக ரணில் விக்ரமசிங்க ஒரு முதலாளித்துவ ஜனநாயகத் தலைவர் ஆவார் என அவர்கள் கூறுவதற்குத் தலைப்பட்டார்கள். காரணம் தேசிய பிரச்சினை தொடர்பாக அவர் முன்வைத்த கருத்து ஆகும். அதன் பிரகாரம் ரணிலுக்கு மாற்று வழியாக முன் வைக்கப்படும் கருத்து மற்றும் அப் போராட்டக்காரர்களை வெறுமனே அடிவருடி போராட்டாக்காரரர்களாகவே அவர்கள் பார்த்தார்கள். ஏன் எதிர்க்கின்றோம் என்ற விடயம் அவர்களுக்கு முக்கியமானதாகத் தெரியவில்லை. நான் அந்த நாட்களில் இந்த விடயம் தொடர்பாக ராவய பத்திரிகைக்கு எழுதியுள்ளேன்.

**நல்லாட்சி அரசாங்கத்தின் அரசியல் மறுசீரமைப்புக்கள் பற்றிய உரையாடல் தற்போது தந்தை இல்லாத ஒரு பிள்ளையின் நிலையில் உள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி அதற்கான பொறுப்பை எவ்வளவு தூரம் ஏற்கிறது?**

மிகத் தெளிவாகவே நாங்கள் அதற்காக முன் நிற்கின்றோம். சோபித தேரரின் நீதிக்கான சமூகம் ஒன்றுக்கான இயக்கத்தின் அடித்தளத்தினை ஒரு துளியேனும் பிசகாது ஏற்றுக் கொள்வதே எமது கொள்கையாக உள்ளது. அதன் போது நாம் நல்லாட்சிக் கொள்கையை மீண்டும் சட்டகத்திற்கு உட்படுத்தினோம். உதாரணமாக நல்லாட்சி அரசாங்கத்தால் எடுக்கப்படாத தேசிய பிரச்சினை தொடர்பான விடயத்தை நாங்கள் சட்டகத்தில் உள்ளடக்கியுள்ளோம். நாங்கள் அதற்கு 'ஒரே இனம்' (சத்ஜாதிகத்வய) என்று பெயர் சூட்டி உள்ளோம். நாம் பல்லின சமூகம் பற்றிக் கதைக்காது இனங்களுக்கு இடையிலான ஒரு சமூகம் பற்றிக் கதைக்கின்றோம். வேறுபட்ட இனத்துவத்திற்குப் பதிலாக ஓரினம் மற்றைய இனத்தில் தங்கி இருக்க கூடிய இனங்களுக்கு இடையிலான சகவாழ்வு பற்றிக் கதைக்கின்றோம். அதே நேரம் ஒவ்வொரு இனத்தினதும் தனித்துவம் மற்றும் அபிமானம் பாதுகாக்கப்படல் வேண்டும். அவ்வாறு செய்யும் போது தான் இலங்கைத் தேசத்தவர்களை உருவாக்க முடியும்.

**கோவிட் 19 காரணமாக முழு உலகினதும் நிகழ்ச்சி நிரல் மாற்றம் அடைந்துள்ளது. உங்களது இந்த நிமையயினை எவ்வாறு கருத்திற் கொள்கின்றீர்கள்?**

அவ்வாறு சொல்வதும் கருத்தியல் நிலையில் இருப்பது ஒன்றேயன்றி உண்மை நிலை அல்ல. முதலாளித்துவ முறைமை இதன் மூலம் பாரியளவு சவால்களை எதிர்கொள்ளவில்லை. ஆயினும் மிகப் பிரதானமாக பொருளாதாரத் துறையில் உருவாகும் நெருக்கடிகள் தொடர்பில் நாம் கவனம் செலுத்தி உள்ளோம். உலகுக்கு தடிமன் ஏற்படும் போது எமக்கு 'நியூமோனியா' எற்படும் ஒரு நிலைமையே தற்போது காணப்படுகிறது. தொடர்ந்து பேணப்பட்டு வரும் கடன் பெறும் பொருளாதாரமே அதற்கான பிரதான காரணம் ஆகும். அது தற்போது 13 ட்ரில்லியன்கள் ஆகும். இனி வரும் ஐந்தாண்டுகளுக்குள் இது 18 ட்ரில்லின்களாக உயர்வடைய உள்ளது. மற்றைய காரணி எமது உற்பத்திப் பொருளாதரத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி ஆகும். ஒக்டோபர் மாதமளவில் இவை அனைத்தினதும் தாக்கத்தினை எம்மால் உணர முடியும். ஒரு கடல் அலை போன்று அது எம்மை வந்தடைய உள்ளது. சாதாரண மக்களுக்கு மாத்திரம் அன்றி முதலாளி வர்க்கத்தினராலும் அதனை உணர முடியுமாக இருக்கும். இவ்வாறான ஒரு நிலைமையின் கீழ் அரசாங்கத்திற்கு ஒரு சர்வாதிகார நடைமுயையினை நோக்கி நகர வேண்டி இருக்கும். இவை அனைத்து விடயங்களையும் எதிர்கொள்வதற்கு மிகச் சிறந்த 'சூப்பர்' குழுவொன்று தேவைப்படுகிறது. தனித் தனி தலைவர்களுக்கு இனிமேலும் ஒன்றுமே செய்ய முடியாது. அதற்குப் பொருத்தமான ஆக்கபூர்வமான 'சூப்பர்' தலைமைத்துவ குழுவொன்றை நாம் கட்டியெழுப்புவோம். 2025 ஆம் ஆண்டளவில் உலக நாடுகளுடன் ஒத்துப் போகின்ற ஒரு நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய ஒரு தலைமைத்துவம் தேவை. அதற்குத் தேவையான ஒரு வேலைத்திட்டம் ஐக்கிய மக்கள் சக்திக்கு மாத்திரமே உண்டு.

உரையாடல் குறிப்பு
**ஜயசிரி ஜயசேகர**



http://subitchamnews.com/

# கட்டாயமாக 19வது திருத்தம் நீக்கப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர்

## சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் கொண்டு செல்லத் திட்டமிட்டிருக்கும் வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க மக்கள் அணிதிரண்டுள்ளனர். தற்போதைய தலைவர் பல ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த நாட்டில் தோன்றிய சிறப்பான தலைவர். அடுத்து பிரதமர் எனப்படுபவர் இந்நாட்டுக்கு சுதந்திரத்தைக் கொண்டுவந்த தலைவர் மாத்திரமல்ல, நாடுமுழுவதும் அபிவிருத்தியை ஏற்படுத்திய தலைவர். அவ்வாறு மேற்கொண்ட பணிகளுக்காக அவர் மீது மக்களுக்கிருக்கும் கௌரவம் குறையாமல் உள்ளது. எனவே இந்த நாட்டின் எதிர்காலத்துக்காக உறுதியான அரசாங்கம் ஒன்றை அமைக்க முழு நாட்டு மக்களும் அணி திரளுவார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. தற்போதைய தலைவரின் சௌபாக்கியத்திற்கான நோக்கை இம்மண்ணில் யதார்த்தமாக்குவதற்கே நாம் செயற்படுகின்றோம்.

கோட்டாபய ராஜபக்ஷ அவர்களை ஜனாதிபதிப் பதவிக்குக் கொண்டுவருவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது ஓர் உந்துசக்தியாக செயற்பட்டது. எமது சக்தியும் இப்போதைய ஜனாதிபதிக்கு இருந்தது. அவ்வாறில்லாவிடில் சிலவேளை நாட்டின் உள்ளார்ந்த ஆட்சி மாறக்கூடியதாக இருந்தது. எனினும், நாம் சரியான நேரத்தில் சரியான தீர்வை எடுத்தோம். நாட்டுக்குப் பொருத்தமான இத்தலைவருக்காக நாம் அர்ப்பணித்தோம். எமது கட்சியின் செயற்பாட்டை இந்நாட்டின் முற்போக்கான மக்கள் பாராட்டுகின்றார்கள். வருங்காலத்தில் இந்நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் அதி காரத்தை தீர்மானிக்கும் காரணியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிதான் மாறும்.

இத் தேர்தலில் பொதுஜன பெரமுனவுக்கு மூன்றில் இரண்டு அதிகாரத்தைப் பெற்றுத் தருவதற்காக நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம். கட்டாயமாக 19வது திருத்தம் நீக்கப்பட வேண்டும். இதனால் நாடு நாளுக்கு நாள் உறுதியிழந்து போவது மட்டுமே இடம்பெறுகின்றது. முற்றாகவேனும் இதனை நீக்கிவிட்டு பாராளுமன்ற அரசியலமைப்பொன்று வரவேண்டும். இல்லையேல் காணப்பட்ட ஜனாதிபதி அதிகாரங்களில் சிற்சில விடயங்களை அகற்றிவிட்டு மீண்டும் கிடைக்க வேண்டும். அது

இடம்பெறாதவரையில் இந்தப் பிரிவுகளை நிறுத்த முடியாது. நாடு உறுதியிழப்பதை நிறுத்த முடியாது. எனவே உறுதிவாய்ந்த தன்மையை நாட்டில் கட்டியெழுப்ப வேண்டுமாயின் 19வது திருத்தத்தை மீண்டும் திருத்தியமைக்க வேண்டும் என்றே நாம் சொல்லுகின்றோம்.

தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவது எதிர்காலத்தில் நியமிக்கப்படும் அரசின் முதன்மைக் கொள்கையாகும். அது பண்டாரநாயக்க அம்மையாரின் பிரதான கொள்கையாக இருந்தது. நிகழ்காலத்தில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமையோடு நாம் எமது தேவைகளைப் பூர்த்தி செய்ய உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும் எனும் விடயம் எப்போதுமில்லாதவாறு தெரியவந்துள்ளது. அவ்வாறில்லாவிடில் பாரிய அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு நாடு தள்ளப்படும். ஏற்கனவே ஆடைக் கைத்தொழிலில் பிரச்சனைகளைக் காணக் கூடியதாக உள்ளது. கிடைக்க வேண்டியிருந்த அந்நிய செலாவணி குறைந்துள்ளது. எமது ஊழியர்கள் வெளிநாடுகளில் பணியாற்றி அனுப்பும் பணம் குறைவடைந்துள்ளது. சுற்றுலாக் கைத்தொழிலில் கிடைத்த வருமானம் குறைந்துள்ளது. இந்த அழுத்தங்களோடு நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. இதிலிருந்து மீள்வதற்கு தேசிய பொருளாதாரக் கொள்கையொன்றைக் கட்டியெழுப்புவதே இப்போது செய்யக்கூடிய ஒரே விடயம். தற்போதைய ஜனாதிபதி தேசியவாதக் கொள்கையில் இருக்கின்றார் என்பது மிகத் தெளிவான விடயம். நாட்டைக் காக்கும், சிங்கள பௌத்தர்களைக் காக்கும் தலைவரொருவர் உருவானது இந்நாடு பெற்ற பாக்கியம் என்றே நான் பார்க்கின்றேன்.

இலக்கொன்று இல்லாமையே இன்றைய இளைஞர்களின் நிலையாகும். எமது நாட்டில் ஒரு பிள்ளையிடம் இன்று கேட்டால், மருத்துவராக, சட்டத்தரணியாக, பொறியியலாளராக வருவேன் என்றுதான் சொல்வார்கள். ஒருபோதும் அவன் அல்லது அவள் சிறந்த தொழிலதிபராக வருவேன் என்று சொல்லுவதே இல்லை. இதிலிருந்து எமது நாட்டுக் குழந்தைகளிடம் சிறுவயது முதலே காணப்படும் உளரீதியான பிரச்சனை இதில் இருக்கிறது என்பது தெரிகிறது. அதிலிருந்து மீட்டெடுக்க வேண்டுமாயின் சிறுவயது முதலே நாட்டின் பிள்ளைகளை அணிதிரட்டும் வேலைத் திட்டமொன்றுக்குச் செல்ல வேண்டும். சாதாரண தரத்தையும் உயர் தரத்தையும் தாண்டிய பின்னர் அதற்கு அப்பால் அவர்களைக் கொண்டு செல்வதற்கான வேலைத் திட்டமொன்று இல்லை. ஒவ்வொரு இளைஞனும் அரச உத்தியோகத்தை எதிர்பார்ப்பது அடுத்த விடயம். தம்மால் சுயாதீனமாக எழுச்சி பெறக் கூடிய வேலைத்திட்டமொன்று இந்நாட்டில் உள்ளதென இளைஞர்கள் தொழிலின்றி இருக்கும் நாட்களில்தான் நம்புகிறார்கள். அக்காலம் வரும்போது ஆரம்பிக்கும் எந்தவொரு தொழிலிலும் திறமைசாலியொருவர், நிபுணரொருவர் காலத்தோடு கட்டியெழுப்பப்படுகிறார். எனவே இளைஞர்களின் பிரச்சனைகளுக்கு பதில் தேடுவதற்கு ஆரம்பத்திலிருந்தே சரியானதொரு வேலைத்திட்டத்தைத் தயாரிக்க வேண்டும்.


கல்விக் கொள்கையொன்று இல்லாமையினாலேயே இளைஞர்களிடம் ஒருவகையான மந்தநிலை ஏற்பட்டுள்ளது. கல்விக் கொள்கையானது சரியாக தொழிற் கேள்விக்கு ஏற்றவாறு மனிதர்களைக் கட்டியெழுப்புவதில் சரியாகச் செயற்படுமானால் கற்றலைப் போலவே இப்பிரச்சனைக்குத் தீர்வு தேடவும் முடியும்.

அரசியல்வாதிகளின் ஊழல்கள் ஒவ்வொரு தேர்தலின் போதும் களத்திற்கு வரும் தலைப்பாகவுள்ளது. ஊழல் குற்றச்சாட்டு உள்ளவர்களையும் தெரிவுசெய்து அனுப்புவர்கள் மக்கள். இதுதான் இங்கிருக்கின்ற பிரச்சனை. எனவே இந்தத் தேர்தலிலாவது அரசியலில் சம்பாதித்த அரசியல்வாதிகளை வீட்டிலே நிறுத்த மக்கள் சற்றே சிந்திக்க வேண்டும். ஒருபுறம் மக்கள் கட்சிக்கு வாக்களிக்கிறார்கள். அவ்வாறான குற்றச்சாட்டுகள் விடுக்கப்படுபவர்கள் இருப்பார்களேயானால், அவர்களைப் பட்டியலிலிருந்து அகற்றும் உரிமை கட்சிக்கு உள்ளது. ஒருபுறம் கட்சி வழங்கிய வேட்பாளரை மக்கள் தெரிவு செய்து அனுப்புகிறார்கள். இந்தப் பிரச்சனை எல்லா இடங்களிலும் உள்ளது. எனவே எதிர்காலத்தில் இப்பிரச்சனைக்கு நாம் சரியாக முகங்கொடுக்க வேண்டும்.

(செய்தித்தாள் நேர்காணல் ஒன்றிலிருந்து)

"

**கோட்டாபய ராஜபக்ஷ அவர்களை ஜனாதிபதிப் பதவிக்குக் கொண்டுவருவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது ஓர் உந்துசக்தியாக செயற்பட்டது. எமது சக்தியும் இப்போதைய ஜனாதிபதிக்கு இருந்தது. அவ்வாறில்லாவிடில் சிலவேளை நாட்டின் உள்ளார்ந்த ஆட்சி மாறக்கூடியதாக இருந்தது. எனினும், நாம் சரியான நேரத்தில் சரியான தீர்வை எடுத்தோம். நாட்டுக்குப் பொருத்தமான இத்தலைவருக்காக நாம் அர்ப்பணித்தோம். எமது கட்சியின் செயற்பாட்டை இந்நாட்டின் முற்போக்கான மக்கள் பாராட்டுகின்றார்கள்.**



http://telo.org/

# சர்வதேச தலையீடு இல்லாமல் வேறு மாற்றுத் திட்டம் கிடையாது


தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர்

**சீ.வீ. விக்னேஸ்வரன்**


1. சட்டப்படி தமிழ் மக்கள் ஒரு தேசம் (Nation), இலங்கையின் வடக்கு கிழக்கு அவர்களின் மரபுவழி தாயகம் (Traditional Homeland), அவர்கள் சர்வதேச சட்டங்களின் கீழ் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் (Right of Self Determination) என்பவற்றின் அடிப்படையில் இணைந்த வடக்கு கிழக்கில் இறைமையுடனான உயர்ந்த மட்ட சுயாட்சியை சமஷ்டி அடிப்படையில் பெற்றுக்கொள்வதே தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் நோக்கமாகும். ஆனால், இலங்கையில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லவே இல்லை என்றும் பொருளாதார பிரச்சினையே இருக்கிறது என்றும் ஜனாதிபதி மிகவும் திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையில் இனப்பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வு தொடர்பில் சர்வதேச ரீதியாக ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துமாறு சர்வதேச நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்துவதை தவிர எமக்கு வேறு எந்தத் தெரிவுமே இல்லை. எரித்திரியாவில் 1990ஆம் ஆண்டு தொடங்கியது முதல் பிரித்தானியாவில் ஸ்கொட்லாந்து, கனடாவில் கியூபெக், கிழக்கு திமோர் , சூடான் என்று பல நாடுகளில் பிணக்குகள் மற்றும் தேசிய இனங்களின் அதிகாரங்களை தீர்மானித்துக்கொள்வதற்கு சர்வஜன வாக்கெடுப்பை சர்வதேச சமூகம் நடத்தியிருக்கின்றது. ஆகவே, இலங்கையில் எத்தகைய ஒரு தீர்வு தமக்கு வேண்டும் என்பதை தமிழ்ப் பேசும் மக்கள் தீர்மானிக்கும் வகையில் சர்வதேச சமூகம் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தவேண்டும் என்று கோரி தமிழ் மக்கள் தேசிய கூட்டணி அரசியல், ராஜதந்திர ரீதியாக அர்ப்பணிப்புடன் செயற்படும். மேலே, நாம் குறிப்பிட்ட சமஷ்டி அடிப்படையிலான தீர்வு இந்த சர்வஜன வாக்கெடுப்பில் மக்களின் தெரிவுகளில் ஒன்றாக இருக்கும்.

   அதேவேளை, இறுதித் தீர்வை எட்டும்வரை யுத்தத்தினால் அழிவடைந்த வடக்கு கிழக்கு பிரதேசங்களை மீள கட்டியெழுப்புவதற்காக ஒரு இடைக்கால தீர்வினை சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையுடன் ஏற்படுத்துவதற்கு இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளுடன் நாம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம்.

2. இனஅழிப்பு நடைபெற்று 10 வருடங்கள் கடந்துள்ளபோதிலும் போர்க்குற்றம், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனஅழிப்பு குற்றங்கள் ஆகியவற்றுக்கு நீதி கிடைக்கவில்லை. அதேசமயம், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்ட 30/1 கருத்தொருமித்த தீர்மானத்தில் இருந்து இலங்கை அரசாங்கம் விலகுவதாக அறிவித்துள்ள நிலையில் இலங்கையிடம் இருந்து நீதியையும் நியாயத்தையும் எதிர்பார்க்க முடியாது. இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்துமாறு சர்வதேச நாடுகளை

வலியுறுத்துவதே எமக்கு எஞ்சியுள்ள ஒரே வழி. இதற்கான சகல நடவடிக்கைகளையும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி மேற்கொள்ளும்.

3. வடக்கு கிழக்கில் வாழ்ந்துவரும் 90,000 விதவைகளின் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கில் வாழ்வாதாரத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த இருக்கிறோம். இதற்கு முன்னோடியாக "தேவைகள் மதிப்பீடு" ஒன்றை விதவைகள் மத்தியில் நாம் விரைவில் நடத்த இருக்கின்றோம்.

4. காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைகள் தொடர்பில் நாம் மிகுந்த கரிசனை கொண்டுள்ளோம். இவர்களின் பிரச்சினைகளைக் கையாளும் வகையில் சட்டவல்லுனர்கள் குழு ஒன்றை நாம் அமைக்க இருக்கின்றோம். இன அழிப்பு தொடர்பில் சர்வதேச ரீதியான சுயாதீன விசாரணை ஒன்று நடத்தப்படும்பொழுதே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்று நாம் நம்புகிறோம். இதனடிப்படையில், சர்வதேச விசாரணை ஒன்றை இயன்றளவு விரைவாக கொண்டுவருவதற்கு நாம் பாடுபடுவோம். அதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் பிரச்சினைகளை அறிந்து புலம்பெயர் தமிழ் மக்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் ஆகியவற்றின் உதவியுடன் அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

5. பல வருடங்களாக சிறைகளில் வாழும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்யும் பொருட்டு சட்ட வல்லுநர்கள் குழு ஒன்றை விரைவில் அமைத்து செய்யக்கூடிய எல்லா வழிமுறைகளையும் மேற்கொள்வோம். குறிப்பாக பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவதற்கு உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பாடுபடுவோம். அதேசமயம் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துடன் இவர்களின் விடுதலை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவோம். பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்படும் எமது உறுப்பினர்கள் ஐ. நா, சர்வதேச நாடுகள், சர்வதேச அமைப்புக்கள், இந்திய அரசு ஆகியவற்றுடன் இது விடயத்தில் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடத்துவார்கள்.

6. உலகில் உச்சளவு இராணுவமயமாக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாக வடக்கு- கிழக்கு தொடர்ந்து காணப்படுகின்றது. தனியார் காணிகளில் இருந்து மட்டுமன்றி வடக்கு - கிழக்கில் இருந்து இராணுவம் வெளியேற்றப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. 1983ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் இருந்த நிலைகளுக்குள் இராணுவம் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று பாராளுமன்ற மட்டத்திலும் ஐ. நா மட்டத்திலும் நாம் வலியுறுத்துவோம். போரின் போது இராணுவத்தினர் தொகை பெருமளவு அதிகரித்துள்ளமை தெரிந்துள்ளதால் அவர்களைச் சிங்களப் பிரதேசங்களுக்கு அனுப்பக் கோருவோம்.

7. சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் இங்கு நடைபெறும் நில ஆக்கிரமிப்பு மற்றும் பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகள் பாரிய மனித உரிமை மீறல்களாகும். ஐ.நா, சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் ஆகியவற்றின் கவனத்தை இந்த விடயத்தில் ஈர்த்து அவர்கள் இதுதொடர்பில் ஆய்வுகளையும் கண்காணிப்பு அறிக்கைகளையும் வெளியிட்டு அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க நடவடிக்கைகளை எடுப்போம். அதேவேளை, இலங்கை சட்டத்துக்கு உட்பட்ட ரீதியில் மேற்கொள்ளக்கூடிய அனைத்து முயற்சிகளையும் நில ஆக்கிரமிப்புக்கு எதிராக நாம் எடுப்போம். குறிப்பாக, ஐ.நா மனித உரிமைகள் சபையில் தமிழர் பகுதிகளில் நில ஆக்கிரமிப்பை நிறுத்தும் தீர்மானம் ஒன்றை கொண்டுவருவதற்கும் நில ஆக்கிரமிப்பு தொடர்பில் ஐ. நா விசேட பிரதிநிதி ஒருவரை நியமிப்பதற்கும் நாம் முயற்சிகள் மேற்கொள்வோம்.

8. தமிழ் மக்களின் பொருளாதார அபிவிருத்தி, கல்வி, விளையாட்டு மற்றும் கலாசார மேம்பாட்டை ஏற்படுத்துவதில் நாம் கூடுதல் கரிசனையுடன் செயற்படுவோம். இதுதொடர்பில் பல்வேறு கட்டமைப்பு ரீதியான திட்டங்களை நாம் வகுத்துள்ளோம். இவற்றை நிறைவேற்ற அரசாங்கத்திடம் இருந்து பெறக்கூடிய அனைத்து வளங்களையும் நாம் பெறுவதுடன் தமிழகம், புலம்பெயர் மக்கள் ஆகியோரின் உதவிகளை ஒன்றிணைக்க இருக்கின்றோம். தமிழ் நாட்டுடனான உறவுகளை வலுப்படுத்தி எமது பகுதிகளில் தொழிவாய்ப்புக்களை ஏற்படுத்தும் முதலீடுகளை மேற்கொள்வதற்கு நாம் விசேட கவனம் செலுத்துவோம். எமது எல்லா முயற்சிகளும் நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

9. 1958 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் வடக்கு கிழக்கு பகுதிகளில் அருங்காட்சியகங்கள் மற்றும் நினைவு ஸ்தூபிகளை அமைக்க நாம் நடவடிக்கை எடுப்போம்.

10. சர்வதேச ரீதியில் எல்லா நாடுகளுடனும் தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார மேம்பாட்டை ஏற்படுத்தவும் நாம் தொடர்புகளைப் பேணுவோம். இதில் இந்தியா முக்கியமானது. இலங்கையில் தமிழ் மக்களின் பாதுகாப்பையும் அவரகளின் சுயநிர்ணய உரிமையினையும் உறுதிப்படுத்துவது மட்டுமன்றி வடக்கு கிழக்கின் சமூக,பொருளாதார மறுமலர்ச்சிக்கு இந்தியா காத்திரமான ஒரு வகிபாகத்தை மேற்கொள்ளவேண்டும். இதற்கான சகல நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம். குறிப்பாக, பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு, மற்றும் இந்தியாவிற்கும் காங்கேசன்துறை, திருகோணமலை, தலைமன்னார் ஆகியவற்றுக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்து ஆகிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழ் மக்கள் தேசிய கூட்டணி நடவடிக்கைகளை எடுக்கும்.




# தமிழ் மக்களுக்கு இந்த அரசாங்கம் மீது நம்பிக்கை உண்டு

ஈ.பீ.டீ.பீ. தலைவர், ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் யாழ்மாவட்ட வேட்பாளர்

**மீன்பிடி நீர்வள அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தா**

நாம் ஆரம்பத்தில் ஈ.பீ. ஆர் .எல்.எஃப் அமைப்பில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டோம் *அக்காலத்திலும்* இடதுசாரிக் கோட்பாடுகளின் சார்பிலேயே செயற்பட்டோம். கடந்த காலத்தில் பதவி வகித்த அரசாங்கங்களினால் எமக்கு ஏற்பட்ட மோசடிகள், குறைபாடுகள் மாற்றாந் தாய் மனப்பான்மை போன்ற பல்வேறு காரணங்களினால் நாம் அவ்வாறு செயற்பட்டோம். உயர் கல்விக்கான தரப்படுத்தல் எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதில் ஆட்சியாளர்கள் அக்கறை காட்டவில்லை. இனரீதியான ஒடுக்குமுறை இடம்பெற்றது, இத்தகைய நிலைமைகள் காரணமாகவே நாம் அத்தகைய மார்க்கத்தை பின்பற்ற பிரதான காரணமான அமைந்தது. ஆனால் நாம் ஓர் இடதுசாரி என்ற வகையில் முன்னகர்ந்தோம். இது 'விடுதலைப் புலிகளின் அமைப்பு போன்ற இயக்கமாக செயற்படவில்லை. **தென் இலங்கையின் சமூகக் குறைபாடுகள் காரணமாக 1971, 1988, 1989 ஆகிய காலகட்டங்களில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வீ.பீ) கிளர்ச்சிகளில் ஈடுபட்டது அத்தகைய குறைபாடுகள் எமக்கும் ஏற்பட்டன. ஐக்கிய இலங்கைக்குள் சமாதானமாகவும் சகவாழ்வுடனும் பயணிப்பதே எமது குறிக்கோளாக அமைந்தது. எனவே எம்மோடு இணைவதற்கு விரும்பிய சிங்கள இடதுசாரி சக்திகளை நாடிச் சென்றோம். ஆனால், அப்படியான சக்திகளை அதிகளவில் நாம் சந்திக்கவில்லை. ஆனால், அக்காலகட்டத்தில் மாற்றுக் குழுக்களாக தென்னிலங்கையில் செயற்பட்ட சிறு குழுக்களோடு நாம் இணைந்தோம். அவர்களுடன் நாம் முன்னோக்கிச் சென்றோம். இந்திய இலங்கை உடன்படிக்கை வரை அப்பயணத்தில் நாம் ஈடுபட்டோம். இந்திய இலங்கை உடன்படிக்கை நல்லது என எமக்கு புரிந்தது. எனவே நாம் ஆயுதங்களை கைவிட்டு ஜனநாயகப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம். அக்காலகட்டத்தில் ஈரோஸ் அமைப்பு அல்லது ஈ.பீ.ஆர்.எல்.எஃப் அமைப்பு எவ்வகையிலும் இனவாத உணர்வுடன் செயற்படவில்லை.**

திரு. கொல்வின் ஆர்.டி. சில்வா உட்பட இடதுசாரி அணியைச் சேர்ந்தவர்கள் ஒரு மொழியாயின் இரு நாடுகள் என்ற கருத்தை முன்வைத்தனர். அதே சமயம் இரு மொழிகளாயின் ஒரு நாடு என்பதையும் வலியுறுத்திக் கூறினர். அதன் பிறகு அவர்களுடைய நிலைப்பாட்டில் எதுவுமே வெளிவரவில்லை. அவர்கள் அதிலிருந்து விலகிச் சென்றனர். இத்தகைய நிலைமையின் கீழ் தான் நாம் ஈ.பீ.டீ.பீ என்ற பெயரில் ஒரு கட்சியை ஆரம்பித்தோம். நாம் ஆயுதமேந்தி போராடிய காலகட்டத்தில், தென்னிலங்கையின் முற்போக்கு சக்திகளுடன் இப்பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என நாம் எமது குறிக்கோளாகக் கொண்டோம். ஆனால், அத்தகைய சக்திவாய்ந்த முற்போக்கு அணிகளின் ஒத்துழைப்பு எமக்குக் கிட்டவில்லை. எனவே நாம் மாற்றுக் குழுக்களுடனேயே பயணித்தோம்.

நாம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக செயற்பட்டோம் எனக் கூற முடியாது. நாம் எப்போதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

ஏனைய இனங்களுடன் ஐக்கியத்துடன் செயற்பட வேண்டும் என்றே கருதினோம். அவ்வாறு நடவடிக்கை எடுப்பதன் மூலம் எமது பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடியும் என நாம் நம்பினோம். அதற்கு எதிராக அவர்கள் செயற்பட்ட காரணத்தினாலேயே அவர்களுடன் அவர்களுக்கெதிராக சிற்சில விமர்சனங்களை முன்வைத்தோம். விடுதலைப் புலிகளின் பயணம் எமது மக்களுக்கு அழிவை ஏற்படுத்தும் என அன்றும் நாம் வலியுறுத்திக் கூறினோம். விடுதலைப் புலிகள் தம்மையும் அழித்துக்கொண்டு பயணிப்பார்கள் என நாம் கூறினோம். இன்று அதுவே இடம்பெற்றுள்ளது. எனவே எங்களுடைய நிலைப்பாட்டை நாம் எடுத்துக்கூறிய போது அவர்கள் எம்மை படுகொலை செய்வதற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் முயற்சித்தனர்.

இந்திய இலங்கை உடன்படிக்கையின் பின்னர் எமக்கு நல்ல புரிதலும் நம்பிக்கையும் ஏற்பட்டது. தேசியக் கட்டமைப்பில் இணைந்து ஜனநாயக அரசியலின் ஊடாக எமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும் என்ற காரணத்தினால் நாம் ஜனநாயகப் பாதையை தெரிவுசெய்துள்ளோம்.

தற்போதைய அரசு பற்றிய நம்பிக்கையும் நல்ல புரிதலும் எமக்கு உண்டு. எமது பிரதேச மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் என்ற பாரிய நம்பிக்கை எமக்கு உண்டு. ஆனால், அதற்கு தமிழ் மக்களின் ஒத்துழைப்பு எமக்கு அவசியம் தமிழ் மக்களின் ஒத்துழைப்பு போதிய அளவு எமக்குக் கிடைப்பதாயின் இந்த அரசாங்கத்திலிருந்து மென்மேலும் தீர்வுகளை நாம் பெற முடியும். மறுபுறம் அரசியல் தீர்வு பற்றிக் கூறுவதாயின் மாகாண சபை முறைமையில் காணப்படும் அரசியலமைப்பிற்கான 13வது திருத்தத்தின் மூலம் மாகாண சபை முறைமைகளை உரிய முறையில் செயற்படுத்தினால் மக்களின் பிரச்சினைகளில் பெரும்பான்மையானவற்றை தீர்த்துக்கொள்ள முடியும் என நான் உணர்கின்றேன். மாகாண சபைகள் முறைமை என்பது எமது அரசியல் பிரச்சினைகளுக்கும் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்தற்கான ஆரம்பப் புள்ளியாகும். அதிலிருந்து ஆரம்பித்து நாம் முன்னே செல்ல முடியும். வடக்கு கிழக்கு பிரச்சினையை தீர்ப்பதற்கு மாகாண சபை முறைமையை முன்மொழிந்தாலும் அது இலங்கை பூராவும் நடைமுறைப்படுத்தப்பட்டு தற்போது தென்னிலங்கையிலும் ஏனைய பிரதேசங்களிலும் மக்கள் மேற்படி மாகாண சபையின் நன்மைகளை அனுபவித்து வருகின்றனர்.

தற்போது இனப்பிரச்சினை என்று ஒன்று இருக்கிறது எனக் கூற முடியாது. ஆரம்பக் காலகட்டங்களில் தென்னிலங்கையில் இருந்து தான் இனவாதம் மேலோங்கியது. எமது தமிழ் மக்கள் அதனை பெரிதுபடுத்தினர். தற்போது அவை அப்படியில்லை. 2009 இல் யுத்தம் ஓய்ந்த பின் அத்தகையப் பிரச்சினைகள் கிடையாது. தென்னிலங்கை வாசிகள் வடபுலத்தை நோக்கிச் செல்லவும் வடக்கில் வாழும் மக்கள் தென்னிலங்கைக்கு போய் வரவும் அதே சமயம் இலங்கையின் எந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவரும் இன்னுமோர் பிரதேசத்திற்கு சுதந்திரமாக சென்று வரவும் முடியும். ஆனால், சிற்சில அரசாங்கங்கள் திட்டமிட்டு மேற்கொள்ளும் சில நடவடிக்கைகளைப் பற்றி நாம் எமது விமர்சனங்களை முன்வைத்து வருகிறோம்.

**தமிழ் அரசியல் தரப்பினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் தெரிவிற்கு முன்னர் தமிழ் மக்கள் மத்தியில் இது ஒரு பேரினவாத அரசு என்றும் அவர்களுடைய நடவடிக்கைகள் அத்தகைய ஒரு நிலைக்குச் செல்லும் என்றும் பரப்புரை செய்யப்பட்டது. ஆனால், ஜனாதிபதியின் பதவிப் பிரமாணம் அநுராதபுரத்தில் இடம்பெற்றபோது அவர் ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுத்துரைத்தார். "ஜனாதிபதித் தேர்தலின் போது இந்த நாட்டில் பெரும்பான்மை மக்களே என்னைத் தெரிவுசெய்தனர். தமிழ் முஸ்லிம் மக்கள் என்மீது நம்பிக்கை வைத்து அவர்களுடைய வாக்குகளை எனக்கு வழங்கவில்லை. ஆனால், நான் இந்நாட்டில் வாழும் அனைத்து மக்களினதும் ஜனாதிபதி பெரும்பான்மை மக்களாக இருந்தாலும் சிறுபான்மை மக்களாக இருந்தாலும் நான் அனைவரதும் ஜனாதிபதியாவேன்"**

எமக்கும் அரசுக்கும் இடையே சிறந்த புரிந்துணர்வு இருக்கின்ற காரணத்தினால் தமிழ் மக்கள் எமக்கு போதியளவு வாக்குகளை வழங்கி போதியளவு தேர்தல் தொகுதிகளில் வெற்றியீட்ட வைப்பதன் மூலம் நாம் வடபுலத்து மக்களின் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்க்க முடியும். பட்டதாரிகளின் பிரச்சினை இருக்கிறது. ஆனால், அது நாடு பூராவும் உள்ள அனைத்து மாகாணங்களுக்கும் இருக்கும் ஒரு பிரச்சினை அனைவருக்கும் அரசாங்கத் தொழில்களை வழங்க முடியாது. ஆனால், வடபுலத்தில் தொழில்வாய்ப்புக்களை நாம் உருவாக்க முடியும். தொழிற்சாலைகள் விவசாயம், மீன்பிடிக் கைத்தொழில் போன்ற துறைகளில் சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும். அதே சமயம் இப்பிரதேசங்களில் அமைந்திருந்த தொழிற்சாலைகளை மீள செயற்படுத்த முடியும். புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவதன் மூலம் தொழில்வாய்ப்புக்களை அதிகரிக்க முடியும். இப்பிரதேச மக்கள் அத்தொழில்களில் ஈடுபட முடியும். மீன்பிடி மற்றும் நீர்வள அமைச்சின் கீழ் பல கருத்திட்டங்கள் இருக்கின்றன. அவற்றினூடாகவும் எம்மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்க முடியும். தற்போது காவந்து அரசாங்கமே பதவியில் உள்ளது. எனவே அதிக விஷயங்களைச் செய்ய முடியாது. ஆனால், மீனவர் சமூகத்தில் ஒரு நம்பிக்கையை இக்காலகட்டத்தில் ஏற்படுத்தும் ஆற்றலைப் பெற்றேன். எதிர்காலத்தில் மீன்பிடிச் சமூகத்தின் பிரச்சினைகளையும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் உள்ளோம். நன்னீர், உவர் நீர் ஆகிய இரண்டு துறைகளிலும் தன்னிறைவை ஏற்படுத்தவும், மீன் அறுவடையை ஏற்றுமதி செய்யவும் நடவடிக்கை எடுப்பேன். அதனூடாகப் பாரியளவு அந்நியச் செலாவணியை இலங்கைக்குத் தர முடியும் என நம்புகிறேன். அதே சமயம் தொழில் முயற்சியாளர்களுக்கும் தொழில் தேடுவோருக்கும் நிறைய வாய்ப்புக்களை உருவாக்க முடியும்.

கோவிட் -19 பூகோள ரீதியாகவும் உள்நாட்டு ரீதியாகவும் பரவி வரும் ஒரு தொற்று நோய் பிரச்சினை இக்காலகட்டத்தில் எமது அரசு மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளையும் மிகப் பாராட்டுக்குரியவை அது தொடர்பாக நாம் பெருமைப்படுகின்றோம். தேர்தலின் பின்னர் எமக்கு எத்தகைய மட்டத்திலான பொறுப்புக்கள் வழங்கப்படும் என சகிப்புத் தன்மையுடன் எதிர்பார்ப்போம். பல யோசனைகள் இருக்கின்றன. அவை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மாத்திரமல்லாமல் இலங்கை பூராவும் எந்தவொரு அமைச்சினூடாகவும் செயற்படுத்தக்கூடிய யோசனைகள் ஆனால், மக்களின் அபிலாஷைகளும் எதிர்கால நிலைமைகளையும் அவதானித்து தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.

நான் மேலும் ஐந்து வருடங்கள் மாத்திரமே அரசியலில் ஈடுபடவுள்ளேன். அதன் கட்சி மேல் நடவடிக்கைகளை மேற்கொண்டு அடுத்த தலைவரை தெரிவுசெய்யும் கட்சி என்பது ஒரு புகையிரதத்தைப் போன்றது.கொழும்புக் கோட்டையிலிருந்து புறப்பட்டு காங்கேசன்துறை வரை பயணிப்பது போன்றது. ஒரு சிலர் கோட்டையிலிருந்து புகைவண்டியில் ஏறி காங்கேசன் துறை வரை பயணிப்பார்கள். இன்னும் சிலர் கொழும்பு கோட்டையில் ஏறி இடையில் தமது பயணத்தை நிறைவு செய்வார்கள். தொடர்ந்து பயணிப்பவர்கள் தங்கியிருப்பார்கள். ஏனைய கட்சிகளைப்போல எமது கட்சியில் தலைமைக்கான நெருக்கடிகள் கிடையாது.

(பத்திரிகை நேர்காணல் ஒன்றிலிருந்து)




# இரண்டு இனங்கள் ஒரு நாடு

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**
தமிழ் தேசிய மக்கள் முன்னணி, யாழ்ப்பாண மாவட்டம்

தமிழர்களின் உரிமைக்கான ஆயுதப்போராட்டம் கடந்த 2009 மே மாதம் இன அழிப்பின் காரணமாக மௌனிக்கப்பட்டது. அந்தக் கணத்திலிருந்து "இரண்டு தேசங்கள் ஒரு நாடு" என்ற அரசியல் இலட்சியத்துடன் தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்ற அரசியல் இயக்கத்தினராகிய நாம் கடந்த 10 ஆண்டுகளாக ஜனநாயக வழியில் போராடி வருகிறோம்.

எமது இனம் படுகொலை செய்யப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு, எமது கல்வி சீரழிக்கப்பட்டு, எமது மொழியும் பண்பாடும் சிதைக்கப்பட்டு — எமது தேசத்தின் பொருளாதாரம் அழிக்கப்பட்டும் சூறையாடப்பட்டும் எமது மக்களின் வாழ்வியலும் கனவுகளும் இலங்கை அரசின் பேரினவாத நெருப்பினுள் பொசுங்கிக் கிடக்கிறது.

நீடித்த அவலங்களுக்கும் தொடரும் அழிவுகளுக்கும் முடிவு எட்டப்பட வேண்டுமாயின் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை அரசுடனும் சர்வதேச சமூகத்துடனும் பேரம் பேசும் தகுதியும் துணிச்சலும் நேர்மையும் உடையவர்களே மக்கள் பிரிதிநிகளாகத் தெரிவுசெய்யப்படல் வேண்டும். எனவே, எமது இனத்தின் அரசியல் விடுதலைக்கான ஜனநாயகப் போராட்டப் பாதையில் குறித்த நாடாளுமன்றத்

தேர்தலும் தமிழர்கள் எதிர்கொள்ளவுள்ள ஜனநாயக சமர்க்களமாகும்.

இலங்கை அரசும் எம்மைத் தவிர்ந்த ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழர்களின் நீண்டகால இனப்பிரச்சினைக்கான தீர்வென பௌத்த மதத்துக்கு முன்னுரிமையளித்த, இறைமை பகிரப்படமுடியாத மற்றும் இறைமையை பாரதீனப்படுத்த முடியாத ஒற்றையாட்சி (ஏக்கிய இராச்சிய) அடிப்படையிலான அரசியலமைப்பையே தமிழர்கள் மீது தீர்வாகத் திணிக்க முயல்கின்றனர்.

மைத்திரி – ரணில் அரசாங்கத்தினால் அரசியல் யாப்புப் பேரவை மூலம் தயாரிக்கப்பட்டுள்ள மேற்படி ஒற்றையாட்சிப் பண்பை இறுக்கமாகக் கொண்ட அரசியல் யாப்புக்கான இடைக்கால அறிக்கையை பாராளுமன்றத்திலுள்ள தமிழ்ப் பிரதிநிதிகளின் அனுரசணையுடன் எமது மக்கள் மீது திணிக்கும் ஏமாற்று முயற்சியை அம்பலப்படுத்தி, அது ஒருபோதும் தமிழர்களுக்குரிய தீர்வாக அமையப்போவதில்லை என்ற உண்மையை எமது மக்களுக்கு நாம் தெளிவுபடுத்தி வருகின்றோம்.

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்றத்துக்குத் தெரிவாகி இந்த இலக்குகளை அடைய உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் செயலாற்றும்.**

## நிலையான அரசியல் தீர்வு

புதிதாக உருவாக்கப்படும் ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்கான இடைக்கால வரைபினை முற்றாக நிராகரித்து, தமிழ் மக்களைப் பேரவையினால் தயாரிக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டத்தின் பிரகாரம் இணைந்த வடக்கு கிழக்கினை தாயகமாகக் கொண்ட தமிழ் மக்களை தனித்துவமான இறைமை கொண்ட தேசமாக அங்கீகரித்து அதன் தனித்துவமான இறைமையையும் சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் தமிழ் மக்களுக்குள்ள சுயநிர்ணய உரிமையின் பிரகாரம் தமிழ்த்தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தொடர்ந்து போராடுவோம்.

## இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி

தமிழ்த் தேசத்தின் மீது இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், இனவழிப்புக் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக அல்லது விசேட குற்றவியல் தீர்ப்பாயம் ஊடாக விசாரணையொன்றை முன்னெடுக்க சர்வதேச சமூகத்தின் ஆதரவை திரட்டுவோம்.

## அரசியல் கைதிகள் விடுதலை

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தி சர்வதேச அரங்கங்களில் குரல்கொடுப்பதுடன் பேரம் பேசுவதற்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் அவர்களின் விடுதலைக்காக பேரம் பேசுவோம்.

## பயங்கரவாதத் தடைச் சட்ட நீக்கம்

நீண்டகாலமாக தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்கு காரணமாக இருந்துவரும் கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்குத் தேவையான அரசியல் நடவடிக்கைகளை சர்வதேச மட்டத்திலும் உள்நாட்டிலும் முன்னெடுப்போம்.

## வலிந்து காணாமலாக்கப்பட்டோர்

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களது விடயத்தில் சர்வதேச விசாரணைப் பொறிமுறைகளின் கீழ் நீதி வழங்கப்பட வேண்டுமென சர்வதேச அரங்குகளில் குரல்கொடுப்போம்.

## தாயகத்திலிருந்து இராணுவத்தை வெளியேற்றல்

இலங்கை ஆயுதப் படைகள் மீதான போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலைக் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் ஊடாக நீதி கிடைக்கும் வரையில் இலங்கை இராணுவம் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற குரல்கொடுப்போம்.

## அரச தனியார் காணிகள் விடுவிப்பு

வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் தனியார் மற்றும் அரச காணிகளில் நிலைகொண்டிருக்கும் அரச படைகள் வெளியேற்றப்பட்டு அக்காணிகளில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த குரல்கொடுப்போம்.

## சிங்கள பௌத்த மயமாக்கலை எதிர்த்தல்

வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் அரச ஆதரவுடன் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சிங்கள பௌத்த மயமாக்கல் மற்றும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுப்போம்.

## நிலையான அபிவிருத்தி

வடக்கு கிழக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிராந்தியமாக பிரகடனப்படுத்தப்பட்டு அப்பிராந்தியமாக மீளக் கட்டியெழுப்புதல் (பொருளாதாரம், மனித வளம்) மற்றும் நிலையான அபிவிருத்தி, இளைஞர் யுவதிகளின் வேலைவாய்ப்பு என்பவற்றை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியைக் கையாளும் முகமாக வடக்கு கிழக்கில் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் நெறிப்படுத்தலில் ஓர் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு அதற்கான நிதி நேரடியாகக் கிடைப்பதனை சர்வதேச சமூகம் உறுதிப்படுத்த வேண்டும் என தொடர்ந்தும் சர்வதேச அரங்குகளில் குரல் கொடுப்போம்.

இளையோருக்கான வேலைவாய்ப்பு, வன்முறை மற்றும் போதைக்குள் சிக்குண்டுள்ள இளைஞர்களை மீட்க செயலாற்றுவோம், தற்கொலை முயற்சியைத் தடுப்பதற்கான பொறிமுறைகள் போன்றவற்றையும் இலக்குகளாகக் கொண்டுள்ளோம்.



http://www.ft.lk/opinion

# தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சிங்கள மக்களின் இணக்கப்பாட்டுடனான தீர்வே எமது அபிலாஷையாகும்


## எம்.ஏ. சுமந்திரன்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு, யாழ்ப்பாண மாவட்டம்


ஒரு நாட்டிற்குள் சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் தமிழர்களின் உரிமைகளை பெற்றுக்கொள்ளும் அரசியல் தீர்வை நோக்கியே நாம் பயனிக்கின்றோம். எமது அரசியல் இலக்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை நாம் தெளிவாக கூறியுள்ளோம். இராஜதந்திர ரீதியில் பேச்சுவார்த்தையின் மூலமாக சிங்கள மக்களும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில்தான் எமது அரசியல் தீர்வு அமையும் என்பதையும் சிங்கள மக்களின் முதுகுக்கு பின்னால் எதனையும் செய்யத் தயாரில்லை என்பதையும், அவர்களும் சர்வசன வாக்களிப்பில் எமக்கு ஏற்ப வாக்களிக்க வேண்டும் அவ்வாறு வரும் தீர்வு தான் பலமான அரசியல் தீர்வாக இருக்கும் என்பதையும் நாம் பல தடவைகைகள் கூறிவிட்டோம். நாம் எந்த திசையில் பயணிக்கின்றோம் என்பது குறித்து மக்களை வீணாக குழப்பும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நானும் சம்பந்தனும் நாட்டினை பிளவுபடுத்த போவதாக கூறுகின்றனர். நாம் நாட்டினை பிளவுபடுத்தவில்லை.

தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களுக்காக இதுவரை செய்துள்ளதை எடைபோட்டு மக்கள் தீர்மானம் எடுக்க வேண்டும். நாம் புதிய அரசியலமைப்பினை கொண்டுவர கடுமையாக பாடுபட்டோம். எமது முயற்சியினால் இடைக்கால அறிக்கை ஒன்று கொண்டுவரப்பட்டது. அதில் என்ன உள்ளது என்பது அனைவருக்கும் தெரிய வேண்டும். சமஷ்டி அலகுகளை நாம் எவ்வாறு உருவாக்க நினைகின்றோம் என்பது அதில் தெளிவாக உள்ளது.

அரசியலமைப்பினை உருவாக்கும் வழிநடத்தல் குழுவில் தமிழ் கூட்டமைப்பின் சார்பில் இருவர் மட்டுமே இருந்தோம். அதுமட்டும் அல்ல, தென் பகுதி சிங்கள முதலமைச்சர்கள் ஏழு பேரின் முன்மொழிவுகளையும் நாம் உள்ளடக்கியுள்ளோம். ஆனால், இதில் வடக்கு முதலமைச்சர், கிழக்கு முதலமைச்சர்கள் பங்குபற்றவே இல்லை. தென்னிலங்கை முதல்வர்கள் ஏழு பேரும் அதிகார பகிர்வு வேண்டும் எனவும் ஆளுநர் வேண்டாம் எனவும் கேட்டனர்.

எவ்வாறு இருப்பினும் நாம் உருவாக்கிய வரைபை தடுக்க இடை நடுவே

ஆட்சியை குழப்பினர். வரைப்பு வந்தால் நாடு பிளவுபடும் என சிங்கள தலைமைகள் எம்மை குற்றம் சுமத்துகின்றனர். ஆனால் எமது தரப்பும் எம்மையே குற்றம் சுமத்துகிறது. இது ஒற்றையாட்சி, அதற்குள்ளேயே எம்மை முடக்கிவிட்டனர் என கூறுகின்றனர். முதலில் அரசியல் அமைப்பு வரைபை படியுங்கள்.

தமிழ் மக்கள் தமது அரசியல் இலக்கு, நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளனர் என்பதை தெரிவிக்க வேண்டும். 20 ஆசனங்களுடன் நாம் பாராளுமன்றத்திற்கு செல்லும் போது அவர்களுக்கு 100 ஆசனங்களாக தென்படும். அந்த பலத்தை எமக்கு வழங்குவதற்கு தமிழ் மக்கள் தீர்மானிக்க வேண்டும். அரசியல் பலத்தை உருவாக்க வேண்டியது மக்களின் பொறுப்பு. நாம் பலத்தை கேட்பது எமக்காக அல்ல உங்களுக்காக என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.

மீண்டும் எமது அடையாளங்களை நாம் காண்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் தமிழர்கள் சுதந்திரமாக சுவாசிக்க கூடிய சூழல் இருந்தது. அடக்குமுறை ஆட்சியில் இருந்து எமது ஜனநாயக உரிமைகளை வெளிப்படுத்தக்கூடிய சூழல் உருவாகியது. இராணுவம் கையகப்படுத்தி இருந்த நிலங்கள் பல விடுவிக்கப்பட்டன. இன்னமும் பல நிலங்களை விடுவிக்கப்பட வேண்டியுள்ளது, இன்று மீண்டும் அபகரிப்பு இடம்பெற்று வருகின்றது. ஆனால் அன்று உயர் பாதுகாப்பு வலயமாக கூறிய இடங்களில் 80 வீத காணிகள் விடுவிக்கப்பட்டன.

2009 மே மாதம் யுத்தம் முடிவுக்கு வந்த போது நாம் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் முற்றிலும் வீழ்ச்சி அடைந்திருந்தோம். அன்றிருந்த நிலையோடு ஒப்பிடும் போது, கடந்த தசாப்தத்தில் நாம் கணிசமான முன்னேற்றத்தை கண்டிருக்கிறோம். இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வகிபாகம் காத்திரமானது. குறிப்பாக:

- யாழ். குடா நாட்டில் இலங்கை இராணுவம் கையகப்படுத்தியிருந்த 75,000 ஏக்கர் தமிழர் தனியார் மற்றும் அரச நிலங்களில் 70 வீதத்துக்கு அதிகமானவை விடுவிக்கப்பட்டிருக்கிறது.
- பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டிருந்த 219 தமிழ் அரசியல் கைதிகளில் 109 பேர், கூட்டமைப்பு அரசோடு மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து 2015 நவம்பர் முதற்கொண்டு சில மாதங்களுக்குள்ளேயே விடுவிக்கப்பட்டனர். எஞ்சியுள்ள அரசியல் கைதிகள் குறித்து இந்த ஆட்சியாளர்களிடமும் நாம் பேசியுள்ளோம். அவர்களின் விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. 84 பேரின் பெயர்களை சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளதாக செய்திகளை நான் பார்த்தேன். அந்த முயற்சியை நாங்கள் கைவிடவில்லை.
- 2015 முதல் வட கிழக்கில் இராணுவ ஒடுக்குமுறையின் கெடுபிடிகளும் வெகுவாக குறைக்கப்பட்டிருக்கிறது.
- தமிழீழ விடுதலை புலிகளை பயங்கரவாத அமைப்பாக பிரகடனம் செய்திருந்த சர்வதேச சமூகம் தற்போது தமிழரது அரசியல் பிரச்சினையின் தார்மீக அறத்தை ஏற்றுக்கொண்டு இலங்கை அரசின் மீது பல்வேறு வழிகளில் அழுத்தங்களைப் பிரயோகித்துக்கொண்டிருக்கிறது.
- இலங்கையில் நாம் சம அந்தஸ்தோடு வாழ்வதற்கு சமவுரிமைச் சிந்தனைகள் சிங்கள மக்கள் மத்தியில் விதைக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெற்கில் சிங்கள மக்களிடம் தமிழர் தரப்பு நியாயங்களைச் சொல்ல சிறப்பு முயற்சி எடுத்து குறிப்பிடத்தக்களவு வெற்றியும் கண்டது. கிராம மட்ட சிறு கூட்டங்களையும், தொடர்ச்சியாக முக்கிய சிங்கள ஊடகங்களில் நேர்காணல்கள் மற்றும் விவாதங்களும் என்னால் முன்னெடுக்கப்பட்டது.
- கடந்த ஐந்தாண்டு காலப் பகுதியில் சிறப்புப் பொருளாதாரத் திட்டங்கள் வட கிழக்கில்

"

**தமிழ் மக்கள் தமது அரசியல் இலக்கு, நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளனர் என்பதை தெரிவிக்க வேண்டும். 20 ஆசனங்களுடன் நாம் பாராளுமன்றத்திற்கு செல்லும் போது அவர்களுக்கு 100 ஆசனங்களாக தென்படும். அந்த பலத்தை எமக்கு வழங்குவதற்கு தமிழ் மக்கள் தீர்மானிக்க வேண்டும். அரசியல் பலத்தை உருவாக்க வேண்டியது மக்களின் பொறுப்பு. நாம் பலத்தை கேட்பது எமக்காக அல்ல உங்களுக்காக என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.**

இயக்குவிக்கப்பட்டது. குறிப்பாக வடக்கில் மடிந்து போயிருந்த கூட்டுறவுச் சங்களுக்கு புத்துயிர் கொடுக்கப்பட்டது.

- வடக்குக் கடல் எல்லையில் தமிழக மீனவர்களின் அத்து மீறல்கள் எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை வெகுவாகப் பாதித்திருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மடிவலை மீன்பிடி முறையைத் தடைசெய்யும் சட்டத்தை வரைந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றியதுடன் இந்திய வட்டங்களில் தொடர் அழுத்தங்களைப் பிரயோகித்ததன் விளைவாக இப் பிரச்சினையில் பாரியளவு முன்னேற்றகரமான நிலை ஏற்பட்டிருக்கிறது.
- இலங்கையின் மீன்பிடித் துறையில் முக்கியம் பெற்ற மயிலிட்டித் துறைமுகம் விடுவிக்கப்பட்டது. 500 படகுகளை நிறுத்தக் கூடிய வகையில் பருத்தித்துறை துறைமுகம் விருத்தி செய்யப்படுகிறது. காங்கேசன்துறைத் துறைமுகம் இந்தியாவோடு கப்பற் பயணத்தை ஆரம்பிக்கவென புதுப்பிக்கப்பட்டு வருகிறது.
- யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் நிறுவப்பட்டு சென்னைக்குத் தொடர் விமான சேவை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் வடக்கின் பொருளாதாரத்தில் மிக முக்கிய பங்கை இவ் விமான நிலையம் வகிக்கும்.
- எமது மக்கள் தம் உண்மையான போராட்டங்களை பயமின்றி முன்னெடுக்கவும் போரில் மரணித்தோரை நினைவு கூரவும் போதுமான ஜனநாயக வெளி உருவாகியிருக்கிறது.
- அரசியல் தீர்வு விடயத்தில் நாம் எதிர்பார்த்த விதத்தில் புதிய அரசியலமைப்பு ஒன்றை நிறைவேற்ற முடியாது போன போதிலும் சகல கட்சிகளதும் சம்மதத்தைப் பெற்ற அரசியலமைப்பு வரைவொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. தமிழர் மட்டில் முக்கிய விடயங்களான காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களிற்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதில் ஏற்பட்டிருக்கும் உடன்பாடு மிகவும் முக்கியமானது. புதிய பாராளுமன்றத்தில் நாம் இப் பணியைப் பூர்த்தி செய்வதற்கு உறுதி பூண்டுள்ளோம்.

**இன்று எமக்கு முன்னிருக்கும் புதிய சவால்கள்**

- எமது விடுதலைக்கான பயணத்தில் நாம் புதியதொரு அத்தியாயத்தின் விளிம்பில் நிற்கின்றோம். குறிப்பாக மூன்று விதமான சவால்கள் எம் முன்னிருக்கிறது:
- தேசிய ரீதியிலும் குறிப்பாகத் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களிலும் உச்சபட்ச இராணுவ மயமாக்கல் இடம்பெறும். சில வாரங்களுக்கு முன்னர் இலங்கையில் 'குறித்த சில பிரதேசங்களில்' இயங்கும் சமூக விரோத சக்திகளை முறியடிக்கவென உருவாக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதிச் செயலணி இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. இச் செயலணியில் முழுவதும் முன்னாள் மற்றும் இந்நாள் இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மாத்திரமே நியமனம் பெற்றிருக்கிறார்கள். இச் செயலணிக்கு சிவில் அதிகாரிகளையும், அரசியலமைப்பின் கீழ் சட்ட வரையறைகளுடன் இயங்கும் மற்றைய அரச நிர்வாகக் கட்டமைப்புகளையும் விசாரிக்கும் மற்றும் பணிப்புரை விதிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.
- 2010-2015 காலப் பகுதியில் எவ்வாறு தமிழ் பேசும் மக்களது நிலங்கள் சூறையாடப்பட்டு எம் இருப்பு கேள்விக்குறியாக்கப்பட்டதோ அதே நிலை மீண்டும் தோன்றவிருக்கிறது. அண்மையில் கிழக்கு இலங்கையில் தொல்பொருள் காப்புக்கென நிறுவப்பட்ட செயலணியில் தமிழர்களோ முஸ்லிம்களோ இணைத்துக் கொள்ளப்படவில்லை. முற்றிலும் சிங்கள பௌத்தர்களால் இச்செயலணி நிறைக்கப்பட்டிருப்பதோடு தொல்பொருள் காப்புக்கென காணிகளைக் கையகப்படுத்தும் அதிகாரமும் இதற்கு வழங்கப்பட்டிருக்கிறது. இது வகையறா செயற்பாடுகள் பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் தீவிரமாகலாம்.
- பொருளாதார அறிஞர்கள் பலரும் இலங்கை மிக மோசமானதொரு பொருளாதாரச் சரிவைச் சந்திக்கப் போவதை எதிர்வு கூறுகின்றார்கள். இது ஏற்கனவே போரினால் பாரிய இழப்புக்களைச் சந்தித்த வட-கிழக்கு மாகாணங்களை கடுமையாகப் பாதிக்கும்.
- ஆகவே நாம் எம் இருப்பைக் குறிவைக்கும் அரசாங்கமொன்றை குறுகும் பொருளாதார மற்றும் ஜனநாயக வெளியில் எதிர்கொள்ளப் போகிறோம். வரவிருக்கும் ஆபத்துக்களைக் குறித்த முன்னெச்சரிக்கையோடு ஆனால் எதிர்காலம் குறித்த நல் நம்பிக்கையோடு இத்தேர்தலில் நாம் வாக்களிக்க வேண்டும். எம்மை மனம் தளராது வழி நடத்தக் கூடிய தலைமையை நாம் தெரிந்தெடுக்க வேண்டும்.



# வட கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை அடைதல்

## தமிழ் முற்போக்கு கூட்டணியின் தாற்பரியம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
**மயில்வாகனம் திலகராஜா**

இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது உலகறிந்த ஒன்று. அதனை உலகுக்குக் கொண்டு சென்றதற்கு மூன்று தசாப்தத்துக்கு மேலான உள்நாட்டு யுத்தமே காரணமாகிறது. சர்வதேசத்துக்கு இந்த இலங்கைத் தமிழர் பிரச்சினை சென்றுள்ள போதும் அத்தகைய தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய மையமாக இலங்கையே இருக்கிறது. அது தனிநாட்டு கோரிக்கையில் ஆரம்பித்து இப்போது சமஷ்டி கோரிக்கையில் நின்றாலும் இடையிலே ஏற்படுத்திக் கொண்ட மாகாண சபை முறைமையைத் தக்கவைத்துக்கொண்டாலே போதும் எனும் யதார்த்த அரசியல் செல்நெறிக்குள் சிக்கி இருக்கிறது.

இந்த நிலையில் இலங்கைத் தமிழர் தரப்பில் முன்வைக்கப்படும் சமஷ்டிக் கோரிக்கையிலோ அல்லது தக்கவைத்துக்கொண்டால் போதுமானது எனும் மாகாண சபை முறைமையிலோ வடக்கு கிழக்குக்கு வெளியே பரவலாக பூர்வீகமாக வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் உள்வாங்கப்படுகின்றனவா என்றால், இல்லை என்ற பதிலே இடம்பெறும்.

ஏனெனில் வடக்கு - கிழக்குப் பகுதியில் வாழும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளில் இருந்து வடக்கு, கிழக்குக்கு வெளியே நுவரெலிய, பதுளை, கண்டி, இரத்தினபுரி, கேகாலை, மாத்தளை, களுத்துறை, காலி, மாத்தறை, மொனராகலை, குருநாகல், புத்தளம், கம்பஹா, கொழும்பு ஆகிய பதினான்கு மாவட்டங்களில் பரந்து விரிந்து சிதறிவாழும் மக்கள் சமூகமாக பல்வேறு ஒருமித்த வேறுபட்ட அடையாளங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். இதே பகுதிகளில் சிறு அளவில் வடக்கு - கிழக்கு பூர்விகத்தைக் கொண்ட மக்கள் வாழ்ந்தாலும் அவர்கள் தங்களது இனத்துவ அடையாளமாகக் கொண்டிருக்கிற “இலங்கைத் தமிழர்” என்ற பொது அடையாளத்தைக்குள் உள்வாங்கப்பட்டவர்களாக மேலே சொன்ன “இலங்கைத் தமிழர் பிரச்சினை” கோட்பாட்டுக்குள் வந்து விடுகின்றனர்.

அதே நேரம் “இலங்கைத தமிழர் பிரச்சினை கோட்பாட்டுக்குள்” உள்வாங்கப்படாத வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழ் மக்களின் அடையாளமும் பிரச்சினைகளும் அவர்கள் சிதறுண்டு வாழ்வது போலவே சிதறுண்டு கிடக்கிறது.

அவர்களது பிரச்சினைகள் வர்க்க அடிப்படையில், தொழில் அடிப்படையில், மாவட்ட அடிப்படையில் வேறுபட்ட பரிமாணங்களைக் காட்டி நிற்கிறது. ஆனால், அடிப்படையில் இவர்களை ஒருமுகப்படுத்துவது “இந்தியத் தமிழர்” எனும் இனத்துவ அடையாளத்தின் கீழ் இலங்கையின் சனத்தொகை கணிப்பீட்டில் பதியப்பட்டிருப்பதுதான். அதேநேரம் இவர்களில் சுதந்திர இலங்கையில் குடியுரிமை பறிக்கப்பட்டு காலத்திற்கு காலம் அதனை மீளப்பெற்றவர்களே.

இந்த இனத்துவ அடையாளம், இழந்த குடியுரிமையைப் மீளப்பெற்றல் எனும் இரண்டு விடயங்களைம் வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைத் தீர்மானிக்கும் அடிப்படைப் பொதுமைப் பரிமாணங்கள் ஆகும்.

இதில் பெரும்பான்மையானவர்கள் தங்களை “மலையகத் தமிழர்” எனும் பண்பாட்டு அடையாளத்தின் கீழ் கொண்டு வந்துள்ளனர். ஆனால் அது இன்னமும் அரசியல் பரிமாணம் பெறவில்லை. எனவே, இலங்கை சனத்தொகை கணிப்பீடுகளின் பொது இந்தியத் தமிழர், இலங்கைத் தமிழர் ஆகிய இரண்டு வகையறாக்களிலும் தங்களைப் பதிவு செய்துவிடுவதால் ஒட்டுமொத்தமாக பதினான்கு மாவட்டங்களில் பரந்துவாழும் பதினைந்து லட்சம் அளவான சனத்தொகை உண்மையான பிரதிபலிப்பைக் காட்டுவதில்லை. சுமார் 7.5 சதவீதம் என மொத்த சனத்தொகையில் அமைந்திருக்க வேண்டிய சனத்தொகை 4.2 வீதம் என்றே காட்டப்படுகிறது.

இவ்வாறு இனத்துவ அடையாளத்தில் மாத்திரம் இன்றி, வேறுபட்ட காலங்களிலும் சட்டங்களினும் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமைப் பெற்றவர்கள் என்ற வகையில் தாம் அனுபவிக்கும் உரிமைகள் தொடர்பில் வேறுபட்ட பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளனர். ஆனால், இந்த இந்திய வம்சாவளி இனத்துவ அடையாளம் கொண்டவர்களில் பெருமளவானோர் பெருந்தோட்டங்களைச் சார்ந்ததாக தோற்றம் பெற்ற சமூகம் என்றவகையில் குடியுரிமை (citizenship) என்ற அடிப்படையில் வாக்குரிமை (voting) பெற்றுக் கொண்டுள்ளார்களே தவிர ஒரு நாட்டின் பிரஜைக்குரிய உரிமைகளை அனுபவிப்பவர்களாக இல்லை. அடிப்படை உரிமைகளான காணி, வீடு, கல்வி, சுகாதாரம், போக்குவரத்துப் பாதை என இன்னொரன்ன அடிப்படை உரிமைகளும் பொது நிர்வாகம், அரசியல் பங்கேற்பு ஆகிய இரண்டு விடயங்களிலும் இலங்கை அரசாங்கத்துடன் பங்கேற்பதில் உரிய இலக்கை அடையாதவர்களாக உள்ளனர்.

வடக்கு கிழக்கு வாழ் இலங்கைத் தமிழர்கள் சமஷ்டியை தமக்கான தீர்வாக கோரி நிற்கும் நிலையில் வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் ஏற்கனவே உருவாக்கப்பட்ட மாகாண சபைகளில் ஏன் உள்ளூராட்சி சபைகளில் கூட உரிய அந்தஸ்த்தோடு உள்வாங்கப்படாத நிலை காணப்படுகிறது. எனவே, தமக்கான “அரசியல் அதிகாரப்பகிர்வு ” எத்தகையது என்பதை தீர்மானிக்க வேண்டியவர்களாக உள்ளனர். “மலையகத் தனி அலகு” போன்ற விடயங்கள் ஏற்கனவே கொள்கை அளவில் முன்வைப்பு செய்யப்பட்டிருந்தாலும் அதனை அடைவதற்கான அரசியல் பொறிமுறைகள் உருவாக்கப்படவில்லை. எனவே, அத்தகைய அதிகாரப்பகிர்வு குறித்த மாவட்டங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக அமைந்துவிடவும் கூடாது. எனவே, அதிகார பகிர்வு தொடர்பான இற்றைப்படுத்தல் அவசியமாகிறது. மறுபுறம் “பொது நிர்வாகம்” முழுமையாக சென்று சேராது இன்னும் தனியார் வசம் சிக்கி இருக்கும் சமூக நிர்வாகத்தை கவனமாக கழற்றி எடுக்க வேண்டி உள்ளது. குறைந்தபட்சமாக உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் அரசியல் அதிகாரப்பகிர்வும், கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் நிர்வாக அதிகாரப்பகிர்வும் இந்த மக்கள் வேண்டி நிற்கும் அரசியல் அபிலாஷைகளாக உள்ளது. அதில் இருந்து அடுத்த கட்ட அபிவிருத்திக்கான அடித்தளத்தை அவர்கள் பெறும் அரசியல் வியூகம் வகுக்கப்படுதல் வேண்டும்.

இந்தப் பின்னணிகளை இலக்காகக் கொண்டு கடந்த 2015 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழ் முற்போக்கு கூட்டணியானது பின்வரும் அடையாளப்படுத்தல்களைச் சுட்டி நிற்கிறது.

பிரதேச சபைகள் சட்டத்திருத்தம்

பிரதேச சபைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

மலையக அதிகார சபை உருவாக்கம்

மலைநாட்டில் புதிய கிராமங்களின் உருவாக்கம், அதற்கு முன்னோடிகளின் பெயரிடுதல்

குறித்த மாவட்டங்களில் தமிழ் மொழி அமுலாக்கம்

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான காணி, கட்டட அபிவிருத்தியுடன் விஞ்ஞான துறையை விருத்தி செய்தல்.

பெருந்தோட்டப் பகுதி சுகாதாரத்தை தேசியமயப்படுத்தல்

பெருந்தோட்டங்களை பிரித்து சிறு தோட்டங்களாக மக்களுக்குப் பகிர்ந்தளித்தல்

முதலான விடயங்களில் பாராளுமன்றிலும் அதற்கு வெளியிலும் ஒரு அரசியல் பரிமாணத்தையும் பரிணாமத்தையும் எடுத்துக்காட்டியுள்ளது. எதிர்காலத்தில் அதனை மேலும் விரிவுபடுத்தி முன்னோக்கிச் செல்ல இந்த இலக்கினை அடைதலுக்கு ஏற்ற அரசியல் அணியாக அடையாளம் காணக்கூடிய ஐக்கிய மக்கள் சக்தியின் அங்கத்துவ கட்சியாக 2020 பொதுத்தேர்தலைச் சந்திக்கிறது.




# முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைக் குறைக்க கூலிப்படைகளுக்கு கொந்தராத்து கொடுத்துள்ளார்கள்

**ரஹூஃப் ஹக்கீம்**
**தலைவர், முஸ்லிம் காங்கிரஸ்**

2015ஆம் ஆண்டில் பெரியதோர் எதிர்பார்ப்போடு ஜனாதிபதி தேர்தலில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தினோம். அந்த மாற்றத்தின் அச்சாணிகளாக முஸ்லிம்கள் உட்பட சிறுபான்மையினரே இருந்தனர். அத்தகைய மாற்றம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் அளுத்கமையில் இடம்பெற்ற கலவரம் போன்றவை மக்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கமேயாகும். அது சாமான்யமானதல்ல.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்தை வெற்றிகொண்டதாக கூறிக்கொண்டு சதா காலமும் ஜனாதிபதியாகவே இருந்துவிடலாம் என்ற ஆணவம் மற்றும் அகங்காரத்தினால் தனது ஆட்சி காலம் நிறைவடைவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னரே தேர்தலை வைத்துவிடலாமெனக் களமிறங்கினார். அப்போதைய அவரது தோல்விக்கு முக்கியமான காரணம் இவ்வாறான வன்முறைச் சம்பவங்களை மக்கள் மத்தியில் அரங்கேற்றியதேயாகும்.

கடந்த ஆண்டு நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லிம் சமூகத்தை தீவிரவாதிகளாக சித்திரித்தார்கள். இத்தாக்குதலுக்கு முஸ்லிம் அமைச்சர் ஒருவரும், ஆளுநர்கள் இருவருமே காரணமெனவும், இவர்கள் 48 மணித்தியாளங்களுக்குள் தத்தமது பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டுமெனவும் கோஷமிட்டு பெரும்பான்மை மக்களை சாரை சாரையாக உண்ணாவிரத கூடாரங்களில் ஒன்று சேர்த்தனர். இரு தனியார் தொலைக்காட்சி ஊடகங்களைப் பயன்படுத்தி நேரடி ஒளிபரப்புக்களினூடாக மக்கள் மத்தியில் பரவச் செய்தார்கள்.

இவ்விடயம் தொடர்பில் நாங்கள் தீர்வை பெறுவதற்கு அன்றைய பிரதமரை நாடிய போதிலும் அதனை சரியான விதத்தில் கையாள எத்தனிக்கவில்லை. எதுவுமே கைக்கூடாத நிலையில்தான் நாம் அனைவரும் கூட்டாக இராஜினாமா செய்வோம் என்ற முடிவை எட்டினோம். அன்றைய சூழ்நிலையில் அம்முடிவு மக்களுக்கு பாரியதொரு மன ஆறுதலை அளித்தது. சமூகத்தின் பாதுகாப்பைக் கருதி எங்களது முஸ்லிம்

தலைமைகள் அனைவரும் பதவிகளை துறந்து அரசாங்கத்திற்கு இவ்வாறான அழுத்தமொன்றை வழங்கியதனால் மக்கள் மத்தியில் முஸ்லிம் தலைமைகள் மீது கொண்ட நம்பிக்கை மேலும் அதிகரித்தது. அன்று அது சமூகத்திற்கு ஆறுதலை அளித்திருந்தாலும், இப்போது இன்று எதிர் தரப்பிற்கு வேறுவிதமான விளைவுகளை ஏற்படுத்தியிருப்பதை அவதானிக்கின்றோம்.

பெரும்பான்மை மக்களிடத்தில் இவ்விடயத்தை வேறு கோணத்தில் வைத்து வியாபாரம் செய்தார்கள். குற்றமுள்ளவர்களை இராஜனாமா செய்ய சொன்னால், மாறாக குற்றமிழைக்காதவர்களும் சேர்ந்து தமது பதவிகளை ஏன் இராஜனாமா செய்ய வேண்டும்? குற்றமிழைத்தோரை பாதுகாப்பதற்காக அனைவரும் ஒன்றாக சேர்ந்துவிட்டார்கள் என்ற பாங்கில் கடந்த ஜனாதிபதி தேர்தலில் வழிப்பாட்டு தலங்கள் உள்ளடங்களாக பிரசாரங்களை முன்னெடுத்தார்கள். இதன் விளைவாகவே பெரும்பாலான வாக்குகள் எதிரணிக்கு கிடைத்தன. இது எங்களுக்கொரு படிப்பினையாகும்.

எதிர்காலத்தில் எங்களது அனுகுமுறைகள் எவ்வாறு அமையவேண்டுமென்பதை தீவிரமாக சிந்திக்கவேண்டும். நாங்கள் எதை செய்தாலும், அதில் குறையை காணுகின்ற கும்பல் தான் ஆட்சியில் இருக்கின்றது. மீண்டும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவினால் விசாரணைகளை முன்னெடுத்து அங்கு வழங்கப்படுகின்ற சாட்சியங்களை தொலைக்காட்சிகளில் பகிரங்கமாக காட்டினார்கள். இதன் மூலம் மக்கள் மத்தியில் பீதியை உருவாக்கினார்கள். இதன் மூலம் பெரும்பான்மை இனத்தவர்களின் வாக்குகளை கைப்பற்றும் திட்டமே அரங்கேறுகின்றது. இந்தக் கட்டத்தில் தான் சமூகம் மிகவும் அவதானமாக சிந்திக்கவேண்டும்.

அவர்களை பொறுத்தமட்டில் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலை புதிதாக உரிமைகளை வென்றெடுப்பதற்கு பதிலாக இப்போது இருக்கின்றவற்றை மேலும் தக்கவைத்துக்கொள்வதற்காகவே தேர்தலை பகடை காயாக்கியுள்ளார்கள். அதற்காக திட்டமிட்டு புதிய பாராளுமன்றத்தில் முஸ்லிம்களது பிரதிநிதித்துவத்தை எவ்வளவு தூரம் குறைக்க முடியுமோ அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கூலிப்படைகளை அமர்த்தி அவர்களிடம் கொந்தராத்துக்களைக் கொடுத்திருக்கின்றார்கள்.

எதிர்வரும் தேர்தலில் எங்களது பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்காக பல கோணங்களிலும் திட்டங்களை தீட்டி செயற்படுகின்றார்கள். முஸ்லிம்களை புண்படுத்துவதற்காக வேண்டுமென்றே கபட நாடகங்களை அரங்கேற்றுகின்றார்கள். அவற்றை நாம் முறியடிக்கவேண்டும்.

கொரோனா பிரச்சினையின் போது முஸ்லிம் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய அனுமதி கேட்டால், வேண்டுமென்றே எரிக்க வேண்டும் என்று கூறி அவற்றை தகனம் செய்தார்கள். உலக சுகாதார ஸ்தாபனத்தினால் 180க்கு மேற்பட்ட நாடுகளிலும் கொரோனா தொற்றினால் இறந்தவர்களின் சடலங்களை எறிக்கவோ, புதைக்கவோ முடியும் என அனுமதி வழங்கியிருந்த போதிலும், அதனை ஏற்றுக்கொள்ள இன்றைய ஆட்சியாளர்கள் தயாராக இருக்கவில்லை. ஏனென்றால், இனவாதிகள் அதிருப்தியடைவதை அரசாங்கம் விரும்பவில்லை. முஸ்லிம்களுக்காக என்று வரும்போது அதனைச் செய்யக்கூடாது என்றவாறாக அவ்வளவு மட்டகரமான அடக்குமுறையை இவர்கள் கட்டவிழ்த்திருக்கின்றார்கள் என்பதை கண்டோம்.

நோய் தொற்றாளர்களின் உடல்களை எரிக்கின்ற விடயம் முஸ்லிம்களின் மனங்களை மிகவும் புண்படுத்துவதால் இதனை மீள்பரீசிலினை செய்யுங்கள் எனக் கோரினோம். அதனை விட்டுக்கொடுத்திருந்தால் முஸ்லிம்கள் மத்தியில் இந்த ஆட்சி சம்பந்தமாக இருந்த அதிருப்தி குறைய காரணமாக இருக்கும் எனக் கூறினேன்.

முஸ்லிம்களது உடல்களை நல்லடக்கம் செய்வதற்குரிய அனுமதியை அளிப்பதனூடாக எங்களுக்கு விட்டுத்தந்திருந்தால் அவர்களது பெரும்பான்மை வாக்கு வங்கியில் பாரிய சரிவை எதிர்கொள்ளவேண்டி வருமென அஞ்சினார்கள். பெரும்பான்மை இனவாதிகளை எதிர்த்துகொள்வதற்கு ஆட்சியாளர்கள் விரும்பவில்லை. இவ்வாறு மோசமான அராஜக போக்கில் இந்த அரசாங்கம் சென்றுகொண்டிருக்கின்றது.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றியடைந்ததை வைத்து பாராளுமன்றத் தேர்தலிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கும் என்று எண்ணிவிடக்கூடாது. இப்போது அனைவரும் ஐக்கிய தேசிய கட்சி உடைந்து போய்விட்டது என நினைக்கின்றார்கள். அவ்வாறு அல்ல. ரணில் விக்கிரமசிங்கவோடு சிறு குழுவொன்றே நிற்கின்றது. ஏனைய 95சதவீதமான பாராளுமன்ற உறுப்பினர்களும் 5 கட்சிகளின் தலைவர்களும் எங்களுடனேயே இந்தக் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இருக்கின்றார்கள். இது தான் மாற்று அரசாங்கமாக அமையும்.

இந்த மாற்று அரசாங்கமானது எதிர்வரும் தேர்தலில் போதிய ஆசனங்களை பெற்றுக்கொள்ளும் முயற்சிகளை முன்னெடுத்துள்ளது. அதிலும் குறிப்பாக, அரசாங்கத்திற்கு எதிராக போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர்களுடைய வாக்கு வங்கியை சிதறடிப்பதற்காக ஆங்காங்கே கூலிப்படைகளை அமர்த்தி இருக்கின்றார்கள். அவர்களை சுயேட்சை சின்னங்களில் போட்டியிடச் செய்திருக்கின்றார்கள்.

ஏனென்றால், முஸ்லிம்களுக்கு இந்த விவகாரங்களின் பின்னணியும், அதிலுள்ள சூழ்ச்சியும் நன்கு விளங்கிவிட்டது. முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும். இந்த சதிகளுக்குள் சிக்கி முஸ்லிம் தலைமைகளை இனியும் பழிக்கொடுக்க இயலாது என்ற தெளிவு மக்கள் மத்தியில் உள்ளது. இருந்தாலும், நாங்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

இந்த ஆட்சியாளர்களின் போக்கில் மாற்றம் இல்லை. முழுப் பிராந்தியத்திலும் உள்ள சக்திகளை பற்றி மிக அவதானமாக இருக்க வேண்டும். நிறையவே ஊடுருவல்கள் இடம்பெறுகின்றன. பதற்ற நிலையை உருவாக்கி அதனூடாக அரசியல் செய்து அதில் குளிர்காய இந்தக் கும்பல் எத்தனிக்கின்றது. இதற்காக அவர்கள் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் இறங்கி வேலை செய்வார்கள். ஆனால், இவற்றை மிக பக்குவத்தோடு கையாள வேண்டும். எங்கள் வாய்களை மூடுவதற்கென்றே பீதியில் பாராளுமன்றத்தை களைத்து விட்டார்கள்.

எதிர்வரும் தேர்தலில் பாராளுமன்றத்தில் எங்களது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை அதிகரித்துக்கொள்வதே தற்பொழுது நாங்கள் எதிர்நோக்கும் சவாலாகும். அந்த அறைகூவலுக்கு எங்களுக்கு ஒத்துழைப்பதற்கு நீங்கள் அனைவரும் தயாராக வேண்டும்.

# தூய்மையான
## அரசியல் கலாசாரத்திற்காக
## தேர்தல் பிரசார ஆகுசெலவை
## ஒழுங்குறுத்தக்
## கட்டாயப்படுத்துவோம்




**இலங்கையில் முதன் முறையாக**
**தேர்தலுக்காகச் செலவு செய்யும் நிதி பற்றிய**
**முழுமையான அவதானிப்பு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று**
**நடைமுறையிலுள்ளதை நீங்கள் அறிவீர்களா ?**

அரசியல் கட்சிகள் / வேட்பாளர்கள் தமது பாராளுமன்றத் தேர்தல் பரப்புரைக்காக செலவிடும் செலவினம் பற்றி அறிவிப்பதற்கு,தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) கீழ்,

**“தேர்தல் பரப்புரை ஆகுசெலவு பற்றிய கண்காணிப்பு நிலையம்”**
**(ECCM Unit) அமைக்கப்பட்டுள்ளது**

**தொடர்புகொள்ள வேண்டிய விபரங்கள் :**

தொலைபேசி இலக்கம் : 011-4749376
தொலைநகல் : 011-2826146
WhatsApp : 077-9600762, 078-6134790
மின்னஞ்சல் : cmevcampaignfinances@gmail.com
மேலதிக விபரங்களுக்கு www.cmev.org

தகவல்களை வழங்கும் உங்களின் அடையாளம் அந்தரங்கமாக பேணப்படும்


තොරතුරු දැනගැනීමේ අයිතිවාසිකම සම්බන්ධයෙන් ඔබට අවශ්‍ය ඕනෑම තොරතුරක් පිළිබඳව සහය වීමට අප සූදානම්!

ක්‍ෂණික ඇමතුම්

## තොරතුරු සහය මධ්‍යස්ථානය

**0113-030 463**

(සතියේ දිනයන්හි පෙ.ව. 9.00 සිට ප.ව. 5.00 දක්වා)




**தகவல் அறியும் உரிமை பற்றி உங்களுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் தொடர்பாகவும் ஒத்துழைப்பு வழங்குவதற்கு நாங்கள் தயார் !**

உடனடித் தொடர்புகளுக்கு

## தகவலுக்கான உதவிப் பணியகம்

**0113-030 463**

(வாரநாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 5.00 மணி வரை)

C P A
Centre for Policy Alternatives

ISSN 955-1800-0061